T. 1941

SRI VENKATESVARA ORIENTAL SERIES—No. 41

EDITOR:—P. V. RAMANUJASWAMI, M.A

தனஞ்சயர் இயற்றிய

தசரூபகம்

தனிகர் இயற்றிய உரையுடன்

தமிழ் மொழிபெயர்ப்பு

மொழிபெயர்ப்பாளர் :

R. ஸ்ரீனிவாஸராகவாசாரியர், சிரோமணி, B.O.L.,

தமிழ் உதவி ஆராய்ச்சியாளர்

திருவேங்கடவன் கீழ்த்திசைக்கலை ஆராய்ச்சிக் கழகம்,

திருப்பதி.

1953

All Rights Reserved
By
Tirumalai Tirupati Devasthanams,
Tirupati

1st EDITION.

PRINTED AT
TIRUMALAI TIRUPATI DEVASTHANAMS PRESS,
TIRUPATI

முன்னுரை

நாடக வியலைப்பற்றிய இலக்கண நூல்கள் வடமொழியில் பலவுளவேனும் தசரூபகமெனும் நூல் மிகவும் முக்கியமானது. இதையே பின்புள்ள ஆசிரியர்களும் உரையாளர்களும் வெகுவாகக் கையாளுகின்றனர். வடமொழியில் இந்நூலை யாக்கியவர் தனஞ்சயர் என்பதும், அவர் விஷ்ணு என்பவரின் புதல்வர் என்பதும் நான்காமொளியின் முடிவிலுள்ள சுலோகத்தினால் நாம் அறிகிறோம். நூலாசிரியர் வாயிலாக அவர் காலத்தையும் பிறப்பிடத்தையும் நாமறியக் கூடவில்லை. ஆசிரியர் எடுத்தாளும் சில மேற்கோள்களிலிருந்து இவ்வாசிரியரை அவர்களுக்குப் பிற்காலத்தவர் என்று கூறக் கூடுமே யொழியக் குறிப்பாகக் காலத்தை யுணர்த்த முடியாது. மாலவ நாட்டில் பத்தாம் நூற்றாண்டின் கடைப்பகுதியில் வாக்பதி ராஜன் என்றழைக்கப்படும் முஞ்சவரசனின் அவையில் இவ்வாசிரியர் இருந்தார் என்று கூறுகின்றனர். முஞ்சவரசனின் கோஷ்டியில் இவரிருந்தது நான்காமொளியின் கடை சுலோகத்தினால் விளங்கும். முஞ்சவரசன் ஒருகவியென்பது முஞ்சனியற்றியதாக உரையாளர் கையாளும் உதாரண சுலோகங்கள் வாயிலாக நாமறிகிறோம்.

உரையாளர் தனிகர் என்பவர் விஷ்ணுவின் புதல்வர் தனஞ்சயரின் தம்பி யென்று சரித்திரக்காரர் கூறுகின்றனர். தனஞ்சயர் கூறாத விஷயங்களைக் கூறுவதிலிருந்தும், கூறியவைகள் சிலவற்றில் கருத்தைமாற்றிக் கூறுவதிலிருந்தும் உரையாளர் தனிகர் சுதந்திரர் என்பது புலனாகும்.

ஸ்ரீ ஸூர்யநாராயண சாஸ்த்ரியார் இயற்றியுள்ள நாடகவியல் எனும் நூலிலிருந்து நாம் ஒருவாறு நாடகவிலக்கணங்களை அறியலாமாயினும் இம்மொழி பெயர்ப்பைப் போல் அது பூர்ணமாயிராது என்று நான் நினைக்கிறேன். இயல் இசை நாடகமெனத் தமிழ் மொழியை மூன்றாய்ப் பிரித்திருந்த போதிலும் நாடக விலக்கணத்தைப் பற்றிய சங்ககால நூல்கள் இன்மையின் நாம் இது போன்ற

நூல்களால் அக்குறையை நீக்கிக் கொள்ளலாம். பிற தமிழ் நூல்களிலிருந்து ஊகித்து நாடகவிலக்கணம் இயற்றுவதினும் இது சீரிய முறை என்பது என் எண்ணம்.

முதல் ஒளியில் நாட்டியம் நிருத்தியம் நிருத்தம் முதலியவைகளின் இலக்கணங்களும், அதுபோல் ஐந்து சந்திகள் அவற்றின் உறுப்புகள் முதலியவைகளின் இலக்கணங்களும், கதைப் பகுதியைக் குறிப்பா யுணர்த்தற்குரிய விட்கம்ப்ம் முதலியவைகளின் இலக்கணங்களும் கூறப் பெறுகின்றன.

இரண்டாமொளியில் தலைவன் தலைவி முதலியவர்களின் இலக்கணங்களும் உட்பிரிவுகளும், கைசிகி முதலிய விருத்திகள் அவையிற்றினுருப்புகள் முதலியவைகளின் இலக்கணங்களும், விளிச்சொல் முறைகளும் கூறப்பெறுகின்றன.

மூன்றுமொளியில் பாரதிவிருத்தி அதனுறுப்புகள் வீதி அதனுறுப்புகள் ஆகிய இவைகளின் இலக்கணங்களும், நாடகம் பிரகரணம் முதலிய பத்துவகைக் காட்சி நூல்களின் இலக்கணங்களும் கூறப் பெறுகின்றன.

நான்கா மொளியில் சுவையைப்பற்றிய விரிவுரை. விபாவம் அனுபாவம் சஞ்சாரிபாவம் நிலைக்கருத்து எண்வகைச்சுவை முதலியவைகளின் இலக்கணங்கள், சுவைகள் உண்டாம்வகை, முதலியவைகளெல்லாம் கூறப் பெறுகின்றன. பொருளடக்கத்தைப் பன்முறை பார்ப்பின் நூற்பொருள் நன்கு விளங்குமாதலின் முகவுரையில் நூற்பொருளை விரிவா யெழுதவில்லை.

குறிப்பு.

வடமொழிச் சுலோகங்களோடு எளிதில் ஒப்பிட்டு நோக்குவதற்காக இந்நூலில் முதலிலிருந்து முடிவுவரை சூத்திரக் காரிகைகளின் இலக்கம் வடமொழிச் சுலோகங்களின் இலக்கத்தை வெகுவாகப் பின்பற்றியிருக்கும் வண்ணம் அமைக்கப் பெற்றிருக்கிறது. சில காரிகைகளுக்கு இலக்கம் கொடுபடவில்லை போல் தோன்றும். உண்மையில் அவைகளுக்கும் எண் கொடுக்கப் பெற்றிருப்பது உற்று நோக்கின் நன்கு விளங்கும். உதாரணமாக—5-ம் காரிகை முடிவுற்றதும் மேலுள்ள காரிகைகள் மூன்றிற்கும் இலக்கம் கொடுபடவில்லை. நான்காவதற்கே 6-என்ற இலக்கம் கொடுக்

கப் பெற்றிருக்கிறது. இங்கு 5-முடிந்த பிறகு 6-வரும்வரை இடையிலுள்ளவை யெல்லாம் 6-ச் சேர்ந்தவை யென்று அறிக. இவ்வாறே மேல்வரு மிடங்களிலும் காண்க.

முதல்நூலில் ஒவ்வொரு பகுதியிலும் உள்ள சுலோகங்களுக்குத் தனித்தனியே தொகை இலக்கம் கொடுக்கப் பட்டிருக்கின்றது. இவ்வகையில்முதற் பகுதியில்-68, இரண்டாம் பகுதியில்-72, மூன்றும் பகுதியில்-76, நான்காம் பகுதியில்-86, என வெண்ணி மொத்தத் தொகையை நாம் தெரிந்து கொள்ள வேண்டி யிருக்கின்றது. அம்முறையையே நாமும் இவ்வழி நூலில் பின்பற்றி யுள்ளமையால் ஐயமெழும் பொழுது முதல் நூலொடு ஒப்பிட்டுப் பார்ப்பது எளிதாகின்றது.

வடமொழி (முதல்) நூலில் முதல் ஒளியில் 68-சுலோகங்கள் கணக்கிடப் பெற்றிருக்க இம்மொழி பெயர்ப்பில் 67-என்ற கணக்கை நோக்கிச் சிலர் ஐயுறல் கூடும். நூல் தொடக்கத்தில் உரையின் சுலோகம் ஒன்றை மூலநூல் சுலோக மென்று வடமொழியில் அச்சிட்டவர்கள் தவறாய் எண்ணி அவ்வாறு செய்து விட்டனர். உண்மையில் 67-சுலோகங்கள் தான் என்று அறிதல் வேண்டும். ஆதலின் மொழி பெயர்ப்பில் முதலொளியில் ஒரு காரிகை குறைவதால் வடமொழி நூலொடு ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது ஒன்று கூட்டிப் பார்க்கவும். இவ்வகையில் மொழி பெயர்ப்பில் முதாலாவது காரிகை வடமொழி நூலில் இரண்டாவதாக இருக்கும் இவ்வாறே மேலுள்ளவைகளும் எனவறிக.

முதல்நூலிலுள்ள பாரிபாஷிக பதங்களுக்குப்பதில் தனித் தமிழ்ச் சொற்களை உபயோகப்படுத்தவில்லை. வடமொழியில் உள்ள சொற்களைத் தமிழ்ப் பண்பிற் கேற்றவாறு சிறிது மாற்றி உபயோகப்படுத்தி யிருக்கிறேன். இதுதான் உரிய முறை என்றும் எண்ணுகிறேன். பிறமொழி யாளருடன் பழகுவதற்கும் இம்முறை பெரிதும் பயன்படும். சில சொற்கள் தமிழாக்வுமுள்ளன.

வடமொழிச் சுலோகங்களுக்குத் தமிழ் காரிகைகள் இயற்றப் பெற்றிருக்கின்றன. இதே முதல் முயற்சி யாதலின் சில குறைகள் இருக்கவும் கூடும் தமிழ்ப் புலவர்கள் அன்புடன் அக்குறைகளை எடுத்துக் கூறின் பின்வரும் பதிப்புக்களில் மாற்றி யெழுதவும்

உதவியாயிருக்கும். என்னை இத்துறையில் இப்பணியில் ஏவிய என் மேலதிகாரிகளனைவரும் பெரு மகிழ்ச்சி யெய்துவர் என நினைக்கின்றேன். தமிழ்த்தாயின் திருவடிகளில் இச்சிறிய நூலைத் துணிந்து தாழ்மையுடன் அர்ப்பிக்கின்றேன். குற்றங்களைக் களைந்து குணங்களை யுணர்ந்து மிக்க களிப்புடன் இந்நூலைத் தமிழ்த்தாயும் தமிழ் மக்களும் ஏற்பர் என நினைக்கிறேன்.

மொழி பெயர்ப்பாளர்.

பொருளடக்கம்.

முதல் ஒளி.

பொருள்.		காரிகை.	பக்கம்.
கடவுள் வாழ்த்து	....	1	1
கல்விப் பயன்	....	2	2
நூற் பொருள்	....	3	2
நூல் நோக்கம்	....	4	2
நாடக நூலறிவின் பயன்	....	5	3
நாட்டிய விலக்கணம்	....	6	3
உருவம் (நாட்டியத்தின் மற்ெறாரு பெயர்)	...	6	3
உருவகம் (,, ,,)	....	6	4
சுவையுடைமை	....	6	4
நாடகங்களின் வகை தொகைகள்	....	7	4
'நிருத்திய' விலக்கணம்	....	8	5
மார்க்கம் (நிருத்தியத்தின் மற்றொரு பெயர்)	....	8	5
'நிருத்த' விலக்கணம்	....	8	5
தேசி (நிருத்தத்தின் மற்றொரு பெயர்)	....	8	6
நிருத்திய நிருத்தங்களின் உட்பிரிவுகள்	....	9	6
நாடக நூல்களின் வேற்றுமை	....	10	6
நாடக நூற்பொருளின் உட்பிரிவு	....	10	6
உட்பிரிவுகளின் பெயர்கள்	....	10	6
ஆதிகாரிகக் கதையின் இலக்கணம்	....	11	7
பிராசங்கிகக் கதையின் இலக்கணம்	....	12	7
பிராசங்கிகக் கதையின் இரு உட்பிரிவுகளும் அவைகளின் இலக்கணங்களும் பெயர்களும்	....	12	7
பதாகைத் தானத்தின் இலக்கணமும் ஈருட்பிரிவுகளும்	....	13	8
ஆதிகாரிகம் பதாகை பிரகரி என்ற மூன்றும் தனித்தனி மூன்றாதலும் அம்மூவகைகளின் இலக்கணங்களும்	....	14	8

பொருள்.	காரிகை.	பக்கம்.
ஆதிகாரிகம் பதாகை பிரகரி என்ற மூன்றும் வேறு வகையில் தனித் தனி மூன்ருதல்....	15	9
நாடகக் கதைப் பயன் மூன்று வகைத்து ஏனல் முதலிய ...	15	6
பீசத்தின் இலக்கணமும் ம-பீசம், அ-பீசம் என்ற உட்பிரிவுகளும்	16	9
பிந்துவி (அவாந்தரபீசத்தி)ன் இலக்கணம்	16	10
அருத்தப் பிரகிருதிகள் அல்லது பொருள் மூலங்கள் ஐந்து எனல்	17	10
(தொழில்) நிலைகள் ஐந்தெனல்	18	11
தொடக்கம் (இலக்கணம்)	19	11
முயற்சி ,, ...	19	11
விருப்பம் ,, ...	20	12
உறுதி ,, ...	20	12
பேறு ,, ...	21	13
பொருள் மூலங்கள் ஐந்தும் நிலைகள் ஐந்தும் முறையே சேர்ந்தால் ஐயிணைவு (சந்தி)களாமெனல்	21	13
இணைவின் (சந்தியின்) இலக்கணம்	22	13
ஐயிணைவுகளின் பெயர்கள்	22	13
முகசந்தி	23	13
முகசந்திக்குப் பன்னிரண்டு உறுப்புக்களுளவெனல்	24	13
அவற்றின் பெயர்கள்	25	14
உபக்கேபம்	26	14
பரிகரம்	26	14
பரினியாசம்	26	15
விலோபனம்	26	15
உயுத்தி	27	16
பிராத்தி	27	16
சமாதானம்	27	17
விதானம்	27	17
பரிபாவனை	28	18
உற்பேதம்	28	18

பொருள்.		காரிகை.	பக்கம்.
பேதம்	....	28	18
கரணம்	....	28	19
பிரதிமுக சந்தியின் இலக்கணமும் அதன் உறுப்புக்கள் பதின்மூன்றும்	....	29	20
அவ்வுறுப்புக்களின் பெயர்கள்	....	30	20
விலாசம்	....	31	20
பரிசருப்பம்	....	31	21
விதாதம்	....	32	22
சமம்	....	32	22
நருமம்	...	32	22
நருமத்தியுதி	....	32	23
பிரகமனம்	....	33	23
நிரோதம்	....	33	24
பரியுபாசனம்	....	33	24
புட்பம்	....	33	25
உபனியாசம்	....	34	25
வச்சிரம்	....	34	26
வருண சங்காரம்	....	34	26
கருப்ப சந்தியின் இலக்கணமும் அதன் உறுப்புக்கள் பன்னிரண்டும்	....	35	27
அவ்வுறுப்புக்களின் பெயர்கள்	....	36	28
அபூதாகரணம்	....	37	28
மார்க்கம்	....	37	29
உருவம்	....	37	29
உதாரணம்	....	38	30
கிரமம்	....	38	30
கிரமம் (வேறு இலக்கணம்)	....	38	31
சங்கிரகம்	....	39	31
அனுமானம்	....	39	32
அதிபலம்	....	39	32
தோடகம்	....	39	32
அதிபலம் (வேறு இலக்கணம்)	....	40	33
உத்துவேகம்	....	40	33

பொருள்.		காரிகை.	பக்கம்.
சம்பிரமம்	....	41	34
ஆக்கேபம்	....	41	34
அவமரிசசந்தி	....	42	35
அதன் உறுப்புக்கள் பதின்மூன்றின் பெயர்கள்.		43	35
அபவாதம்	....	44	35
சம்பேடம்	....	44	36
வித்திரவம்	....	44	36
திரவம்	....	44	37
சத்தி	....	45	37
தியுதி	....	45	38
பிரசங்கம்	....	45	38
சலனம்	....	46	38
விவசாயம்	....	46	39
விரோதனம்	....	46	39
பிரரோசனை	....	46	40
விசலனம்	....	47	41
ஆதானம்	....	47	41
நிருவகணசந்தி	....	48	42
அதன் உறுப்புக்கள் பதினன்கின் பெயர்கள்	....	49	42
சந்தி	....	50	43
விபோதம்	....	50	43
கிரதனம்	....	50	43
நிரணயம்	....	50	44
பரிபாடை	....	51	44
பிரசாதம்	....	51	45
ஆனந்தம்	....	51	45
சமயம்	....	51	45
கிருதி	....	52	45
பாடணம்	....	52	46
பூருவபாவம்	....	52	46
உபகூகனம்	....	52	47
உபசங்காரம்	....	53	47
பிரசம்சை	....	53	47

பொருள்.		காரிகை.	பக்கம்.
இணைவுறுப்புகள் அறுபத்துநான்கின் அறுவகைப் பயன்கள்	....	54	48
நூற்பொருளி (கதையி)ன் இருவகை உட்பிரிவுகள்	....	55	48
அவைகளின் பெயரும் இலக்கணமும்	....	56	48
குறிப்பெனும் கதைப்பகுதியை உணர்த்தும் ஐந்துபாயங்கள்	....	57	48
விட்கம்பத்தின் இலக்கணம்	....	58	48
அதன் இருவகை உட்பிரிவுகளாம் தூயவிட்கம்பம் கலப்பியல் விட்கம்பம் இவ்விரண்டின் இலக்கணம்	....	59	49
பிரவேசகம்	....	60	49
சூலிகை	....	60	49
அங்காசியம்	....	61	50
அங்காவதாரம்	....	61	50
காணல் கேட்டல் எனும் பகுதியை அங்கம் காட்டுமெனல்	....	62	51
நூற்பொருள் (கதை) வேறுவகையில் மூன்றுதல்.		62	51
அதன் பெயர்களும், அவற்றுள் இரண்டாவது இருவகைத்தாதலும்,	....	63	51
சனாந்திகம்	....	64	51
அபவாரிதம்	....	65	52
ஆகாசபாடிதம்	....	66	52
நூலியற்றும் முறைகூறல்	....	67	52

இரண்டாம் ஒளி.

நாடகநூல் தலைவன் பண்புகள்	....	1 - 2	53
வணக்கம்	....	,,	53
இனிமை	....	,,	53
வண்மை	....	,,	54
வன்மை	....	,,	54
இன்சொல்	....	,,	54

பொருள்.		கார்கை.	பக்.
குடிகள் அன்பு	....	,,	54
தூய்மை	....	,,	55
பேச்சுத்திறமை	....	,,	55
குடிமை	....	,,	55
திண்மை	....	,,	55
மேதை	....	,,	55
நாடகத்தலைவன் நால்வகைப்படுதல்	....	3	56
தீரலலிதன்	....	3	56
தீரசாந்தன்	....	4	56
தீரோதாத்தன்	....	4	57
தீரோத்ததன்	....	5	58
உவகைச்சுவை நாயகர்களின் மூன்று வகைககள்.		6	59
தட்சிணன்	....	7	59
வஞ்சகன்	....	7	60
திருட்டன்	....	7	60
அனுகூலனென்னும் மற்றொருவகை	....	7	60
(தலைவனின் துணைவர்கள் மூவர்)			
பீடமருத்தன்	....	8	61
விடன்	....	9	62
விதூடகன்	....	9	62
எதிர்த்தலைவன்	....	9	62
தலைவனின் இயற்பண்புகள்	....	10	62
அழகு	....	11	62
விலாசம்	...	11	63
இனிமை	....	12	63
மாண்பு	....	12	64
உறுதி	....	12	64
ஒளி	....	13	64
மென்மை	....	14	64
கொடை	....	14	65
தலைவியின் இலக்கணமும் முப்பிரிவுகளும்	....	15	65
தன்னவளின் இயற்பண்புகளும் முக்கிதை மத்தியை பிரகல்பைஎன்ற முப்பிரிவுகளும்	....	15	65
ஒழுக்கம்	....	,,	66

பொருள்.		காரிகை.	பக்.
நேர்மை (முதலிய)	....	,,	66
முக்கிதையின் இயற்பண்புகள்	....	16	66
புதியபிராயம்	....	,,	66
புதியகாதல்	....	,,	67
கலவியில் இசைவின்மை	....	,,	67
மத்திமை	....	,,	67
மத்திமையின் தீரை அதீரை தீராதீரை என்ற முப்பிரிவுகள்	....	17	67
பிரகல்பை	....	18	68
பிரகல்பையின் முப்பிரிவுகள்	....	19	69
மத்திமையும் பிரகல்பையும் சேர்ந்து பன்னிருவர் ஆதல்	....	20	70
பிறர் (எனும் தலைவியின்) இருவகை	....	20	71
மற்றவன்பன்னி	....	,,	71
கன்னி	....	,,	71
பொதுமகள் (தலைவியின் மூன்றும் பிரிவு)	....	21	71
பொதுமகளின் பண்பு	....	22	71
பொதுமகளைத் தலைவியாய் அமைக்கத்தக்க நூல்	....	23	72
வேறுவகையில் தலைவிகளின் எண்பாற் பிரிவுகள்		23	72
சுவாதீன பதிகை	....	24	73
வாசக சச்சை	....	24	73
விரகோத் கண்டிதை	....	25	73
கண்டிதை	....	25	74
கலகாந்தரிதை	....	26	74
விப்பிரலத்தை	....	26	74
புரோடிதப்பிரியை	....	27	74
அபிசாரிகை	....	27	75
இவ்வெண்மர் செயல்	....	28	75
தலைவிகளின் துணைவிகள் எண்மர்	....	29	76
தோழி (தூதியாதல்)	....	,,	77
தான் (தூதியாதல்)	....	,,	77
தலைவிகளின் இயற்கை அணிகள்		30, 31, 32	77
பாவம்	....	33	78
ஆவம்	....	34	78

பொருள்.		காரிகை.	பக்.
ஏலை	....	34	78
ஒளி	....	35	79
காந்தி	....	35	79
தேசு	....	36	79
இனிமை	....	36	79
திறமை	....	36	80
உதாரம்	....	36	80
தீரம்	....	37	80
இலீலை	....	37	80
விலாசம்	....	38	81
விச்சித்தி	....	38	81
விப்பிரமம்	....	39	81
கிலிகிஞ்சிதம்	....	39	82
மோட்டாயிதம்	....	40	82
குட்டமிதம்	....	40	82
பிப்போகம்	....	41	82
இலலிதம்	....	41	83
விகிருதம்	....	42	83
தலைவரின் அரசியல் துணைவர்கள்	....	42	83
அதைப்பற்றிய உட்பிரிவுகள்	....	43	84
தலைவரின் அறத் துணைவர்கள்	....	43	84
தலைவரின் அடக்கு முறைத் துணைவர்கள்	....	44	84
தலைவரின் உவளகத் துணைவர்கள்	....	44	84
வேறுவகையில் தலைவரின் மூவகை உட் பிரிவுகள்	....	45	84
தலைவன் முதலாம் பாத்திரம் கூறிய முறையில் அமைய வேண்டு மெனல்	....	46	85
(நால்வகை) விருத்தி	....	47	85
கைசிகி	....	47	85
கைசிகியின் நால்வகை உறுப்பு	....	48	85
நருமம்	....	48	85
நருமத்தின் மூவகை உட்பிரிவு	....	49	85
உவகை நருமத்தின் மூவகை உட்பிரிவுகள்	....	49	86

பொருள்.		காரிகை.	பக்.
துணுக்க நருமத்தின் இருவகை உட்பிரிவுகள்	....	50	86
மொத்தம் நருமம் பதினெட்டு வகையெனல்	....	50	86
தூநகை நருமம் (சொல்)	....	,,	85
,, (உரு)	....	,,	86
,, (செயல்)	....	,,	86
அன்பறிவித்தல் (சொல்)	....	,,	86
கலவி நருமம் (செயல்)	....	,,	87
மான நருமம் (சொல்)	....	,,	87
துணுக்க நருமம்	....	,,	87
உவகைச் சுவைக்குறுப்பாம் துணுக்க நருமம்	....	,,	87
நருமப் பிஞ்சம்	....	51	87
நருமப் போடம்	....	51	88
நரும கருப்பம்	....	52	88
சாத்துவதி (விருத்தி)	....	53	88
சாத்துவதியின் நான்கு உறுப்புகள்	....	53	89
சல்லாபகம்	....	54	89
உத்தாபகம்	....	54	89
சாங்காத்தியம்	....	55	90
பரிவருத்தகம்	....	55	90
ஆரபடி (விருத்தி)	....	56	90
ஆரபடியின் நான்கு உறுப்புகள்	....	56	91
சஞ்சித்தி	....	57	91
சம்பேடம்	....	58	91
வத்தூத்தாபனம்	....	59	91
அவபாதம்	....	59	91
கைசிகி முதலிய முதல் மூன்று விருத்திகளின் உரியவிடம் பொருள் எனல்	....	60	92
பாரித யமையுமிடம் சொல் எனல்	....	61	92
விருத்திக்குரிய சுவைகள்	....	62	92
தலைவர் முதலோரின் மொழி முதலியவை வேறுபடல்	....	63	92
பேச்சின் வகை எவரெவர் எவ்வெம்மொழி பேசுவதென்பது	....	62 72	92 94

மூன்றுமொழி.

பொருள்.	காரிகை.	பக்
முதலில் நாடகவிலக்கணம் கூறுதலின் காரணம்	1	95
நாடகம் தொடங்கும் முறை	2	95
நாடகக் கதையை அவையினர்க்குக் குறிப்பா யறிவிக்கும் முறை	3	95
நூற்பொருள் அறிவித்தல்	,,	96
வித்து ,, ...	,,	96
முகம் ,, ...	,,	96
பாத்திரம் ,, ...	,,	96
அரங்கு புகழ்தலும் பாரதி விருத்தியைப் பற்றலும்	4	96
பாரதியின் இலக்கணமும் உறுப்புகள் நான்கும்	5	97
பிரரோசனை விதியும் பிரகசனமும் பிறகு கூறப் பெறும் எனல்	6	98
ஆமுகம் அல்லது பிரத்தாவனை	7	98
ஆமுகத்தின் மூவகை உட்பிரிவுகள் பதின் மூன்றுருப்புகள்	8	98
கதோத்காதமும் அதன் இருவகை உட்பிரிவுகளும்.	9	98
சொல்பற்றித் தோன்றல்	,,	98
பொருள் ,, ...	,,	98
பிரவிருத்தகம்	10	99
பிரயோகாதிசயம்	11	99
ஆமுக உறுப்புக்கள் பதின்மூன்றும் அவைகளின் பெயர்களும்	12	99
உத்தாத்தியகம் (இலக்கணமும் இருவகைகளும்)	13	100
அவலகிதம் (இலக்கணமும் இருவகைகளும்)	14	101
பிரபஞ்சம்	15	101
திரிகதம்	16	102
சலனம்	17	102
வாக்கேளி (இலக்கணமும் இருவகைகளும்)	17	102
அதிபலம்	18	103
கண்டம்	18	104

பொருள்.		காரிகை.	பக்.
அவசியந்திதம்	....	19	104
நாளிகை	....	19	104
அசத்பிரலாபம்	....	20	105
வியாகாரம்	....	20	106
மிருதவம்	....	21	106
சூத்திரதாரன் செயலும் வெளியேற்றமும்	....	21	107
கதை தொடங்கும் காலம்	....	22	107
நாடகத்தில் முக்கியக் கதை அமைப்பு	....	23	107
புராணக் கதையில் மாற்றத்தக்கவை	....	24	107
கதையில் பகுதிகள்பிரித்தலும் உறுப்பு முதலியவை அமைத்தலும்	....	25	108
பதாகைக்கதை யமைக்கும் வகை	....	26	108
பிரகரிக்கதை யமைக்கும் வகை	....	27	108
கதை தொடங்கும் முறை	....	28	108
செயல் அமைதி	....	29	108
அங்கம் (இலக்கணம்)	....	30	109
முக்கியச் சுவையைப் பேணல்	....	31	109
பொருள்மறைவு சுவைமறைவு கூடாதெனல்	....	32	109
உவகைச் சுவையல்லது பெருமிதச்சுவை முக்கிய மெனல்	....	33	110
அரங்கில் காண்பிக்கத் தகாதன	....	34 35	110
தலைவர் கொலை காண்பிக்கத் தகாததெனல்	....	36	110
அங்கத்திற்குள் கதைப்பகுதியும் பாத்திர நியமமும்	....	36	110
அங்கத்தில் பிறவற்றின் நிலை	....	37	111
அங்கங்கள் எத்துணை யெனல்	....	38	111
பிரகரணம்	....	39 40	111
பிரகரணத்தில் தலைவி	....	41 42	111
நாடிகை தவிர்ந்த கலப்பினம் இல்லையெனல்	....	43	112
நாடிகை	....	43	112
நாடிகையின் பிரகரணிகையென வேறொன்றில்லை யெனல்	....	44	113
நாடிகையில் தலைவிகள்	....	45 46	113

பொருள்.		காரிகை.	பக்.
தலைவன் புதிய தலைவியை அடைய முயலும் வகை	....	47	113
நாடிகையில் கைசிகி விருத்தி அமையும்வகை	....	48	113
பாணம்		49 50 51	114
இலாசியத்தின் உறுப்புகள்	....	52 53	114
பிரகசனத்தின் இலக்கணமும் மூவகைகளும்	....	54	115
சுத்தப்பிரகசனம்	....	55	115
விகிர்தப் பிரகசனம்	....	55	115
சங்கீரணப் பிரகசனம்	....	56	115
டிமம்		57 58 59	116
வியாயோகம்	....	60 61	116
சமவாகாரம்	....	62 67	117
வீதி	....	68 69	118
அங்கம்	....	70 71	118
ஈகாமிருகம்	....	72 75.	119
நாடக நூல்களியற்றும் முறை	....	76	119

நான்காமொளி.

சுவை (இலக்கணம்)	....	1	120
விபாவம் (செயலும் பிரிவும்)	....	2	120
ஆலம்பன விபாவம்	....	2	121
உத்தீபன விபாவம்	....	2	121
அனுபாவம்	....	3	122
சுவைக்கு விபாவமும் அனுபாவமும் முறையே காரணமும் காரியமுமாதல்	....	3	122
பாவம்	....	4	123
சாத்துவிகபாவம்	....	4	123
சாத்துவிகபாவங்கள் எட்டெனல்	....	5	124
முதலிரண்டிற்கு இலக்கணமும் மற்ற ஆறும் உலகியற்கையால் அறியப்படுமெனலும்	....	6	124
வியபசாரி பாவங்கள்	....	7	124
வியபசாரி பாவங்கள் 33 எனலும் அவற்றின் பெயர்களும்	....	8	125
தன்னிகழ்வு	....	9	125

பொருள்.		காரிகை.	பக்.
மெய்யுணர்வால் வரும் தன்னிகழ்வு	....	,,	125
கேட்டினால் வரும் தன்னிகழ்வு	....	,,	125
பொறையின்மையால் வரும் தன்னிகழ்வு	...	,,	126
உவகை பெருமிதச்சுவைகளில் கலந்த தன்னிகழ்வு	....	,,	126
தனித்து நிற்கும் தன்னிகழ்வு	....	,,	126
வலியழிதல்	....	10	127
ஐயம் (இலக்கணமும் இருவகை யெனலும்)	....	11	127
பிறரால் வரும் ஐயம்	....	,,	127
தன்னால் ,, ,,	....	,,	127
சோர்தல்	....	12	128
உவகை (இது சுவையில்லை வியபிசாரி பாவம்)	....	12	128
அறிவினால் வரும் உவகை	....	,,	128
வன்மையால் ,, ,,	....	,,	129
உணர்வின்மை	....	13	129
மகிழ்ச்சி	....	14	130
தீனம்	....	14	130
உக்கிரம்	....	15	131
கவலை	....	16	131
பயம்	....	16	131
பொறாமை	....	17	132
செருக்கினால் வரும் பொறாமை	....	,,	132
கயமையினால் ,, ,,	....	,,	132
சினத்தினால் ,, ,,	....	,,	132
தன்னிகழ்வு தாளாமை	....	18	133
இறுமாப்பு	....	19	133
நினைவு	....	20	133
மரணம்	....	21	134
மதம்	....	21	134
முதிர்ந்த தூக்கம்	....	22	134
நித்திரை	....	23	135
உணர்ச்சி	....	24	135
நர்ணம்	....	24	135

பொருள்.		காரிகை.	பக்.
அபசுமாரம்	....	25	136
மோகம்	....	26	136
அறிவு	....	27	136
சோம்பல்	....	27	137
ஆவேகம்	....	28	137
படை யெடுப்பால் வரும் ஆவேகம்	....	„	137
சூறைக்காற்றினால் „ „	....	„	138
புயல்மழையால் „ „	....	„	138
அதிர்ச்சியினால் „ „	....	„	138
தீமையால் „ „	....	„	138
நன்மையால் „ „	....	„	139
நெருப்பால் „ „	....	„	139
களிற்றால் „ „	....	„	139
ஆராய்ச்சி	....	29	139
அவகித்தானம்	....	29	140
நோய்	....	29	140
மதிவெறித்தல்	....	30	140
வருத்தம்	....	31	141
உற்சாகம்	....	32	141
சாபலம்	....	33	142
நிலைக்கருத்து	....	34	142
நிலைக்கருத்தின் தொகைகளும் பெயர்களும்	....	35	144
தன்னிகழ்வு முதலியவை நிலைக்கருத்தல்லவெனல்.		36	145
நிலைக்கருத்து சொற்றொடர்ப் பொருளாதல்	....	37	149
சுவை அவையினர்க்கேயெனல்		38 39 40.	151 152
பாத்திரம் முதலியனவை பொதுவியலைப்பெறல்	....	41	153
அவையினர் சுவையைத் துய்க்கும்வகை	....	41	153
நடிகனுக்கும் சுவையுளதெனல்	....	42	153
சுவைகளின் சொரூபமும் காப்பியங்களிலிருந்து அவை உண்டாகும் வகையும்	....	43 44	153
சமநிலைச் சுவையை அபினயித்தலரிதெனல்	....	45	155
தனக்குரிய வுறுப்புக்களுடன் கூடிய நிலைக் கருத்தே சுவை யெனல்	....	46	156

பொருள்.		காரிகை.	பக்.
சுவைக்கும் நிலைக்கருத்திற்கும் இலக்கணம் ஒன்றெனல்	....	47	156
உவகைச்சுவை	....	48	156
இடம்	....	,,	,,
காலம்	....	,,	157
கோலம்	....	,,	,,
இன்ப நுகர்ச்சி	....	,,	,,
உவகை (நிலைக்கருத்து).	....	,,	,,
மடந்தை	....	,,	158
புவன் (ஆலம்பன விபாவம்)	....	,,	,,
அன்பு	....	,,	,,
இனிய சேட்டை	....	,,	,,
சுவைவளரும் வழி	....	49	,,
உவகைச் சுவையின் உட்பிரிவுகள்	....	50	159
உடனுருவுவகை	....	50	159
அதனுட்பிரிவு பத்தெனல்	....	51 52	159
விருப்பம்	....	53	160
வியத்தல்	....	54	160
களித்தல்	....	,,	,,
அஞ்சுதல்	....	,,	,,
சிந்தை முதலிய முன்பே கூறினோமெனல்	....	55	161
பத்தென்றது பெரும்பான்மைபற்றி உண்மையில் அனந்தமெனல்	....	55	161
காதல் இயல்பெனல்	....	56	161
பிறிந்துறையுவகை	....	57	161
பிரணயமானம்	....	58	161
தலைவனிடம் தோன்றும் பிரணயமானம்	....	,,	162
தலைவியிடம் ,, ,,	....	,,	162
இருவரிடத்தும் ,, ,,	....	,,	162
தரியாமானம்	....	59 60	162
தாதிவாய்க் கேட்டல்	....	,,	163
கனவிற் பிதற்றல்	....	,,	163
கலவிக்குறி	....	,,	163

பொருள்.	காரிகை.	பக்.
பெயர்மாற்றம்	,,	163
நேரிற்காணல்	,,	164
கீழ்க் கூறியவைகளில் பின் பின்னது வலியுடைத்து எனல்	61	164
நற்சொல் முதலியவ்வை வசீகரிக்குமுபாய மெனவும் அவைகளின் இலக்கணமும்	62 63	164
நற்சொல்	,,	164
பிரித்தல்	,,	164
கொடை	,,	165
பணிவு	,,	165
லட்சியமின்மை	,,	165
சுவைமாற்றம்	,,	165
பிரவாசம்	,,	165
அதனுட்பிரிவு	65	166
எதிர்காலப் பிரவாசம்	,,	166
நிகழ்காலப் ,, ...	,,	166
இறந்தகாலப் ,, ...	,,	166
குழப்பத்தால் வரும் பிரவாசம்	,,	167
வசைமொழியால் ,, ,, ...	,,	167
இறப்பில் பிரவாசம் என்பதில்லை	67	167
தலைவியைப்பற்றிய சில நியமங்கள்	68	168
உடனுறையுவகை	69	168
பாவையர் செயல் பத்து	70	168
தலைவன் தலைவியின்வயின் இருக்கவேண்டும் முறை	71	168
பெருமிதச் சுவை	72	169
தானவீரன்	,,	169
இழிப்புச்சுவை	73	170
வெகுளிச்சுவை	74	171
தாளுதலின்மையால் வரும் ,, ...	,,	171
செறுநர் செய்கையால் வரும் ,, ...	,,	172
நகைச்சுவை	75	172
தன்பாலுள்ளனவால் வரும் ,, ...	,,	172

பொருள்.		காரிகை.	பக்.
பிறர்பாலுள்ளனவால் வரும் ,,	....	,,	173
நகைவகைகள்	....	76 77	173
வியப்புச்சுவை	....	78 79	173
அச்சச்சுவை	....	80	174
அவலச்சுவை	....	81 82	175
விரும்பியவழிதலால் வரும் ,,	....	,,	175
வெறுத்தனவால் வரும் ,,	....	,,	175
அன்பு முதலியவை கூறியவற்றில் அடங்குதல்	....	83	175
அணி முதலியவை கூறியவற்றில் அடங்குதல்	...	84	175
கவியினல் சுவையுருத்தில்லை	....	85	176
முடிவுரை	....	86	176

பொருளடக்கம் முற்றிற்று.

பிழைதிருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
1	15	நாடகங்களை	நாடகவிலக்கணங்களை
3	15	விருப்பம்	களிப்பு
5		தீ	ரூதீ
7	6	விரிந்த.	விரிந்த
7	14	பிரசங் கமெனல்	பிராசங் கிகமெனல்
10	1	தலைவித்து (மகா-பீசம்)	மகாபீசம் (தலைவித்து)
10	10	பீசத்திற்கு	பீசத்திற்குப்
11	2	உறுதி	உறுதிப்
14	13	உப்பேதம்	உற்பேதம்
40	28	தம்தம்	தன்தன்
48	24	விக்கம்பம்	விட்கம்பம்
55	20	அச்சம்	சஞ்சலம்
65	11	வினயம்.	அல்லது.
75	16	கன்னி—	கன்னி.
76	24	துணைவிகளைக்	தூதிகளைக்
82	20	காதலன் -	எ - டு : காதலன்.
86	9	அறிஞர்.	அறிஞர்[1]
86	23	காண்க. I	காண்க.
121	31	மிக்க	மிக்கு
123	11	அவையினர்	அவையினரின்
125	21	வெறுப்பு.	தன்னிகழ்வு.
125	31	வெறுப்பு.	தன்னிகழ்வு
126	9	ராவணனும்	இராவணனும்
127	27	தோழிகள்	தோழிகளின்
142	19	தாயிபாவம்	நிலக்கருத்து
144	23	நிலக்கருத்து	நிலக்கருத்தின் வகைகளும் பெயர்களும்
144	29	உறிய	உரிய

தசரூபகம்.

(தமிழ்)

முதலொளி.

(விளக்கவுரை)

மதமயி லன்னவோர் [1]சதிபதி சதிர்தனில்
மதமுடை முகிலொலி மாண்புடை வன்குரற்
புதுவகை முரசெனப் பொலிந்த கண்டத்தன்
கதிதரு கணபதி கழலிணை பணிவாம்.[2]

தோற்றுவாய் :—எடுத்தநூல் இடையூறின்றி முடிவதற்காகச் சான்றோர்வழக்கைப்பின்பற்றி விரும்பியதெய்வங்களாகிய நாட்டிய நூல்முதல்வனும் பரதற்கும் உள்ளத்துறையொருவற்கும் வணக்கம் செலுத்துகிறார்.

யாவையு மறியு மாற்ற லமையும்
பாவகர் களிக்கப் பத்துரு வாக்கும்
மாதவ னுக்கும் மாண்பர தற்கும்
தூய வணக்கம் சென்றுரித் தாக. 1

பொழிப்புரை :—'பத்துருவாக்கும்' என்னும் சொல் முறையே திருமால், மீன் ஆமை முதலிய பத்து அவதாரங்கள் எடுத்ததையும், பரதமுனிவர் அபினய நூல்களாகிய பத்து வகை நாடகங்களை யியற்றியதையும், அறிவிக்கின்றது. "பாவகர்" என்னும் சொல் முறையே இடையறுநினைவுடையவர் என்றும் சுவையாளர் என்றும் பொருள் படும். மாதவன்—உள்ளத்துறைகடவுள். பரதன்—நாட்டியநூல் ஆக்கியோன்.

---

1. சதிபதி - பரமசிவன்.

2. இச்செய்யுளின் மூல சுலோகம் தசரூபகத்தின் முதல் சுலோகமாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. உண்மையில் அது உரையின் முதல் சுலோகம். ஆதலின் மொழி பெயர்ப்பில் உரையொடு சேர்க்கப் பெற்றிருக்கிறது.

தோ - ய் :—*மாணவர் இந்நூலைக் கற்க வேண்டிய காரணத்தைக் காட்டுகிறார்.*

சிற்சில வறிவே சிற்சில பொழுதே
நற்கலை மகளின் நல்லரு ளெய்தும்.
அவ்வறி வப்பொழு தாக்கும் கலையைப்
பெற்றுணர் பிறரும் புலமை பெறுவார். 2

பொ - ரை :—*கலைமகள் சிற்சில கவிஞருக்கே பிரகரணம் முதலிய ஒப்பற்ற கலைநூல்களியற்றுமாற்றலை அளிக்கிறாள். அக் கவிஞர் இயற்றிய நூல்களைப் படித்தறிந்து பிறர் வல்லுநராகின்றனர்.*

தோ - ய் :—*எடுத்துக்கொண்ட நூற்பொருளைக்காண்பிக்கிறார்.*

நான்மறை சார மாராய்ந் தெடுத்து
நான்முகன் நாட்டிய வேதமு ரைத்தான்.
பாவலர் பரதர் அதன்பிர யோகம்.
நீலமி டற்றன் தாண்டவ வகைகள்.
மலைமகள் மாண்பார் இலாசிய வகைகள்.
இலக்கண முரைக்க வல்லாரி யாவர்.
எனினும் சிற்சில சுருங்க வுரைப்பல். 3

பொ - ரை :—*நான்முகன் மறைகளிலிருந்து சத்துள்ள பகுதியைப் பிரித்தெடுத்து நாட்டியவேதமாகச் செய்தான். பரதமுனிவர் அந்நாட்டியவேதத்திலுள்ள அபினயவகைகளை விரித்துரைத்தார். அரன் வன்மை சேர் தாண்டவப் பகுதிகளையும், உமை மென்மை வாய்ந்த இலாசிய வகைகளையும் ஆடிக் காட்டினர். அத்தகைய நாட்டிய வகைகளுக்கு முற்றுற இலக்கணம் கூற வல்லுநர் ஒருவருமிலர். ஆயினும் அவற்றில் ஒருபகுதியாகிய பத்துவகை நாடக நூல்களுக்கும் சுருங்க விலக்கணம் கூறுகிறேன்.*

தோ - ய் :—*'பொருள் ஒன்றுயின் கூறியதுகூறல் ஆம்' எனின் அல்ல வென்கிறார்.*

பரந்திறைந் துளதோர் பழையோர் நூலுள்
பேரறி வில்லார் அறிவு சிதைவர்.
அதனல் அந்நூல் அளித்த பொருளை
அதன்சொற் கொண்டே சுருங்க வறைவன். 4

போ - ரை —பற்பல விடங்களில் பற்பல பொருள்களைப் பல வாறு விரித்துரைத்திருக்கும் பழையசுவை நூல்களில் சிற்றறிவாளர் அறிவு கலங்கக்கூடும். ஆதலின் அந்நூல்களில் கூறியுள்ள விடயங் களை அவைகளில் உள்ள சொற்களைக் கொண்டே சுருங்கவும் மாறுபாடின்றியும் கூறுவன்.

தோ - ய் :—எழுதப்புகும் இந்நூலுக்கு நாடக விலக்கணங் களைப் பற்றிய அறிவு பயனாகக் கூடும். அவ்வறிவுக்குப் பயன் யாது? எனின் கூறுகிறார்.

இயல்பாய் இன்ப வூற்றுச் சுரக்கும்
நயம்படு நாடக நூலிய லறியார்
பழங்கதை போலப் பொருளறி வொன்றே
அதன்பய னென்பர் அவர்க்கு வணக்கம்.

போ - ரை :—"நல்ல காப்பியங்களைக் கற்பதற்கு அறம் பொருள் இன்பம் வீடு எனும் நால்வகைப் பயன்களினும் பிற கலை களினும் தெளிவு, புகழ், விருப்பம் என்ற இம்மூன்றும் பயன் ஆம்" என்று சிலர் கூறுகின்றனர். இதிகாசம் போன்ற பண்டை நூல் களில் ஒருவாறு இது பொருந்துமாயினும் நாடக நூலறிவிற்கு அவை மாத்திரமன்றித் தன்னுள் தான் உணர்வதும் (இவ்வுலகத் தில்) பேரின்பமாயதுமான சுவை நுகர்ச்சியும் பயன், என்று கூறியதாயிற்று. 'அவர்க்கு வணக்கம்' என்றது அவர் கருத்தைத் தான் ஏற்கவில்லை என்பதைப் பரிகாசத்துடன் அறிவிக்கும்.

தோ - ய் :—'எனினும் சிற்சில சுருங்க வுரைப்பல்.' என்று கூறியவைகளுள் ஒன்றாகிய நாட்டியத்தின் இலக்கணத்தை முத லில் கூறுகிறார்.

பிறர்தம் நிலையை யவர்போ லொருவன்
நடித்துக் காட்டல் நாட்டிய மென்பர்

போ . ரை :—காப்பியங்களில் வருணிக்கப்படும் தீரோதாத் தன் முதலிய தலைவர்களுடைய தன்மையை நால்வகையாக அபின யித்து ஏறிட்டுக் கொள்ளுதல் நாட்டியம்.[1]

காணப் பெறலால் உருவமென் றுரைப்பர்.

---

1. தன்னைப் பிறர் இராமன் முதலிய நாயகனாகவே நினைக்கும் வண்ணம் நடிகன் அபினயித்தல் நாட்டியம்.

போ - ரை :—அபினய வாயிலாகப் பிறர்தன்மையை ஒருவன் தன் மேல் ஏறிட்டுக் கொள்ளுதல் என்னும் நாட்டியமே (அவையோர்) காண்டலின் உருவம் என்ற பெயரைப் பெறுகிறது. உருவம் (ரூபம்)—பார்க்கப் பெறுவது. கருப்பு சிவப்பு முதலிய நிறங்களும் கண்ணுக் கிலக்காவதால் உருவம் (ரூபம்) என்ற பெயர் பெறுகின்றன.

பிறரியல் பிறர்பால் பொருத்தப் பெறுதலின்
உருவக மென்று மோதினர் பெரியோர்,

போ - ரை :—இராமன் முதலிய தலைவர்களுடைய பண்பு செயல் முதலிய இயல்கள் நடிப்பவன்பால் செயற்கை முறையில் ஏறிநிற்பதால் உருவகம் என்றும் இதற்குப் பெயர் ஆயிற்று. முகத்தைத் திங்களாகப் புனைந்து கூறும் அணிக்கு உருவகம் என்று பெயர் வந்தது காண்க. இந்திரன், புரந்தரன், சக்கிரன் என்ற சொற்கள் மூன்றும் தம்முள் தாம் பலவாயினும் முறையே தலைமையை யுடையவன், புரங்களை யழித்தவன், வலியுடையவன் என்ற வேறு வேறு காரணங்களை முன்னிட்டுக் கொண்டு ஒரேபொருளை யறிவிப்பது போன்று, நாட்டியம், உருவம், உருவகம் என்ற இம் மூன்று சொற்களும் முறையே அபினயித்தல், பார்த்தல், ஏறிடுதல், என்ற மூன்றுகாரணங்களை முன்னிட்டுக்கொண்டு ஒரே பொருளைக் குறிக்கின்றன.

நவிலும் சுவைகள் நாடக நூலுள்
இயலின் இலங்கும் என்பர் பெரியோர். 6

போ - ரை :—சுவைகளுள் ஒன்றோ பலவோ நாடக நூல்களில் முறையின் அமைந்திலங்கும்.

தோ - ய் :—நாடக நூல்களின் பெயர்களும் தொகையும் கூறுகிறார்.

முறையே நாடகப் பிரகர ணங்கள்
பாணம் பிரகச னம்டிமம் அற்றே
வியாயோ கத்தோடு சமவா காரம்
வீதியோ டங்க மீகா மிருகம்
என்றுரு வகநூல் பத்து வகைத்தே. 7

போ - ரை :—'பத்துவகைத்தே' என்ற விடத்துள்ள பிரிநிலை ஏகாரம், 'கலப்பற்ற தூய நாடக நூல்கள் பத்தின் மிக்கில்லை'

யென்பதைக் காட்டும். மேலே கூறப்போகும் கலப்பியலாகிய நாடிகைகளை விலக்காது.

தோ - ய் :—டோம்பி, சிரீகதிதம், பாணம், பாணி, பிரத்தானம், இராசகம் காப்பியம் என்று மற்றும் எழுவகை உருவக நூல்களிருக்கப் 'பத்து வகைத்தே' என்பது எவ்வாறு பொருந்துமெனில் கூறுகிறார்.

நிருத்திய மேன்பது கருத்திய லாட்டம்.

போ - ரை :—சுவையைப் பற்றி வரும் நாட்டியத்தினும் கருத்தை (பாவத்தை)ப்பற்றி வரும் நிருத்தியம் வேறு. நிருத்தியம் என்ற சொல்லின் [1] வினைமுதலை நோக்கின் நிருத்தியத்தில் உறுப்புக்களின் அசைவு (சலனம்) நிறைந்திருத்தல்வேண்டுமென்பது புலப்படும். நாட்டியம் என்றசொல்லின்[2] வினைமுதல் நாட்டியத்தில் உறுப்பசைவு குறைந்திருத்தலை விளக்குகிறது. நிருத்தியம் செய்பவன் நர்த்தகன் என்றும் நாட்டியமாடுபவன் நடன் என்றும் முறையே அழைக்கப்படுகின்றனர். நிருத்தியத்திற்குப் பிரேட்சணீயகம் என்று பெயர். நாட்டியம் அவ்வாறு உரைக்கப்படுவதில்லை. சொற்பொரு(பதார்த்தம்)ளாம் விபாவம் அனுபாவம் முதலியவைகளினுடைய சேர்க்கையாகிற 'சொற்றொடர்ப்பொருள்' (வாக்கியார்த்தம்) சுவையுணர்ச்சிக்குக் காரணமாம். ஆதலின் சுவையைப்பற்றிய நாட்டியம் சொற்றொடர்ப் பொருளின் அபினயமாகிறது. நிருத்தியம் அத்தகையதன்று. அது சொற்பொருளபினயமாம். டோம்பி முதலியவைகள் ஏழும் நிருத்திய வகைகள். ஆதலின் உருவக நூல்கள் பத்து வகைத்தேஎன்று கூறுதல் தகும்.

[3]சோற்போரு ளபினய மாமிது மார்க்கம்.

போ - ரை :—விபாவம் அனுபாவம் முதலிய சொற்பொருட்களை அபினயித்தலாகிற நிருத்தியத்திற்கு 'மார்க்கம்' என்று மற்றொரு பெயர்.

தாள மிசைகள் தன்னுள் போருந்தச்
சால விளங்கும் நிருத்த வகையே.

---

1. ṛtī — गात्रविक्षेपे 2. नट — अवस्कन्दने ।
3. சொற்பொருள்—பதார்த்தம்.

போ - ரை :—சஞ்சத்புடம் முதலிய தாளங்களுக்கும் முடுகு முதலிய இசைகளுக்கும் தேவையான உறுப்புக்களின் அசைவே நிருத்த மென்று கூறப்பெறுகிறது. இதில் அபினயம் இல்லை.

தேசி நிருத்த மென்பன வொன்றே. 8

போ - ரை :—நிருத்தத்திற்குத் தேசியென்று மற்றொரு பெயர்.

தோ - ய் :—இரண்டும் தனித்தனி இருவகையாம் என்கிறார்.

நாட்டியக் காட்சிக் குறுதுணை யாகும்
நிருத்தியம் நிருத்த மென்ற விரண்டும்
இனிது கடிய தெனும்வேற் றுமையால்
முறையே யிலாசியம் தாண்டவ மென்றும். 9

போ - ரை :—மென்மை வாய்ந்த நிருத்தியம் நிருத்தம் இரண்டும் இலாசியமென்றும், வன்மை வாய்ந்த அவ்விரண்டும் தாண்டவ மென்றும் கூறப்பெறுகின்றன. இருவகை நிருத்தியம் அபிநய வாயிலாகவும், இருவகை நிருத்தம் அழகை உண்டாக்கிக் கொண்டும் நாடகத்திற்கு உறுப்பு ஆகின்றன.

தோ - ய் :—நடித்துக் காட்டல் என்பது நாடகங்கள் எல்லாவற்றிலும் பொதுவாயிருத்தலின் வேற்றுமைக்குக் காரணம் என்னவெனில் கூறுகிறார்.

நாயகன் பொருள்சுவை யென்ற விவற்றால்
நாடக நூல்கள் வேற்றுமை யுறுமே.

போ - ரை :—பொருள் வேறுபடுவதாலும் தலைவன் வேறுபடுவதாலும் சுவை வேறுபடுவதாலும் நாடகநூல்கள் ஒன்றின் ஒன்று வேறுபடுகின்றன.

தோ - ய் :—பொருள் வேற்றுமையைக் கூறுகிறார்.

உறுப்பி யுறுப்பெனப் பொருளிரு வகையாம்.

தோ - ய் :—எங்ஙனம் எனின் கூறுகிறார்.

உறுப்பி யென்ப தாதி காரிகம்
உறுப்புப் பிராசங் கிகமென் றோர்க. 10

போ - ரை :—இராமாயணத்தில் இராமன் சீதை இவர்களைப் பற்றிய கதைபோன்று ஆதிகாரிகமாயிருப்பது உறுப்பியாம். விபீ

டணன் சுக்கிரீவன் முதலியோரைப்பற்றிய கதை போன்றுப் பிரா சங்கிகமா யிருப்பது உறுப்பாம்.

தோ - ய் :—ஆதிகாரிகம் என்றசொற்பொருளை விளக்குகிறார்.

பயனுறு தன்மை அதிகா ரமெனல்.
பயனுறு பவனே அதிகா ரியெனல்.
அவற்று லாகிப் பரந்து விரிந்த.
கதையே யாதி காரிக மென்பர். 11

போ - ரை :—பயனுடைமை அல்லது பயனுக்குரியவனு யிருத்தல் அதிகாரமாம். பயனுக்குரியவன் அதிகாரி. அதிகாரத்தை அல்லது அதிகாரியைப் பற்றியதும் முடிவுவரை பரந்துளதுமான கதையே ஆதிகாரிகம் என்று கூறப்பெறுகிறது.

தோ - ய் :—பிராசங்கிகம் என்பதை விளக்குகிறார்.

பிறபய னுக்கும் பொருள்தன் னடைவாய்த்
தன்பய னுக்கல் பிரசங் கமெனல்.

போ - ரை :—பிறிதொன்றின் பயனை யாக்குவான் கருதி இடையில் புகுந்ததும், கருதாது தானுக உண்டாகக் கூடிய தற்பயனை உடையதுமான கதைப்பகுதி பிராசங்கிகம் என்றழைக்கப்பெறும்.

தோ - ய் : — பிராசங்கிக மென்பது பதாகை பிரகரி என இரு வகைத் தாமென்று இலக்கணத்துடன் விளக்குகிறார்.

இடையிற் றேன்றித் தொடர்ந்து படரும்
பிராசங் கிகமே பதாகைக் கதைபாம்.
தோன்றிய தலத்தே தன்முடி வெய்தும்
பிராசங் கிகமே பிரகரி யென்பர். 12

போ - ரை :—இராமாயணத்தில் இடையில் தோன்றிய சுக்கிரீவன் முதலியோர் வரலாறு வெகு தூரம் தொடர்ந்து படர்வதால் பதாகைக் கதையாம். சிறப்புக் குறியாம் பதாகை போன்று தலைவர்களுக்குப் பயன்படுவதால் பதாகையென்ற பெயராயது. சாலத் தொடராது தோன்றியவிடத்தே முடிவடையும் சபரியின் கதை போன்றவை பிரகரி ஆம்.

தோ - ய் :—பதாகைக் கதையுடன் தொடர்புண்மை பற்றிப் பதாகைத் தானம் என்பதையும் விளக்குகிறார்.

இயற்கதை தொடர்ந்த வருபொரு ளுணர்த்தும்
பிறிதொரு வசனம் பதாகைத் தானம்.
ஒத்த கதைப்பொருள் ஒத்த வுரிச்சொல்
என்றிஃ திருவகை யென்று நவின்றார். 13

போ - ரை :—கூறும் கதையில் மேல்வரும் விடயங்களைக் குறிப்பாக உணர்த்தும் பிறிதொரு வசனமே பதாகைத்தானம் ஆம். பொருளொற்றுமை அல்லது உரிச்சொல்லொற்றுமை பற்றி இஃ திருவகைத்தாம். பொருளொற்றுமைபற்றி வருவது அந்நியோத்தி வாயிலாகவும் உரிச்சொல்லொற்றுமைபற்றி வருவது சமாசோத்தி வாயிலாகவும் அறியப்பெறும்.

பொருளொற்றுமை.

எடுத்துக் காட்டு :—இரத்தினவளி. மூன்றும் அங்கம்.

'தாமரைக்கண்ணி! போகின்றேன் வேளை வந்துவிட்டது. நானே வந்து மறுபடியும் உன்னை யுறக்கத்தினின்று எழுப்புகின்றேன்.' என்று கதிரவன் அத்தகிரிச் சிகரத்தின் மேல் தன் கிரணங்களைப் பரப்பிய வண்ணம் தாமரையோடையைத்தேற்றுகிறான்.

உரிச்சொல்லொற்றுமை.

எ - டு :—இ - ளி. இ - அ.

அரும்புகள் மிக்கதும் வெண்ணிறம் வாயப்பெற்றதும் மலரத் தொடங்கியதும் இடையருக் காற்றின் தோற்றத்தால் வருத்தமுறுவதுமாகிய பூங்காவிலுள்ள இக்கொடியைப் பிறிதொரு காதலியைப் பார்ப்பதுபோல் கூர்ந்து கவனித்துக்கொண்டிருக்கும் நான் இன்று என்மனைவியின் முகம் சினத்தினால் சிவக்கக் காரணமாய்விடுவது திண்ணம்.

தோ - ய் :—ஆதிகாரிகம் பதாகை பிரகரி யென்ற மூன்றும் தனித்தனி மூன்றுமென்கிறார்.

அறிந்த தென்றும் ஆக்கிய தென்றும்
கலப்பிய லென்றும் மூன்றும் மூன்றும்.
புராணம் முதலிய வறிந்த கதையாம்.
அறிஞர் ஆக்கிய தாக்கிய கதையாம்.
இரண்டின் கலப்பே கலப்பிய லாகும். 14

தோ - ய் :—இவற்றிற்கு வேறு வகையிலும் முப்பிரிவுகள் உள வென்கிறார்.

திப்பியம் மானுடம் திப்பிய மானுடம்
என்பதும் மற்றோர் முப்பிரி வாகும்.

தோ - ய் :—*கதையின் பயன்வகைகளை விரித்துரைக்கிறார்.*

அறம்பொரு ளின்ப மென்பன பயனும்.
ஒன்றும் பலவும் நூற்பய னாகும்.
பலவுள வேனும் ஒன்றே தலையாம்.

போ - ரை :—*அறம் பொருள் இன்பம் என்ற மூன்றினுள் ஒவ்வொன்றும் தனித்தனியே நூற்பயனும், பலவும் பயனும். அவ்வாறு பல பயனும் பொழுது ஒன்று தலைப்பயனுயும் பிற (ஒன்று அல்லது பல) தலைப்பயனுக்கு அங்கமாகவும் நிற்கும்.*

தோ - ய் :—*பயனின் கருவியைக் கூறுகிறார்.*

பீச மென்பது பயன்முத லாகும்.
சிறிதாய்த் தொடங்கிப் பெரிதா வளரும்.
பயனிலை பற்றி யஃதிரு வகையாம்.

போ - ரை :—*சிறியவளவில் முதலில் குறிக்கப் பெற்று, செல்லச் செல்லப் பல வகையாய் வளர்ந்து கோரிய பயனைக்கிட்டுவிக்கும் கருவியே பீசம். பீசம் (வித்து) போன்றுளதால் பீசம் என்று கூறப்பெறுகின்றது.*

எ - டு :—*இரத்தினுவளி நாடிகையில் அரசன், முடிவி லிரத்தினுவளியென்பவளை அடைகிறான். (நூற்பயன் இன்பம்.) அரசன் அப்பயனை அடைவதற்கு வேண்டிய முயற்சிகளை யௌகந்தராயணன் என்னும் அமைச்சன் செய்கிறான். விதியும் அவனுக்கு உதவி புரிகிறது. இங்கு யௌகந்தராயணன் செயல் பீசமாகிறது. இது அந்நூலில் விட்கம்பகத்தில் முதலில் சிறியவளவில் குறிப்பிடப் பெறுகிறது. 'ஐயமென் !' என்று தொடங்கி 'அரசனுக்கு நன்மை செய்யும் இத்தொடக்கம்' என்பதுவரையுள்ள யௌகந்தராயணன் பேசும் பகுதியில் இதைக் காண்க.*

வேணீசங்கார நாடகத்தில் தருமபுத்திரர் போருக்காகச் செய்யும் முயற்சி பீசம். அது பீமசேனனுடைய சினத்தோடு கலந்து பன் மடங்காய்ப் பெருகுகிறது. முடிவில் திரௌபதியின் அவிழ்ந்த கூந்தலை முடிவதற்குக் காரணமாகிறது. அப்பீசம், நூலின் தலைப்

பயனை உண்டாக்கும்போது தலைவித்து (மகா பீசம்) என்றும், இடையில் சிற்சில சிறு பயன்களை உண்டாக்கும் போது அவாந்தர பீசமென்றும் கூறப்பெறும்.

தோ - ய் :—அத்தகைய அவாந்தர பீசத்திற்கு வேருெரு பெயர் உண்டென்கிருர்.

இடையுறு பயனால் இடையறு மாயின்
தொடர்பினை யாக்கும் அடைவே[1] பிந்து. 16

போ - ரை :—நீரில் எண்ணெய்த் துளிபோல் முன்னும் பின்னும் பரவி நின்று, இடையறு கதைப் பகுதிகளை ஒன்று சேர்த்தலின் அவாந்தரபீசத்திற்கு 'பிந்து' என்ற பெயராயிற்று.

எ - டு :—இரத்தினவளியில் வாசவதத்தை மதனபூசை செய்கிருள். இச்சிறு சம்பவத்தோடு முக்கியக்கதை நிற்கிறது. மதனபூசை முடிந்தவுடன் திரையுள்ளிருந்து வைதாளிகன் 'உதயனனுடைய தரிசனத்திற்காகச் சிற்றரசர்கள் எதிர்பார்த்து நிற்கின்றனர்.' என்று கூறுகின்றுன். இதைக்கேட்டு வாசவதத்தையின் பணிப் பெண்ணுயிருக்கும் இரத்தினவளி "என்ன! இவ்வரசன் உதயனரா! இவருக்காக வல்லவோ நான் என் தகப்பனுல் கொடுக்கப் பெற்றேன்................" என்று கூறுகிருள். இரத்தினவளியை மன்னனுக்கு மணம்புரிவிக்கவேண்டும் என்று யௌகந்தாரயணன் தொடங்கியுள்ளான் என்பது கதையின் முதற்பகுதி. மதனபூசையால் இது இடையறுபட்டு நிற்கிறது. பூசைமுடிவில் வைதாளிகன் சொல்லால் இரத்தினவளி அத்தேயத்தரசனை உதயணன் என்று அறிந்துகொள்வதாக முடிந்து கதை மேலும் தொடர்வதால் வைதாளிகன் சொல் இங்கு அவாந்தரபீசமாகும்.

தோ - ய் :—இதுவரை கூறிய பதாகை முதலியவைந்திற்கும் பொருள்மூலங்கள் (அருத்தப்பிரகிருதிகள்) என்று பெயரென்கிருர்.

பீசம் பிந்து பதாகை பிரகரி
காரிய மேன்ப பொருள்மூ லங்கள்.[2] 17

1. அடைவு—காரணம்.

2. குடத்திற்கு மண் முதற் காரணமாவது போல் இவ்வைந்தும் ஒரு நூல் உண்டாவதற்கு முதற் காரணமாதலின் இவைகளுக்குப் பொருள்மூலங்கள் (அருத்தப் பிரகிருதிகள்.) என்று பெயர்.

தோ - ய் :—வேறுள ஐந்நிலைகளைக் கூறுகிறார்.

[1] தொடக்கம் முயற்சி விருப்பம் உறுதி
பேறெனவைந்தும் பற்றிய தொழிலின்
வேறுள நிலைகள் என்றார் புலவர். 18

தோ - ய் :—முறையே ஒவ்வொன்றிற்கும் இலக்கணம் கூறுகிறார்.

அவற்றுள் தொடக்கம் என்பது கூறின்
பெரும்பே றுபெற விரும்பித் துணிதல்.

பொ - ரை :—ஒரு மாபெரும் பயனையடைய வெண்ணித் துணிதல் தொடக்கம் (ஆரம்பம்) எனப்பெறும்.

எ - டு :—வச்சவரசன் அமைச்சனால் அரசியற்பயன் முதலியவைகளைப் பெறுபவன். அவ்வரசன் இரத்தினாவளியைப் பெறுவதற்காக அமைச்சன் யௌகந்தராயணன் எண்ணித் துணிவது தொடக்கம் அல்லது ஆரம்பம் ஆம். அதை இரத்தினாவளியில் 'அரசனுக்கு நன்மை பயக்கும் இத்தொடக்கத்தில் தைவமும் துணையாயுள்ளது.' என்ற பகுதியில் காண்க.

விரும்பிய தெளிதில் கிட்டா தாயின்
பெருஞ்செய லாற்றல் முயற்சி யாகும். 19

பொ - ரை :—அப்பயன் எளிதில் கிட்டாதாயின் அதை அடைவதற்கு வேண்டிய உபாயங்களைச் செய்தல் முயற்சி (பிரயத்தினம்) என்று கூறப்பெறும்.

எ - டு :—வச்சவரசனை எளிதில் மணக்கமுடியாமையை யறிந்த இரத்தினாவளி அவனுருவப்படம் வரைதல் முதலியன செய்தல் முயற்சியாம். இதை 'ஆயினும் வேறு உபாய மின்மையின் முடிந்தவரை சித்திர மெழுதி விரும்பியவாறு செய்கிறேன்' என்று கூறும் பகுதியில் இரத்தினாவளிநாடிகையில் காண்க.

---

1. தலைவன், அறம் முதலிய பயன்களில் ஒன்றை அல்லது பலவற்றை முடிவில் அடைகிறான். அப் பயனைப்பற்ற அத்தலைவனிடத்தில் ஐந்து நிலைமைகள் உண்டாகின்றன. அவைகளுக்கு அவஸ்தைகள் என்று பெயர். அவை தலைவனிடத்தில் உண்டாயினும் பயனைப்பற்றியவையாதலின் 'தொழில் நிலைகள்' என்று கூறப்படுகின்றன.

விருப்பம்.

அடைவொ டிடையூற் றைய மிருப்பால்
கிடைத்தல் ஆம்என் றூகம் விருப்பம்.

[1]பொ - ரை :— காரண மிருப்பினும் இடையூறு முண்மையின் உறுதி தளர் வெய்திய போதினும் பயன் கிடைக்கக் கூடும் என்று எண்ணி யிருத்தல் விருப்பம் (பிராப்தி ஆசை) என்று கூறப்பெறும்.

எ - டு : 'உருவத்தை மாற்றிக் கொண்டு நாயகனிருப்பிடம் சென்று நாயகனை அடைந்துவிடலாம் என்பதிருப்பினும் வாசவ தத்தை அறிந்துவிடக்கூடும் என்ற அச்சம் இருப்பதனால் இரத்தின வளியின் உறுதி தளர்வது விருப்பமாம். இதை இரத்தினவளியில் மூன்றும்களத்தில் 'திடுமென்று புயல்போல் தோன்றி வாசவ தத்தை வேறிடத்திற்கு அழைத்துப் போகாதிருக்க வேண்டுமே.' என்ற பகுதியில் பார்க்க.

உறுதி.

ஊறுக ளின்மையின் கோரிய பெறுதல்
தேறி யிருத்தல் கூறிய உறுதி. 20

பொ - ரை :—இடையூறுகள் விலகுவதால் பயன் திண்ணமாய்க் கிட்டுமென்றிருத்தல் உறுதி அல்லது நியதாப்தி என்று கூறப்பெறும்.

எ - டு :—இரத்தினவளியில் விதூடகன் 'சாகரிகை உயிர்வாழ்வது அரிது' என்று தொடங்கி 'நீ என் ஓர் உபாயமும் தேடவில்லை' என்று கூறினபொழுது அரசன் "அரசியின் சினத்தை யாற்றுவது தவிர வேறு வழியில்லை' என்று கூறும் பகுதியில் இதைக் காண்க. மேல் வரும் காட்சி (அங்கம்) க்குப் பிந்துவாய் நிற்கும் இப்பகுதியால் தேவியின் சினம் என்னும் இடையூறு நீங்கினால் இரத்தினவளியை யடைவது எளிது என்று தெரிவதால் இது உறுதியாம்.

---

1. பயனை அடைவதற்காக உபாயங்களில் இழிந்து முயற்சிக்கும் பொழுது இடையூறு தோன்றின் 'பயன் திண்ணமாய்க் கிடைக்கும்' என்ற உறுதி கொஞ்சம் தளர்கின்றது. முயற்சி யுண்மையால் பயன் கிட்டும் என்ற நம்பிக்கையும் அழிவதில்லை. இந்நிலையே இங்கு விருப்பம் என்று கூறப்படுகின்றது. ஸம்பாவனை யென்று சில நூல்களில் கூறப்பெறுகிறது.

பேறு.

கோரிய வெல்லாம் பெறுதல் பேறும்.

எ - டு :—வச்சவரசன் முடிவில் இரத்திநுவளியை அடைத லும் அரசற்கரசனுதலும் எடுத்துக் காட்டாம்.

தோ - ய் :—சந்தி யிலக்கணம் கூறுகிறுர்.

அவற்றுள் முறையே ஐம்பொருள் மூலம்
ஐந்நிலை சேர்தல் ஐயிணை வுகளாம். 21

பொ - ரை :—பொருள்மூலங்கள் ஐந்தும் முறையே ஐந்நிலை களுடன் சேர்ந்து முகம் முதலிய ஐந்துசந்திகள் ஆகின்றன.

தோ - ய் :—சந்தியின் பொதுவிலக்கணம் கூறுகிறுர்.

முடிபய னென்றே டிணைகதைப் பகுதி
இடையுறு பயனே டிணங்கல் சந்தி.

பொ - ரை :—ஒரு பயனுடன் தொடர்புடைய கதைப் பகுதி கள் இடையில் வேருெரு பயனெடு தொடர்புபெறல் சந்தி ஆம்.

தோ - ய் :—அவை யெவை யெனக் கூறுகிறுர்.

[1] முறையே அவைஆம் முகம்பிர திமுகம்
கருப்பம வமரிச முபசங் காரம். 22

தோ - ய் :—முறையே இலக்கணம் கூறுகிறுர்

பேறும் சுவையும் பயக்கு மஃதாம்
பீச முளைப்பே முகசந் தியேனல். 23
பீசம் தொடக்கம் கலந்த விதற்குப்
பேசிய வங்கம் பன்னிரு வகையாம். 24

---

1. பீசம் தொடக்கம் என்ற இரண்டின் சேர்க்கை முகசந்தி.
பிந்து முயற்சி என்ற இரண்டின் சேர்க்கை பிரதிமுகசந்தி.
பதாகை விருப்பம் என்ற இரண்டின் சேர்க்கை கருப்பசந்தி.
பிரகரி உறுதி என்ற இரண்டின் சேர்க்கை அவமரிசசந்தி.
காரியம் பேறு என்ற இரண்டின் சேர்க்கை உபசங்காரம் அல்லது நிருவகணசந்தி.

பொ - ரை :—பல திறத்தனவாகிய அறம் பொருள் இன்பம் எனும் பயன்களுக்கோ அல்லது அத்தகைய சுவைகளுக்கோ முதற் காரணமாகும் பீசம் தோன்றல் முகசந்தியாம். சுவைகளுக்குக் காரணமாகப் பீசம் தோன்றலும் முகசந்தி யென்றதால், அறம் பொருள் இன்பமாம் மூவகைப் பயன் இலதாய பிரகசனம் முத லியவைகளிலும் சுவை யுண்மையின் முகசந்தி யுண்டெனவாயிற்று. பீசமென்ற பொருள்மூலமும் தொடக்கமென்ற செயல்நிலையும் சேர்ந்த விதற்குப் பன்னிரண்டு உறுப்புக்கள் உள்ளன.

தோ - ய் :—அவைகளைக் கூறுகிறார்.

உபக்கே பத்தோடு பரிகர மென்றும்
பரிநியா சத்தோடு விலோபன மென்றும்
உயுத்தி பிராத்தி சமாதா னத்தோடு
விதாநம் பரிபா வனையுப் பேதம்
பேதம் கரண மென்றும் முறையே
பொருள்பெறு சொல்லன பன்னிரு வகையாம். 25

தோ - ய் :—இவை பன்னிரண்டு பெயர்களும் காரணப் பெயர் களானமையால் ஒருவாறு இலக்கணம் விளங்குமாயினும் எளிதில் அறியும் வண்ணம் ஒவ்வொரு உறுப்பிற்கும் தனித்தனியே இலக் கணம் கூறுகிறார்.

உபக்கேபம்.

விதை விதைத்தல் உபக்கே பமெனல்.

இரத்தினவளி—மு - அ.

எ - டு :—'கூடிவரும் நல்வினை வேறுதீவிலிருந்தோ கடல் நடுவிலிருந்தோ திசைமுனைகளிலிருந்தோ விரும்பியவற்றை எய்து விக்கின்றது.' என்று கூறிக் கொண்டே யௌகந்தராயணன் (வச்ச வரசனின் அமைச்சன்) நாடக மேடையில் தோன்றுகிறான். இத னாலும் மேல்வரும் வாக்கியங்களாலும், 'வச்சவரசன் இரத்தினவ ளியை மணப்பதற்குத்' தான் தொடங்கி யுள்ளமையை யௌகந்த ராயணன் அறிவிக்கிறான். இது உபக்கேபம்.

பரிகரம்.

அதுபெரி தாதல் பரிகர மென்பர்

இ - ளி. மு - அ.

எ - டு :—'இரத்தினவளியை மணப்பவன் அரசர்க்கரசாவான்' என்றுரைத்த உயோகியின் வசனத்தில் நம்பிக்கை வைத்து நாம் நம் மரசனுக்கு அவளை மணம் புரிவிக்கும்படி அவள் தகப்பனை வேண்டினோம். "அவனும் மனமுவந்துகொடுத்தான். வரும்பொழுது கலனுடைந்து கடலில் மூழ்கிய அப்பெண் தற்செயலாய் ஓர் மரத்துண்டைப்பற்றி உயிர் பிழைத்தல், தண்ணீரில் தத்தளித்துக் கொண்டிருந்த அவளை நம் தேயத்து வணிகன் காப்பாற்றி அடையாளம் அறிந்து நம்மிடம் சேர்த்தல் ஆகிய இவையெல்லாம் வினை வேறு வகையாயிருப்பின் நேர்ந்திரா. எவ்வகையினும் நம் தலைவனை நன்மைகள் அணுகத் தொடங்கிவிட்டன." என்று யௌகந்த ராயணன் கூறுவது பீசத்தைப் பெரிதாக்குவதால் பரிகரமாம்.

பரிநியாசம்.

அஃதுறு தியுறல் பரிநி யாசம்

இ - ளி. மு - அ.

எ - டு :—'அரசனுயர்விற்குக்காரணமாயதும் அனுகூலதைவம் கைகொடுத்துதவியதுமாகிய என்முயற்சி பயனுறுமென்பதில் ஐயமில்லை. ஆயினும் அரசன் அனுமதியின்றிச் செய்ததால் அரசனைப் பற்றி அஞ்ச வேண்டியிருக்கிறது' என்கிற இதனால் யௌகந்தராயணன் தான் தொடங்கிய முயற்சி உறுதிபெற்றிருத்தலை அறிவிக்கின்றான். ஆதலின் இது பரிநியாசம் ஆம்.

விலோபனம்.

பண்பு பகர்தல் விலோபன மென்பர். 26

இ - ளி. மு - அ.

எ - டு :—"ககனத்தைக் கடந்து சென்ற கதிரவன் மேற்கு மலையில் தன் கதிர்களை விட்டுவிட்டு மறைந்து விட்டான். மாலை வேளை. சிற்றரசர்கள் ஒருவர்க் கொருவர் முந்திக் கொண்டு கொலு மண்டபத்தை அடைந்து, தாமரை மலர்களின் ஒளியைக் கவர்வதும் அதிக ஆனந்தத்தைத் தருவதுமாகிய மதியின் கிரணங்கள்போன்ற உன் திருவடிகளைக் கண்டு வணங்க எதிர்பார்த்திருக்கின்றனர்." என்று வைதாளிகன் திரைமறைவிலிருந்து பாடுகிறான்.

இங்கு வச்சவரசனுடைய பண்புகள் நன்கு புனைந்துரைக்கப்படுவதால் அவனை அடைய வேண்டுமென்ற இரத்தினவளியின் அவா அதிகமாகிறது. ஆதலின் இது விலோபனம்.

உயுத்தி.

நயம்பட வெண்ணித் துணிதல் உயுத்தி

இ - ளி. மு - அ.

எ - டு :—"கடலிலிருந்து காப்பாற்றி வணிகன் என்னிடம் ஒப்படைத்த இக்கன்னியை நான் பெருமதிப்புடன் இராணிவாசவதத்தையிடம் சேர்ப்பித்தது தக்க செயலே; பாப்பிரவ்வியன் என்ற கஞ்சுகியும் சிங்கள நாட்டமைச்சன் வசுபூதியுடன் தெய்வச் செயலாய்க் கடலிலிருந்து கரையேறிக் கோசல நாட்டரசனை அடக்குவதற்காக நான் அனுப்பியுள்ள சேனைத் தலைவன் ருமண்வானோடு கலந்தான் என்று நான் கேள்விப் படுகிறேன்." இங்கு இரத்தினவளி வாசவதத்தையின் மாளிகையி லிருப்பது அரசனும் அவளும் கண்டு காதலிப்பதற்கு ஓர் வாய்ப்பு ஆவதாலும், பாப்பிரவ்வியனும் வசுபூதியும் ருமண்வானோடு கலந்து கோசல நாட்டை வெற்றி கொள்வது வச்ச வரசன் அரசரர்க்கரசாவதற்குக் காரணமாவதாலும், மேற்கூறிய யௌகந்தராயணன் வாக்கியத்தில் உயுத்தி எனும் உறுப்பு அடங்கியிருப்பது காண்க.

பிராத்தி

இன்ப மெய்துதல் பிராத்தி யாகும்

இ - ளி. மு - அ.

எ - டு :—திரைக் குள்ளிருந்து வைதாளிகன் "பொழுது போயிற்று. சிற்றரசர் உதயணனுடைய தரிசனத்திற்காக எதிர் நோக்கி நிற்கின்றனர்." என்று கூறும் பொழுது, அரசனைக் காண வேண்டுமென்று அங்கு மறைந்து நிற்கும் இரத்தினவளி கேட்டு அரசன் வருவதை யறிந்து கண்டு களித்து : என்ன இவ்வரசர் பெருமான் உதயனரா இவருக்காக வல்லவோ யான் என் தந்தையால் அளிக்கப் பெற்றேன். பணிப் பெண்ணாயிருப்பதால் தாழ்வெய்திய என்னுடல் இவரைக்கண்டதால் மதிப்புடையதாகவே ஆயிற்று' என்று தனக்குள் இன்புறுகிறாள். இவ்வின்புறல் பிராத்தி எனும் உறுப்பாகும்.

சமாதானம்

விதையின் தோற்றம் சமாதா னமெனல்.

இ - ளி. மு - அ.

[1] எ - டு —" வாசவதத்தை :—ஆயின் பூசைத்திரவியங்களைக் கொண்டு வா ".

இரத்தினவளி :—தலைவியே ! எல்லாம் ஏற்பாடாயிருக்கிறது.

வாசவதத்தை :—(இரத்தினவளியைப் பார்த்துத் தனக்குள்) ஐயோ ! பணிப்பெண்களின் தவறன்றோ இது. அரசன் பார்வைக்கு இவள் இலக்காகாமல் இருக்கவேண்டுமென்று நான் முயன்று இவளை விலக்கி வருகிறேன். இவள் இப்பொழுது இங்கிருந்தால் அரசன் பார்த்து விடுவாரே! இருக்கட்டும். இவ்வாறு செய்கிறேன். (பிரகாசமாக) சேடி ! இரத்தினவளி! பணிப்பெண்கள் தம் தம் பணிகளில் கவனத்துடனிருப்பர். மைனவை விட்டு விட்டு வந்து விட்டாயே ! உடனே செல்.

இரத்தினவளி :—(தனக்குள்) நான் மைனவை சுசங்கதையின் கையில் கொடுத்திருக்கிறேன். அரசனைப் பார்க்க என் மனம் விழைகிறது. ஆதலின் மறைந்து நின்று பார்க்கிறேன்.

இப்பகுதியில் வாசவதத்தை, இரத்தினவளியும் அரசனும் ஒருவர்க் கொருவர் பார்த்துக் கொள்ள முடியாமல் செய்து விடுவதால் பீசத்திற்கு (கீழ்க் கூறிய யௌகந்தராயணன் முயற்சிக்கு) இடையூறு ஏற்படுகிறது. இரத்தினவளி மறைந்திருந்து பார்க்க உறுதி பூணுவதால் பீசம் இடையூறு நீங்கித்தோற்றமளிக்கிறது. ஆதலின் இது சமாதானம் என்ற உறுப்பாம்.

விதானம்

இன்ப துன்ப வேது விதானம். 27

மாலதீ மாதவம். மு - அ.

எ - டு :—"திரும்பித் திரும்பி என்னைப் பார்த்துக் கொண்டே செல்கிறாள். அடர்ந்த புருவங்கள் அமைந்து விளங்கும் அவள் முகம், அப்பொழுதுதான் கொடியிலிருந்து மறுபுறம் திருப்பப்

1. இராணி வாசவதத்தை தன் பரிவாரங்களுடன் காமபூசை செய்வதற்காகப் பூங்காவிற்குச் செல்லுகிறாள். சாகரிகை யென்ற மறுபெயர் பூண்ட இரத்தினவளியும் அவர்களில் ஒருத்தி.

பட்ட தாமரைமலர்போல் விளங்குகிறது. அமிழ்தும் ஆலமும் கொண்டு பூசப்பட்ட தன் கடைக்கண்பார்வையை அவள் என்னுடைய மனத்தில் உறுதியாக நாட்டிவிட்டனள் போலும்'' என்ற மாலதீ மாதவ நாடகச் செய்யுள் இதற்குதாரணமாம். பார்வையினுல் இன்பமும் செய்கையினுல் துன்பமும் மாதவனுக்கு உண்டாகின்றன. ஆதலின் இது விதானம்.

பரிபாவனை

வியப்பின் மிகுதி பரிபா வனையாம்.

இ - ளி. மு - அ.

எ - டு —பூங்காவில் வாசவதத்தை தன் கணவன் உதயணனுக்குப் பூசை செய்கிருள். இதை மறைவிலிருந்து பார்க்கும் இரத்திஞவளி "மன்மதனே நேரில் வந்து பூசனையை ஏற்றுக் கொள்ளுகிருனே! விந்தை! நானும் இங்கிருந்த வண்ணமே மலர்களால் இக்காமதேவனை அர்ச்சிக்கிறேன்." என்று தனக்குள் கூறிக் கொண்டு பூசிக்கிருள். இங்கு மன்மதனே நேரில் வந்து பூசையை ஏற்பதாய் எண்ணிவியப்பதால் பரிபாவனை எனும் உறுப்பு அமைந்துளது புலனும்.

உற்பேதம்

ஒளிவு நீங்கல் உற்பே தமெனல்.

இ - ளி. மு - அ.

எ - டு :—மன்மதன் என்று எவனைத் தான் எண்ணியிருந்தனளோ அவன் உண்மையில் உதயணன் என்று இரத்திஞவளி, திரைமறைவிலிருந்து வைதாளிகன் சொல்லும் சுலோகத்தால் அறிந்துகொள்வதால் இது உற்பேதம் ஆகிறது.[1]

பேதம்

ஊக்க மூட்டல் பேதமென் றுரைப்பர்.

வேணீ சங்காரம். (மு - அ.)

எ - டு :—வேணீசங்காரத்தில் திரௌபதி பீமசேனனைப் பார்த்து, "நாதா! எனக்கு நேர்ந்திருக்கும் அவமானத்தைப்

---

1. முன்பு விலோபனம் என்பதற்கு எடுத்துக் காட்டாகக் கொடுக்கப் பட்ட கதைப் பகுதியே இதற்கும் எடுத்துக் காட்டாகிறது.

2. முதல் நூலிலுள்ள காணம் பேதம் என்ற முறையை மாற்றி பேதம் காணம் என்ற முறை இங்கு பின்பற்றப் பெறுகிறது.

பார்த்துப் பொறுமை யிழந்து உடலையும் உயிரையும் பொருட்படுத் தாமல் அமர்க்களத்தில் குதித்து விட வேண்டாம். வீரர்கள் செருக் களத்தில் முழுக் கவனத்துடன் இருத்தல்வேண்டுமென்று பெரி யோர் கூறுகின்றனர்." என்று கூறியதற்குப் பீமன் "ஒன்றோ டொன்று முட்டி மோதி உடல் பிளந்து இறந்த யானைகளின் குருதி, வசை, தசை முதலியவைகளாகிய சேற்றில் புதைந்து போன தேர்களின் மேல் காலாட்படைகள் அடிகள்வைத்துத் திரிந்து கொண்டிருக்க, சூடான குருதியைக் குடித்து மதித்த நரிக் கூட்டங்கள் கும்பல் கும்பலாய் அமங்களமாய் ஊளையிட, அதற் குத் தக்க முறையில் அப்பொழுதுதான் தலையறுபட்ட உடல் முண்டங்கள் நிருத்தம் செய்ய, மிகு பயங்கரமாய்த் தோன்றும் அமர் என்னும் பெருங் கடலின் ஆழ்ந்த நீரில் இறங்கித் திரிவதற் குப் பாண்டுவின் புதல்வர்கள் ஒப்பற்ற தேர்ச்சி யுடையவர்கள்' என்று கூறி அச்சமடைந்துள்ள திரௌபதியை உற்சாகப்படுத்து கிறான். ஆதலின் இது பேதம் என்ற உறுப்பாகிறது.

கரணம்

எண்ணிய கருமம் முயலல் கரணம். 28

இ - ளி. மு - அ.

எ - டு :—மறைவிலிருந்து அரசனைப் பார்த்தவளாகிய இரத் தினாவளி "காமதேவா! உனக்கு வணக்கம். மறுபடியும் உன் னுடைய மங்களமான தரிசனம் எனக்குண்டாகுக. பார்க்கத்தக்க வுன்னைப் பார்த்தேன். உன்னுடைய தரிசனம் பயனுடைத்தாகுக. நான் இங்கிருப்பதைப் பிறர் அறிவதற்குமுன் போகிறேன்." என்று சொல்லிப் போகிறாள். மேல் அங்கத்தில் ஏற்படவிருக்கும் இடையூறற்ற தரிசனம் இங்கு தொடங்கப்பெறுவதால் இது கரணம் ஆம்.

இவ்வாறு முகசந்தியில் இப்பன்னிரண்டு உறுப்புக்களும் நேராகவோ அல்லது மற்றொன்றின் மூலமாகவோ பீசம் என்ற அருத்தப்பிரகிருதி (பொருள்மூலம்) யையும் ஆரம்பம் என்கிற அவத்தை (பொருள் நிலை)யையும் விளக்குகின்றன. இப் பன்னி ரண்டு உறுப்புக்களில் உபக்கேபம் பரிகரம், பரிநியாசம், உயுத்தி, உற்பேதம், சமாதானம் என்ற ஆறும் இன்றியமையாதன. மற்றை ஆறும் இல்லாமலுமிருக்கலாம்.

பிரதிமுகசந்தி

அறிந்தறி யாவகை யவ்விதை தோன்றல்
குறித்தபி ரதிமுக சந்தி யெனலாம்.
பிந்து முயற்சித் தொடர்பால் அங்கம்
ஐந்துடன் எட்டாம் என்றனர் அறிவோர். 29

போ - ரை :—சிறிது தெரிந்தும் சிறிது தெரியாமலும் இருக்கும் வண்ணம் அப்பீசம் வெளிப்படுதல் பிரதிமுகசந்தியென்று கூறப்பெறும்.

இ - ளி. மு - அ.

எ - டு :—இரத்தினவளியில் இரண்டாம் அங்கத்தில் பிரதிமுக சந்தி யமைந்துள்ளது, இரத்தினவளி (சாகரிகை) வச்சவரசனை மணக்க விரும்பியது முதலங்கத்தில் கூறப்பெற்றுள்ளது. இவள் கருத்தை சுசங்கதையும் விதூடகனும் அறிந்துவிடுகிறார்கள். பூங்காவில் தான் அரசனைச் சந்திக்கும் பொழுது விதூடகன் கையிலிருந்து கீழே விழுந்த சித்திரப் பலகையைப் பார்த்து அரசி சிறிது ஊகித்தாளாயினும் நேரில் பார்க்காமையால் உறுதியாகவில்லை. இவ்வாறு சிறிது தெரிந்தும் சிறிது தெரியாமலுமிருக்கும் வண்ணம் விருப்பம் என்னும் பீசம் இங்கு வெளிப்படுவது பிரதிமுகசந்தியாம்.

இதற்குப் பதின்மூன்று உறுப்புக்கள் உள. அவை முன்பு கூறப் பெற்றுள்ள பிந்துவோடும் யத்தினத்தோடும் தொடர்புள்ளவைகளாகவும் ஏற்றபெற்றி உறுப்பிக்கு உதவியளிப்பவைகளாகவும் இருக்கும். அவையாவன.

விலாச பரிசருப்ப விதூத சமங்கள்
நரும நருமசோதி பிரகம னங்கள்
நிரோதம் பரியுபாசை வச்சிரம் புட்பம்
உபநியா சத்தொடு வருணசங் காரம்
முறையே இவைபதின் மூன்று முறுப்பாம். 30

விலாசம்

காத லின்ப விழைவு விலாசம்.

(இ - ளி. இ - அ.)

எ - டு :—காம விழாவில் அரசனைப் புதர்மறைவிலிருந்து கண்களாரக் கண்டு காதலித்த இரத்தினவளி "மனமே தெளிவுறு. அரி

யன கோருவதால் மெய்வருத்த மாவதன்றிப் பயனில்லை." என்றிவை போல்வன பல கூறிப் பிறகு "ஆயினும் அரசனுடைய உருவை ஓர் பலகையில் வரைந்து தோன்றியவாறெல்லாம் அனுப விப்பேன்." என்று கூறி வரைகிறாள். இங்கு சித்திரம் வாயிலாக வேனும் அரசன் சேர்க்கையை விழைந்து சித்திரம் வரைதல் விலாச மாம்.

பரிசருப்பம்

அறிந்தி ழந்ததை விரும்பித் தோடர்தல்
பரிசருப் பமெனப் பகர்ந்தனர் புலவர்- 31

இ - ளி. இ - அ.

எ - டு :—(இரத்தினவளி பூங்காவில் உதயணனுருவத்தை வரைந்து முடித்தபொழுது சுசங்கதை பார்த்துவிடுகிறாள். இருவரும் இக்காதலைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்பொழுது பக்கத்தில் கூண்டிலிருக்கும் மைனா கேட்டுக்கொண்டிருக்கிறது. திடீரென்று அங்கு ஓடிவந்த அரண்மனைக் குரங்கைக் கண்டு பயந்து இருவரும் சித்திரப் பலகையை விட்டுவிட்டு ஓடி ஓர் புதரில் மறைகின்றனர். அக்குரங்கு மைனாவின் கூண்டைத்திறந்துவிட்டு ஓடிவிடுகிறது. மைனாவும் கூட்டிலிருந்து வெளிப்பட்டு ஓர் மரத்திலுட்கார்ந்து கொண்டு இவ்விருவரும் பேசிக் கொண்டிருந்த வார்த்தைகளை ஒன்றும் விடாமல் சொல்லிக்கொண்டிருக்கிறது. அப்பொழுது தாங்கள் எருவிட்ட நவமாலிகையைப் பார்ப்பதற்காக அவ்விடம் வந்த உதயணனும் விதூடகனும் தற்செயலாய் இம்மைனா கூறிய மொழிகளைக் கேட்டும் கீழே விழுந்து கிடந்த சித்திரப் பலகையைப் பார்த்தும் இரத்தினவளியின் உள்ளக் கருத்தை யறிந்து ஒருவர்க்கொருவர் அதைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கின்றனர். சுசங்கதை அங்கு வந்து ஒன்றுமறியாதவள் போல் நடித்து, சித்திரப் பலகையை வைத்துக் கொண்டு விதூடகனுடன் பேசிக் கொண்டிருப்பதையும் இரத்தினவளியைக் காதலித்திருப்பதையும் வாசவதத்தையிடம் கூறிவிடுவதாக விளையாட்டாகப் பயமுறுத்துகிறாள். பிறகு உண்மையைக் கூறி இரத்தினவளியின் இருப்பிடத்தையும் கூற அரசன் "எங்கே எங்கே" என்று தொடருகிறான்.) இங்கு மைனாவின் பேச்சாலும் படத்தைப் பார்த்ததாலும் அரசனால் அறியப்பட்ட காதல் என்னும் வித்து சுசங்கதையின் பரிகாசத்தால் சிறிது மறைந்து நிற்கப் பிறகு சுசங்கதை வாயிலாகவே அரசன்

உண்மை யறிந்து 'எங்கே எங்கே' என்று கூறிக் கொண்டு பின் தொடருவதால் இது பரிசருப்பமெனும் உறுப்பாம்.

விதூதம்

வெறுப்பு விதூதம். ....

இ-ளி. இ-அ.

எ-டு:—(காம வேட்கையினால் வருந்தும் இரத்தினாவளி சுசங்கதையைப் பார்த்து "தோழி! மதனவேதனை என்னை மிகவும் வருத்துகிறது." என்கிறாள். சுசங்கதை தாமரை ஓடையிலிருந்து தாமரை இலைகளையும் தாமரைநூல்களையும் கொண்டுவந்து தாபம் தணிவதற்காக இரத்தினாவளியின் அவயவங்களின் மேல் வைக்கிறாள்.) அப்பொழுது இரத்தினாவளி (அவைகளை அப்பால் தள்ளிக் கொண்டு) "தோழி! இவைகளை ஒதுக்கித்தள்ளு. எதற்காக என்னை வீணே துன்புறுத்துகிறாய். நான்தான் சொல்லுகிறேனே அரியதில் அவா. வெட்கமோ பெரிது. நானும் அடிமை. விடம்போல் வேதனை புறுத்தும் விடமுடியாக்காதல். ஆதலின் சாதலொன்றே இப்பொழுது உற்றதுணை." என்கிறாள். தாபமிகுதியில் சீதோபசாரத்தை வெறுத்து விலக்குவதால் இது விதூதம் என்னும் உறுப்பாம்.

சமம்

.... சமமது தணிதல்.

இ-ளி. இ-அ.

எ-டு:— அரசன் விதூடகனைப் பார்த்துத் "தோழனே! இரத்தினாவளி என் உருவப் படத்தை எழுதியதைக்கண்டு எனக்கு என்னைப்பற்றி அளவுகடந்த அபிமானம் உண்டாயிருக்கிறது. ஆதலின் எங்ஙனம் நான் அச்சித்திரத்தை அன்புடன் பார்க்காமலிருக்க இயலும்." என்று கூறுகிறான். இதை மறைவிலிருந்து கேட்ட இரத்தினாவளி "மனதே! தேறுக. உன் கோரிக்கைகூட இத்துணை தூரம் செல்லவில்லை." என்கிறாள். இங்கு தான்கோரியதைக் காட்டிலும் மிக்க பயன் கிட்டியதாக இரத்தினாவளி கருதுவதால் சமம் என்ற உறுப்பு கூறியதாகிறது.

நருமம்

நருமம் நகைமொழி. ....

இ-ளி. இ-அ.

எ - டு :—(தாங்கள் விட்டுவந்த சித்திரப் பலகையை எடுத்துக் கொள்வதற்காகத் திரும்பிவந்த இரத்திணவளியும் சுசங்கதையும், அரசனும் விதூடகனும் அச்சித்திரத்தை வைத்துக்கொண்டு அதைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பதை மறைவிலிருந்து கேட்கிருர்கள். அப்பொழுது சுசங்கதை (இரத்திணவளியை நோக்கி) தோழி! நீ எதற்காக வந்தாயோ அது எதிரில் இருக்கிறது. என்று கூற) இரத்திணவளி, (கோபத்துடன்) எதற்காக நான் வந்தேன்? என்கிருள். அப்பொழுது சுசங்கதை "அடி அவநம்பிக்கைக்காரி! சித்திரப் பலகைக்காக. இதோ எடுத்துக்கொள்" என்று கூறுகிருள். இங்கு சுசங்கதை 'நீ கோரிவந்தவன் எதிரில் இருக்கிருன்' என்று பொருள் படும் வண்ணம் முதலில் கூறிப் பிறகு அக்கருத்தைப் பரிகாசமாக மாற்றிப் பேசுவதால் நருமம் கூறியதாகிறது.

நருமத்தியுதி

.... அவ்வழித் தோன்றும்
உளமுறு துணிபே நருமத் தியுதி. 32

இ - ளி. இ - அ.

எ - டு :—(சுசங்கதை அரசனையும் விதூடகனையும் இரத்திண வளியுள்ள விடத்திற்கு அழைத்து வருகிருள். அரசன் இரத்திண வளியின் கையைப் பற்றுகிருன். அப்பொழுது) சுசங்கதை இரத்திணவளியைப் பார்த்து "தோழி! நீ தாட்சிண்ணியம் அற்றவள். இன்னும்—என் முயற்சியால் அரசன் உன்னைத் தேடிவந்து உன் கையைப் பற்றிய பின்பும்—என் மேலுள்ள உன் சீற்றம் தணியவில்லை." என்கிருள். அப்பொழுது இரத்திணவளி (புருவத்தை நெறித்துக் கொண்டு) இன்னும் நீ நகையாடுவதை விடவில்லை யென்கிருள். இங்கு இந்நகைமொழியால் இரத்திணவளியின் மனத்திலுள்ள நாணம் அச்சம் முதலிய நீங்கித் துணிவு தோன்றியுளதால் நருமத்தியுதி என்ற உறுப்பு கூறியதாகிறது.

பிரகமனம்

மேலெழு சொல்லே பிரகம னமெனல்.

இ - ளி. இ - அ.

எ - டு :—பூஞ்சோலையில் சித்திரப் பலகையைத் தற்செயலாய்க் கண்டெடுத்த விதூடகன் :—அரசே! நல்வினை பெருகப் பெற்றுளாய்.

அரசன் :—(ஆவலுடன்) தோழா! அதென்ன ?

விதூடகன் :—நான் கூறியபடிதான். நீதான் இவ்வுருவப் படத்தில் வரையப்பெற்றிருக்கிறாய். உன்னைத் தவிர வேறெவர் காமவேள் என்ற மாறுபெயருடன் மறைத்து வரையப்பட முடியும் ?

அரசன் :—(இரத்தினாவளியின் மார்பகத்திலிருந்து நழுவியதும் விதூடகனால் கண்டெடுக்கப் பெற்றதுமாய தாமரைநூல்மாலையைப் பார்த்து) மாலையே! அவள் மார்பகம் நடுவிலிருந்து நழுவி விழுந்து ஏன் வாடுகிறாய். உன்னுடைய ஒரு மெல்லிய நூலிழைக்கே அவள் மார்பிடையில் இடமில்லாதிருக்க உனக்கு எவ்வாறு இடம் கிடைக்கும் ?

தான் விட்டுப் போன சித்திரப் பலகையை எடுத்துக் கொள்ள சுசங்கதையுடன் அங்கு வந்த இரத்தினாவளி அரசன் கூறிய மொழி கேட்டுக் காதல் மிகுகின்றாள். இங்கு இவர்களுடைய பேச்சு பிரகமனமாகிறது.

நிரோதம்

நயந்த துறுமை நிரோத மென்பர்.

இ - ளி. இ - அ.

எ - டு :—(சுசங்கதையின் முயற்சியால் அரசனும் இரத்தினாவளியும் சோலையில் நெருங்கிப் பழகுகிறார்கள். அப்பொழுது பக்கத்திலிருந்த விதூடகன் " இவள் மற்றொரு வாசவதத்தை " என்கிறான். ஐயங்கொண்ட அரசன் அவளை விட்டுவிடுகிறான். அப்பெண்கள் அஞ்சி ஓடி ஒளிகின்றனர். வாசவதத்தை வரவில்லை. அப்பொழுது).

அரசன் :—" அறிவிலி! தெய்வச்செயலாய்க் கிட்டிய காதலியை அணைந்தின்புறுமுன் கைவிட்டு நழுவும்படி செய்துவிட்டாயே ! " என்கிறான்.

இங்கு விதூடகன்பேச்சால் அரசன் விரும்பியதிழந்தமையால் நிரோதம் என்ற உறுப்பு கூறப்பெற்றதாகிறது.

பரியுபாசனம்

நயந்து நன்மொழி கூறி வசித்தல்
பரியு பாசை. ....

இ - ளி. இ - அ.

எ - டு :—(அரசன் சித்திரப்பலகையை வைத்துக் கொண்டு களித்திருந்ததை யறிந்த வாசவதத்தை அரசனைச் சிறிது கடிந்து கூறிவிட்டுப் போக முயலுகிருள். அப்பொழுது)

அரசன் :—"அன்பே! என்மீது உனக்குச் சீற்றமில்லாமலிருக்கும்பொழுது சீற்றந்தணிவாயாக என்று உன்னை வேண்டுவது தகாது. இனி இவ்வாறு செய்வதில்லை யென்று கூறுவனுயின் இப்பொழுது நான் தவறிழைத்தவன் ஆவன். நான் தவறிழைக்க வில்லை யென்பனுயின் நீ அவ்வார்த்தையைப் பொய்யென நினைப் பாய். ஆதலின் என்ன கூறுவதென்றறியாது வருந்துகிறேன்". என்று கூறுகிருன். இங்கு அரசன் அரசியின் சினத்தை ஆற்றுவதால் பரியுபாசனம் என்னும் உறுப்பு கூறியதாகிறது.

புட்பம்

.... சிறப்புரை புட்பம். 33

இ - ளி. இ - அ.

எ - டு—**அரசன் :**—இரத்திஞவளியின் கையைப்பற்றிக் கொண்டு [1] பரிசவின்பம் சுவைக்கும் பொழுது

விதூடகன் :—அரசே! புதியதோர் திருவைப் பெற்ருய்!

அரசன் :—உண்மை. இவள் திரு. இவள் கை கற்பகக்கொடியின் இளந்தளிர். அன்றேல் இக்கை எங்ஙனம் அமுதவூற்றைப் பெருக்கும்.

இங்கு இம்மொழிகள் இரத்திஞவளியின் சிறப்பைக் கூறுவதால் புட்பம் ஆகின்றன.

உபனியாசம்

குறிப்புணர் மொழியே உபனியா சமெனல்.

இ - ளி. இ - அ.

எ - டு :—தான் இரத்திஞவளியின் படத்தைப் பார்த்திருந்ததை சுசங்கதை வாசவதத்தையிடம் அறிவித்துவிடுவாள் என்று அஞ்சிய அரசன் அவளுக்குத் தன் காதணியைப் பரிசளிக்க முயன்ற பொழுது—

1. பரிசசுகம்.

சுசங்கதை :—"தலைவ! அச்சம் வேண்டாம். தாங்கள் என்பால் வைத்திருக்குமன்பில் எனக்குள்ள நம்பிக்கைமிகுதியால் விளையாடினேன் "என் என்னுருவத்தை இப்பலகையில் வரைந்தாய்" என்று இரத்தினாவளி சீறுகிறாள். அவள் சினத்தை ஆற்றவும். இது காதணியைக் கொடுத்தலினும் பேரருளாகும்".

என்கிறாள். இங்கு சித்திரப்பலகையில் அரசன் உருவத்தை இரத்தினாவளி எழுதியதையும் இரத்தினாவளியின் உருவத்தைத் தான் எழுதியதையும் சுசங்கதை அரசனுக்குக் குறிப்பா யுணர்த்துவதால் இது உபனியாசம் என்ற உறுப்பாம்.

வச்சிரம்

கண்ணேதிர் கடுமொழி வச்சிர மாகும்.

இ - ளி. இ - அ.

ஏ - டு :—(பூஞ்சோலையில் வாசவதத்தை சித்திரப் பலகையில் வரையப்பட்டிருக்கும் உருவங்களை அரசனிடம் காட்டி இது வென்ன வென்கிறாள். என்ன விடையிறுப்பது என்று அரசன் விதூடகனைக் கேட்க)

விதூடகன் :—அம்மா! ஒருவனும் தன்னுருவத்தைத் தான் நன்கு வரையமுடியாது என்று நான் சொன்னேன். அரசன் தன்னுருவத்தைத் தான் நன்கு வரைந்து காட்டினான். வேறுவிதமாய் நினைக்க வேண்டாம்.

என்று கூறினான். அப்பொழுது

வாசவதத்தை :—(பக்கத்தில் எழுதப்பட்டிருக்கும் பெண்ணுருவம் விதூடகன் சிற்பத்திறம் போலும். என்று கூறி)நாதா! இப்படத்தைப் பார்த்த எனக்குத் தலைவலி உண்டாகிறது. என்று சொல்லி யெழுந்து போகிறாள். இங்கு அரசி அரசன் எதிரிலேயே அவனைப்பற்றிய கடுமொழியைக் கூறுவதால் இது வச்சிரமாகிறது.

வருணசங்காரம்

வருண மோருங்கு கிளத்தல் வருண
சங்கா ரமெனச் சாற்றினர் ஆன்றோர். 34

வீரசரிதம் மூ - அ.

[1]எ - டு :—இராமனுக்குக் கேடிழைக்க வந்த பரசுராமனை நோக்கி

வசிட்டர் :—' இது முனிவர்கள் கூடியுள்ள பெரும் அவை. இவர் கிழவராகிய யுதாசித்து. மந்திரிகளுடன் வீற்றிருக்குமிவர் தயரதர். இக்கிழவர் உரோமபாதர், இவர் இடைவிடா வேள்வி யாளரும் பரம்பொருளைப் பற்றிய பேச்சாளருமான சனகர். இவர் கள் எல்லோரும் இராமனுக்குக் கேடிழைக்க வேண்டாமென்று உன்னை வேண்டுகின்றனர்' என்கிறார். இதனால் பரசுராமனின் தீயமுறை (துர்நயம்) விளங்குவதால் இதுவருணசங்காரமாம்.

பிரதிமுகசந்தியின் இப்பதின்மூன்று உறுப்புக்களுக்கும் பிந்து வென்னும் இரண்டாவது அருத்தப்பிரகிருதி (பொருள் மூலம்)புட னும், யத்தினம் என்னும் இரண்டாம் அவத்தை (பொருள் நிலை) யுடனும் தொடர்பு இருக்கவேண்டும். இவைகளில் பரிசருப்பம் (பிர)சமம் வச்சிரம் உபநியாசம் புட்பம் என்ற ஐந்தும் இன்றி யமையாதவை. மற்றவை எட்டும் இல்லாமலுமிருக்கலாம்.

கருப்பசந்தி

பன்முறை தோன்றி மறைந்திடு பீசந்
தன்னைத் தேடல் கருப்ப சந்தி.
ஐந்து மேழு மிதனுறுப் புக்களாம்.
அறைந்த பதாகையின் இன்மையு மாகும்.
பிராத்தி யாசை பயின்றே தீரும். 35

போ - ரை :—பிரதிமுகசந்தியில் தெரிந்தும் மறைந்தும் தோன் றிய பீசம் நன்கு தோன்றுவதும், இடையூற்றுடன் கூடிய அதன் அடைவும், மறுபடியும் மறைவும், அடைவும், மறைவும் மாறி மாறி வருதலும், முயன்று தேடுதலும் கருப்ப சந்தியின் முக்கியக் குறிகள். பதாகை பிராத்தியாசை என்கிறவிரண்டின் சேர்க்கையே கருப்ப

1. நான்கு நாடக பாத்திரங்களின் சேர்க்கை வருணசங்காரம் என்று பொருள் கொண்டு, இரத்தினவளி நாடிகையின் உரைகாரராகிய நாராயணன் என்பவர் அரசன் விதூடகன் இரத்தினவளி சுசங்கதை இந்நால்வர் கூடு மிடத்தை இவ்வுறுப்புக்கு உதாரணமாகக் காட்டுகிறார். அங்ஙனேயின் பரி சருப்பம் என்ற உறுப்புக்குக் காட்டிய காட்டே இதற்கும் உதாரணம் ஆம் என்றறிக.

சந்தி யென்று முன்பு கூறப்பெற்றிருப்பினும் பதாகை யென்பது இன்றியமையாததன்று. பிராத்தியாசை இருந்தே தீர வேண்டு மென்று அறியவும்.

இ - ளி. மூ - அ.

எ - டு :—இரண்டா மங்கத்தில் தன் சூழ்ச்சியால் இரத்தின வளியும் அரசனும் கூடிய பொழுது, சுசங்கதை இரத்தினவளியை நோக்கித் தோழி! நீ சிறுதும் தாட்சிண்ணியம் அற்றவள். கணவன் கைப்பற்றிய பின்பும் சினத்தைக் கைவிடவில்லை, என்பன போன்ற கூறுகிறாள். இச்சொற்களால் இரத்தினவளியின் காதல் என்னும் பீசம் வெளியாகின்றது. வாசவதத்தையைப் பற்றிய பிரத்தாவத் தாலும் அரங்கில் அவள் தோற்றத்தாலும் அப்பீசம் இடையூறுற்று மறைகின்றது. மூன்றுவது அங்கத்தில் "கௌசாம்பியின் அரசுரிமை கிடைத்த பொழுதும் உனக்கு இவ்வளவு மகிழ்ச்சி ஏற்பட்டதில்லை." என்ற விதூடகன் பேச்சால் மறுத்தும் அப்பீசம் வெளியாகின்றது. வாசவதத்தையின் தோற்றத்தால் மறுபடியும் மறைகிறது. வாசவதத்தையின் வேடமணிந்திருந்த இரத்தினவளி மனமொடிந்து கொடிக்கயிற்றுல் சுருக்கிட்டு உயிர் துறக்க முயன்ற பொழுது வாசவதத்தையே என்று எண்ணி ஓடிய அரசன் முடிவில் இரத்தினவளி யென்றறியும் போது அக்காதலென்னும் பீசம் வெளியாகின்றது. இங்கு பதாகைக்கதையில்லை. ஆயின் 'வாசவதத்தையின் அருளைப் பெற்றுலன்றி வேறு உபாயமில்லை.' என்று கூறுவதால் பிராத்தியாசை இருத்தல் விளங்கும். இது கருப்பசந்தியாம்.

தோ - ய் :— கருப்பசந்தியின் உறுப்புக்களின் தொகையையும் பெயர்களையும் கூறுகிறார்.

அபூதா கரணம் மார்க்கம் உருவம்
உதாரணம் கிரமம் சங்கி ரகமே
அனுமா னம்தோ டகமதி பலமே
உத்துவே கம்சம் பிரமமாக் கேபம்
என்பன முறையே பன்னிரு வுறுப்பாம். 36

அபூதாகரணம்

வஞ்சனை செய்தல் அபூதா கரணம்.

இ - ளி. மூ - அ.

எ - டு :—'சுசங்கதையும் இரத்தினவளியும் முறையே காஞ்சனமாலைபோலவும் வாசவதத்தைபோலவும் மாறுவேடமணிந்து பூஞ்சோலையில் அரசனைக் கூடவேண்டும்' என்று சுசங்கதையும் விதூடகனும் திட்டமிட்டனர். இதை மறைவிலிருந்து கேட்டறிந்த காஞ்சனமாலை அரசி வாசவதத்தையிடம் அறிவிக்கச் செல்லுகிருள். வழியில்—

காஞ்சனமாலை :—(தனக்குள்) "நன்று! வசந்தக! நன்று! கூட்டிவைப்பதிலும் பகைமூட்டிவைப்பதிலும் நீ அமைச்சர் யௌகந்தராயணரை மீறிவிட்டாய்." என்கிருள்.

இப்பகுதியில் அபூதாகரணம் என்ற உறுப்பு கூறியதாயிற்று.

மார்க்கம்

உண்மை யுரைத்தல் மார்க்கம். ....

எ - டு :—இ - ளி. மூ - அ.

விதூடகன் :—தெய்வச் செயலாக நன்மை பெருகுகின்றது. விரும்பியசெயல் விருப்பத்தின்அளவினும் அதிகமாகவே நிறைவேறியுள்ளது.

அரசன் :—தோழ! காதலி நலமாயிருக்கின்ருளா?

விதூடகன் :—விரைவில் நீயே பார்த்தறிவாய்.

அரசன் :—காட்சியும் கிடைக்குமா?

விதூடகன் :—அறிவில் தேவகுருவையும் மீறிய நான் அமைச்சனயிருக்கும் பொழுது என் கிடையாதுபோம்?

அரசன் :—ஆயினும் எங்ஙனம் (கிடைக்கும்) என்று அறிய விரும்புகிறேன்.

விதூடகன் :—(செவியில்) இங்ஙனம்.

இப்பகுதியில் விதூடகன், அரசனுடன் இரத்தினவளியைச் சேர்த்து வைப்பதற்குத்தான் வகுத்துள்ள முறையை அவனிடம் கூறுவதால் மார்க்கம் என்ற உறுப்பு கூறியதாகிறது.

உருவம்

.... ஐயத்
தன்மை நிறைந்த சொல்லுரு வென்பர். 37

எ - டு :—இ - ளி. மூ - அ.

அரசன் :—காமக்கிழவர் தம்மனைவியின் சேர்க்கையை வெறுத்துப் புதியவருடன் புத்துறவு கொள்வது வியப்பே!

அஞ்சுகிறாள். ஆதலின் அன்புசெறிந்த பார்வை முகத்தில் காணப்படவில்லை: மார்பொடு மார்பு பொருந்தும் வண்ணம் தோளில் கரங்களைப் பெய்து இறுகத் தழுவவில்லை. முயன்று நாம் தடுப்பினும் போகிறேன் என்றே பன்முறையும் கூறுகிறாள். ஆயினும் இக்குறிப்பக (சங்கேதத்தல)த்திலுள்ள இக்காதலி மிக்கதோர் இன்பம் பயக்கின்றாள்.

விதூடகன் என் தாமதிக்கிறான்: ஒருக்கால் அரசி இச்செய்தியை அறிந்திருப்பாளோ!"

இப்பகுதியில் அரசன், தன் செய்தியை அரசி அறிந்திருப்பாளோ வென்று ஐயுறுவதால் உருவம் என்ற உறுப்பு கூறியதாயிற்று.

உதாரணம்

பெருமை யுரைத்தல் உதாரணம். ....

எ - டு :—இ - ளி. மூ - அ.

விதூடகன் :—(களிப்புடன்) "என்வாயிலாகக் காதலியின் செய்தியைக் கேட்டு எய்தப்போகும் இம்மகிழ்ச்சியினும் மேலான மகிழ்ச்சியைக் கௌசாம்பியின் அரசுரிமையை அடைந்த பொழுதும் அரசன் அடைந்திருக்கமாட்டான், என்று நினைக்கிறேன்."

இப்பகுதியில் காதற் செய்தியின் பெருமையை, அல்லது காதலியின் செய்தியை அரசனுக்குக் கூறப்போவதில் தனக்குள்ள பெருமையை விதூடகன் கூறுவதால் உதாரணம் என்ற உறுப்பு கூறியதாயிற்று.

கிரமம்

.... நினைத்த
பயனை யடைதல் கிரம மென்பர்.

எ - டு :—இ - ளி. மூ - அ.

அரசன் :—காதலியுடன் கூடி மகிழ்வது அண்மையில் இருந்தும் என்மனம் என் இவ்வாறு மிக்க தாபமெய்துகின்றது? கார்

காலத்தில் மழை அணுகி வரும்பொழுது வெம்மை மிகுவது போல், காதல்வெம்மை தொடங்கும்பொழுதினும் பயனணுகும் பொழுது மிகுவதும் இயல்பே.

விதூடகன் :—(இரத்தினவளிபோல் வேடம்புனைந்துள்ள வாசவதத்தையை இரத்தினவளி யென நினைத்து) இரத்தினவளி! உன் காதலன் உன்னைக்குறித்து வெகு ஆவலுடன் ஏதோ நினைத்துக் கொண்டே இதோ இருக்கிறார். அவருக்கு உன் வரவை அறிவிக்கிறேன்.

இப்பகுதியில் இரத்தினவளியுடன் சேரவிரும்புகின்ற அரசன் அவளை (அவ்வேடம்தரித்த வாசவதத்தையை) அடைவதால் கிரமம் என்ற உறுப்பு கூறியதாயிற்று.

பிறர்கருத் தறிதல் அதுவென் பசிலர் 38

எ - டு :—இ - ளி. மூ - அ.

அரசன் :—(அணுகி) காதலி! இரத்தினவளி! உன் முகம் திங்கள் போன்றும், கண்கள் கருநெய்தல்மலர்போன்றும், கரங்கள் தாமரைமலர்கள் போன்றும் துடைகள் வாழையுட்பகுதி போன்றும், தோள்கள் தாமரைநூல் போன்றும், விளங்குகின்றன. அழகிய உறுப்புக்கள் அமைந்தவளே! அச்சமின்றி வலுவில் அணைந்து, காம வேட்கையால் வாடியிருக்கும் என் அவயவங்களை இன்புறச் செய்.

இப்பகுதியில் (இரத்தினவளி வேடத்திலுள்ள) வாசவதத்தை அரசன் உள்ளக் கருத்தை அறிகின்றபடியால் கிரமம் என்ற உறுப்பு கூறியதாயிற்று.

சங்கிரகம்

நல்லுரை யோடு கோடையுரை புகலல்
சங்கிர கம்........ ....

எ - டு :—இ - ளி. மூ - அ.

அரசன் :—தோழனே! நன்று நன்று. என் தோள்வளையை உனக்குப் பரிசாகக் கொடுக்கிறேன்.

இப்பகுதியில் நன்மொழி பரிசு இவைகளால் விதூடகனை அரசன் மகிழ்விப்பதால் சங்கிரகம் என்ற உறுப்பு கூறியதாயிற்று.

அனுமானம்

....கண் ணுறுகுறி யதனுல்
மற்ற துணர்தல் அனுமா னமெனல்.

எ - டு :—இ - ளி. மூ - அ.

அரசன் :—அறிவிலி ! உன்னுலேயே இப்பெருங்கேடு எனக்கு நேர்ந்துளது. ஒவ்வொரு நாளும் என் அன்பும் நன்மதிப்பும் பெற்று வாசவதத்தை என்வயின் மிகுந்த அன்பு செலுத்துகிருள். இது வரை யில்லாமல் இப்பொழுது நான் இழைத்துவிட்ட இவ்வன்பு கெட்ட செய்தியைப் பார்த்துவிட்டாள். வருத்தம் தாளாது அவள் உயிரை மாய்த்துக் கொள்வது திண்ணம். அளவுகடந்த அன்பு நழுவுமாயின் பொறுத்தலரிதல்லவா ?

விதூடகன் :—தோழ ! "வாசவதத்தை என்ன செய்வாள்" என்று நானறியேன். இரத்தினுவளி உயிரை வைத்துக் கொண் டிருக்கப் போவதில்லை என்று நினைக்கிறேன்.

இப்பகுதியில் தன் அன்பின் அழிவைக் கண்டு வாசவதத்தை உயிரை மாய்த்துக் கொள்வாள் என்று அரசன் நினைப்பதால் அனு மானம் என்ற உறுப்பு கூறியதாயிற்று.

அதிபலம்

வஞ்சனை யதிபல மென்பர் பெரியோர்.

எ - டு :—இ - ளி. மூ - அ.

காஞ்சனமாலா :—அரசி ! இதுவே அச் சித்திரசாலை. விதூட கனைக் குறிப்பால் அழைக்கிறேன். (சோடிகை செய்கிருள்) (விதூடகனும் அரசனும் வருகிருர்கள். மாறுவேடமணிந்துவந் துள்ள வாசவதத்தையை இரத்தினுவளி யென்றே மயங்கிப் பேசு கிருர்கள்)

இப்பகுதியில், வாசவதத்தையும் காஞ்சனமாலையும் முறையே இரத்தினுவளி சுசங்கதை இவர்களுடைய வேடம் புனைந்து விதூட கனையும் அரசனையும் ஏமாற்றுவதால் அதிபலம் என்ற உறுப்பு கூறியதாயிற்று.

தோடகம்

வெஞ்சின மொழியே தோடக மாகும். 39

எ - டு :— இ - ளி. மூ - அ.

வாசவதத்தை :—(அரசனை அணுகி) ஆரிய புத்திர ! இது மிகப் பொருத்தமாகவும் தகுதியுள்ளதாகவும் இருக்கின்றது. (கோபத்துடன்) ஆரியபுத்திர ! எழுந்திருங்கள். இன்னும் எதற்காக நற்குடிப்பிறப்பிற்கொத்த பணிவும் பணிவிடையும் ! வீணைப் வருத்திக் கொள்ள வேண்டாம். காஞ்சனமாலா! இதே கயிற்றால் இக்கெட்ட பார்ப்பனனைக் கட்டி இழுத்துவா. இக்கெட்ட சிறுக்கியையும் முன்னே கொண்டுவா.

இப்பகுதியில், அரசன் இரத்தினவளியுடன் கூடுவதற்கு இடையூறு யமைந்தது வாசவதத்தையின் சினமொழி ஆதலின் தோடகம் என்ற உறுப்பு கூறியதாயிற்று.

தோடக வெதிர்மறை யேயதி பலமென்
றோதுவர் புலவர். ....

எ - டு :— இ - ளி. மூ - அ.

அரசன் :— அரசியே ! யானிழைத்த இன்னலை நீ நேரில் கண்டிருக்கும்பொழுது நான் என்னவென்று விண்ணப்பம் செய்வேன்.

தேவி ! நாணமடைந்த நான் உன் அடிகளில் என் முடியை வைத்து வணங்கி, செம்பஞ்சுக் குழம்பினால் அவைகளில் ஏறியிருக்கும் செம்மையை வேண்டுமானால் நீக்கக்கூடும். திங்கள் போன்ற உன் திருமுகத்தில் சினம் செய்த செம்மையை எங்ஙனம் நீக்குவது. அது உன் அருள் இருந்தால் மட்டுமே ஆகும்.

இப்பகுதியில், அரசன் அரசியிடம் பணிவுடன் பேசுவதால், அதிபலம் என்ற உறுப்பு கூறியதாயிற்று என்று சில புலவர் கூறுவர்.

உத்துவேகம்

.... பகைதரு மச்சம்
உத்து வேகம். ....

எ - டு :— இ - ளி. மூ - அ.

இரத்தினவளி :—(தனக்குள்) என்னே ! நல்வினையற்றவரால் தாம் விரும்பியவாறு இறப்பதற்கும் இயலுவதில்லை.

இப்பகுதியில், வாசவதத்தையிடமிருந்து இரத்தினவளி அஞ்சியுள்ளமை விளக்கப்பெறுவதால், உத்துவேகம் என்ற உறுப்பு கூறியதாயிற்று.

சம்பிரமம்

.... ஒருங்குள தாகும்
அச்ச மைய மிவைசம் பிரமம்.

எ - டு :—இ - ளி. மூ - அ.

வாசவதத்தையின் வேடம் பூண்டு பூஞ்சோலையில் அரசனுடன் கூடுவதற்கு முயன்ற இரத்தினவளி, வாசவதத்தை இவ்வுண்மையை அறிந்துவிட்டமையை எண்ணித் தூக்கிட்டுக் கொண்டு இறக்க முயலுகிறாள். அப்பொழுது—

விதூடகன் :—(பார்த்து) யார் இவள்? (பரபரப்புடன்) தேவி வாசவதத்தை தன்னை மாய்த்துக் கொள்கிறாள். (பரபரப்புடன் சென்று) அரசன் எங்கே? அரசன் எங்கே?

இப்பகுதியில், அரசி இறக்கிறாள் என்ற ஐயமும் அச்சமும் விதூடகனுக்கு உண்டாவதால், சம்பிரமம் என்ற உறுப்பு கூறியதாயிற்று.

ஆக்கேபம்

கருவில் பீசத் தோற்றமாக் கேபம். 41

எ - டு :—இ - ளி. மூ - அ.

அரசன் :—தோழ! அரசியின் அருளின்றி வேறுபாயம் இருப்பதாகத் தோன்றவில்லை.

(வேறிடத்தில்.)

அரசன் :—அரசி அன்புடன் இசைவாள் என்பதில் எவ்வகையிலும் எனக்கு நம்பிக்கையில்லை.

(மற்றோரிடத்தில்.)

அரசன் :—இங்கிருந்தென்னபயன்? சென்று தேவியின் அன்பைப் பெற முயலுவோம்.

இப்பகுதிகளில், அரசன் தான் இரத்தினவளியைப் பெறுதல் அரசியின் அருளிருந்தால்தான் என்று முடிவு செய்து முயல்வதால் ‘கருவில் பீசம் தோன்றுதல்’ என்னும் ஆக்கேபம் என்ற உறுப்பு கூறியதாயிற்று.

இப்பன்னிரண்டு உறுப்புக்களும் பிராத்தியாசை யென்ற பொருள்நிலை (அவத்தை)யை உணர்த்தும் வண்ணம் அமைக்கப் பெறல் வேண்டும். இவைகளில் அபூதாகரணம் மார்க்கம் தோடகம் அதிபலம் ஆக்கேபம் என்ற ஐந்தும் இன்றியமையதவை மற்றவை ஏழும் ஏற்றபெற்றி அமையும்.

அவமரிச சந்தி

கருவில் தோன்றிய பீசந் தன்னை
உறுசினம் விசனம் உணர்ச்சி யோன்றல்
மருளற வாய்தல் ஆம்அவ மரிசம். 42

எ - டு :—இரத்தினவளி நா - அ.

அந்தப்புரம் தீப்பற்றி யெரிதல், வாசவதத்தை உளங்கனிதல், அரசன் இடையூறின்றி இரத்தினவளியை அடைதல், இவைகளைக் கூறும் பகுதிகளில் இவ்வவமரிசசந்தியை அறிக.

தோ - ய் :—இதன் உறுப்புக்களைக் கூறுகிறார்.

அபவாத சம்பேட வித்திர வங்கள்
திரவம் சத்தி தியுதி பிரசங்கம்
சலன விவசாய விரோத னங்கள்
பிரரோ சனைவிச லனமா தானம்
இவைபதின் மூன்றவ மரிச வுறுப்பாம். 43

அபவாதம்

பிறர்குறை கூற லாம்அப வாதம்.

எ - டு :—இ - ளி. நா - அ.

சுசங்கதை :—இரத்தினவளியை உச்சயினிக்கு அனுப்பப் போவதாகப் பொய்ச் செய்தியைப் பரப்பி அரசி நள்ளிரவில் அவளை எங்கோ கொண்டு சேர்த்து விட்டாள். எங்கென்று தெரியவில்லை.

விதூடகன் :—தேவி செய்தது மிகவும் கருணையற்ற செயல்.

(பிறகு.)

விதூடகன் :—தோழ! வேறு விதமாய் எண்ண வேண்டாம். அரசி இரத்தினவளியை உச்சயினிக்கு அனுப்பிவிட்டாள். இதைத் தான் 'கருணையற்ற செயல்' என்று கூறினேன்.

அரசன் :—என்னிடத்தில் இராணிக்கு இரக்கமில்லை.

இப்பகுதியில், விதூடகன் முதலியோர் இராணிபால் குறை கூறுவதால், அபவாதம் என்ற உறுப்பு கூறியதாயிற்று.

சம்பேடம்

வன்சின மாற்ற மாம்சம் பேடம்.

எ - டு :—வேணீ சங்காரம். ஆ - அ.

பீமசேனன் :—அடே குருமன்னு! உறவினர் அனைவரும் ஒழிந்ததைக் கண்டு சினந்து பயனில்லை "பாண்டவர்கள் போர் புரிதற்குரியவன்மை பெற்றுளர். யான் துணையற்று நிற்கிறேன்." என்று வருந்தவேண்டாம்.

எங்களில் யாவனொருவனுடன் போர் புரிவது எளிது என்று உனக்குத் தோன்றுகின்றதோ அவனுடன் நீ கவசம் ஆயுதம் முதலியவணிந்த பிறகு போர் புரிவாயாக.

துரியோதனன் : (பொறுமையுடன் அருச்சுனனையும் பீமனையும் பார்த்து) கர்ணன் துச்சாசனன் இருவரையும் நீங்கள் கொன்றிருக்கிறீர்கள். ஆதலின் இருவரும் எனக்குச் சமமே. (பீமனைப் பார்த்து) உன்னை நான் வெறுக்கிறேன். ஆயினும் முரட்டுத்தொழில் வல்லனான உன்னுடன் பொருதலையே விரும்புகிறேன்.

இப்பகுதியில், பீமனும் துரியோதனனும் ஒருவர்க்கொருவர் பொருது சினத்துடன் உரையாடுவதால், சம்பேடம் என்ற உறுப்பு கூறியதாயிற்று.

வித்திரவம்

சிறைகொலை யாதிய வாம்வித் திரவம்.

எ - டு :—இ - வி. நா - அ.

திரைக்குள்.

"திடீரென்று அந்தப்புரத்தில் அனல்பற்றி மண்டி எரிகின்றது, உள்ளே நெருப்பில் அகப்பட்டு வருந்தும் மகளிர் போக்கற்று நிற்கின்றனர். பாய்ந்தெரியும் அனற்பிழம்புக்கள் மாளிகைகளுக்கு மேல் தங்கவிமானங்கள் நிறுவியது போல் தோன்றுகின்றன. பூஞ்சோலைகளிலுள்ள அடர்ந்த மரங்களின் நுனிகள் வாடி வதங்குவதினின்று அனலின் கொடுமை விளங்கும். அங்குள்ள சிறு விளையாட்டுமலை புகைசூழ்ந்து நீருண்ட முகில்போல் கருத்துத் தோன்றுகின்றது."

வாசவதத்தை :—ஆரியபுத்திர! காப்பாற்று. காப்பாற்று.

அரசன் :—தேவி! அஞ்சவேண்டாம்.

வாசவதத்தை :—நான் எனக்காகக் கூறவில்லை. இரக்கமின்றி இரத்தினவளியை நான் இதில் சிறையிட்டுவிட்டேன். அவள் இறந்து போகிறாள்.

இப்பகுதியில், சிறை தீ மரணம் முதலியன கூறப்பெறுவதால், வித்திரவம் என்ற உறுப்பு கூறியதாயிற்று.

திரவம்

பெரியோர் பழித்தல் திரவம். 44

எ - டு :—உத்தர ராம சரிதம் ஐ - அ.

இலவன் :—அவர் பெரியவர். அவர்நடத்தையை நாம் ஆராய்தல் தகாது. சுந்தன் மனைவி (தாடகை)யைக் கொன்ற பொழுதும் அவர்புகழுக்கு மாசு உண்டாகவில்லை. பெரியவரல்லவா? கரனொடு பொரும் பொழுது மூன்றடிகள் பின்வாங் கியதையும், இந்திரன் சிறுவ (காக்கைத)னைக் கொழுப்படக்கிய திறமையையும் உலகறியும்.

இப்பகுதியில், இலவன் இராமனை இகழ்ந்து பேசுவதால், திரவம் என்ற உறுப்பு கூறியதாயிற்று.

சத்தி

.... பகைமை

தணிதல் சத்தி. ....

எ - டு :— இ - ளி. ஐ - அ.

அரசன் :—கபடமின்றி ஆணைகள் இட்டேன். இன்சொல் இயம்பினேன். உள்ள முவக்குமாறு நடந்து கொண்டேன். (நான் செய்த காரியத்திற்காக) நாணமடைந்தேன். அடிகளில் வீழ்ந்தேன். தோழிகள் வாயிலாகச் சொல்லுவித்தேன். இவ்வளவாலும் அவள் மனம் தெளிவடையவில்லை. (இரத்தினவளியின் அழிவிற்கஞ்சி அவள் அழுத) கண்ணீர் அவள் கோபத்தை முற்றிலும் கழுவிக் கொண்டு போய்விட்டது. இப்பொழுது அவள் மனம் முழுத் தெளிவை அடைந்து விட்டது.

இப்பகுதியில், அரசன், இரத்தினவளியைத் தான் எய்துவதற்கிடையூறாயிருந்த வாசவதத்தையின் சினம் தணிந்ததாகக் கூறுதலின், சத்தி யென்னும் உறுப்பு கூறியதாயிற்று.

தியுதி

.... மிரட்டல் மிக்க
சினமுறு வித்தல் தியுதி. ....

எ - டு :— வேணீசங்காரம். ஆ - அ.

அலைகள் புதர் அடர்ந்த எண் திக்குக்களையும் கடந்து செல்லும் வண்ணமும், நீர்வாழும் மீன் முதலை முதலியன திகைத்து அஞ்சும் வண்ணமும், அக்குளத்து நீரைக்கலக்கி, அஞ்சும் வண்ணம் உறுமி, செந்நாய்வயிற்றன் (பீமன்) சொன்னான்.

" மாசற்ற மதிகுலத்தில் பிறந்தேன் என்கிறாய். இன்னும் கதையைக் கைவிடவில்லை. துச்சாசனனுடைய வெப்பம் மிக்க குருதி யென்னும் கள்ளைக் குடித்து மதித்துப் போன பகைஞன் என்று என்னைக் கூறுகின்றாய். மது கைடபர்களைக் கொன்ற மாலையும் மதத்தால் மதியிழந்து எள்ளிப் பேசுகின்றாய், மனித விலங்கே! எனக்கஞ்சிப் போர்க்களத்தைத் துறந்து சேற்றில் இப்பொழுது மறைந்து கொண்டிருக்கிறாய்."

இப்பகுதியில், இதுவும் இது போன்றவையுமான சொற்களாலும் செய்கைகளாலும் பீமன் துரியோதனனை மிரட்டிச் சினமுறுவித்தலால், தியுதி என்ற உறுப்பு கூறியதாயிற்று.

பிரசங்கம்

.... பெரியோரைப்
புகழ்ந்து கூறல் பிரசங் கமதாம். 45

எ - டு :—இ - ளி. நா - அ.

வசுபூதி :—"வாசவதத்தை தீப்பற்றி யெரிந்தாள் என்ற செய்தியை உலகில் பரப்பியபின் மறுபடியும் பாப்பிரவ்வியனைச் சிங்கள தேயத்தரசனிடம் அனுப்பினோம். அவ்வரசன் தன்மகள் இரத்தினாவளியை முதலில் கொடுக்க மறுத்தானாயினும் இச்செய்தியை யறிந்தபின் இசைந்து கொடுத்தான்................"

இப்பகுதியில் இரத்தினாவளியின் உயர்குடிப்பிறப்பை யறிவிக்கும் வாயிலாகப் பிரசங்கம் என்ற உறுப்பு கூறியதாயிற்று.

சலனம்

இழிவுறு வித்தல் சலனம். ....

எ - டு :—இ - ளி. நா - அ.

அரசன் :—என் கருத்துக்கொப்ப நடந்துகொள்ள வேண்டுமென்று அரசி நினைக்கவில்லை.

இப்பகுதியில், வாசவதத்தை அரசன் விருப்பம் நிறைவேருதபடி செய்து அவமதித்தமை கூறப்பெறுதலால், சலனம் என்ற உறுப்பு கூறியதாயிற்று.

விவசாயம்

.... தன்பெரு
வன்மை யுரைத்தல் ஆம்விவ சாயம்.

எ - டு :—இ - ளி. நா - அ.

ஐந்திரசாலிகன் :—அரசே! ஆணையிடுங்கள். நிலத்தில் திங்களையும் வானில் மலையையும் நீரில் நெருப்பையும் நடுப்பகலில் மாலையையும் காண்பிக்கிறேன். பாருங்கள்.

என் இவவளவு பேச்சு!

தாங்கள் காண விரும்புவதை மனத்தில் நினைத்துக் கொள்ளுங்கள். என் ஆசிரியர் தந்த மந்திரமகிமையால் அதை நான் காண்பிக்கின்றேன்.

இப்பகுதியில், ஐந்திரசாலிகன் அரசன் உள்ளத்துக்குள் நினைத்திருக்கும் பொருளை (இரத்திஞவளியை)க் காண்பிக்கத் தனக்கு வன்மையுண்டு என்று கூறுவதால், விவசாயம் என்ற உறுப்பு கூறியதாயிற்று.

விரோதனம்

சினத்தா லதுகூ றல்விரோ தனமாம்.

எ - டு :—வேணீ சங்காரம். ஐ - அ.

துரியோதனன் :—டே டே காற்றின் மகனே! இகழ்தற்குரிய உன் செய்கையைக் கிழவரசரின் முன் என் இவ்வாறு புகழ்ந்து கொள்கின்றாய்.

நீயும் அருச்சுனனும் தருமனும் அவ்விரட்டையரும் பார்த்துக்கொண்டிருக்க, நிலமன்னர் முன்னிலையில், ஆதியில் அடிமையாய் விட்ட உங்கள் மனைவி என்ஆணையால் கூந்தலைப்பற்றி இழுக்கப் பெற்றாள். நீ பகைத்தற்குரிய இச்செய்கையில் நீ கொன்ற இவ்

வரசர்கள் உனக்கு என்ன தீங்கிழைத்தனர். தோள்வலியால் மதித்துள்ள என்னை வெற்றிகொள்ளாமலே உனக்கு இத்துணைக் கொழுப்பா?

பீமன் சினம் கொள்ளுகிறான்.

அருச்சுனன் :—ஆரிய! அருள்புரிக. இதில் என்ன கோபம்; வாயினால் இவன் இன்னாதன செய்யவல்லன். செய்கையால் இயலாது. உடன்பிறந்தார் நூற்றுவரும் கொல்லப்பெற்றமையால் வருந்தி உளறுகிறான். நீ மனம் வருந்த வேண்டாம்.

பீமன் :—மதிகுலமாசே! கடுமொழிக்கயவா! பெரியோர் இருவரும் இடைமறிக்காவிடின் இப்பொழுதே என் கதையால் அடித்து உன் எலும்புகளை மளமள வென்று முறித்து உன் தம்பி துச்சாசனன் சென்றவிடத்துக்கு உன்னை அனுப்பிவிட்டிருப்பேன். மேலும், அறிவிலி!

யானை தாமரையோடையைக் கலக்கி அழிப்பதுபோல் உன் குலத்தை அழிக்கும் நான் உன்னை இதுவரை கொல்லாது விடுத்தது உன்னைப் பெண்போல் கண்ணீர் விட்டழச் செய்வதற்காகவும் உன் எதிரிலேயே உன் தம்பியின் மார்பைப் பிளப்பதற்காகவுமே. இரண்டும் முடிந்தது.

துரியோதனன் :—பரதகுலப்பதரே! பாண்டுகுலவிலங்கே! கொடு மனத்தவனே! உன்னைப்போல் நான் தற்புகழ்ச்சி செய்து கொள்பவனல்ல.

என் கதையால் மார்பு பிளக்கப்பட்டு நரம்புகளும் எலும்புகளும் சுற்றிக்கொண்டு, காண்போர் கலங்கும் வண்ணம் நீ போர்க்களத்தில் உறங்குவதை உன் உறவினர் விரைவில் பார்ப்பர்.

இப்பகுதியில், பீமனும் துரியோதனனும் சினத்துடன் தம் தம் வன்மையைக் கூறிக்கொள்வதால், விரோதனம் என்ற உறுப்பு கூறியதாயிற்று.

பிரரோசனை

திண்ண மதாக வரும்பொரு ளோதல்
எண்ணிய பிரரோ சனையா மென்பர். 46

ஏ - டு :—வே - ம். ஆ - அ.

பாஞ்சாலகன் :—ஐயம் வேண்டாம். தங்கள் முடிசூட்டுவிழாவிற்காக மணிக்குடங்கள் நீரால் நிரப்பப்பெறட்டும். வெகுநாட்களாக அவிழ்த்து விடப்பட்ட தன் கூந்தலில் திரௌபதி கவனம் செலுத்தட்டும். அரசர்தருக்களை அழிக்கும் பரசுராமன் கூரிய கோடலியைக் கையில் ஏந்திய பொழுதும், செந்நாய்வயிற்றன் (பீமன்) சினந்துசீறும் பொழுதும், போரில் வெற்றியைப்பற்றின ஐயம் எங்ஙனம் உண்டாகும்?

இப்பகுதியில், இதனாலும் இது போன்ற வாக்கியங்களாலும் வரும்பொருளை நிறைவேறியதாகவே கூறுதலால், பிரரோசனை என்ற உறுப்பு கூறியதாயிற்று.

விசலனம்

தற்புக ழோதல் விசலன மாகும்.

எ - டு:—இ - ளி. நா - அ:

யௌகந்தராயணன் :—என் சொல்லுக்கிணங்கி அரசி சில காலம் அரசனைப் பிரிந்திருக்க நேர்ந்தது. வேறொரு மனைவியை அரசனுக்கு மணம் புரிவித்தமையின் அரசிக்கு நான் பெரும் வருத்தத்தையும் உண்டாக்கி விட்டேன். ஆதலின், அரசன் அரசர்க்கரசனாவது அரசிக்கு மகிழ்ச்சியை ஆக்குமாயினும் அவள் முன் என் முகத்தைக் காண்பிக்க நாணுகிறேன்.

இப்பகுதியில், யௌகந்தராயணன் மறை முகமாய்த் தானே அரசன் மேன்மைக்குக் காரணம் என்று கூறிக் கொள்வதால், விசலனம் என்ற உறுப்பு கூறியதாயிற்று.

ஆதானம்

செய்கை யுணர்த்தல் ஆதா னமெனல். 47

எ - டு : –இ - ளி. நா - அ.

சாகரிகை :—(திக்குகளைப் பார்த்து) ' நாற்றிசையிலும் பற்றியெரிந்த தீ தெய்வச்செயலாய் இப்பொழுது துயரின் இறுதியைச் செய்யப் போகிறது.

இப்பகுதியில், வேறுகருத்துடையதாயினும் இவ்வாக்கியம் துயரின் முடிவு—இரத்தினவளியின்சேர்க்கை—என்ற செய்தியை உணர்த்துதலால், ஆதானம் என்ற உறுப்பு கூறியதாயிற்று.

இவை பதின்மூன்றும் அவமரிச சந்தியின் உறுப்புக்கள். இவைகளில் அபவாதம் சத்தி விவாசயம் பிரரோசனை ஆதானம் என்ற ஐந்துறுப்புக்களும் இன்றியமையாதவை. மற்றவை எட்டும் ஏற்றபெற்றி அமையும்.

நிருவகணசந்தி

முன்னிணை வுகளில் முறைமைக் கேற்பச்
சிந்திக் கிடக்கும் அவ்வப் பொருள்கள்—
தம்முடன் பீசந் தன்னையும் சேர்த்துச்
செம்பொருள் ஒன்றில் முடித்தல் முன்னே
கூறிய வுபசங் கார வினைவாம்.
நிருவ கணமென மற்றொரு பெயராம். 48

எ - டு :—இ - ளி. நா - அ.

வசுபூதி:—(இரத்தினவளியைப் பார்த்துவிட்டு மறுபடியும் பாப்பிரவ்வியனை நோக்கி) பாப்பிரவ்விய! இவள் நம் அரசன் மகளை மிகவும் ஒத்திருக்கிறாள்.

பாப்பிரவ்வியன் :—எனக்கும் அவ்வாறே தோன்றுகின்றது.

வசுபூதி :—(அரசியைப் பார்த்து) இப்பெண் எங்கிருந்து எவ்வாறு உங்களுக்குக் கிடைத்தாள்.

வாசவதத்தை :—'கடலிலிருந்து கிடைத்தாள்' என்று கூறி அமைச்சர் யௌகந்தராயணன் என்னிடம் ஒப்படைத்தார்.

வசுபூதி :—(இரத்தினவளியை நோக்கி) நீண்ட ஆயுளுள்ளவளே! இரத்தினவளி! இந்நகைய நிலையை நீ அடைய நேர்ந்ததே!

இரத்தினவளி :—(பார்த்து அழுது கொண்டே) அமைச்சர் வசுபூதியா?

முன் கூறிய முகம் முதலிய சந்திகளில் ஆங்காங்கு பொருந்தியுள்ளவர்களும், பீசத்துடன் தொடர்புள்ளவர்களுமான இரத்தினவளி சுசங்கதை வசுபூதி பாப்பிரவ்வியன் யௌகந்தராயணன் முதலியவர்களும், அவர்களுடைய அத்தகைய காரியங்களும் இப்பகுதியில் (இரத்தினவளியை வச்சவரசன் மணத்தல் என்ற) ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்பெறுகிறபடியால் இது நிருவகண சந்தியாம்.

சந்தி விபோதம் கிரதனம் நிரணயம்
பரிபா டைபிர சாதமா னந்தம்

சமயம் கிருதி பாடை யுபகூகம்
பூருவ பாவம் உபசங் காரம்
பிரசம் சையெனப் பதினுன் குறுப்பாம். 49

சந்தி

பீசம் தோற்று வித்தல் சந்தி.

எ - டு :—இ - ளி. நா - அ.

வசுபூதி :—*பாப்பிரவ்விய! இவள் நம் அரசன் மகளை மிகவும் ஒத்திருக்கிருள்.*

பாப்பிரவ்வியன் :—*எனக்கும் அவ்வாறே தோன்றுகின்றது.*

இப்பகுதியில், இரத்தினுவளியைப்பற்றின பேச்சு எழுவதால், சந்தி என்ற உறுப்பு கூறியதாயிற்று.

விபோதம்

உறுபயன் தேடல் விபோத மென்பர்.

எ - டு :—இ - ளி. நா - அ.

வசுபூதி :—*(நன்கு நோக்கி) அரசே! இப்பெண் எங்கிருந்து வந்தாள்?*

அரசன் :—*அரசிக்குத்தான் தெரியும்.*

வசுபூதி :—*(வாசவதத்தையை நோக்கி) இப்பெண் எங்கிருந்து எவ்வாறு கிடைத்தாள்?*

வாசவதத்தை :—*'கடலிலிருந்து கிடைத்தாள்' என்று கூறி அமைச்சர் யௌகந்தராயணன் என்னிடம் ஒப்புவித்தார்.*

அரசன் :—*(தனக்குள்) யௌகந்தராயணன் ஒப்புவித்தாரா? எனக்கு அறிவிக்காமல் அவர் எவ்வாறு செய்வார்?*

இப்பகுதியில், இரத்தினுவளி யார் என்பது முதலியவை ஆராயப் பெறுவதால், விபோதம் என்ற உறுப்பு கூறியதாயிற்று.

கிரதனம்

தேடிய தோதல் கிரதன மென்பர்.

எ - டு :—இ - ளி. நா - அ.

யௌகந்தராயணன் :—*அரசே! அறிவிக்காமல் அடியேன் செய்து விட்டதை மன்னிக்கவும்.*

இப்பகுதியில், யௌகந்தராயணன் இரத்தினவளியை அரச னுக்காகத்தான் கொண்டு வந்திருக்கும் செய்தியை அறிவித்தலால், கிரதனம் என்ற உறுப்பு கூறியதாயிற்று.

நிரணயம்

நேர்ந்த துணர்த்தல் நிரணய மாகும். 50

எ - டு :—இ - ளி. நா - அ.

யௌகந்தராயணன் :—(கைகளைக் கூப்பிக் கொண்டு) அரசே! கேளுங்கள். இவள் கையைப் பற்றுபவன் (மணப்பவன்) அரசர்க் கரசாவான் என்று ஒரு சித்தர் கூறினர். அவரிடத்தில் நம்பிக்கை யால் நான் அவ்வரசனை அணுகித் தமக்காக இவளை வேண்டினேன். வாசவதத்தைக்கு மனவருத்தம் ஆம் என்று கருதி அவ்வரசன் மறுத்தான். அப்பொழுது நான் லாவணிகத்தில் வாசவதத்தை தீப் பற்றி மாண்டாள் என்ற செய்தியைப் பரப்பி பாப்பிரவ்வியனை அவ்வரசனிடம் அனுப்பினேன்.

இப்பகுதியில், யௌகந்தராயணன் நேர்ந்த செய்தியைச் சொல்லுவதால் நிரணயம் என்ற உறுப்பு கூறியதாயிற்று.

பரிபாடை

கூடிப் பேசல் பரிபா டை. ....

எ - டு :—இ - ளி. நா - அ.

இரத்தினவளி :—(தனக்குள்) தவறிழைத்துள்ள நான் தலைவி —அரசி—எதிரில் தலைகாட்டக் கூடவில்லை,

வாசவதத்தை :—(கண்களில் நீர்ததும்பக் கைகளைநீட்டி) அன் பற்றவளே! அருகே **வா.** இனியாவது அன்புடன் உறவுமுறை யைக் கொண்டாடு. (திரும்பி மறைவாக) ஆரியபுத்திர! இழைத்த கொடுமையை எண்ணி நாணுகிறேன். இவளைக் கட்டிலிருந்து விரைவில் விடுவியுங்கள்.

அரசன் :—சொற்படி. (கட்டை அவிழ்க்கிருன்.)

வாசவதத்தை :—(வசுபூதியைப்பார்த்து) அமைச்சர் யௌகந் தராயணர் என்னைக் கொடியவள் ஆக்கிவிட்டார். அறிந்தும் அறி விக்காதிருந்துவிட்டார்.

இப்பகுதியில், பலர் ஒருவர்க்கொருவர் கூடிப் பேசுவதால், பரிபாடை என்ற உறுப்பு கூறியதாயிற்று.

பிரசாதம்

.... அருள்
புரிவித் தல்பிர சாதமு ரைப்பர்.

எ - டு :—இ - ளி. நா - அ

யௌகந்தராயணன் :—(அரசனை அணுகி) அறிவிக்காமல் செய்து விட்டேன். மன்னிக்கவும்.

இப்பகுதியில், யௌகந்தராயணன் தன்பால் அரசன் அருள் புரியுமாறு செய்தலால், பிரசாத மென்ற உறுப்பு கூறியதாயிற்று.

ஆனந்தம்

விரும்பிய பேறு பெறலா, னந்தம்.

எ - டு :—இ - ளி. நா - அ,

அரசன் :—அரசி சொற்படி. (இரத்தினவளியின் கையைப் பற்றுகிறான்).

இப்பகுதியில், அரசன் இரத்தினவளியை அடைவதாகக் கூறுவதால், ஆனந்தம் என்ற உறுப்பு கூறியதாயிற்று.

சமயம்

உறுதுயர் அறுதல் சமய மதாகும். 51

எ - டு :—இ - ளி. நா - அ.

வாசவதத்தை :—(இரத்தினவளியைத் தழுவிக்கொண்டு) தங்காய்! வருந்தாதே மனத்தைத் தேற்றிக்கொள்.

இப்பகுதியில், இருவரும் மகிழ்ச்சியுடன் சேர்ந்து துயர்நீங்கியதால், சமயம் என்ற உறுப்பு கூறியதாயிற்று.

கிருதி

பெற்றது நிலையுறு வித்தல் கிருதி.

எ - டு :—இ - ளி. நா - அ.

அரசன் :—அரசியின் அருளை மதித்து மகிழ்ந்தேற்றுக் கொள்ளுகிறேன். (இரத்தினுவளியின் கையைப்பற்றுகிருன்).

வாசவதத்தை :—ஆரியபுத்திர! தாய்வீடு வெகு தொலைவில் இருக்கின்றது. ஆதலின் இவள் தன் உறவினரை நினையாவண்ணம் தாங்கள் நடந்துகொள்ள வேண்டும்.

இப்பகுதியில், அரசன் தான் பெற்ற இரத்தினுவளியுடன் இன்புற்று வாழுமாறு வாசவதத்தை கூறுதலின், கிருதி என்ற உறுப்பு கூறியதாயிற்று.

பாட(ஷ)ணம்

பெருமை முதலிய பெறுதல் பாடணம்.

எ - டு :—இ - ளி. நா - அ.

அரசன் :—இதனினும் மகிழ்ச்சிக்குரியது உளதா! விக்கிரமபாகு எனக்கு ஒப்பான நிலையை எய்விக்கப்பெற்ருன். கடல் சூழ்ந்த இந் நிலவுலகை அடையக் காரணமாகியவளும், என் அன்பிற்குரியவளும், சிறந்தவளுமாகிய இரத்தினுவளி என்னுல் அடையப்பெற்ருள். தங்கையைப் பெற்றமையால் அரசியும் அகமகிழ்ந்தாள். கோசல நாட்டை வெற்றி கொண்டேன். தாங்கள் அமைச்சர் தலைவராயிருக்கும் பொழுது நான் விரும்பிப் பெருததெது?

இப்பகுதியில், அரசன் தான் பெற்ற இன்பம் பொருள் முதலிய பேற்றைக் கூறுவதால், பாடணம் என்ற உறுப்பு கூறியதாயிற்று.

பூருவபாவம்

உறுவ தறிதல் பூருவ பாவம்.

எ - டு :—இ - ளி. நா - அ.

யௌகந்தராயணன் :—எல்லா மறிந்தீர்கள். இனி தங்கைக்குரியன செய்தற்குத் தாங்களே உரியவர்.

வாசவதத்தை :—அரசனுக்கு இவளை மணம்புரிவி யென்று வெளிப்படையாகக் கூறுங்கள்.

இப்பகுதியில், யௌகந்தராயணனின் உள்ளத்(துள்ள)தை வாசவதத்தை அறிந்தமையின், பூருவபாவம் என்ற உறுப்பு கூறியதாயிற்று.

உபகூகனம்

பெறலரி தாயது பெற்று வியத்தல்
உபகூ கனமென் றேதினர் உரவோர். 52

எ - டு :—வேணீசங்காரம். ஆ - அ.

(திரைக்குள்.)

பெரும் போர்த்தீயில் எரிந்து மாண்டவர் போக மிகுந்துள்ள அரசர்களே! உங்களுக்கு நன்மை ஆகுக- யாதொரு கூந்தல் அவிழ்த்துவிடப் பெற்றதால் சினந்தெழுந்த பாண்டுபுத்திரர்கள், பகையரசர்களைக் கொன்று மூலைக்குமூலை அவர்கள் மனைவியர் கூந்தல் அவிழ்ந்து புரளுமாறு செய்தனரோ, யாதொரு கூந்தல் சினந்து சீறும் மறலியின் நண்பனோ, குருமன்னர்களின் வீழ்ச்சிக்குக் காரணமாய விண்வீழ்க்கொள்ளியோ, அத்தகைய பாஞ்சாலியின் கூந்தல் தெய்வச்செயலாய் முடியப்பெற்றுவிட்டது. மக்கள் அழிவது நிற்கட்டும். அரசர்கள் உய்ந்து வாழட்டும்.

தருமபுத்திரர்:—தேவி! வானில் உலாவித்திரியும் சித்தபுருடன் உன்கூந்தல் முடியப்பெறுவதைக் கொண்டாடுகின்றான்.

இப்பகுதியில் உபகூகனம் என்ற உறுப்பு கூறியதாயிற்று.

உபசங்காரம்

கோரிய பெறுதல் உபசங் காரம்.

எ - டு :—இ - ளி. நா - அ.

யௌகந்தராயணன் (?) :—இதனினும் பெரிய எவ்விருப்பத்தை யான் இழைக்கப் போகிறேன்.

இப்பகுதியில், கோரியபெற்றமை கூறப் பெறுதலால், உபசங் காரம் எனும் உறுப்பு கூறியதாயிற்று.

பிரசம்சை

மங்களம் கோரல் பிரசம் சையெனல். 53

எ - டு :—வேணீசங்காரம். ஆ - அ.

பரத வாக்கியம் :—தங்களுக்கு எங்கள்பால் அன்பிருக்குமாயின் மக்கள் உதாரமனத்துடன் நூற்றாண்டுவாழ்க. வேறு பற்றின்றிப் பரமனிடத்துப் பத்தி புரிக. அரசன் உரவோருறவினனாகவும்

உயர்வை உணர்பவனுகவும் எஞ்ஞான்றும் நற்செயல் ஆற்றுபவனுகவும் மக்களை மகிழ்விப்பவனுகவும் இருக்கட்டும்.

இப்பகுதியில், நன்மைகோருவதால், பிரசம்சை யெனும் உறுப்பு கூறியதாயிற்று.

இவை பதினன்கும் நிருவகண சந்தியின் உறுப்புக்கள். இவ்வாறு அறுபத்துநான்கு உறுப்புக்களுடன் ஐந்து சந்திகள் கூறப்பெற்றன.

இவ்வகை யறுபதி னன்குறுப் பாகும்.
விரும்பிய வற்றைச் செவ்வித மைத்தல்
மறைபொரு ளாயின் மறைய விடுதல்
தெரிபொரு ளாயின் தெரியச் செய்தல்
அவையி லுள்ளோர்க் கவாமிக வாக்கல்
பிரயோ கமதை வியப்புறப் பேணல்
சரிதம் குன்ற வண்ணம் காத்தல்
என்பன வாறும் இவைசெய் பயனும். 54

தோ - ய் :—*கதைப் பொருளின் உட்பிரிவுகளைக் கூறுகிறுர்.*

கண்டு கேட்டுக் களித்தற் பாலவும்
கொண்ட குறிப்பால் உணரற் பாலவும்
என்றிரு வகையாம் இயல்கதைப் பகுதி. 55

தோ - ய் :—*கூறிய விருவகையும் எவை யெனக் கூறுகிறுர்.*

சுவைதகு திகள்இல் பகுதி குறிப்பாம்-
இவைநிறை பகுதி காணல் கேட்டல். 56

தோ - ய் :—*குறிப்பை உணர்த்தும் வகைகளைக் கூறுகிறுர்.*

விக்கம் பம்சூ ளிகையங் காசியம்
அங்கா வதாரம் பிரவே சகமாம்
என்றிவை யைந்துள் ஒன்றால் குறிப்பை
நன்று வுணர வைத்தல் முறையாம். 57

விக்கம்பம்

நடந்தது நடப்பது மாம்கதைப் பகுதியை
நன்கறி விப்பதும் நனிசுருங் கியதும்

நடுநடி கர்கள் நடிப்பது மாய
நாடகப் பகுதி நவின்ற விக்கம்பம். 58

போ - ரை :—(ஒன்று அல்லது இரண்டு?) மத்திமபாத்திரங்களால் நடித்துக் காண்பிக்கப்பெறுவதும், நடந்தவை நடக்கப்போகுமவை ஆம் கதைப்பகுதிகளைச் சுருங்கவறிவிப்பதுமாய நாடகப் பகுதி விக்கம்பமாம்.

தோ - ய் :—அது தூயதென்றும் கலப்பியலென்றும் இருபாற்படும்.

ஒருவன் பலர்ஆம் நடுநடி கர்கள்
தெருள நடிப்பது தூய விக்கம்பம்.
நடுவரும் கடையரு மாய நடிகர்
கலந்து நடிப்பது கலப்பியல் ஆகும். 59

போ - ரை :—ஒன்று அல்லது இரண்டு மத்திமபாத்திரங்களால் நடித்துக் காண்பிக்கப்பெறுவது தூயதாம். மத்திமபாத்திரமும் அதமபாத்திரமும் ஆம் பலரால் நடித்துக் காண்பிக்கப் பெறுவது கலப்பியல் ஆம்.

பிரவேசகம்

உயர்வில் மொழியர் கடைநடி கர்கள்
இரண்டங் கங்களி னிடைப்பகு தியினில்
நடித்து நடியாப் பகுதி யுணர்த்தல்
பிரவேச கமென் றேதுப புலவர்.

போ - ரை :—'கடைநடிகர்கள்' என்றதால் விக்கம்பத்தின் இதற்குள்ள வேற்றுமை உணர்த்தப்பெற்றது. 'இரண்டங்கங்களினிடைப்பகுதி' யென்றதால் முதல் அங்கத்தின் தொடக்கத்தில் பிரவேசகம் அமையாது என்று உணர்த்தப்பெற்றது.

சூலிகை

திரையு ளுள்ளோர் தாமே கதையின்
பகுதி யுணர்த்தல் சூலிகை யென்பர். 60

எ - டு :—உத்தர ராம சரிதம் இ - அ. தொடக்கம்.

திரையுள்.

வாசந்திகை :—தவத்தினளே! நல்வரவாகுக.
ஆத்திரேயி என்னும் தவமாது தோன்றுகிறாள்.

இப்பகுதியில், திரையுள்ளிருந்து வாசந்திகை யென்பவள் ஆத்திரேயியின் தோற்றத்தை அறிவிப்பதால், இது சூலிகையாம்.

அங்காசியம்

நடைமுறை யங்கத் திறுதி நடிகர்
தொடரு மங்கத் தின்பொருள் தன்னைப்
படிய உணர்த்தல் அங்கா சியமாம்.

பொ - ரை :—சென்ற அங்கத்தின் முடிவொடு வருமங்கத்தின் முதற்பகுதி தொடர்பற்று நிற்கும் பொழுது, சென்ற அங்கத்திறுதி நடிகர் வரும் பொருளைக் குறிப்பாய்க் கூறித் தொடர்புகொளச் செய்தல் அங்காசியமாம்.

எ - டு :—வீரசரிதம் இ - அ. இறுதி.

சுமந்திரன் :—(தோன்றி) பெரியோர்களாகிய வசிட்டரும் விசுவாமித்திரரும், உங்களைப் பரசுராமனுடன் வருமாறழைக்கின்றனர்.

பிறர் :—அப்பெரியோரிருவரும் எங்கிருக்கின்றனர் ?

சுமந்திரன் :—அரசர் பெருமான் அருகில்.

பிறர் :—ஆயின் நாம் அங்கே செல்லுவோம்.

இதோடு இரண்டாம் அங்கம் முடிவுறுகிறது.

மூன்றும் அங்கம்.

வசிட்டர் விசுவாமித்திரர் பரசுராமன் முதலியோர் உட்கார்ந்த வண்ணம் தோன்றுகின்றனர்.

சுமந்திரன் தோற்றமிலதாயின் இரண்டாம் அங்கம், சதானந்தர் தயரதர் இவர்களைப்பற்றிய கதைப்பகுதியோடு முடியநேரும். மூன்றுமங்கத்தின் தொடக்கத்தில் உள்ள வசிட்டர் முதலியோர் தோற்றத்திற்கும் அதற்கும் தொடர்பின்றி நிற்கும். இங்கு சுமந்திரன் தோற்றம் தொடர்பை உண்டுபண்ணுவதால் இது அங்காசியம் ஆம்.

அங்காவதாரம்

முன்வரு மங்கத் திறுதி யறுமல்
பின்வரு மங்கம் தொடர்ந்திடு மாயின்
அங்கா வதார மஃதா கும்மே,

போ - ரை :—பிரவேசகம் முதலிய இடைப்பகுதிகள் இன்றியே, ஓர் அங்கத்திறுதியிலுள்ள நடிகர்களால் உணர்த்தப்பெற்று மற்றோர் அங்கம் தொடர்ந்து தோன்றுதலே அங்காவதாரமாம்.

எ - டு :—மாலவிகாக்கினி மித்திரம் மு - அ. முடிவு.

விதூடகன் :—அங்ஙனமாயின் நீவிர் இருவரும் அரசியின் காட்சிசாலைக்குச் சென்று பாட்டவை நடப்பதற்காய ஏற்பாடுகளைச் செய்துவிட்டு, அரசனுக்கு ஆள் அனுப்புங்கள். ஆனால் .... முழவொலியே அரசனைக் கிளப்பிவிடும்.

முழவொலி கேட்கின்றது.

முதல் அங்கத்தினிறுதியிலுள்ள நடிகர்களே இரண்டாமங்கத்தின் தொடக்கத்திலும் தோன்றி இடையறுது கதையை நடத்துகின்றனர். ஆதலின் இது அங்காவதாரமாம்.

இவ்வை வகையால் குறிப்பை யுணர்த்தல்.
செவ்விதின் அங்கம் சேடம் காட்டும்.

நாட்டிய தருமம்

தோ - ய் :—கதைப்பொருள் வேறுவகையினும் மூன்று உட்பிரிவுகள் பெறும் என்கிறார்.

செய்தி களில்சில பலர்செவி யுறலும்
சிலசிலர் செவியுற லும்சில செய்தி
செவியுற லின்மையும் சேர்ந்தன வாகும். 62
பலர்செவி யுறுவது பிரகா சமெனல்.
செவியுற லில்லது சுவகத மாகும். 63
சனாந்திக மபவா ரிதமென முறையே
சிலர்செவி யுறுவது மிருவகை யாகும்.

சனாந்திகம்

திரிப தாகை முத்திரை யாலே
பிறரை விலக்கிப் பிறரோடு பேசல்
சனாந்திக மேன்று சாற்றினர் சான்றோர். 64

போ - ரை :—மோதிரவிரல் மடங்கி மற்றைய விரல்கள் நிமிர்ந்து நிற்கும் பாணி திரிபதாகையாம். திரிபதாகை முத்திரையால் விலக்கவிரும்பியவனை விலக்கி மற்றொருவனோடு பேசுதல் சனாந்திகமாம்.

அபவாரிதம்

மறுபுறம் மாறி மற்றவ னுடனே
உரையா டுதலே யபவா ரிதமாம். 65

போ - ரை :—மறுபுறம் திரும்பி மற்றொருவனோடிரகசியம் பேசுதல் அபவார்தமாகும்.

ஆகாச பாடிதம்

முன்னொரு பாத்திர மின்றிவான் வெளியில்
'என்னுரைக் கின்றாய் இஃதா! ஓகோ!'
என்பன போன்று செவியுற லின்றிச்
செவியுற் றதுபோல் ஒருவன் பேசல்
வான்மொழி யென்றார் வாலறி வாளர். 66

போ - ரை .—பிரதமகற்பம் முதலிய நாட்டிய தருமங்கள் பாரதநாட்டைச் சேர்ந்தவையல்ல. நாமமாலையில் (நூல்) குறிப்பிடப் பெற்ற நாட்டிய தருமங்கள் வடமொழிப் பண்புக்கு ஒவ்வாமுறையில் நாட்டு மொழியில் அமைந்துள்ளன. ஆனமையின் அவைகளுக்கு இந்நூலில் இலக்கணம் கூறப்பெறவில்லை.

இத்தகைய வாயபல நற்பொருள்க ளோடும்
நித்திய விராமகதை யோடு [1]பெரு(ங்)கதையும்
சுத்தியோ டறிந்துசுவை யாதிய பொருந்தச்
சித்திர மொழித்திர ளியற்றுவது நூலே. 67

முதல் ஒளி முற்றிற்று.

போ - ரை :—பெருங்கதை—குணாட்டியரியற்றியது. சுவை தலைவன் முதலிய விடயங்கள் மேலே கூறப்பெறும். இராமாயணத்தை ஆதாரமாகக்கொண்டு பல நாடகங்கள் இயற்றப் பெற்றிருப்பது அறியக்கூடியதே. பெருங்கதையை ஆதாரமாகக் கொண்டியற்றப்பெற்றது முத்திரா ராக்கசம் என்னும் நாடகம்.

'சாணக்கியன் சகடால கிருகத்தில் சூனியமுறையில் கிருத்தியை நிருமித்து அரசனைப் புத்திரர்களுடன் கொன்றான். சந்திரகுப்தனை அரசனாக்கினான்' என்ற பெருங்கதைவாக்கியத்தால் இது விளங்கும்.

முதலொளியின் உரை முற்றிற்று.

---

1. பிருகத்கதா.

இரண்டாமொளி.

தோ - ய்:— *கதைப்பொருள் வேறுபடுவதால் உருவக நூல்கள் ஒன்றுக்கொன்று வேருதல் முன்பு கூறினேம். தலைவர் வேறுபடுவதால் அவற்றின் வேறுபாடு இவ்வொளியில் கூறப்பெறுகின்றது.*

வணக்கம் இனிமை வண்மை வன்மை
குணங்கோ ளின்சொல் குடிக ளன்பு
தூய்மை பேச்சுத் திறமை குடிமை
திண்மை இளமை தெள்ளறி வூக்கம்
நினைவு மேதை கலைகள் கணிப்பு
துணிவு வலிமை ஒளிநூ லறிவு
அறநோக் குடைமை ஆதிய பண்பும்
பிறவும் பெற்ருேன் தலைவ னேன்ப. 1. 2

பொ - ரை :—*வணக்கம் முதலிய பண்புகள் வாய்ந்தவனே நாடகநூல் தலைவன் ஆவான்.*

வணக்கம்.

எ : டு :—*வீர சரிதம். நா - அ.*

"*மறைவல்லுநர் வணங்கி வழிபடவல்ல திருவடிகளை யுடையவரும், கல்வி தவம் விரதம் இவைகளுக்குறைவிடமாயவரும், தாபதரில் சிறந்தவரும் ஆய நும்பால் விதிவசமாய் அடியேன் இழைத்துவிட்ட இச்சிறு தவற்றைப் பொறுத்தருள வேண்டும். வணங்குகின்றேன்*".

இனிமை.

இனியன்—விருப்புடன் காணத்தக்கவன்.

எ - டு :—*வீ - ச. இ - அ.*

"*உள்ளும் புறமும் இனியனும் நினைத்தற்கரிய அழகிய பண்பு பொருந்தியவனுமாய நீ எவ்வகையினும் என் உள்ளத்துறைந்து விட்டனை*".

வண்மை.

வள்ளல்—உள்ளதனைத்தும் கொடுப்பவன்.

எ - டு:—வீ - ச. மு - அ.

" கர்ணன் சருமத்தையும் சிபி நிணத்தையும் சீமூதவாகனன் உயிரையும் ததீசிமுனிவர் எலும்புகளையும் ஈந்தனர். பெரியோர்க்கு அளிக்கத்தகாததில்லை ".

வன்மை.

வன்மையுடையவன்—விரைந்து செயலாற்றுபவன்.

எ - டு :—வீ - ச. மு - அ.

" பல்லாயிரம் வச்சிரப் படைகளால் நிருமிக்கப் பெற்றது போன்றதும் முப்புரங்களை முடிவித்ததும் வானவர் வீரியமனைத்தும் தன்னுள் வாய்க்கப்பெற்றதுமாய வில், இராமன் முன் தோன்றுகின்றது. இளங்களிறு தன் துதிக்கையை மலைமேலிடுவதுபோல் இவ்விளஞ் சிறுவன் தன் புயத்தை அதன்மேல் வைத்து விட்டான். ஒலியுடன் நாண் ஏற்றப்பெற்றுவிட்டது. வில்லும் முறிந்தது ".

இன்சொல்.

எ - டு :—வீ - ச.

" தங்கள் தந்தை சமதக்கினிமுனிவர். ஆசிரியன் பரமசிவன். வீரச் செயல்கள் புரிந்து நீவிர் எய்திய பெரும்புகழ் உரைகளுக் குட்படாதது. ஏழ்கடல்சூழ் இந்நிலவுலகைத் துவக்கறவளித்தது நும் வண்மையின் எல்லை. உண்மைக்கும் உயர்மறைகளுக்கும் ஒப்பற்ற தவத்திற்கும் உறைவிடமாகிய உம்மைச்சேர்ந்த வெதுதான் உலகில் உயர்வு பெறாதது ? "

குடிகள் அன்பு.

எ - டு :—வீ - ச.

" நும்மருளால், மறைநெறி வழுவாது காக்கும் நும்புதல்வனை அரசாக்கப்பெற்று யாமிப்பொழுதே கோரிய பயன்களை யெய்தி, எய்தியகாத்து இனிது களிக்கக்கடவோமாக ! "

தூய்மை.

தூய்மை—காமம் வெகுளி முதலிய மாசுநீங்கியமனம் படைத்திருத்தல்.

எ - டு :—இரகு வம்சம்.

"நங்காய்! நீயார்? எவன் மனைவி? என்னிடம் வந்த காரணம் யாது? ஆய்ந்து பதில்கூறு. இரகு குலத்தவர் இந்திரியங்களை வென்றவர். அவர் மனம் பிறர் மனைவிகள்பால் செல்லாது."

பேச்சுத் திறமை.

எ - டு :—அநுமன் நாடகம்.

"என் தோள்வலியையும் முக்கண்ணன் வில்லின் மென்மையையும் அறியாது யான் இத்தவறு இயற்றிவிட்டேன். பரசுராமரே! என்னுடைய இந்த இளமை யவாவைப் பொறுத்தருளுக. சிறியோர் சிறுசெயல் பெரியோர் கேளியல்லவா?

குடிமை.

எ - டு :—

இவன், கதிரவன் குலத்தில்.......................தோன்றிய அரசகுமாரர் நால்வரில் முதல்வன். தாடகையைக் கொன்றவன். நன்னடத்தை யுடையவன். இராமன் என்பான்.

திண்மை.

திண்மை—உள்ளம் உரை செயல்களில் அச்சம் நீங்கி ஒழுகல்.

எ - டு: —வீ - ச.

பூசனைக்குரிய தங்களை மீறுவதற்காகப் பிராயச்சித்தம் செய்துகொள்வேனல்லாது படையேந்துதல் என்னும் விரதத்திலிருந்து பிறழேன்.

மேதை.

மேதை—பிறரறியா நுணுக்கமுரைத்தல்,

எ - டு :—மாலவிகாக்கினி மித்திரம்.

"நாட்டிய முறையில் நான் கற்பிக்கும் ஒவ்வொரு துறையிலும் இவ்விளநங்கை அறிவரிய பல நுணுக்கங்களை நடித்துக்

காட்டுகின்றமையால் எனக்கே திரும்பக் கற்பிக்கின்றனன் போலும்.

இவ்வயின் பிறவும் காண்க.

தோ - ய் :—தலைவர் வகைகளைக் கூறுகின்றார்.

[1] இலலிதன் சாந்தன் உதாத்தன் உத்ததன்
எனநான் குவகைப் படுவன் தலைவன்.

தோ - ய் :—முறையே இலக்கணம் கூறுகின்றார்.

தீரலலிதன்.

கவலை யின்மை கலையில் விருப்பம்
நவிலும் மேன்மை யின்ப நுகர்வு
திகழப் பெற்றோன் தீர லலிதன் 3

போ - ரை :—எய்தாதனவெய்தல் எய்தியகாத்தல் முதலிய பொறுப்புக்களை அமைச்சர்களிடம் விட்டுக் கவலையற்றிருப்பவனும், ஆடல்பாடல் முதலிய கலைகளில் திளைப்பவனும், இன்பங்கள் நுகர்பவனும், இன்பச்சுவையைத் தலையாய்க்கொண்டிருத்தலால் மெல்லிய மனப்பான்மை செய்கை முதலிய வுள்ளவனும் தீரலலிதனாவான்.

எ - டு :—இ - னி. மு - அ.

"பகையற்றவரசு. பொறுப்புவாய்ந்த தக்க வமைச்சன். நல்லாட்சி பெற்றுத் துயரற்று இன்புற்றிலங்கும் குடிகள். பிரத்தியோதனனின் (அவந்தி நாட்டரசனின்) மகள். இளவேனில். நீ. காமன் (இச்சேர்க்கையால்)களிப்புறட்டும். எனக்கோ இஃதொரு பெரும் விழா."

தீரசாந்தன்.

பொதுமைப் பண்பு பொருந்தி யிலங்கும்
திவிசன் முதலோன் தீர சாந்தன்.

போ - ரை :—வணக்கம் முதலிய பொதுப்பண்புகள் பொருந்திய திவிசன் முதலோன் தீரசாந்தன் என்றது—பிரகரணம் எனும் நாடக நூற்றலைவராய அமைச்சன் வேதியன் வணிகன் முதலி

1. முறையே தீரலலிதன் தீரசாந்தன் தீரோதாத்தன் தீரோத்ததன் என்று கூறுவது நூல் மரபு.

யோரும் அத்தகையரே என்று கூறியதாம். அவர் கவலையின்மை முதலிய குணங்கள் உள்ளவராயினும் தீரலலிதர் ஆகார். தீரசாந்தரே யாவர். ஆதலின் மாலதீமாதவத்தில் மாதவனும் மிருச்சகடிகத்தில் சாருதத்தனும் தீரசாந்தரேயாவர்.[1]

தீரோதாத்தன்.

பெருந்தகை யுள்ளம் மாபெருந் தன்மை
பொறுமை தற்புக ழின்மை யுறுதி
மறைந்த வகந்தை மாண்கட னாற்றல்
நிறையப் பெற்றோன் தீரோ தாத்தன். 4

பொ - ரை :—பெருந்தகையுள்ளம் - வருத்தம் சினம் முதலிய குணங்களால் தன்னிலை குன்றா உள்ளம். தற்புகழின்மை-தன்னைப் புகழ்ந்து கொள்ளாமை. மறைந்தவகந்தை - வணக்கத்தால் (பெரியவர்பால் நற்குணப் பயிற்சியால்) செருக்கு மறைந்து நிற்றல். மாண் கடனாற்றல்—செய்வேன் என்றதைச் செய்து முடித்தல்.

எ - டு :—நாகாநந்தம்.

சீமூதவாகனன் :—“ கலுழனே! நாடிகளின் வழியாகக் குருதி பெருகுகின்றது. இன்னும் என்னுடலில் தசையுளது. உனக்கும் அவா நீங்கியதாகக் காணவில்லை. ஏன் ஊண் ஒழிந்து நிற்கின்றாய்? ”

பொது விலக்கணத்தில் கூறப்பெற்றுள்ள (உறுதி முதலிய) குணங்கள் சிறப்பிலக்கணத்திலும் கூறப் பெற்றிருப்பது அங்கு அவை முதன்மையாய் இருந்தமைய வேண்டுமென்பது நோக்கியென்றறிக.

[2] “ எவரினும் உயர்ந்தவனே உதாத்தன் என்று அணிநூல்மரபு. வெற்றியை விரும்பி முயற்சி செய்பவனே அத்தகையன் ஆகக் கூடும். சீமூதவாகனனை நூலாசிரியர் வெற்றி விருப்பற்றவனாகவே கூறுகிறார். ஆதலின் அடக்கம் அருள் ஆசையின்மை முதலிய குணங்கள் வாய்ந்த சீமூதவாகனன் சாந்தனாகவே இருக்க வேண்டும். சீமூதவாகனன் அரசு இன்பம் முதலியவைகளில் ஆசையற்

1. இரண்டு சுலோகங்கள் மூலத்தில் கூறப்பெற்றுள்ளன. அவசியமின்மையின் மொழி பெயர்ப்பில் விடப்பெற்றன.

2. வடமொழி உரையில் உதாரணமாகக் காட்டிய மூன்று சுலோகங்கள் அவசியமின்மையின் விடப்பெற்றன.

றவனாதலின், மலயவதி அவன்பால் காதல் கொள்வதாகக் கூறுவதும் அவன் சாந்த நாயகன் என்பதற்கு முரணானதன்று. தலைவனுக்குக் கூறியுள்ள பொதுவிலக்கண மமைந்தவனே சாந்த நாயகனாகக்கூடும் என்பதும் நூற் கோட்பாடு மாத்திரமாதலின் அது அவன் சாந்த நாயகனாவதை விலக்காது. ஆதலின் புத்தர் தருமபுத்திரர் சீமூதவாகனன் முதலியோர் உலக வழக்கையொட்டித் தீரசாந்தர்களே."

எனின் கூறுதும். 'எவரினும் உயர்ந்தவனே உதாத்தன்' என்பது சீமூதவாகனன்வயின் பொருந்தாததன்று. வெற்றி விருப்பென்பது ஒரு தன்மைத்தே என்பதுமில்லை. மறம் தன்னலவீடு, அருள் முதலிய எக்குணத்தானும் பிறரினும் மிக்கு விளங்குபவன் ஒவ்வொருவனும் வெற்றி கொண்டவனே. பிறரை வருத்திப் பொருள் முதலிய ஈட்டுபவன் வெற்றியியல்பினன் எனின் கொள்ளை கொலை முதலிய செய்தவனும் உதாத்தனாகக்கூடும். இராமன் முதலியோர் பகைவரை அடக்கியதும் அதன் விளைவாகத் தன்னடை வாய்ப் பொருள் முதலிய பெற்றதும் அந்நோக்குடன் செய்த பணியன்று. தீயரை அடக்குவதே முக்கிய நோக்கு. ஆதலின் அவர் உதாத்தநாயகர் ஆவதற்குக் குறையொன்றுமில்லை. சீமூதவாகனன் உயிரையீந்து பிறரைக்காக்க முயன்றமையின் மிக்குயர்ந்த உதாத்தநாயகனே. அரசு இன்பம் முதலியவைகளில் ஆசையற்றிருப்பதும் உதாத்தநாயகனாயிருப்பதற்கு முரணன்று. அது உதாத்தத் தன்மைக்கு ஒத்த பண்பே. மலயவதியின் காதல் கூற்றும் அவன் சாந்தனன்று என்பதற்குப் போதிய சான்றாம். சாந்தி யென்பது செருக்கற்றிருத்தல். அப்பண்பு அந்தணர் முதல்வர்க்கு இயற்கைத் தகுதி பற்றி அமைந்தது. ஆதலின் நூல்முறைப்படி அவன் சாந்தநாயகன் ஆவதற்கில்லை. அருளில் புத்தருக்கும் சீமூதவாகனனுக்கும் வேற்றுமையின்றேனும், முறையே அக்கருணை பயன்பற்றாலும் அஃதின்மையாலும் அமைந்துளதாதலின் வேற்றுமையுண்டு. ஆதலின் சீமூதவாகனன் தீரோதாத்தனே.

தீரோத்ததன்.

மதம்போ ருமை மாயம் வஞ்சம்
மிதமில் கருவம் மனநிலை யின்மை
தற்புகழ் உடையோன் தீரோத் ததனும், 5

போ - ரை :—மதம் - வீரம் முதலிய பண்புகளால் உண்டான மனச்செருக்கு. மாயை - மந்திரவலியால் இல்பொருள் தோற்று வித்தல். பரசுராமன் இராவணன் முதலியோர் தீரோத்ததநாயகராம்.

தீரலலிதன் முதலிய சொற்கள், கன்று காளை எருது முதலிய சொற்கள் போல் மாறுதலில்லாத குறித்த ஓர் தன்மை பொருந்திய ஒரு பொருளைக் குறிப்பனவல்ல. அங்ஙனமாயின் பேராசிரியர்கள் நூற்களில் ஒரு தலைவனையே பல்வகையாகக் கூறியிருத்தல் பொருத்தமிலதாம். பவபூதி தாமியற்றிய நாடகத்தில் பரசுராமன் ஒருவனையே இராவணன் திறத்துத் திரோதாத்தனாகவும், இராமன் முதலியோர் திறத்துத் தீரோத்ததனாகவும், முனிவர் திறத்துத் தீர சாந்தனாகவும் கூறுவது காண்க. ஒருவனை ஒரே நூலில் பல்வகைத் தலைவனாகக் கூறுவது தகாது என்பதில்லை. முக்கியத் தலைவர்களை ஒரு முறையிலேயே கூற வேண்டுமென்று நியதி உண்டாயினும் பரசுராமன் அந்நூலில் அங்கநாயகனாதலின் அவ்வாறு பல்வகையாகக் கூறியது தகாததன்றெனக் காண்க. முக்கிய நாயகன் ஒரு தன்மையனாகவே இருத்தல் முறையானமையின், உதாத்த நாயகனை இராமன் வஞ்சனையால் வாலியைக் கொல்வது உதாத்தமைக்கு முரணாமென வெண்ணிப் பவபூதி வேறு வகையா யமைத்ததும் காண்க. மேலே கூறப்போகும் தட்சிணன் முதலிய வகைகள் முக்கிய நாயகன்பாலும் கலந்து நிற்பதில் குற்றமொன்றில்லை. ஆதலின் தீரலலிதன் முதலிய சொற்கள் அவ்வவ் விலக்கணங்களில் கூறியுள்ள பண்புகளால் அறியத்தக்க ஓர் நிலையைக் குறிப்பன வென்றுணர்க.

தோ - ய் :—உவகைச் சுவை நாயகர்கள் நால்வகையாவர் என்கிறார்.

முதலவ ளிருப்ப மற்றவள் கோள்வான்-
தட்சிணன் வஞ்சகன் திருட்டன் ஆவான். 6

போ - ரை :—முற் கூறிய நால்வகை நாயகர்களில் ஒவ்வொருவனும், இம்மூவகைகளும் மேலே கூறப்போகும் ஓர் வகையும் ஆன நால்வகைகளில் ஒவ்வொன்றையும் பெறலாமாதலின் நாயகர்கள் பதினாறு வகையினர் ஆவது காண்க.

தட்சிணன்.

தட்சிணன் மூத்தா ளிடத்து மன்பன்.

எ - டு :—

பார்க்கும் பொழுதெல்லாம் பரிவுடையவராகவே இருக்கிறார். அன்பு ததும்பும் இன்ப விளையாட்டுக்கள். ஒவ்வொரு நாளும் ஒப்பற்ற புதுப்புது வணக்கம். தோழிகளும் நம்பிக்கையுடன் கூறுகின்றனர். நானும் அவர்வயின் எவ்வகை மாறுபாட்டையும் காணவில்லை.[1]

வஞ்சகன்.

அவளறி யாது பிழைப்போன் வஞ்சகன்.

போ - ரை :—தட்சிண நாயகனும் வேறு தலைவியிடம் காதல் கொண்டவனுதலின் அம்முறையில் அறியாது பிழை செய்தவனேயாயினும் முன்பனிடத்திலும் உள்ளமுறப் பழகுவதால் வஞ்சகனின் வேறுபட்டவனே எனக் காண்க.

எ - டு :—சடனே ! மற்றொருவளுடைய மேகலை மணிகளின் ஒலி கேட்டு நீ உடனே தழுவிய புயந்தளர்கின்றாய். இதை யாரிடம் கூறுவேன். தேன் போன்ற உன் மொழிகளில் மயங்கிய வென் தோழி என்னைப் பொருட்படுத்துவதில்லை.

திருட்டன்.

கலவிச் சின்னம் காண விருக்கும்
தலைவன் திருட்ட னுவா னென்ப.

எ - டு :—அமரு சதகம்.

மான் விழியாள் ஒருவள் காலையில் தன் கணவன் அணியைக் கண்டாள். நெற்றியில் செம்பஞ்சுக் குழம்பின் குறி. கழுத்தில் தோள் வளையின் பதிவு. முகத்தில் கண் மைக் கருமை. உதடுகளில் வெற்றிலைச் சிவப்பு. இவை கண்டு சினந்தாள். கையிலிருந்த முளரி மலரை மோந்த வண்ணம் நெடுமூச்செறிந்தாள்.

அனுகூலன்.

ஒருநா யகியான் அனுகூ லனெனல். 7

எ - டு —உத்தர ராம சரிதம். மூ - அ.

---

1. இதற்கு இன்னுமோர் உதாரணம் மூலத்தில் கொடுக்கப்பெற்றிருக்கிறது. அவசியமின்மையின் இங்கு விடப்பெற்றது.

இன்பம் துன்பம் எந்நிலைகளிலும் ஒற்றுமை. உள்ளத்தின் அயர்வு நீங்கிய ஆறுதல். மூப்பினும் முடிவெய்தாச் சுவை. காலம் செல்லச் செல்ல மறைவு நீங்கி உறுதி பெற்று விளங்கும் இத் தாம்பத்திய சுக (இல்லற வின்ப)மொன்றே உலகில் வேண்டப் பெறுகின்றது.

இரத்நாவளி முதலிய நாடிகைகளில் கூறப்பெறும் வச்சவரசன் (வத்ஸராஜன்) முதலியோர் வேறு தலைவியின்பால் காதலுறும் வரை அநுகூலராகவும் பிறகு தட்சிணராகவும் இருந்துள்ளனர். அறியாது பிழைத்தமையாலும் கண்ணுறு காதற் குறியாலும் அவர் முறையே வஞ்சகராகவும் திருட்டராகவும் ஏன் ஆவதில்லை எனின் கூறுதும். இறுதிவரை அவர் முதல் மனைவியிடத்து உள்ளன்பு மாறாதிருந்தனர். இருவரிடத்தும் உள்ளன்பு பூண்டிருத்தல் இயலாதென்பதில்லை. பல தலைவர்கள் பல நாயகிகளிடத்துப் பரிவுடன் இருந்ததாகப் பல புலவர் பல நூல்களில் புகன்றுள்ளனர். ஆதலின் வச்சவரசன் முதலியோர் வஞ்சகராகவோ திருட்டராகவோ ஆவதில்லை.[1]

கூறிய பதினறுவரும் முதல் இடைகடையென வேறு வகையால் மொத்தம் நாற்பதினெண்மர் ஆவர்.

தோ - ய் :—துணைவர்களைக் கூறுகின்றார்.

பீடமருத்தன்.

நண்ணிய வறிவும் நாதனை யென்றும்
பின்பற் றுதலும் பணிவும் அவன்தன்
பண்பில் சிறிது குறைவும் பெற்ற
முன்ன ருரைத்த பதாகைத் தலைவன்
நண்பார் பீட மருத்த னுவான். 8

போ - ரை :—பதாகை யென்னும் உப கதையின் இலக்கணம் முதல் ஒளியில் கூறப்பெற்றுளது. அக்கதையின் தலைவன் பிரதான நாயகனின் துணைவன் ஆவான். மாலதீ மாதவத்தில் மகரந்தன் இராமாயணத்தில் சுக்கிரீவன் முதலியோர் இத்தகையர்.

---

1. அவசியமின்மையின் இங்கு இரண்டு உதாரணச் செய்யுள்கள் விடப் பெற்றன.

விடன்.

கலையோன் றறியும் துணைவிட னவான்.

போ - ரை :—தலைவர்களின் இன்ப நுகர்ச்சிக் கின்றியமையாத ஆடல் பாடல் முதலிய அருங்கலைகளில் ஒன்றில் தேர்ச்சியுள்ளவன் விடன்.

விதூடகன்.

மிகுநகை யாளன் விதூடக னென்ப.

போ - ரை :—'நகையாளன்' என்பதினாலேயே அணி ஆடை முதலியவை அதற்குத் தக்க முறையில் அமைந்திருக்க வேண்டுமென்று பெறப்படும்.

எதிர்த் தலைவன்,

நனிமிகு நசையும் வல்லிறு மாப்பும்
முனிதீ வினையும் விசனம் பலவும்
இணைந்த பகைவன் எதிர்த்தலை யென்ப.
இனையன் தீரோத் ததனு யிருப்பன்! 9

போ - ரை :—இராமனுக்கு இராவணனும் தருமபுத்திரருக்குத் துரியோதனனும் எதிர்த் தலைவர் ஆவர்.

தலைவன் இயற் பண்புகள்.

அழகு விலாசம் இனிமை மாண்பு
இழவா வுறுதி ஒளிமேன் மைகோடை
இவைகள் தலைவர் இயற்பண் புகளாம். 10

அழகு.

எளிஞ ரிரக்கம் மிக்கோ னுறழ்வு
விளங்கும் வீரம் வல்லமை அழகாம்.

எளிஞர்பால் இரக்கம்.

எ - டு :—வீர சரிதம்.

பனையினுமுயர்ந்த தாடகையைப் பார்த்து மனஞ்சலியாத இராமன் அவளை அழிக்க ஆணையிடப் பெற்றிருப்பினும் பெண் என்று தயங்கினன்.

மிக்கோர்பால் உறழ்வு.

எ - டு :—

'எதிரிலுள்ள இத்தலத்தைப்பார். இங்குதான் அருச்சுனன் அரனும் ஆட்ல்வேடனைத் தலையில் வில்லாலடித்தான்.' என்ற போழ்து, யாவன் அருச்சுனனின் அற்புதக் கதையைக் கேட்டு மெதுவாகத் தன் தோள்களை மடித்தானே............

வீரம்.

எ - டு :—தன் நரம்புகளால் தன் கால்கள் கட்டப்பெற்றிருப் பினும், வீரத் திருவிற்குறைவிடமாய இவ்வீரன், மூர்ச்சை தெளிந்த வுடன் தன் அவயவங்களையும் ஆயுதங்களையும் சரிப்படுத்திக் கொண் டான். சிலிர்த்த வுரோமங்களே கவசமாயின. ஊக்கமிழந்த தன் படை வீரர்களை ஊக்கினான். பகை வீரர்களை மிரட்டினான். இவ் வண்ணம் பெரும் போரென்னும் தூணில் வெற்றிக் கொடிபோல் விளங்குகிறான்.

வல்லமை.

வல்லமை—விரைந்து வினையாற்றும் வன்மை.

எ - டு : -முன் கூறிய 'வன்மை' என்னுமிடத்துக் காண்க.[1]

விலாசம்.

முறுவல் மொழியும் துணிவுற நடையும்
மறுவில் நோக்கும் விலாச மென்பர். 11

எ - டு —உத்தர ராம சரிதம். ஆ - அ.

மூவுலகையும் பொருட்படுத்தா நோக்கு. நிலமகளை நெறியச் செய்யும் மாண்நடை இளமையிலும் மலைபோலுள்ள மாட்சிமை என்றவிப் பண்புகள் வாய்ந்த இச்சிறுவன், செருக்கும் வீரமும் உருக்கொண்டு வந்தவன்போல் காண்கின்றான்.

இனிமை.

பெருங்கலக் குறினும் சிறுமா றுறுதல்
இருதய மாதி இனிமை யென்பர்.

எ - டு :—மகா நாடகம். மூ - அ.

---

1. 54 - ம் பக்கம் காண்க.

காதலால் மலர்ந்து மயிர்க்கூச்செறிந்த கன்னங்களுடன் விளங்கும் தன் காதலியின் முளரி முகத்தைக் கடைக்கணித்துக் கொண்டே இரகுகுலவீரன் தன் சடைகளை இறுகப் பிணிக்கிறான். அரக்கர் கூட்டத்தின் ஆரவாரத்தைக் கேட்டுப் பரபரப் பெய்த வில்லை.

மாண்பு.

மாறுதல் சிறிதும் காணுத லின்றேல்
மாண்பென வதனைக் கூறுப பெரியோர். 12

போ - ரை :—சிறு மாறுபாடுறுதலின் மாறுபாடுறுமை வேறு னமையின் இனிமையினும் மாண்பு வேறாயிற்று.

எ - டு :—மகா நாடகம். மூ - அ.

அபிடேகத்திற் கழைக்கப்பெற்ற பொழுதும் அடவிக்கனுப்பப் பெற்ற பொழுதும் அவனிடத்துச் சிறியதோர் மாறுபாடும் காணப் பெறவில்லை.

உறுதி.

ஊறுகள் வரினும் ஒன்றிய துணிபு
மாறுத லின்றி இருத்தல் உறுதி.

எ - டு :—வீர சரிதம். மூ - அ.

[1] தலைவன் பொது விலக்கணத்தில் காண்க.

ஒளி.

உயிரிழ வுறுவ தாயினும் பிறர்சொல்
வசைமொழி பொறுத்த லின்மை யொளியாம். 13

எ - டு :—

புதிய பூசுணைப் பிஞ்சுகளுக்கு இவர் என்ன உறவாக வேண் டும். விரலால் காட்டினல் பொருது மாய்கின்றனரே.

மென்மை.

காதற் கனிசிறு மெல்லியல் சேட்டை
ஓதிய மென்மை யென்றனர் உரவோர்.

போ - ரை :—இயற்கை புவகையும் உவகைச் சேட்டையும் மென்மை அல்லது இலலிதமாம்.

---

1. 55 - ம் பக்கம் ‘திண்மை’.

எ - டு :—

தோழி! மென்மையும் கவர்ச்சியும் வாய்ந்துள்ள அழகிய இயற்கையான தன் மன்மத சேட்டையினால் இவள் என்னைப் போல் என் ஆசிரியனையும் கடுமையாக வாட்டமாட்டாளா?

கொடை.

இனிய சொல்லோ டுயிர்வரை யீதல்
வினயம் சான்றோர் பால்கோடை யாகும். 14

எ - டு :—*நாகாநந்தம். ஐ - அ.*

தீரோதாத்தன் என்னும் நாயக வகையின் இலக்கணத்தில் காண்க.[1]

வினயம்.

எ - டு :—*குமார சம்பவம். ஆறும் சருக்கம்.*

நான், என் மனைவி, குடிக்குயிராய என் பெண் எல்லோரும் இதோ இருக்கின்றோம். கூறுங்கள். யாரால் என்ன ஆகவேண்டும். வெளிப் பொருள்களில் கவலையே யில்லை.

தலைவி.

தலைவற் கோதும் பண்பு படைத்துத்
தன்னவள் பிறர்பொது வென்பகுப் புற்று
விளங்கும் தலைவி யென்றார் புலவர்.

போ - ரை :—*தலைவியென்பாள் தலைவனின் பொதுக்குணங் களை ஏற்றபெற்றி பெற்றிருக்க வேண்டும். தன்னவள், மாற்றான் மனை, பொதுமகள் என அவள் மூவகைப்படுவாள்.*

தன்னவள்.

தன்னவள் என்பாள் ஒழுக்கம் நேர்மை
முன்னைய பெண்மைப் பண்புள ளாகி
முக்கிதை மத்திமை பிரகல் பையென
மூன்று பகுப்புள ளாகி யிலங்கும். 15

போ - ரை :—*ஒழுக்கம்—நன்னடத்தை. கற்பு, நேர்மை, நாணம், கணவற்குத் தொண்டாற்றுமாற்றல் முதலிய பெற்றவள் தன்னவள் ஆவள்.*

---

1. 57 - ம் பக்கம்.

ஒழுக்கம்.

எ - டு :—

பாருங்கள். இந்நற்குல நங்கையின் இளமை வனப்பு முதலியவைகள், காதலன் வேறுநாடுறையும் பொழுது தாமும் அவ்வாறு செல்வனபோலும், திரும்பிவரும் பொழுது தாமும் அவ்வாறு வருவனபோலும் தோன்றுகின்றன.

நேர்மை.

எ - டு :—

காரணம் ஆராய்ந்தறியவியலாக் கபடமற்ற புன்முறுவல். ஒய்யாரமற்ற அழகிய இயற்கைநடை. எளியபொருளுள்ள இயற்கைப்பேச்சு. இவை (போன்றவை) நல்வினை செய்தோர் இல்லங்களில் நன்மனைவியரிடத்துறைகின்றன.

நாணம்.

எ - டு :—

நல்வினை செய்தோர்களுடைய இல்லங்களில் நன்மனைவியர் நாணமெனும் நிறைந்தபூணும் பிற (ஆடவ)ரைக்களிப்பிக்கு மவாவின்மையும் வணக்கமின்மையில் வெறுப்பும் பொதிந்து விளங்குகின்றனர்.

முக்கிதை.

இன்பப் புணர்ச்சி யிசையா மையோடு
மேன்மைச் சினமும் புதிய பிராயமும்
தோன்மையி லன்பும் முக்கிதை பெறுவாள்.

போ - ரை :—புதியபிராயமும் புதியகாதலும் கலவியில் இசைவின்மையும் எளிதில் முனிவு நீங்கிக்கனியும் தன்மையும் பொருந்தியவள் முக்கிதை (முக்தை)யாவாள்.

புதிய பிராயம்.

எ - டு :—தனிகன்.

வளரும் மார்பகம் உரிய உயர்வை இன்னும் எய்தவில்லை. திரிவளிக (வயிற்றுமடிப்புக்க) ளில் இரேகைகள் காண்கின்றனவேயன்றி மேடுபள்ளம் நன்கு காணவில்லை. இடையில் சிறிது கருத்

திலங்கும் உரோமரேகை நீண்டு உயர்ந்து நேர்மையுடன் படர்ந்திருக்கின்றது. சிறு பிராயத்தின் முடிவும் யௌவனத்தின் தொடக்கமும் கலந்து இவள் வயது விளங்குகின்றது.

புதிய காதல்.

எ - டு :—

சுறுசுறுப்பற்ற பார்வை. குழவிப்பருவ விளையாடல்களில் பற்றுதலின்மை. காதல் மொழிகளில் செவிகளைச் செலுத்தல். ஆடவர்கள்பால் முன்போல் நெருங்காமை. இவை யெல்லாம் இவள்பால் வளர்ந்துவரும் புதியகாதலை யறிவிக்கின்றன.

கலவியில் இசைவின்மை.

எ - டு :—*குமார சம்பவம்.*

பேச்சுக்குப் பதிலில்லை. மேலாடையைப்பற்றி இழுப்பினும் வெளியிற் செல்ல விரும்பினாள். படுக்கையில் பராமுகமாய்ப் படுத்தாள். ஆயினும் அவள், காதலன்காதல் தன்பால் பெருகுவதற்கே காரணமானாள்.

பிறிதும் இவ்வாறு காண்க.[1]

மத்தியை.

[2] வளமுறு வயதும் காதலும் பெற்றாள்
புலனுணர் வழியப் புணர வல்லாள்
வளமை தங்கிய மத்தியை யென்பார். 16

தோ - ய் :—*மதிப்பையும் செய்கையும் பற்றி இவள் மூவகையளாவாள்.*

பகிடியார் வக்கிர மொழியால் தீரை
தவறிழை கணவன் துன்புறக் கடியும்.
நீர்பொழி கண்ணொடு தீரா தீரை
நேரல் பகிடி மொழியால் கடியும்.
கடுஞ்சொல் கூறி யழுது சுணங்கிக்
கடியும் அதீரை யென்றார் கவிஞர். 17

1-2. *உவகைச்சுவை விடயங்களானமையின் தமிழானமையின் சில உதாரணங்கள் விடப்பெற்றன.*

தீரையென்பாள் தன்பால் தவறிழைத்த கணவனை வக்கிரப் பரிகாச மொழிகளால் கடிந்து கொள்வாள்.

எ - டு :—சிசுபாலவதம் ஏழாம் சருக்கம்.

இவ் [1]விடபத்தைப்பெற நான் சுருதியற்றவள். மறைவில் உன்னிடம் கலவி யின்பம்பெறும் அவளிடம் சென்று கொடு. ஒத்த பண்புள்ள உங்கள் சேர்க்கை இதனால் நீடிக்கும்.

தீராதீரையென்பாள் அழுதுகொண்டே வக்கிரப் பரிகாச மொழிகளால் கடிவாள்.

எ - டு :—அமரு சதகம்.

இள நங்காய்! நாத! மானமுள்ளவளே சினத்தைவிடுதி. சினந்து யான் செய்ததென்? என்னை வருத்துகிறாய். நீவிர் என்பால் ஒன்றும் செய்ததில்லை, யானே தவறெல்லாம் இழைப்பவள். ஆயின் ஏன் விம்மி அழுகிறாய்? எவரெதிரில்? என் எதிரில் தான். உங்களிடத்தில் அழ யான் யார்? காதலி. அத்தகையள் அல்லளென்று தான் அழுகிறேன்.

அதீரை யென்பாள் அழுது கடுஞ்சொல் கூறிக் கடிவாள்.

எ - டு :—

தோழி! பற்றுதல் வைக்காதே. இவரை விட்டுவிடு. செல்லட்டும். உதட்டில் பற்கள் பதிந்த வடுவோடிவரைக் கண்கொண்டு காணக்கூடவில்லை

[2] இவ்வாறு பிறவும்காண்க.

பிரகல்பை.

யவ்வன நிறைவும் காதல் மதமும்
செவ்விதின் பெற்றுச் சுரத லீலை
துடங்கிய போதே தன்னுணர் விழந்தாள்
உடலமு முள்ளு மோக்க உருகிக்
கணவன் மேனி கலந்தாள் போலப்
[3]பிரகல்பை யெனும் பெயராள் இலங்கும். 18

1. விடபம்—இளந்தளிர். முறைதவறிப் பிறருடன் களிப்பவன்.

2 - 3. சில சிற்றின்பச்சுவை யுதாரணங்கள் தமிழானமையின் விடப்பெற்றன.

தோ - ய் :—சினமும் செய்கையும் பற்றி இவளும் முப்பாற் படுவாள்.

முகக்குறி மறைத்துப் பணிவிடை மிக்காள்
கலவிப்பற் றிகல்இல் நோதுமலா யுள்ளாள்
எனுமிரு வகையார் தீரையும், அதுபோல்
சினந்து மிரட்டி யடிக்கு மதீரையும்,
வக்கிர மொழியும் மல்குநீர்க் கண்ணும்
கோண்டு கடிந்திடும் தீரா தீரையும்,
எனப்பிர கல்பை முப்பாற் படுவாள். 19

அம்மூவரில் தீரையென்பாள் இருபாற்படுவாள். முகக்குறி மறைத்துப் பணிவிடைமிக்காள் முதலவளாவாள்.

எ - டு :—அமரு சதகம்.

ஓரிருப்பில் இருந்து களிக்க வந்தவனை எதிர்சென்றழைத்து இடர் உறுவித்தாள். வலியவணையவிரும்பியவனைத் தாம்பூலம் கொண்டுவரச் சென்றதனால் இடர் எய்வித்தாள். பேசிக் களிக்கலாமென்ற விருப்பத்தையும் பணிப் பெண்களைப் பணிகளில் ஏவிக் காலத்தைக் கழித்துக் கெடுத்தாள். இவ்வாறு தந்திரமாய்ப் பணிவிடை செய்து கொண்டே காதலனிடத்துத் தனுக்குள்ள சீற்றத்தை நிறைவேற்றிக் கொண்டாள்.

கலவியில் விருப்பு வெறுப்பற்ற நோதுமல் தன்மையள் பின்னவள்.

எ - டு :—

ஆடையைக் களையும் பொழுது முன்போல் முரணுவதில்லை. கூந்தலைப் பற்றும் பொழுது புருவங்களை நெறித்துச் சீறுவதில்லை. வலிய வணையும் பொழுது தளர்ந்த உறுப்புக்களுடன் நிற்கிறாள். சினத்தை வெளியிட இப்புது முறையை எங்கிருந்திவள் கற்றாள்?

அதீரை யென்பாள் கணவனைச் சினந்து மிரட்டியடிக்கும் தன்மையளாவாள்.

எ - டு :—அமரு சதகம்.

மாலை. தோழிகள் முன்னிலை. கணவனைச் சினந்து தன் மெல்லிய கரங்களால் இறுகக்கட்டி இன்பவறையை அடைவித்து

அழுது கொண்டே 'இனி இவ்வாறு..................' என்று கூறிக் கடிந்தடித்தாள். காதலனும் மறுத்துக்கொண்டே இதுவும் ஓர் பாக்கியமென்று கூறி நகைத்தான்.

தீராதீரை யென்பாள் கண்கள் நீர்மல்க வக்கிரமொழி கொண்டு கடிந்திடுவாள்.

எ - டு :—அமரு சதகம்.

'புருவநெறிப்பே சினம். மௌனமே தண்டனை. புன்முறுவல் புரிவதே வசித்தல். பார்வையே அருள்.' என்றிருந்த நம் அன்பிற்கு எத்தகைய அழிவு நேர்ந்துவிட்டது. நீ காலடியில் விழுந்து புரளுகிறாய். கொடிய(வளாய) என் கோபம் தணியவில்லை.

முக்கிதை தவிர்ந்த விருவரும் பின்னும்
முதியாள் இளையாள் எனும்இரு பகுப்பால்
பதினிரு பிரிவு பெறுவார் என்பர்.

பொ - ரை :—மத்தியையும் பிரகல்பையும், மூத்தவள் இளையவள் என்ற பாகுபாட்டால் பதினிருவர் ஆவர். முக்கிதை ஒருவகுப்பினளே.

எ - டு : —அமரு சதகம்.

காதலிகள் இருவரும் ஓர் ஆசனத்தமர்ந்திருந்தனர். பின்புறமாகச் சென்ற காதலன் ஒருத்தியின் கண்களை மறைத்து மற்றொருத்தியை முத்தமிட்டான்.

பொ - ரை :—கண்கள் மறைக்கப்பெற்றவள் மூத்தவள் என்றும் முத்தமிடப் பெற்றவள் இளையவள் என்றும் கொள்ளவும். காதலன் அன்பின் காரணமாகவே இருவரிடத்தும் இருவகையில் நடந்ததாகக்கொள்ளல் வேண்டும். முதியவள் பால் அவ்வாறு நடந்து கொண்டதற்கு தாட்சிண்ணியமே காரணமென்பதில்லை. தட்சிண நாயகனுக்கு இலக்கணம் கூறுமிடத்து இஃதறிந்து ஐயம் தெளிக. தீரமத்தியை, அதீரமத்தியை,—தீராதீரமத்தியை தீரப்ரகல்பை, அதீரப்ரகல்பை, தீராதீரப்ரகல்பை என்ற அறுவரும் முதியவள் இளையவள் என்ற பகுப்பால் பன்னிருவராவர் என்று கூறியுள்ள இவர்களுக்குப் பிறபோராசிரியர்களின் நூல்களில் உதாரணம் காண்க.

பிறர்.

மற்றவள் என்பாள் மற்றவன் பன்னி
கன்னியென் றிருபால். மற்றவன் பன்னி
முக்கியச் சுவையில் முறையோ டமையாள்.
பின்னவள் விழைவை விரும்பிய வாறு
முக்கிய வங்கச் சுவையுள் முடித்தல். 20

மற்றவன் பன்னி.

எ - டு:—

பக்கத்து வீட்டவளே! ஒருக்கணம் என் வீட்டையும் பார்த்துக்கொள். இக்குழந்தையின் தந்தை சுவையற்ற கிணற்றுநீரைப் பருகமாட்டார். தனியளாக வேனும் போய்த்தீர வேண்டும்; தமால மரங்கள் சூழ்ந்ததாயினும் நீரருவி இதனினும் நன்றே. அடர்ந்த மரங்கள் உடலைக்கீறும். கிழவன் (என்கணவன்) மனம் எரியும். (என் செய்வது?)

மற்றவன்பன்னி முக்கியச் சுவையுள் இடம் பெறுவது முறையன்றுதலின் விரிவு விலக்கப்பெற்றுளது. கன்னி—மணமாகாதவள். தாய் தந்தை முதலியவர்களுக்கடங்கியிருப்பாள். அத்தகையளை உரிய முறையில் தாய் தந்தை முதலியவரிடமிருந்து அடைவதரிதாயின், அடைவதெளிதாயினும் பிறர்தகைவு அல்லது தன் மனைவியின்பால் அச்சம் உண்டாயின், ஒருவரும் அறியாது காதலித்தல் இயற்கையே. வச்சவரசன் இரத்தினவளியையும் மாதவன் மாலதியையும் காதலித்தது இவ்வகையிலேயே. அக்காதலை ஏற்றபெற்றி முக்கியச் சுவையுள் அல்லது அங்கச்சுவையுள் அமைத்தல் தகும். முறையே முற்கூறிய இரண்டிலும் இதுகாண்க.

பொது மகள்.

போதுவெனும் பாலாள் பொதுமக ளாவாள்.
கலைவல் மாயக் கோடியளு மாவாள். 21

போ - ரை:—*அவளைப்பற்றிய விரிவு வேறு நூல்களில் காணத்தகும். ஆயினும் சிறிது கூறுதும்.*

பிறர்வய மில்லார் பிறர்மறை காமர்
அறிவில ரேளிதில் பொருளீட் டுபவர்

எளியார் இறுமாப் பர்முத லோரை
அன்புடை யாள்போல் அன்புறச் செய்வாள்
பொருளுண் டாகில், பொருளின் றகில்
அருளில் தாய்கொண் டகற்றி விடுவாள். 22

போ - ரை :— பிறர் அறியாது காதலிப்பவர்—பார்ப்பனர் வணிகர் முதலோர்—இங்கு பொருள் எனும்சொல் பொருள் இன்பம் எனும் இரண்டு பொருள் கொண்டது. அகற்றிவிடுவாள்—பொருளில்லாதவரையில் என்றுகாண்க. இவ்வாறிருத்தல் பொது மகள் இயற்கை. மேலும்,

பிரகச னமலாப் பிறிதுள நூலில்
பெருகிய காதல் பொதுமகள் ஆவாள்.
தெய்வத் தலைவன் எய்திய நூலுள்
எவ்வகை யேனும் பொதுமகள் ஆகாள்.

போ - ரை :—பிரகசனம் தவிர்ந்த பிரகரணம் முதலிய காட்சி நூல்களுள் பொதுமகளைத் தலைவனிடத்துப் பெருகிய காதலுள்ளவளாக அமைத்தல். சாருதத்தன் வசந்தசேனை இவர்களின் அமைப்பு இத்தகைத்தது. பிரகசனத்திலெனின் நகைச்சுவை வளமைக்காகக் காதலற்ற பொதுமகளை அமைத்தலும் தகும். தைவத்தலைவன் அமைந்துள நாடக நூல்களில் தலைவன் விடயத்துப் பொதுமகள் அமைப்பு முறையன்று.

தோ - ய் :—தலைவிகளின் பிறவகைகளைக் கூறுகிறார்.

தன்வயம் கணவன் பெற்றள் முதலாம்
எண்பாற் பிரிவுகள் இவர்கட் குள்ள. 23

போ - ரை :—தன்னவள், பிறர், பொதுவென முற்கூறிய மூவகைத் தலைவிகளிலும் சுவாதீனபதிகை, வாசகசச்சை, விரகோத்(ற்)கண்டிதை, கண்டிதை, கலகாந்தரிதை, விப்பிரலத்தை, புரோடிதப்பிரியை, அபிசாரிகை என எண்பிரிவுகள் உள. ‘தலைவி’ முதலிய சொற்கள், உரிய பண்புகளால் உணர்த்தப்பெறும் தன்மையையே உணர்த்தும், ஆயினும் வேறாக இங்கு ஓதப்பெற்ற எண்வகைத் தன்மைகள், ‘முன்னவை தன்மையை உடைய பொருளை உணர்த்துமெனக் காட்டும்.[1]’ இப்பிரிவுகள் எட்டும் ஒன்றுக்குள்

1. தன்மையில் தன்மையில்லையாதலின் இவ்வாறு ஆம்.

ளொன்றடங்குவனவல்லவென்பதும் எண்பிரிவுகளுக்கு மேலில்லை யென்பதும் மேல் கூறப்பெறும் இலக்கணங்களால் இனிது அறியலாம்.

சுவாதீனபதிகை.

தன்வயத் தருகுறை தலைவனைப் பெற்றுள்
உள்மகிழ்ந் திடுவாள் சுவாதீன பதிகை.

எ - டு :—அமரு சதகம்.

தோழி! காதலன் கையால் தீட்டிய பூங்கொத்து கன்னத்தில் இலங்குகின்றதென இறுமாப்புறுதே. நடுக்கமென்ற இடையூறின்றேல் மற்றவளும் (நானும்) இதற்குரியவளே.

வாசக சச்சை.

காதலன் வருவ தறிந்தணி யாடை
ஆதரத் தணிவாள் வாசக சச்சை. 24

பொ - ரை :—தன்னையும் தன்னில்லத்தையும் உவகையுடன் அலங்கரிப்பாள் வாசக சச்சையாவாள்.

எ - டு :—சிசுபாலவதம் ஒன்பதாம் சருக்கம்.

மற்றொருவள் தன் முளரிவாய்மூச்சுக்காற்றைத் தன் தளிர்க்கையால் தடுத்து மெதுவாக மூக்கை நோக்கி எழுப்பி முகவாசத்தைப் பரீட்சித்தறிந்து மகிழ்ந்தாள்.

விரகோத்கண்டிதை.

காரண மின்றிக் காதலன் வரவு
காலந் தாழக் கலங்கு முளத்தாள்
கூறிய விரகோத் கண்டிதை யென்பார்.

எ - டு :—தோழி! யாழ் முதலிய இசைக்கருவிகளால் மற்றொருத்தி அவரை வயப்படுத்திவிட்டாள். அவர்கள் இரவை இனிது கழித்திருப்பர். சிந்துவார மரங்களினின்றும் மலர்கள் உதிர்கின்றன. திங்கள் உச்சிவானை யடைந்துவிட்டது. அவர் தாமதிக்க வேறொரு காரணமில்லை.

கண்டிதை.

மாற்றுள் புணர்ந்த மாறுயா டுணர்ந்(து)
ஆற்று தவளே கண்டிதை யாவாள். 25

எ - டு :—சிசுபாலவதம் பதினொன்றும் சருக்கம்.

அங்கங்களில் பதிந்துள்ள புதிய நகக்குறிகளை ஆடையாலும் பல்வடு பதிந்தவுதட்டைக் கையினுலும் மறைக்கிறாய். ஒவ்வோர் திசையிலும் பரவி நீ பிறமனை கலந்திருந்ததை அறிவிக்கும் இப்புது மணத்தை மறைப்ப தெங்ஙனம்?

கலகாந்தரிதை.

அன்பனை வெறுத்து விடுத்த பின்னர்
அலையு முளத்தாள் கலகாந் தரிதை.

எ - டு :—*அமரு சதகம்.*

மூச்சுக்காற்று முகத்தை எரிக்கின்றது. உள்ளம் உலைகின்றது. துயில் இல்லை. காதலன் முகம் காணவில்லை. இரவு பகல் அழுகை. உறுப்புக்கள் தண்மை இழந்துலர்கின்றன. காலில் விழுந்த காதலன் புறக்கணிக்கப்பட்டான். தோழிகளே! எவ்வுயர்வைக் கருதி இறுமாப்புக் கொண்டோம்.

விப்பிரலத்தை.

கூறிய தருணம் கூட்டம் பெறாது
மாறிய மனத்தாள் விப்பிர லத்தை. 26

எ - டு :—*சுபாடி(ஷி)தாவளி.*

தாதி! எழு. செல்வோம். காலம் சென்றது. காதலன்வரவில்லை. இனியும் உயிர்த்திருப்பவள் அவரை உயிர்த்துணைவராயடையட்டும்.

புரோடிதப் பிரியை.

தொழில்முறை பற்றித் தொலைநா டேகின்
புரோடிதப் பிரியை யென்பர் புலவர்.

எ - டு :—*அமரு சதகம்.*

விழி செல்லும்வரை வழியை நோக்கினள். மனித நடமாட்டம் ஓய்ந்தது. பொழுது சென்றது. இருளும் பரவியது. வருந்

தினுள். நம்பிக்கையிழந்தாள். வீட்டை நோக்கி ஓர் அடி வைத்தாள். ஒருக்கால் வந்து கொண்டிருப்பாரோ? என்று மறித்தும் திரும்பிப்பார்த்தாள்.

அபிசாரிகை.

அன்பு முதிர்ந்தாள் அன்பனை யணுகும்
அன்பனைத் தன்பால் அணுகச் செய்யும்
அபிசா ரிகையென் றறைவ ரறிஞர். 27

எ - டு :—அமரு சதகம்.

உரத்தில் ஒலிக்கும் ஆரம், மத்தியில் மிழற்றும் மேகலை, அடிகளில் அலற்றும் சிலம்பு, அறிவிலி! இவ்வாறு பறை அடித்துக் கொண்டு செல்லும் நீ பயந்து பக்கம் பார்க்கிறாயே என்ன?

இவ்வெண்மர் செயல்

கவலை உயிர்ப்புக் கண்ணீர் வருத்தம்
உவளல் நிறனழி விழையணி யாமை
முதலிய பின்புள வறுவர் பெறுவர்.
முதலா மிருவர் ஒளிமகிழ் வாட்டம்
முதலிய பெறுவா ரென்பர் பெரியோர். 28

போ - ரை :—'மற்றவள் என்பாள் மற்றவன்பன்னி கன்னி யென்றிருபால்' என்று முன்பு கூறினோம். காதலனுடன் கலவி சங்கேதம் செய்து கொள்வதற்கு முன்னர் இவ்விருவரும் விரகோத் கண்டிதைகளாகவும், பின்னர் காதல் முதிர்ந்து காதலனை அணுகுவராயின் அபிசாரிகைகளாகவும், கூட்டம் பெறுவிடின் விப்பிரலத்தைகளாகவும் ஆவர். ஆக முற்கூறிய எண்ணிலைகளில் மூன்று நிலைகளையே இவ்விருவரும் பெறுவர் என்றறிக. மாலவிகாக்கினிமித்திரத்தில் 'தங்கள் தீரத்தைத் தாங்கள் அரசிமுன் நிற்கும்பொழுது பார்த்தேனே!' என்று மாலவிகை கூறும்பொழுது அரசன் அவளை நோக்கித், 'தலைவர்கள் தாட்சிண்ணியப்படுவது தலைமுறையாய் வந்த விரதம். நான் உயிருடனிருப்பதே உனக்காகவென்று நினை' என்று கூறுகிறான். இங்கு கன்னியான மாலவிகை கண்டிதை யென்ற நிலை பெறுகிறாளாதலின் மூன்று நிலைகளே உளவென்பது தகாதெனல் முறையன்று. நம்பிக்கையை ஊக்குவான் அரசன் அவ்வாறு கூறினனேயன்றிக் கண்டிதையானாள் என்ற கருத்தாலன்று.

அரசன் அப்பொழுது கணவனல்லனாதலின் அவள் கண்டிதையாக உரியவளல்ல. ஆதலின் அரசன் வேறுநாடு சென்றாலும் மாலவிகை விரகோத்கண்டிதை என்ற நிலையையெய்தக் கூடுமே தவிரப் புரோடிதப்பிரியை ஆதல் கூடாது என்றுமறிக. கணவன் வரப்போவதை யறிந்து தன்னை அலங்கரித்துக் கொள்ளுமவள் வாசகசச்சை. அவள் அருகில் கணவனில்லை. ஆதலின் அவள், காதலனை அருகில் உடைய சுவாதீனபதிகை என்ற வகுப்பில் அடங்காள். வாசகசச்சை சுவாதீனபதிகை என்ற வகுப்பில் அடங்குவளாயின் புரோடிதப்பிரியை யென்பவளும் அவ்வகுப்பில் அடங்குவாள். வேறாகச் சொல்ல வேண்டாம். அண்மை சேய்மைகளைக் குறித்துணர்த்த வியலாது.

கண்டிதை யென்பாள் கணவனிழைதவற்றை அறிபவளாதலின், காதலன் தவற்றையறியாச் சுவாதீனபதிகையின் வகுப்பில் அடங்காள். (கணவன் பிறநாடு சென்றவளாய புரோடிதப்பிரியையும் அருகிருந்து இன்பம் நுகரத் தொடங்கவல்ல சுவாதீனபதிகை வகுப்பில் அடங்காள்.) தான் செல்வதோ தூதியை அனுப்புவதோ செய்யும் அபிசாரிகை யென்பாள் அத்தகையளல்லாத சுவாதீனபதிகை வகுப்பில் சேராள். இவ்வாறு விரகோத்கண்டிதையும் வேறானவளே. இவ்வாறே வாசகசச்சை விப்பிரலத்தை முதலிய பிரிவுகளும் ஒன்றனுள் ஒன்றடங்கா வென்றறிக. காதலன் தவற்றை யறிந்தவளாயினும் அப்பொழுது காதலன் தணிந்து நயந்ததை ஏற்கவில்லையாயினும் பச்சாத்தாபம் (பின் மனம் வருந்தல்) அடைந்துளளானமையின் கலகாந்தரிதை கண்டிதையைக் காட்டிலும் வேறென்றறிக. ஆதலின் பிரிவுகள் எட்டேயாம்.[1]

தோ - ய் :—தலைவிகளின் துணைவிகளைக் கூறுகிறார்.

பணிப்பெண் தோழி காருதா திமகள்
பிரதி வேசிகை லிங்கினி சிற்பினித்
தானெனன வெண்மர் தூதிகள் ஆவர்.
நாயகன் தோழன் உறுபண் புறுவர். 29

பொ - ரை :—காரு. வண்ணாத்தி முதலியோர். தாதிமகள்—செவிலித்தாயின் மகள். பிரதி வேசிகை—அண்டையகத்தாள். லிங்

1. வடமொழியில் முதலில் கூறப்பெற்றுளது. ஆயினும் இதுவே உரிய இடம் என்று கருதி, இப்பகுதி இங்கே சேர்க்கப்பெற்றுளது.

கினி—பிச்சைக்காரி முதலியோர். சிற்பினி—சிற்பியின் மனைவி. தலைவன் துணைவர்களுக்குரிய குணங்களே தலைவியின் துணைவர் களுக்கு மென்றறிக.

'நூலறிவு இயற்கையறிவு திறமை நயமுள்ளநா காலத்தகுதி யுணர்வு பிரதிபை முதலிய பண்புகள் கோரிய பயனைக்கூட்டுபவை' யென்று மாலதீமாதவம் முதலிய நூல்களில் கூறிய குணங்களே அவை யென்றறிக.

தோழி. (தூதியாதல்)

எ - டு :—

அறியவல்லாள். அறிந்து உரியவிடமென்றே அன்புவைத் தாள்............இறப்பதே மேல். இறக்கட்டும். என் செய்வது. நான் உன்னைக் குறை கூறவில்லை.

தான். (தூதியாதல்)

எ - டு :—

[1] அழகனே! உன்னூர் தொலைவில் உள்ளது நானோ ஒருத்தி. யாரை அனுப்புவேன்.......................................

இவை போன்ற பிற உதாரணங்களும் பிறநூல்களில் காண்க.

அணிகள்.

மடந்தைப் பருவம் தன்னில் மகளிர்
இயலாய் இருப தணிகள் ஏற்பர்.

பாவம் ஆவம் ஏலை மூன்றும்
தேகம் தன்னில் தோற்று வனவாம். 30

சோபை காந்தி தேசோ டினிமை
திறமை யுதாரம் தீரத் தன்மை
எனவிவ் வேழும் முயலாத் தோற்றம். 31

இலீலை விலாச விச்சித் திகளும்
விப்பிர மத்தோடு கிலிகிஞ் சிதமும்
மோட்டா யிதமும் குட்ட மிதமும்

1. பொருள் விளங்காப் பாகதமொழி சுலோகம். அறைகுறையாய் விடப்பெற்றது.

பிப்போ கத்தோ டிலலித விகிருதம்
பத்தும் இயற்கை யெழுச்சி யென்பர்- 32

பாவம்.

மாறுதல் இல்நிலே மாறி முதலாம்
மாறுதல் மனத்துத் தோன்றல் பாவம். 33

போ - ரை :—*காரணமிருப்பினும் மாறுதலடையாச் சத்து வகுணத்துடன் கூடியதே இங்கு மனதாம். அதனுள் தோன்றும் முதல்மாறுபாடே பாவமாம். இந்நிலே விதை நீரில் ஊறிப் பருப்பது போன்றது.*

எ - டு :—*குமார சம்பவம்.*

திங்கள் தோற்றத்தில் கடல் கொந்தளிப்பதுபோல் அரன் சிறிது உறுதி தளர்ந்து கொந்தளிப்பெய்திக் கோவைக்கனி போன்ற உதடுகளே உடைய உமையின் முகத்தில் கண்களேச் செலுத்தினர்.

ஆவம்.

கலவிக் கருத்தால் கண்கள் இமைத்தல்
புருவ நெறித்தல் முதலிய ஆவம்.

போ - ரை :—*குறித்த சில உறுப்புக்களில் மாறுதலேப் பயக்க வல்ல உவகைக்கருத்து ஆவம் எனல்.*

எ - டு :—*தனிகன்.*

தோழ! அன்பால் அறிவிழந்த (இந்) நங்கையைப்பார். எதையோ பார்க்கிருள் ஏதோ பேசுகிருள்.

ஏலே.

உளத்தார் கலவி யுணர்வை மேலும்
தெளியத் தெரிக்கும் ஆவம் ஏலே. 34

எ - டு :—*தனிகன்.*

மார்பகத்தில் சிறிது மாறுபாடு தோன்றியது. உடனே ஒவ்வோருறுப்புக்களிலும் உவகைச் சேட்டைகள் ஒளிர்ந்தன. அதனல் தோழிகளும் கன்னிப்பருவம்பற்றிய ஐயம் அடைந்தனர்.

தோ - ய் :—*முயற்சியின்றித் தோன்றுவன வேழையும் விளக்குகிருர்.*

ஒளி.

உருவம் பருவம் துய்ப்பிவை யிற்ருல்
வருமுறைப் பணியே சோபை யென்ப.

எ - டு :—குமார சம்பவம்.

அந்நங்கையைக் கிழக்கு முகமாயமர்த்தி யணியணிவிக்க எதிரில் அமர்ந்தவர் இயற்கையழகால் கவரப்பெற்ற கண்ணினராகி அணிதொழில் அண்மையிலிருப்பினும் சிறிது தாமதித்தனர்.

காந்தி.

கலவி யுணர்ச்சி கலந்து விளங்கும்
சோபை காந்தி யென்றன ரறிஞர். 35

எ - டு :—

முககாந்தியால் தொலைவில் விரட்டப்பெற்றதும் மார்பகக்காந்தியால் பிளக்கப்பெற்றதும் கையொளியால் அடிக்கப்பெற்றதுமாய காரிருள், பிற உறுப்புக்களில் கருத்து இருப்பினும் கலந்து களிக்க வியலாது சினந்து கூந்தல்களில் கலந்தது போலும்.

தேசு.

[1] காந்தியின் விரிவே தேசென லாகும்.

எ - டு :—தொனி (த்வன்)யாலோகம்.

திரும்பிவிடு. வேண்டுகிறேன். உன் முக காந்தியால் இருளனைத்தும் விலகிவிடுகிறது. உனக்கு மாத்திரமல்லாமல் மற்ற அபிசாரிகைகளுக்கும் இடையூறிழைக்கின்ருய்.

இனிமை.

கடுமை யின்மை யினிமை யென்பார்.

எ - டு :— சாகுந்தலம்.

பாசிபடரினும் அரவிந்தம் அழகிதே. மாசும் மதிக்கு அழகை அதிகரிக்கின்றது. இம்மெல்லியலாள் அணிவது மரவுரியாயினும் மனத்தை மிகவும் கவருகிருள். இனிய உருவிற் கெதுதானழகன்று ?

---

1. முதல் நூலில் இனிமையை விளக்கிய பிறகு தேசு கூறப்பெற்றுளது. அது முன்பின் முரணுவதால் மொழி பெயர்ப்பில் மாற்றிக்கூறினே மென்றறிக.

திறமை.

துணுக்க மின்மை திறமை யாகும்.

போ - ரை :—உளங்கலங்கி உறுப்பு நெகிழ்தல் துணுக்கம். அஃதின்மை திறமை.

எ - டு :—தனிகன்.

நாணத்திற்கு மிகவும் வயப்பட்டவள்தான். மிகவும் இளையவள்தான். ஆயினும் அவ்வழகி அரங்குகளில் அபினயிப்பதில் ஆசிரியை ஆய்விட்டாள்.

உதாரம்.

என்றும் வணக்க முடைமை யுதாரம். 36

எ - டு :—இ - ளி. இ - அ.

புருவங்களை நெறித்தாள். முகத்தை வணக்கிவிட்டாள். வெறுப்புடன் சிறிது சிரித்தாள். கூரிய சொல் கூறவில்லை. நீர்மல்கிய நயனங்களை நன்கு மலர்த்தி நோக்கவில்லை. கோபத்தையும் காட்டினாள். வணக்கத்தையும் விடவில்லை.

தீரம்.

தற்புகழ் சாபல மென்றிவை யில்லா
உள்நிலை தீரத் தன்மை யென்பர்.

எ - டு :—மாலதீ மாதவம். இ - அ.

ஒவ்வோரிரவும் முழுமதி வானில் எரிக. காமன் கொளுத்துக. வதையினும் ஏதுசெய்வர். புகழுள்ள தந்தை. மாசற்ற குடியில் பிறந்த தாய். உயர்ந்தகுடி: இவனும் இல்லை. உயிரும் இல்லை.

தோ - ய் :—இயற்கை யெழுச்சிகளாம் பத்துவகைகளையும் விளக்குகிறார்.

இலீலை.

இன்சொல் செயல்அணி முதலிய வற்றில்
அன்பன் போலுதல் இலீலை யாகும். 37

எ - டு :—தனிகன்.

அவ்வாறே பார்த்தாள். அவ்வாறே பேசினாள். அவ்வாறே நடந்தாள் (?) அவ்வாறே உட்கார்ந்தாள். சக்களத்திகள் ஆசையுடனும் வியப்புடனும் நோக்கினர்.

விலாசம்.

சொல்செயல் அவயவ முதலிய வற்றில்
தற்பொழு துண்டாம் உயர்வு விலாசம்.

போ - ரை :—காதலனைக் காணும் பொழுதுண்டாம் இவ்வியற்கைச் சேட்டைகள் விலாசமாம்.

எ - டு :—மாலதீமாதவம். மு - அ.

இதனிடையில் (அத்)தாமரைக் கண்ணாள் செய்த பல்வகை விலாசச் செயல்கள் சொல்வன்மையைக் கடந்து நின்றன. பல்வகை உள்ளக் கருத்துக்கள் கலந்து இருந்தமையின் மிகவும் அழகாய் இருந்தன. அதனால் அவள் காமக்கலையின் ஆசிரியையாகவே விளங்கினாள்.

விச்சித்தி.

அணிசிறி தேனினும் அழகைப் பேணின்
அதனை விச்சித் தியெனல் மரபு. 38

எ - டு :—குமார சம்பவம்.

அவள் செவிகளில் நெற்பயிர்முளை அணிவிக்கப் பெற்றிருந்தது. அது செம்பஞ்சுக்குழைவும் கோரோசனையும் பூசப்பெற்றிருந்த கன்னத்தில் ஓர் உயர்வை அளித்தது. (பார்ப்பவர்) கண்கள் பெயர்க்க வியலாது பதிந்துபோயின.

விப்பிரமம்.

விரைவு நிமித்த மணியிட மாறல்
விப்பிர மமென விளம்பினர் புலவர்.

எ - டு :—தனிகன்.

காதலன் வரவைச் செவியுற்றாள். அணிகள் முடிய அணியவில்லை. நெற்றியில் மையும் கண்களில் லாட்சையும் கன்னத்தில் திலகமும் இட்டுக்கொண்டாள்.

கிலிகிஞ்சிதம்.

கோபம் துயரம் மகிழ்ச்சி யச்சம்
ஆதிய சேர்தல் கிலிகிஞ் சிதமாம். 39

எ - டு :—*தனிகன்.*

இன்பச்சூதில் ஒருவாறு வெற்றி பெற்று நான் அவள் வாயில் முத்தமிட நேரும்பொழுது அழகிய பேச்சுடன் புருவங்களை நெறிப்பாள். நாணி அழுவாள். புன்முறுவலுடன் சினந்து நோக்குவாள்.

மோட்டாயிதம்.

அன்பன் செய்தி ஆதிய நேரின்
அந்நினை வுள்ளத் தமைந்து நிறைதல்
மோட்டா யிதமாம் என்றூர் முதியோர்.

எ - டு :—*நவ சாகசாங்க சரிதம்.*

ஓவியத்தில் காதலனைக்கண்டாள். உண்மைக்காதல னென்றெண்ணினுள்: தன்வயமிழந்தாள். நாணி முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.[1]

குட்டமிதம்.

குழலித ழாதிய பற்ற மகிழ்வாள்
வெளிச்சின மெய்தல் குட்ட மிதமாம். 40

காதலன் வலிய முத்தமிடும்பொழுது காதலி நுனிக்கைகளை உதறிக்கொண்டு சீத்காரத்துடன் அழும் வெறும் அழுகைகள், இன்பச்சுவை நாடக விலாசங்களுக்குத் தொடங்கற்பாக்கள், அல்லது காமவேளின் ஆணைக்கடுமொழிகளாக விளங்குகின்றன.

பிப்போகம்.

விருப்ப மிருந்தும் மிக்க செருக்கால்
வெறுப்பை யுணர்த்தல் பிப்போ கமெனல்.

எ - டு :—*தனிகன்.*

---

1. *இன்னும் இரண்டு உதாரணங்கள் முதல்நூலில் கொடுக்கப் பெற்றுள்ளன. அவசியமின்மையின் மொழி பெயர்ப்பில் விடப்பெற்றன.*

காதலி! நான் உன் திலகத்தில் படிந்த குழல்சுருள்களை விலக்கி, நழுவும் மேலாடையை மேல் எடுத்துவிட்டு, விலாசத்தோடு உன்னை மெதுவாகத் தொடும்பொழுது நீ புருவங்களை நெறித்துக் கொண்டு அவமதிப்புடன் பார்த்துக் கருவத்துடன் கடிகின்றாய். ஆயினும் என்மனத்தில் அவா அடங்கவில்லை.

இலலிதம்.

உறுப்பின் நோய்மை யியக்க மிலலிதம். 41

எ - டு :—தனிகன்.

புருவங்களை வணக்கித் தளிர்க்கை யசைத்துப் பேசுகிறாள். கடைக்கண்களால் கனியப் பார்க்கிறாள். தாமரைத் தாள்களை மெல்லவைத்து விரும்பியவாறு நடக்கிறாள். இத்தாமரைக் கண்ணாளை இளமைத் தோற்றம் பாட்டின்றி ஆட்டிவைக்கின்றது.

விகிருதம்.

விகிருத மாகும் வெட்கந் தன்னால்
உரிய பொழுதில் உரைத்த லின்மை.

போ - ரை .—நாணம் காரணமாய் உரியதை உரியபொழுதில் உரையாதுவிடுதல் விகிருதமாம்.

எ - டு :—அமரு சதகம்.

தளிரொளிவாய்ந்த காற்பெரு விரலால் தரையைக் கீறுகின்றாள். நிலை நில்லாக் கருவிழி வாய்ந்த தன்வெளிறிய கண்களால் பன்முறை யென்னைப் பார்க்கிறாள். உதடு துடிக்கின்றது. ஏதோ சொல்ல விரும்புகிறாள். நாணித் தலைகுனிகிறாள். ஒன்றும் சொல்லவில்லை. என் மனம் வருந்துகிறது.

தோ - ய் :—அரசியலில் தலைவரின் துணைவர்களைக் கூறுகிறார்.

அரசு பணியில் அரசற் குதவி
அமைச்சனும் தானும் இருவரு மாவர். 42

போ - ரை :—பொருளைப்பற்றிய தந்திரம் ஆவாபம்[1] முதலிய பணிகளில் அமைச்சன், தான், அல்லது இருவரும் துணையாம்.

தோ - ய் :—உட்பிரிவுகளைக் கூறுகிறார்.

---

1. தந்திரம். ஆவாபம். இவைகளின் விளக்கத்தை சாணக்கியம் முதலிய அரசியல் நூல்களில்காண்க.

நால்வருள் இலலிதன் மந்திரி கோள்வான்.
மூவகை யானும் பிறர் ஆராய்வர்.

போ - ரை :—முற்கூறிய தலைவர் நால்வருள் தீரலலிதன் என்பவன் அமைச்சனைக்கொண்டே அரசியலை நடத்துவான். தீரோதாத்தன் முதலிய மற்றைய மூவரும் தாமாகவே அல்லது அமைச்சர் வாயிலாகவே அல்லது இருவருமாகவே அரசியல் நடத்துவர்.

அறத்துணைவர்கள்.

அறத்தில் அரசர் துணைவர் முனிவர்
மறையோர் ஆசான் இருத்து விகராம். 43

போ - ரை :—மறை—வேதம். அதை அறிதல் விளக்குதல் முதலாமியல்புடையோர் அல்லது இறைவனை(யும் சீவர்களையும்) அறிந்தவர் மறையோர்.

அடக்குமுறைத் துணைவர்கள்.

தோழர் புதல்வர் வேடர் வீரர்
கீழுள் ளரசர் தண்டத் துணைவர்.

போ - ரை :—இவ்வாறே பிறவியல்களிலும் துணைவர்களை அமைத்துக்காண்க.

உவளகத் துணைவர்கள்.

அலிகள் குறவர் ஊமை குறளர்
மிலேச்சர் இடையர் சகாரன் முதலோர்
அரசி யிருப்பில் அரசன் துணைவர்.
தம்தம் பணியால் உதவி புரிவார். 44

போ - ரை :—சகாரன்—அரசன் மைத்துனன். இழிகுலப் பிறவி.

தோ - ய் :—வேறு முறையில் தலைவன் முதலியோர் உட்பிரிவுகளைக் கூறுகிறார்.

கூறிய நாடக பாத்திர மெல்லாம்
மேலோர் நடுநிலை யாளர் கீழோர்
எனமூ வகையார். இவர்க்கிந் நிலைகள்
உணர்த்திய பண்பி னுயர்வா திகளாம். 45

போ - ரை :—முற்கூறிய தலைவன் தலைவி தூதன் தூதி அமைச்சன் புரோகிதன் முதலியோர் ஒவ்வொருவரும் மேலோர் நடுவர் கீழோர் என முப்பாற்படுவர்: இம்முப்பிரிவும் அவரவர்க்குரைத்த பண்புகளின் எண்ணைப் பற்றியவல்ல. பண்புகளின் உயர்வு முதலியவைகளைப் பற்றியவை எனவறிக.

நவின்ற முறையில் நாடக நூலுள்
தலைவன் முதலாம் பாத்திர மாகும். 46

தலைவன் செயல்.

தலைவன் செயலாம் விருத்தி நான்காம்.

போ - ரை :—தலைவன்செயல் விருத்தி யெனப்பெறும். அது, கைசிகி, சாத்துவதி, ஆரபடி, பாரதி என நான்காம்.

கைசிகி.

அவற்றுள் ஆடல் பாடல்வி லாசம்
ஆதிய மென்மைச் செயல்கை சிகியாம். 47

போ - ரை :—'ஆடல் பாடல் விலாசம் ஆதிய' என்பதால் குறிப்பிடப்பெறும் செயல், மென்மைவாய்ந்ததும் உவகைச்சுவை நிறைந்ததும் இன்ப நுகர்ச்சிபயப்பதும் ஆம். அத்தகைய செயலே கைசிகியாம்.

கைசிகியின் உறுப்பு.

முறையே நருமம் நருமப் பிஞ்சம்
நருமப் போடம் நரும கருப்பம்
எனுநான் கங்க மிதன்கண் ணுகும்.

நருமம்.

காதல ருள்ளம் கடுகக் கவரும்
கலைத்திறன் கொண்ட களிநகை யாட்டம்
நரும மென்று நவின்றார் நல்லோர். 48

போ - ரை :—விரும்பியவரை வசீகரிக்க வேதுவாம் நாகரிக நகை நருமம் எனப்பெறும்.

தோ - ய் :—நருமத்தின் உட்பிரிவு கூறுகின்றார்.

தூநகை நருமம் துணுக்க நருமம்
உவகை நருமம் எனவது மூன்றாம்.

தோ - ய் :—உவகை நரும உட்பிரிவு கூறுகின்றார்.

அன்பறி வித்தல் கலவி மானம்
என்பன உவகை நருமப் பிரிவு. 49

தோ - ய் :—துணுக்க நரும உட்பிரிவு கூறுகின்றார்.

சுவையுறுப் பென்றும் தூய தென்றும்
துணுக்க நரும மிருபாற் றாகும்.

தோ - ய் :—நருமவகைகள் பதினெண்வகையா மென்கிறார்.

இவ்வறு நருமம் சொல்உரு செயலால்
மூவ்வறு வகையா மென்றன ரறிஞர். 50

தூநகை நருமம். (சொல்)

எ - டு :—குமார சம்பவம் ஏழாம் சருக்கம்.

"கணவன் முடிப்பிறையை இதனால் (இத்திருவடிகளால்) தீண்டு" என்று கூறிக்கொண்டே உமையின் தோழி உமையின் திருவடிகளை அலங்கரித்து ஆசிகூறினாள். உமை பதிலின்றி அவளை மாலையாலடித்தாள்.

தூநகை நருமம். (உரு)

எ - டு :—

நாகாநந்தத்தில் விதூடகனும் சேகரகனும் சேருமிடத்துக் காண்க.

தூநகை நருமம். (செயல்)

எ - டு :—

மாலவி காக்கினி மித்திரத்தில், கனவுகாணும் விதூடகன் மேல் நிபுணிகை கோலைப் போடுமிடத்துக் காண்க.[1]

அன்பறிவித்தல். (சொல்)

எ - டு :—

வழிப் போக்கனே! இத்தண்ணீர்ப்பந்தல் தனித்தும் குளிர்ந்துமுளது. தனியளென்று விட்டுச்செல்லாதே. இருந்து பால்பருகி

---

1. நருமத்தின் உட்பிரிவு என்பதிலிருந்து இதுவரை உள்ள சுலோகங்களுக்கு முதல்நூலில் உரையுள்ள போதிலும் மொழி பெயர்ப்பில் காரிகைகளை எளியவையா யிருத்தலின் உரை எழுதாமல் விடப்பெற்றது.

வியர்வை விலக்கி உச்சிப் பொழுதை இங்குகழி. தாபத்தின் தாக்கலுக்கஞ்சிய உன் அன்பினள் என்று நினை. வெகுவாக நீர்ப்பந்தற்காரிகள் உன் உள்ளத்தைக் களிக்கச் செய்யார்.

கலவி நருமம். (செயல்)

எ - டு :—

பொழுது கழிந்திலது. கணவன் கால்களைப் பிடித்தசைத்தாள். அவனும் சிரித்தான். அவளும் சிரித்தாள்.

மான நருமம் (சொல்)

எ - டு :—

நீயே என் அன்பினள் என்று பொய்யுரைத்தாய். பிறருடன் கலந்து அக்குறியுடையாடையை அணிந்து வந்துளாய். காதலி காண்பதல்லவா காதலன் கோலத்திற்கு உரிய பயன்.

துணுக்க நருமம்.

எ - டு :—

இரத்தினவளியில் சித்திரத்தைப்பார்த்த சுசங்கதை "செய்தியனைத்தும் தெரிந்துவிட்டது. சித்திரவிடயமும் தெரிந்தது. அரசியிடம் அறிவித்துவிடுகிறேன்" என்று விதூடகனிடம் கூறுமிடத்துக்காண்க.

உவகைச் சுவைக்குறுப்பாம்

துணுக்க நருமம்.

எ - டு :—தனிகன்.

தவறு தெரிந்துவிட்டது. எல்லா முயற்சியும் பயனற்றுவிட்டது. நீண்டு ஆலோசித்தான். உடனே பரபரப்புடன் எழுந்து 'முதுகில் என்ன' 'முதுகில் என்ன' என்று கேட்டான். நங்கை அஞ்சினள். காதலனை அணைத்துக் கொண்டாள். இனிய புன்முறுவலுடன் அவனுமணைத்துக் கொண்டான்.

நருமப் பிஞ்சம்.

முதல்வரு காதற் கூட்டம் தன்னில்
வெருவில் முடியும் இன்பத் தோற்றம்
நருமப் பிஞ்ச மென்று நவின்றார்.

எ - டு :—மாலவிகாக்கினி மித்திரம். நா - அ.

தலைவன் :—அழகி! கலவியச்சத்தைவிடு. வெகுகாலமாக உன் அன்பை எதிர் நோக்கி யிருக்கிறேன். கொடி மரத்தைத்தழுவி இன்புறச்செய்வது போல் என்னை யின்புறச்செய்.

மாலவிகை :—நாத! அரசியச்சத்தால் எனக்கும் இன்பத்தை யளிக்கும் இதைச்செய்ய வியலவில்லை.

நருமப்போடம்.

உள்ளக் கருத்தின் சிறுசிறு தோற்றம்
நல்கிய சிறுசுவை நருமப் போடம். 51

எ - டு :—மாலதீ மாதவம். மு - அ.

மகரந்தன் :—ஒய்ந்தநடை. மங்கிய பார்வை. நலமில்லா உடல். நெடிய உயிர்ப்பு. இவ்வளவேதானா? இதனினும் மிகவுண்டா? காமவேள் ஆணை உலகில் பரவித்திரிகின்றது. மாறுதலடைந்த பருவமும் இனிப்பும் இன்பமும் வாய்ந்த ஒவ்வொரு பாவங்களும் உள்ளத் துறுதியைத் தளரச் செய்கின்றன.

இங்கு மாலதியிடத்தில் மாதவனுக்குண்டான சிறுகாதல் வெளியாவது காண்க.

நரும கருப்பம்.

விருப்பம் பெறுவான் மறைபணி யாற்றல்
நரும கருப்ப மென்று நவின்றார். 52

எ - டு :—அமரு சதகம்.

காதலிகள் இருவரும் ஒரே இருப்பில் இருந்ததைக்கண்டான். பின்புறமாகச் சென்றான். விளையாட்டாக ஒருத்தியின் கண்களை மறைத்தான். ஒருத்தியை முத்தமிட்டான். முன்னவள் உண்மையை யறியவில்லை. விளையாட்டென நினைத்தாள். பின்னவள் இன்ப மெய்தினாள்.

தோ - ய் :—உறுப்புக்களுடன் கைசிகிவிருத்தியை விளக்கிய பின்னர் சாத்துவதி விருத்தியை விளக்குகிறார்.

சாத்துவதி.

அருள்மறம் உறுதி நேர்மை யாதி
வருத்தமில் விருத்தி சாத்து வதியாம்.

போ - ரை :—வீரம் அருள் நேர்மை கொடை முதலிய சீரிய பண்புகள் தலைசிறந்திலங்குவதும் துயரற்றுதுமாய தலைவன்செயல் சாத்துவதி விருத்தி யென்பர்.

தோ - ய் :—அதன் உறுப்புக்கள் கூறுகின்றார்.

சல்லா பகமென உத்தா பகமென
சாங்காத் தியமெனப் பரிவருத் தமென
அதனங் கங்கள் நால்வகை யாகும். 53

சல்லாபகம்.

பல்வகைக் கருத்தும் சுவையும் ஆழமும்
நன்கமை வாதம் சல்லா பகமாம்.

எ - டு :—வீர சரிதம். இ - அ.

இராமன் :—முருகனைப் பரிவாரங்களுடன் வெற்றிகொண்டமைக்கும் ஆயிரம் ஆண்டுகள் மாணவனுயிருந்தமைக்கும் மெச்சிப் பரமசிவன் உமக்கு அளித்த கோடரியல்லவா இது ?

பரசுராமன் :—தயரதன் குமரா ! ஆசிரியன் உகந்தளித்த அதே கோடரிதான் இது. ஆம். முருகனையும் அவன் படைகளையும் முறியடித்தேன். ஆயினும் என்னைமெச்சி ஆசிரியன் அருளுடன் இக் கோடரியை அளித்தார்.

பல்வகைக் கருத்தும் ஆழமும் சுவையும் பொருந்திய இவ்விருவர் பேச்சு சல்லாபகமாம்.

உத்தாபகம்.

துவங்கிய போதில் ஒருவன் பிறனைப்
போருதத் தூண்டல் உத்தா பகமாம். 54

எ - டு :—வீர சரிதம். ஐ - அ.

உம்மைப் பார்த்த எனக்கு இன்பமும் துன்பமும் வியப்பும் உண்டாகின்றன. என்கண்கள் உம்மைப்பார்த்துத் திருப்தியடையவில்லை. உம்மோடு கலந்தின்புறுதற்கு நான் உரியனல்லேன். மிகப் பகர்தலில் பயனில்லை. புகழ்மலிந்த பரசுராமனை வெற்றிகொண்ட கையில் விற்படையை எடும்.

சாங்காத்தியம்.

மருளுறச் செய்யும் மந்திரத் தாலும்
பொருள்வலி யாலும் விதிவலி யாலும்
பிரித்தல் சாங்காத் தியமா மென்பர்.

மந்திரவலி.

எ - டு :—*முத்திரா ராக்கசத்தில் சாணக்கியர் தம் அறிவுவன்மையால் இராக்கதன் துணைவர்களைப் பிரித்தது.*

பொருள்வலி.

எ - டு :—*பருவதகனின் ஆபரணம் இராக்கதன் கையை அடைவதால் மலயகேது முதலியோரைப் பிரித்தல்.*

விதிவலி.

எ - டு :—*இராவணனிடமிருந்து விபீடணனைப் பிரித்தல்.*

பரிவருத்தகம்.

கருதிய கருமம் குலைய விடுத்துப்
புதியது செய்தல் பரிவருத் தகமாம். 55

எ - டு :—*வீர சரிதம். இ - அ.*

பரசுராமன் :—*விநாயகரின் கொம்பால் ஒருபக்கம் கீறப் பெற்றதும், முருகனின் அம்புபதிந்த வடுக்கள் இலங்கியதுமாய என் மார்பகம் வியக்கத்தக்க வீரனை (உன்னை)ப் பெற்றதால் மயிர்க் கூச்செறிந்து உண்மையில் உன்னைத் தழுவ விரும்புகிறது.*

இராமன் :—*பகவரே! தழுவுதல் என்பது தொடங்கிய செயலுக்கு முரணன்றோ.*

தோ - ய் :—*நால்வகை யுறுப்புக்களுடன் சாத்துவதியை விளக்கிய பின்னர் ஆரபடியை விளக்குகிறார்.*

ஆரபடி.

பொருதல் மாயை சாலம் வெகுளி
மயக்கம் முதலாம் செயல்ஆ ரபடி.

போ - ரை :—*மந்திர வலியால் இல்பொருள் காட்டல் மாயை. தந்திர வலியால் அதுகாட்டல் இந்திரசாலமென வேற்றுமையறிக.*

தோ - ய் :—*அதன் உறுப்புக்கள் கூறுகின்றார்.*

சஞ்சித் தியெனச் சம்பே டமென
வத்தூத் தானம் எனஅவ பாதம்
எனவத னங்கம் நால்வகை யாகும். 56

சஞ்சித்தி.

சிற்பத் திறனுல் ஒருபொரு ளாக்கல்
சஞ்சித் தியெனச் சிலரும், முந்தைத்
தலைவன் நீங்கிப் பிறன்தோன் றிடுதல்
சஞ்சித் தியெனச் சிலரும் சொல்வர். 57

மண் மூங்கிற்பிளவு தோல் முதலியவை கொண்டு ஒரு பொருள் தோற்றுவித்தல் சஞ்சித்தி. உதயண சரிதத்தில் கிளிஞ்ச யானை இதற்கெடுத்துக்காட்டாம். 'முந்தைத் தலைவன் நீங்கிப்பிறன் தோன்றிடுதல்' என்பது தலைவன் நீங்கிப் பிறதலைவன் தோன்றல் என்றும் தலைவன் தன்மைநீங்கி வேறு தன்மை தோன்றல் என்றும் இருவகையாம். வாலி நீங்கிச் சுக்கிரீவன் தோன்றியது முன்னை யதற்கும் பரசுராமனுடைய செருக்கு நீங்கித் தண்மை தோன்றி யது பின்னையதற்கும் முறையே எடுத்துக்காட்டாம்.

சம்பேடம்.

இருவர் ஒருவர்க் கொருவர் சினந்து
பொருது தாக்கல் சம்பே டமெனல். 58

எ - டு :—*இலக்குவனும் இந்திரசித்தும் பொருதல்.*

வத்தூத்தாபனம்.

இந்திர சாலத்(து)இல் பொரு ளாக்கல்
தந்திர வத்தூத் தாபன மென்பர்.

எ - டு :—*உதாத்த ராகவம்.*

திடீரென்று அடர்ந்த இருள்திரள் வானில் பெருகிப் பரவிக் கதிரவனொளியை மறைக்கின்றது. இந்நரிகள் சுடுகுருதியைப்பருகி வயிறு பருத்து ஊளையிட்டுக்கொண்டு வாயால் கனலைக் கக்குகின் றன. எது வென்?

அவபாதம்.

ஏகல் நுழைதல் அஞ்சல் ஓடல்
ஆதிய செய்கை யவபா தமெனல். 59

எ - டு :—இரத்தினாவளி. இ - அ-

கட்டையறுத்துக்கொண்டு வெளியேறிய கடுவன் மிடற்றில் மிகுந்த பொன் கயிற்றை இழுத்துக் கொண்டே கால்களில் சலங்கை யொலிக்க மக்கள் அஞ்சக் குதிரைப்பாகர் பின் தொடர ஓடி வாயில்களைக் கடந்து குதிரைத் தொழுவத்திலிருந்து அரசன் மாளிகையில் நுழைகிறது.

கைசிகி சாத்துவ தீயா ரபடீ
என்பன மூன்றும் பொருள்வயி னமையும். 60
பாரதி யென்பது சொல்வயி னமைந்து
நாடகப் பகுப்பில் விரிவுரை பெறுமாம்.
ஐந்தா மொன்றை யவுத்படர் சொன்னர். 61

போ - ரை :—*அது (ஐந்தாவது) இலக்கியங்களில் காணவில்லை. நகை முதலியசுவை பாரதியில் அடங்குதலின், சுவையற்ற நூற் பொருள் இன்மையின் தகுதியன்று. பாரதி யென்பது ஆமுகத்திற் கங்கமானமையின் நாடகப் பகுதியில் கூறப்பெறும்.*

தோ - ய் :—*அவ்வவ்விருத்திகளின் உரியவிடம் கூறுகின்றார்.*

உவகைச் சுவையில் கைசிகி யாகும்.
பெருமித மதனில் சாத்து வதியாம்.
வெகுளி யிழிப்புக்களில் ஆரபடி.
பாரதி யெல்லா ச்சுவையிலு மாகும். 62

தோ - ய் :—*தலைவர்முதலோரின் மொழி முதலியவை நாட்டு வேற்றுமையால் வேறுபடுதலைக் கூறுகின்றார்.*

மொழிசெயல் கோலம் முதலிய நாட்டின்
வழியுள வாதல் செவ்விதின் ஓர்க.
உலக வழக்க முறைபிற ழாமல்
தகுதி யுணர்ந்து நடித்தல் நன்று. 63

பேச்சின்வகை.

இழிஞர் அல்லா ஆடவ ரெல்லாம்
[1] வடமொழி மொழிவர். துறவி மகளிர்

1. *வடமொழி—இலக்கணமுறை வழுவாச் செந்தமிழ் எனத் தமிழர் கொள்க.*

கணிகை அமைச்சர் புதல்வி யரசி
பணிப்பர் அம்மொழி சிற்சில பொழுதே. 64

போ - ரை :—'சிற்சில பொழுது' என்பது முதற்கூறிய இரு வகையர் (துறவிமகளிர் முதலோர்) தவிர்ந்த பிறர் வயின்எனவறிக.

மகளிர் பாகத மொழிகை யாள்வர்.
இழிஞர் சௌர சேனியு ரைப்பர்

போ - ரை :—பிரகிருதி — வடமொழி. பிரகிருதியினின்றும் தோன்றியது (பிராகிருதம்) பாகதம். அது தற்பவம், தற்சமம், தேசியெனப் பல்வகையாம். சௌரசேனி மாகதி என்பன அவ் வந்நூல்களில் காண்க.

சால விழிந்தோர் பேய்முத லானோர்
பேய்மொழி மாகத மொழிகை யாள்வர். 65
இழிஞர் தம்நாட் டிழிமொழி மொழிவர்.
முதலிடை கடையெனு மூவகை யோர்க்கும்
செயலமை யும்வணம் மொழிமாற் றிடுக. 66

தோ - ய் :—அழைப்பவர் அழைக்கப் பெறுபவர் இவர்களுடைய தகுதியை நோக்கி அழைக்கும் முறையைக் கூறுகிறார்.

அறிஞர் தேவர் முனிவர் துறவோர்
இவரைப் பெரியோர் 'பகவர்' பெயரால்
அழைப்பர். பார்ப்பார் முன்னோர் அமைச்சர்
ஆதியர் 'ஆரிய' ரென்பர் தம்முள். 67

சூத்திர தாரன் நடியெனு மிவர்கள்
'ஆரிய' விளியால் தம்முள் அழைப்பர்.
பாகன், தேரூர் தலைவன் தன்னை
'ஆயு ஷ்மவாய்' என்று விளிப்பான்.
தம்பி புதல்வன் மாணவ ரிவரை
அப்பா குழந்தாய் என்று விளிப்பர். 68

பாரிபா ரிசனைச் சூத்திர தரனும்
பாரி பாரிசன் சூத்திரி தனையும்
மாரிட வென்றும் பாவக வென்றும்
நேரிய முறையால் கூறுப முறையே.
சேவகர் அரசைச் சுவாமி யென்றும்

தேவ வென்று மழைத்தல் வேண்டும்.
இழிதகை யாளர் யசமா னென்பர். 69

அரசன் விளிபோன் றரசி விளியாம்.
மகளிர் தம்முள் ஒப்பா ரிருவர்
'அலா' வென் விளியால் அழைத்தல் தகுதி.
அடிமை தன்னை 'அஞ்சே' யென்பர்.
போதுமகள் அச்சுகைப் பெயரினள் ஆவாள். 70

முதியாள் தன்னைக் குட்டினி யம்மா
முதலிய சொல்லால் அடிமை யழைப்பர்.
அன்னியரவளைப் பூச்சியை யென்பர்
அரசன் தோழன் அரசி தன்னைப்
பவதீ சேடீ யென்று விளிப்பான். 71

தலைவர் தன்மை மாறிட மாறும்
அவர்தம் செயல்பண் புரையும் பிறவும்
பிறையணி தேவன் பரத னல்லாப்
பிறரெவர் பிறழா துரைக்க வல்லார். 72

இரண்டாமொளி முற்றிற்று.

திசையறிவிக்கப் பெற்றது. செயல்—இலீலை முதலியன. பண்பு—வணக்கம் முதலியன. உரை—வடமொழி பாகதம் முதலியன. பிற—தீரத் தன்மை முதலியன, தீரத்தன்மை—மாறுமனது. பாவம்—உள்ளத்துத் தோன்றும் முதல் மாறுபாடு முதலியவை.

இ - ஒ. உரை முற்றிற்று.

மூன்றுமொழி.

தோ - ய் :—விளக்கற்பாலன வெகு வுளவாதலின் சுவையா ராய்ச்சியை விடுத்துப், பொருள் தலைவன் சுவையென்ற இம்மூன் றும் நாடகம் முதலிய நூல்களில் பயன்படும் ஆறு கூறுகின்றார்.

இலக்கண மியாவு மியைந்துள தாதலின்
ஏனை யிலக்கியப் பகுதி யிதாதலின்
சுவைக ளனைத்து மமைந்துள தாதலின்
துவக்கில் நாடகம் கூறுதும் யாமே. 1

போ - ரை :—இலக்கணம் முற்றும் கூறப்பெற்ற நாடகம், அவ்வாறு கூறப்பெறாத பிரகரணம் முதலியவைகளுக்குப் பகுதி. பிற வறிதற்கெளிய.

சூத்திர தாரன் தோன்றி யரங்கில்
பூருவ ரங்க மியற்றி யகல
வேறொரு கூத்தன் நுழைஇநூற் பொருளை
வேறறச் செய்தல் மேல்செய் வினையாம். 2

போ - ரை :—முன்பு விரும்பப்பெறும் தலம் ஆம் கூத்தவை பூருவ ரங்கம். அவ்வவையில் முதலில் ஆற்றப்பெறும் நாட்டியத் தொடக்கம் முதலிய செயல்களும் பூருவரங்கமாம். அச்செயலை யாற்றிச் சூத்திரதாரன் வெளியேறியதும் அவனைப்போன்ற மற் றொரு கூத்தன் விட்டுணுத்தானம் முதலியவழியால் அவையுள் தோன்றி நூற்பொருளை யறிவிக்கவேண்டும். பொருளை நிலை நிறுத்த லால்—அறிவித்தலால்—அக்கூத்தன் தாபகன் (நிலை நிறுத்துவோன்) ஆவான்.

தைவிக வியலும் மானிட வியலும்
எய்திய வற்றை அவ்வவ் வுருவும்,
அவ்விரு வியலும் அமைகலப் பியலை
அவ்விரு வுருவுள் யாதா மொன்றும்,
செவ்விதின் பெற்று, நூலின் பொருளே
வித்தே முகமே பாத்திர வகையே
என்றிவற் றொன்றை இயம்பல் வேண்டும். 3

போ - ரை :—முற்கூறிய தாபகன் திப்பியத்தை திப்பிய உருவும் மானுடத்தை மனித உருவும் கலப்பியலைத் திப்பியமானுடங்களில் ஒருருவும் கொண்டு, நூற்பொருள் வித்து முகம் பாத்திரம் இவைகளுள் ஒன்றை யறிவித்தல் வேண்டும்.

நூற்பொருள்.

எ - டு :—உதாத்த ராகவம்.

இராமன் தந்தையாணையைத் தலையிலேந்திக் காடு புகுந்தான். அவனிடத்தில் பத்(க்)தி காரணமாகப் பரதன் அன்னையுடனரசையுமிழந்தான். சுக்கிரீவனும் விபீடணனும் இராமனையடைந்து மாபெரும் மேன்மையெய்தினர். நெறிதவறிய இராவணன் முதலிய பகைஞர் அழிந்தனர்.

வித்து.

எ - டு :—இரத்தினவளி. மு - அ.

கூடிவரும் நல்வினை வேறு தீவிலிருந்தோ கடல் நடுவிலிருந்தோ திசைமுனைகளி லிருந்தோ விரும்பியவற்றை எய்துவிக்கின்றது.

முகம்.

எ - டு :—

[1] சந்திரகாசம் மாசற்று விளங்கப்பெற்ற இத்தூயவொளிக்கூதிர், [2] பந்து சீவன்களைச் செழிக்கச் செய்துகொண்டு இராமன் இராவணனை அழிப்பதுபோல் காரினும் கரிய இக்கொடிய இருள் திரட்சியை அழித்துத் தோன்றியுளது.

பாத்திரம்.

எ - டு :—சாகுந்தலம். மு - அ.

இத்துஷ்யந்த மன்னனை மான்வலிந்து கவர்ந்திழுத்துச் செல்வதுபோல் உன் இனியகானம் என்னை மயக்கி யிழுக்கின்றது.

காப்பியப் பொருளின் குறிப்பறி விக்கும்
தீங்கனி பாக்கோண் டரங்கு புகழ்ந்து
சாற்றிய பருவ மொன்றைப பற்றிப்
பாரதி விருத்தி பற்றுதல் வேண்டும். 4

1. சந்திர காசம். நிலவு. வாள். 2. ஒருவகைப்பூண்டு. உறவினர்.

போ - ரை :—காப்பியப்பொருளைக் குறிப்பாக வுணர்த்தும் பாசுரங்களால் அரங்கைப் புகழ்ந்தபின்,

எ - டு :—இரத்தினவளி. மு - அ.

ஆவ னுற்று விரைந்தன ளாயுமை
    நாணி நாயக னண்ணகி லாதபோ(து)
எவி சுற்ற மிணைக்க விணைந்தன
    ளேனு மன்பனை யெய்தியு மன்புடன்
தாவி யின்ப முறத்தழு விக்களித்
    தாளி லள்கல வித்திற னஞ்சினள்
ஆவி யின்புற வன்ப னணைந்திடத்
    தாம யிர்சிலிர்த் தாளுமை யாளுக.

என்பன போன்றவைகளால் பாரதி விருத்தியைப் பற்றுதல் வேண்டும்.

பாரதி.

செஞ்சோல் மிகுந்த நடனுரை பாரதி.
பிரரோ சனையோடு வீதி யாமுகம்
பிரக சனமேன நான்கத னங்கம்.

போ - ரை :—வடமொழி மிகுந்த நடன்பேச்சு பாரதியாம். பிரரோசனை, வீதி, பிரகசனம், ஆமுகம் என்பன இதனுறுப்புக்கள்.

பிரரோசனை.

பெரும்புகழ் கூறி யவ்வாவினை யூக்கல்
பிரரோ சனையெனப் பகர்த லாகும்.

போ - ரை:—நடித்துக்காண்பிக்கப்புகும் பொருள்முதலியவற்றைப் புகழ்ந்து கூறிக் கேட்போரின் விருப்பத்தை மிகுவித்தல் பிரரோசனையாம்.

எ - டு :—இரத்தினவளி. மு - அ.

சிரீயருடன் (ஸ்ரீ ஹர்ஷன்) பெரும் புலவர். இவ்வவையும் குணங்கொளியல்பினது. வச்சவரசன் சரிதையும் கவர்ச்சிமிக்கது. யாமும் கூத்துவல்லுநர். ஒவ்வொன்றும் கோரிய பயனைக் கிட்டுவிக்கவல்லது. என்பேற்றின் மிகுதியால் சீர்மையனைத்தும் சேர்ந்திருக்கப் பயனில் ஐயமென்?

வீதியும் பிரக சனமும் பின்னர்
வேண்டிய விடத்துக் கூறுதல் முறையாம். 6

சூத்திர தாரன் நடிகை யுடனே
மாரிட னுடனே விதூடக னுடனே
காப்பியப் பொருளைக் குறிப்பா லுணர்த்தும்
காரிய மதனைப் பல்வகை மொழியால்
பணித்தல் ஆமுக மென்பர் புலவர்.
பிரத்தா வனையெனச் சொல்வது மிதுவே. 7

கதோற்(த்) காதமும் பிரவிருத் தகமும்
பிரயோ காதிச யமென்ற வகையும்
ஆயவிம் மூன்றும் அதன்பிரி வாகும்.
ஆமுக வுறுப்புப் பத்துடன் மூன்றும்.
வீதியி னுறுப்பு மிவையே யாகும். 8

கதோத்காதம்.

தன்னுடை சரிதைக் கொத்துள தாய
முன்னைய சூத்திரி சொற்பொரு ளொன்றைப்
பற்றி யரங்கில் பாத்திரம் தோன்றல்
சொற்ற கதோத்காத மென்பர் கவிஞர். 9

சொல்பற்றித் தோன்றல்.

எ - டு :—*இரத்தினவளி. மு - அ.*

சூத்திரதாரன் கூறிய செய்யுளையே (கூடிவரும்[1] *நல்வினை வேறு தீவிலிருந்தோ கடல் நடுவிருந்தோ...........) கூறிக்கொண்டு யௌகந்தராயணன் அரங்கில் தோன்றுமிடத்துக் காண்க.*

பொருள்பற்றித் தோன்றல்.

எ - டு :—*வேணீ சங்காரம். மு - அ.*

சூத்திரதாரன் :—" *பாண்டுவின் புதல்வர், பகைஞர் அழிந்து பகைக்கனல் தணியப்பெற்றுப் பரமனுடன் இன்புறுக. குருமன்னனின் மக்களும் அன்பர்க்கவனியை அளித்துப் போரொழித்துத் தம் பணிமக்களுடன் பொன்னுலகபோக மெய்துக,*" *என்று கூறிய பொழுது பொருள்பற்றிப்,*

---

1. 14 ம். பக்கம் பார்க்க.

பீமன் :—“ அரக்குமாளிகை யனல், நச்சுணவு, முதலியவைக ளால் எம்மைக் கொல்ல முயன்றவரும், மன்னவையில் பொருளைப் பறித்தும் திரௌபதியின் கூந்தலைப்பற்றித் துகிலுரிந்தும் இழிவு படுத்தியவருமாய குருமன்னன்புதல்வர் நான் பிழைத்திருக்கை யில் இன்புறவா ? ” என்று கூறிக்கொண்டு தோன்றுமிடத்துக் காண்க.

பிரவிருத்தகம்.

கால வொப்புமை பற்றிப் பாத்திரம்
களத்தில் தோன்றல் பிரவிருத் தகமாம். 10

பொ - ரை :—நடைமுறைப் பருவம் முதலிய காலங்களின் பண்பைக்கூற அவ்வொப்புமை பற்றிப் பாத்திரம் தோன்றல் பிர விருத்தகம்.

எ - டு :—

சந்திரகாசம் மாசற்று விளங்கப்பெற்ற இத்தூய வொளிக் கூதிர், பந்துசீவன்களைச் செழிக்கச் செய்துகொண்டு இராமன் இராவணனைப் போல் காரினும் கரிய இக்கொடிய இருட்டிரட்சியை அழித்துத் தோன்றியுளது.

பிரயோகாதிசயம்.

‘ ஈதோ ’ ‘ இவன் ’ என்பன போன்ற
சூத்திர தாரன் சொற்கோண் டரங்கில்
பாத்திரம் தோன்றல் பிரயோகா திசயம். 11

எ - டு :—சாகுந்தலம். மு - அ.

சூத்திரதாரன் கூறிய ‘இவ்வரசன் போல்’ என்ற குறிப்பைப் பற்றித் துஷியந்த மன்னன் தோன்றிய விடத்துக்காண்க.

வீதி அல்லது ஆமுகத்தின் உறுப்புக்கள்.

உத்தாத் தியகம் உயர்அவ லகிதம்
பிரபஞ் சத்தோடு திரிகதம் சலம்
வாக்கே ளியுடன் அதிபலம் கண்டம்
அவசி யந்திதம் நாளிகை யதுபோல்

அசத்பிரலாபத் தோடுவியா காரம்
மிருதவம் என்பன வீதி யுறுப்பாம். 12

உத்தாத்தியகம்.

மறைபொருட் கிளவி ஒருபொருட் கிளவி
வரிசை யல்லது வினுவிடை வரிசை
மருவு மிருவர் சல்லா பத்தை
இருவகை யுத்தாத் தியக மென்பர். 13

போ - ரை :—*பொருள் விளங்காச் சொற்களையும் பரியாயச் சொற்களையும் வழங்கிப் பேசுதல் அல்லது கேள்வி பதில்களின் வரிசையென உத்தாத்தியகம் இருவகையாம்.*

முதல்வகை.

எ - டு :—*விக்கிர மோருவசீயம்.*

விதூடகன் :—*நண்ப! உன்னையும் வருத்தவல்ல அக்காமன் யார்? ஆணு? பெண்ணு?*

அரசன் :—*அன்ப! உள்ளத்தில் துயர் அற்றவர்களுக்குச் சுகங்களில் காமம் உண்டாகின்றது. அன்பின் மெல்லிய நெறியே காமம் என்று கூறப்பெறும்.*

விதூடகன் :—*இன்னும் விளங்கவில்லை.*

அரசன் :—*தோழ! விருப்பத்திலிருந்து அது உண்டாகும்.*

விதூடகன் :—*எவன் எதை விரும்புகின்ருனே அவன் அதைக் காதலிக்கின்ருன் என்ரு?*

அரசன் :— *ஆம் அப்படித்தான்.*

விதூடகன் :—*நன்கு விளங்குகின்றது. யான் மடைப்பள்ளியில் உணவை விரும்புவது காதல்.*

இரண்டாம் வகை.

எ - டு:—*பாண்டவானந்தம்.*

சீரியர் புகழ்வதெது? பொறுமை. அவமானமெது?
தன்குலத் தவரிகழ்தல்.
தாரண மிலாத்துயர மேது? பிறர் ஒன்றியுயிர்
வாழ்தல். புகழ் வாய்ந்தவனெவன்?

பாருள ரெலாமனுக வாழ்பவன். இறத்தல்எது?
துயரம். அது விட்டவர்எவர்?
போரிலரி வென்றவர். எவர்கள் இதறிந்தவர்?
விராடமுறை பாண்டவர்களே.

அவலகிதம்.

ஒன்றில் முயன்று வேறொன்றும் முடித்தல்
ஒன்றில் முயல வேறொன்றும் முடிதல்
என்றிரு வகைத்தாம் இவ்வவ லகிதம். 14

முதல்வகை.

எ - டு :—உத்தர ராம சரிதம்.

சானகியின் கருக்கால விருப்பத்தை நிறைவேற்றுவான் கான் புகுவித்து, மக்கள் பழிச்சொல் விலக்குவான் அங்குவிட்டு விடுதல்.

இரண்டாம் வகை.

எ - டு :—சலித ராமம்.

இராமன் :—இலக்குவ! தந்தையில்லா வயோத்தியுள் வான வூர்தியுடன் செல்லக்கூடவில்லை. ஆதலின் இறங்கிச் செல்கிறேன்.

அரியணையின் அடியில் அடித்தலங்களின் முன்னர் சடைமுடியும் தாமரைமணிமாலையும் தரித்துக் கையில் கவரியுடன் யாரோ தோன்றுகின்றார்.

இங்கு பரதனைக்காணல் என்ற வேறொன்றும் முடிதல்காண்க.

பிரபஞ்சம்.

நல்லார் நகைக்கும் நலனில் புகழைப்
பொல்லார் தமக்குள் கூறிப் புகழ்தல்
வல்லார் கூறும் பிரபஞ் சமெனல். 15

பொ - ரை :—பிறர்மனைபுகல் முதலிய தீயவன்மையைக்கூறி ஒருவர்க்கொருவர் புகழ்ந்து கொள்ளுதல் பிரபஞ்சமாகும்.

எ - டு :—கருப்பூர மஞ்சரி.

பைரவானந்தன் :—கைம்பெண்ணும் கொடியவளும் நோன் பினன் மனைவியும் இல்லறக்கிழத்திகள். குடிப்பது கள். புசிப்பது புலால். இரத்தல் பிழைப்பு. தோற்யந்தல் படுக்கை. இத்தகை யில்லறத்தை எவன் மகிழான்?

திரிகதம்.

ஓலிஓப் புமையால் பல்வகை ஊகம்
திரிகத மாகும். நடன்முத லாய
மூவர் பேச்சாம் பூருவ ரங்கம்
இவ்வுறுப் புக்கோ ரேற்ற விடமாம். 16

எ - டு :—விக்கிரமோருவசீயம். மு - அ.

இவ்வினிய ஒலி, மலர்மது மாந்தி மதித்த மதுகரங்களின் மதுர நாதமோ! அல்லது குயிலின் மாண்புமிக்க மணிக்குரலோ! அல்லது புலவர் குழாம் உறையும் கைலாயத்துக் கின்னர மகளிர் மதுர கானமோ?

சலனம்.

இனியவை யன்ன வின்னுச் சொற்கொண்
டாசை காட்டி மோசம் செய்தல்
சலன மெனவே புலவர் சொல்வர்.

[1] எ - டு :—வேணி சங்காரம். ஐ - அ.

பீமார்ச்சுனர்கள் :—வீரர்களே!

அரக்கிலன லூட்டிஅவை யஞ்சுபெரு வஞ்சச்
சிறப்புடைய சூதுவிளை யாடிமயிர் பற்றிக்
கிருட்டிணையை யீர்த்தவள் துகில்தனை யுரிந்தார்
பெருந்தகைமை யாளன்அர சர்க்கரசன், அங்கத்
திருப்பொலியு நாடனமை நண்பன்,ஒரு நூறும்
திறற்பொருது தம்பியர் தலைமைமிக வுற்றுன்,
கருத்துடைய பாண்டவர்தம் நாதன் துரி யோதன்
இருப்பிட முரைத்திடுதிர். கண்டுசெல வந்தாம்.

வாக்கேளி.

உரைமொழி முடிவு பெருமல் நிற்றலும்
இருமுறை மும்முறை மறுமொழி கூறலும்
இருவகை வாக்கே ளியெனவுரைப்பர். 17

முதல் வகை,

எ - டு :—உத்தர ராம சரிதம். மூ - அ,

வாசந்தி:—"நீ என் உயிர். இரண்டாமுள்ளம். கண்களின் களி நிலா. உடலிற்றோயுமமிழ்து." என்பன போன்ற இனிய சொற்களால் மடந்தையை மயக்கி அவளையே.......ஆ! போதும். மேலும் வேண்டாம்.

இரண்டாம் வகை.

எ - டு :—இரத்தினவளி. மு - அ.

விதூடகன் :—மதனிகே! எனக்கும் இச் சர்ச்சரியைக் கற்பிப்பாயாக.

மதனிகை :—கெடுவிழைவா! இது சர்ச்சரியில்லை. இருசொல் இசைத்துணுக்கு.

விதூடகன்:—மதனிகே! இத்துணுக்குக்களால் கொழுக்கட்டைகள் செய்யலாமா?

மதனிகை :—இயலாது. பாடும் இசைத்துணுக்கல்லவா இது.

அதிபலம்.

அதிபல மாகு மொருவர்க் கொருவர்
பிறர்மாண் பொருது தன்மாண் கூறல்.

எ - டு :—வேணீ சங்காரம். ஐ - அ.

அருச்சுனன்:—"தாய் தந்தைகளே! தங்கள் புதல்வர் யாவனுதவிகொண்டு பகைவரனைவரையும் வென்று விடலாம் என நம்பினரோ, யாவனைப்பெற்றுள்ள செருக்கால் உலகைத் துரும்பாய் அவமதித்தனரோ அத்தகைய ராதா குமாரனை (கர்ணனை)ப் போர் முனையில் வென்ற பாண்டவர் நடுவனாகிய யான் தங்களை வணங்குகின்றேன்." என்பது முதல்,

துரியோதனன் :—(பீமனை நோக்கி) "அடேய்! நான் உன்னைப் போல் தற்புகழ்ச்சி வல்லவனல்லன். போர்க்களத்தில் என்கதையால் மார்பெலும்பு முறிந்து கண்டார் கலங்கக் குருதிவெள்ளத்தில் நீ உறங்குவதை உன் உறவினர் விரைவில் காண்பர்."

[1] என்பதுவரை உள்ள பீம துரியோதனர்கள் பேச்சு அதிபலமாம்.

---

1. நாற்பதாம் பக்கம் பார்க்க.

கண்டம்.

தருண மொவ்வா நிகழ்ச்சி நிகழ்தல்
அறிஞர் கண்ட மாகு மென்பர். 18

எ - டு :—உத்தர ராம சரிதம். மு - அ.

இராமன் :—இவள் என் மனைத்திரு. இவள் என் கண்களில் அமுதவத்தி. இவளுடைய இவ்வூறு [1] என் உடலிலிட்ட சந்தனக் குழம்பு. குளிர்ந்து மென்மைவாய்ந்த இவள் புயம் என் கழுத்திலிட்ட முத்துமாலை. இவள் தொடர்புள்ள எது என் அன்பிற் குரியதல்லாதது? பிரிவுமாத்திரம் இவளதாயினும் பொறுக்க வொண்ணாததாயிருக்கின்றது.

பிரதீகாரி :—(திடீரெனத்தோன்றி) தேவா! வந்திருக்கிறார்.

இராமன் :—யார்?

பிரதீகாரி :—தங்கள் நெருங்கிய தொண்டன் து(ர்)ருமுகன்.

அவசியந்திதம்.

சுவைச்சொற் பொருளை மாற்றி யுரைத்தல்
அவசியந் திதமென் றறிஞர் அறைவர்.

எ - டு :—சலித ராமம்.

சீதை :—குழந்தாய்! நாளைக்கல்லவா நீங்கள் அயோத்தி செல்லப் போகிறீர்கள். போனால் மன்னரை வணங்கி வழிபடுங்கள்.

இலவன் :—தாயே! நாங்கள் அரசரை அண்டிப் பிழைக்க வேண்டுமா?

சீதை :—குழந்தாய்! அவர் நும்தந்தை யல்லவா?

இலவன் :—இராகவன் எங்கள் தந்தையா?

சீதை :—குழந்தாய்! உங்களுக்கு மாத்திரமல்ல. உலகனைத்திற்கும்.

நாளிகை.

மறைபொருள் நகைமொழி நாளிகை யாகும். 19

1. ஸ்பர்சம்.

எ - டு :—முத்திரா ராக்கசம். மு - அ.

ஒற்றன் :—ஐயோ! அந்தண! சினம் தவிர்க. உன் ஆசிரியர் சிலவற்றையறிவர். என் போன்றவர் சிலவற்றையறிவர்.

மாணுக்கன் :—எம் ஆசிரியர் அனைத்துமறிந்தவர் என்ற புகழைப்பறிக்க விரும்புகிருயா ?

ஒற்றன் :—நும் ஆசிரியர் அனைத்து மறிவராயின் சந்திரனை வெறுப்பவன் எவன் என்று அறிவாரா? பார்ப்போம்.

மாணுக்கன் :—இதையறிந்து பெறும்பயன் ?

சாணக்கியன் :—'சந்திர குப்தனிடத்தில் பகையுள்ள மக்களை யானறிவேன்' என்று ஒற்றன் கூறியதாயிற்று.

அசத்(ற்)பிரலாபம்.

பொருந்தா முரண்மொழி யசத்பிர லாபம்.

போ - ரை :—இது இணைவின்மை என்ற சொற்குற்றம் பாற்படும் என்பதில்லை. கனவு இறுமாப்பு பித்து குழவித்தன்மை முதலியவற்றில் முரண்மொழியே விபாவமாம்.

எ - டு :—குழவிப் பருவம்.

வாசுகியின் ஒள்ளிய குகைவாய்களைக் கடைவரை திறந்து நஞ்சுநிறைந்த முளைகள் போன்ற அதன் பற்களை விரலால் தொட்டு 'ஒண்ணு,....மூணு,.....ஒம்பது,....எட்டு,....ஏயு,...ஆறு' என்று முறை மாறி எண்ணும் கந்தனுடைய குழவிப் பருவச்சொற்கள் உமக்கு நன்மை பயக்குக.

பிரிவாற்ருமைப்பித்து.

எ - டு :—விக்கிரமோருவசீயம். நா - அ.

புரூரவன் :—அன்னச்சேவலே! என் காதலியைக் கொடு. அவள் நடையை நீ பறித்துளாய். ஒருபகுதி நின்பாலுள்ளது அறிந்தேன். மற்றவையும் நின்பாலுண்மை திண்ணம்.

பித்து.

எ - டு :—

குன்றுகளைத் தின்றுளேன். கனலில் குளித்துளேன். வானைக் குடிப்பேன். அரியும் அரனும் அயனும் என் புதல்வர்கள். ஆதலின் ஆடுகிறேன்.

வியாகாரம்.

பயன்வே றுகொளும் நகைமொழி யாடல்
வியாகா ரமெனப் புலவர் புகல்வர். 20

எ - டு :—மாலவிகாக்கினி மித்திரம். இ - அ.

இலாசிய மென்னும் நிருத்தவகையின் முடிவில் மாலவிகை புறபடும் பொழுது—

விதூடகன் :—கடமையைச் செய்யாது செல்லுதல் தகாது.

கணதாசன் :—(விதூடகனை நோக்கி) ஐயா! பகருங்கள். ஏதேனும் முறைதவறு நேர்ந்ததா? தாங்கள் கண்டீர்களா?

விதூடகன் :—முதலில் காலையில் அந்தணரை வழிபட வேண்டும். தவறிவிட்டாள். (மாலவிகை சிரிக்கிருள்.)

இது முதலாய பரிகாசப் பேச்சினல் அரங்கில் சிறிது தங்க நேரிட்ட தலைவியைத் தலைவன் ஐயமின்றிச் சிறிது நேரம் காணலாயிற்ருதலின் இது வியாகாரம்.

மிருதவம்.

குற்றமும் நற்றமும் மாற்றிக் கூறல்
கற்ருேர் மிருதவ மென்றுரைத் தனரே.

குற்றத்தை நற்றமெனல்.

எ - டு :—சாகுந்தலம். இ - அ.

நிணநீர் நீங்கி இடை மெலிவதால், உடல் பணியாற்றும் பண்பு மிக்கு விளங்குகிறது. அச்சம் சீற்றம் இவைகளில் அடவி விலங்குகளின் உள்ளம் மாறுபடும்வகை உணரப்படுகின்றது. அசையும் குறிக்கோள்களை வில்லாளிகள் குறிதவருதடித்தல் என்ற பெருமை வாய்ந்துளது. ஆதலின் வேட்டையை வியசனம் (துயர்) என்பது தவறு. இத்தகைய களிப்பு வேருென்றிலுமில்லை.

வேட்டை யென்ற குற்றம் நற்றமாகக் கூறப்படுதல்காண்க.

நற்றத்தைக் குற்றமெனல்.

எ - டு :—

வெற்றியை விழையுமரசன், எப்பொழுதும் அமைதியின்றி வருத்தம் மிகுந்து தூக்கமின்றி அச்சத்தோடுயிர் வாழ்கிருன்.

இரண்டும் கூறல்.

எ - டு :—

நல்லோர் நன்னடைத்தையின் வளர்ச்சியை விரும்பிக் கட்டு களுக் குட்படுதல் பழிக்கஞ்சுதல் முதலிய பல்வகைத் துயருறு கின்றனர். பகுத்தறிவற்றவன், நன்மை தீமையென்ற வேற்றுமை கருதாது தோன்றியதைச் செய்கிறான். ஆதலின் தக்கவின்ன தகா தெனவின்ன வென்றெக்க வுன்னுதுவாழும் வாழ்வே வாழ்வு.

என்பன பதின்மூன்றும் ஆமுகத்தின் அங்கங்கள்.

இவற்றுள் ஒன்றின் வாயி லாகப்
பொருளை யல்லது பாத்திர மொன்றைக்
குறிப்பா லுணர்த்திச் சூத்திர தாரன்
பிரத்தா வனையின் முடிவில் விலகும். 21

பிறகு கதையின் விரிவு தொடங்கும். 22

ஆதிகாரிகமெனும்

முக்கியக் கதை.

யாவரும் விரும்பும் சீரிய பண்பும்
தாவறும் மறமும் தண்புக ழவாவும்
மாபெரு முயல்வும் மறையளி தகையும்
பாபெரு பெரும்புகழ்ப் பெருங்குடித் தோற்றமும்
தீங்கறு தீரோ தாத்தத் தன்மையும்
பாங்கினில் பெற்ற பூவுல காட்சியும்
தாங்கிய வரசர் தவமகன் தேவன்
இருவரு ளொருவன் தலைவன். பழநூல்
மருவிய கதையே தலைக்கதை யாகும். 23

போ - ரை :—மறைவழி முரணாத நூல்களில் கூறிய சீரிய பண்புள்ளவனும், இராமயணம் மகாபாரதம் முதலியவைகளில் கூறப்பெற்றவனும், தீரோதாத்தனுமாய அரசர்தவமகனை அல்லது தேவனைத் தலைவனாகவுடைய உலகறிந்த கதையையே நாடக நூலில் முக்கியக் கதையாக அமைக்க வேண்டும்.

தலைவன் தகுதிக் கியைந்த தலாததாம்
சுவையொடு முரணும் சொல்செயல் முதலாம்
நவையை நீக்கலோ மாற்றலோ வேண்டும். 24

எ - டு :—

மறைந்து வாலியைக் கொன்றபகுதி உதாத்த ராகவத்தில் விடப்பெற்றது. தன்னைக் கொல்லவந்த வாலியை இராமன் கொன்றான் என்று வீரசரிதத்தில் மாற்றியமைக்கப் பெற்றது.

முதலோடு முடிவை யிவ்வா றுன்னிக்
கதையை ஐந்து பகுதியாய்ப் பகுத்துப்
பகுதி தோறும் ஐயிணை வுகளும்
அறுபான் நான்காம் அவற்றி னுறுப்பும்
முறையே அமைத்து முடித்தல் வேண்டும். 25

போ - ரை :—*தகாதனவற்றையும் சுவை முரண்களையும் விலக்கியோ மாற்றியமைத்தோ கதையைத் தூய்மைப்படுத்தி, அரங்கில் குறிப்பாய் அறிவிக்கத் தக்கவைகளையும் நேரில் காண்பிக்கத்தக்கவைகளையும் பிரித்து முறைப்படுத்திக் கொண்டு, முன் ஒளியில் கூறிய பீசம் பிந்து பதாகை பிரகரி காரியம் என்ற அருத்தப் பிரகிருதி (பொருள் மூலங்)களுடன் ஐந்து அவத்தை (நிலை)களைப் பொருத்தி, ஐந்து பகுதிகளாகக் கதையைப் பிரித்துக்கொள்ளல் வேண்டும். பிறகு ஒவ்வொரு பகுதியிலும் பன்னிரண்டு பதின்மூன்று பதினான்கு என்ப போன்ற சந்தியங்கங்க (இணைவுறுப்புக்க)ளையும் அமைத்தல் வேண்டும்.*

ஒன்று முதலா மிணைவு குன்றித்
தோன்றும் பதாகா விருத்தக் கதைகள். 26
ஏற்ற பெற்றி இணைவுறுப் புகளாம்.
இணைவே யின்றிப் பிரகரி யமையும். 27

போ - ரை :—*தொடர்பு பற்றிவந்த பதாகைக் கதையை முக்கியக் கதையினும் ஒன்று இரண்டு மூன்று அல்லது நான்கு இணைவுகள் குறைவுறும் வண்ணம் அமைத்தல் வேண்டும். அதன் உறுப்புக்களையும் முக்கியக் கதையுடன் முரணிலா வகையில் அமைத்தல்வேண்டும். தொடர்புபற்றியே வந்த பிரகரியென்னும் மற்றொரு வகைக் கதையை இணைவுகள் முற்றுறா வண்ணம் அமைத்தல் வேண்டும்.*

செயலின் அமைதி செவ்விதின் நோக்கி
விட்கம் பகமல தங்கமி வற்றுள்
ஒன்றை முதலில் தொடங்கல் வேண்டும். 28

செயல் அமைதி.

காண்புகு கதைக்கு வேண்டிய தாயினும்
மாண்சுவை யில்லாப் பகுதி விடுத்து,

விடுத்த பகுதி உணர்த்த வேண்டி
விட்கம் பகத்தை யமைத்தல் வேண்டும்.
ஆதியின் நின்றே சுவையுடைத் தாயின்
ஆமுக வாயிலாப் பாத்திரம் தோற்றி
ஆதியின் நின்றே அங்க மமைக்க. 29

அங்கம்.

உற்ற தலைவ னுறுசெய லதனைத்
தெற்றெனக் காணும் தன்மை யமைந்து
பிந்துவின் விரிவு யாவும் பொருந்திப்
பல்வகைப் பயனும் சுவையும் அமைவும்
நல்வகை நண்ணிய தங்க மெனலாம். 30

போ - ரை :—அங்கமென்பது மடி[1] போன்று அரங்கில் தலைவர் செயல்களை நேரில் காண்பிப்பதாகவும், பிந்துவை விரிவாக அறிவுறுத்தத்தக்க நிகழ்ச்சிகள் மிக்கதாகவும், பல்வகைப் பயன்களுக்கும் சுவைகளுக்கும் உறைவிடமாகவு மிருத்தல் வேண்டும்.

அனுபாவ விபாவ தாயீ பாவம்
அணுகி விலகு மபிசாரி பாவம்
அனைத்தும் அங்கிச் சுவையை நன்கு
செழிக்கப் பேணும் முறையி லமைக்க. 31

போ - ரை :—அங்கிச்சுவை யென்பதில் அதன் தாயீபாவம் அடங்கியுளதாதலின் சூத்திரத்தில் உள்ள தாயிபாவம் என்றசொல் வேறு சுவைகளின் தாயிகளைக் குறிக்கும். 'அணுகி விலகும்' என்பது 'ஒன்றுக்கொன்று கலப்புள்ள' என்று பொருள்படும்.

சுவையை மிகவும் பெருக்கிப் பொருளை
அறவே மறக்க விடுதல் தவறும்.
பொருளும் அணியும் மிகவும் பெருக்கிச்
சுவையை மறைத்து விடலும் தவறே. 32

போ - ரை :—கதை, சந்தி, சந்தியங்கங்கள், உவமை முதலிய அணிகள் இவைகளை வளர்த்திச் சுவை குன்றவிடுதல் ஆகாது.

---

1. வடமொழியில் அங்கம் என்ற சொல் நாடகத்தின் ஒரு பகுதி யென்றும், மடி (கால்களை மடித்துட்காரும் பொழுது அமையும் துடை முதலிய அவயவங்களின் மேல்புறம்) என்றும் பொருள்படும்.

பெருமித மல்ல துவகைச் சுவையே
தலைமைச் சுவையாம் பிறசுவை யெல்லாம்
உறுப்பா யமையும். வியப்புச் சுவையை
நிருவக ணத்தில் அமைத்தல் முறையாம். 33

போ - ரை :—வேறு சுவைகளின் தாயிபாவங்கள் தலைமைச் சுவையைப் பேணிவளர்க்கும் என்பதால் வேறு சுவைகள் தலைமைச் சுவைக்குறுப்பாம் என்று கூறியதாயிற்று. மறித்தும் 'பிற சுவையெல்லாம் உறுப்பாயமையும்' என்று கூறுதலேன் எனின் கூறுதும். தனக்கெனவமைந்த அனுபாவ விபாவ வியபிசாரி பாவங்களால் பேணிவளர்க்கப் பெற்றபொழுது தாயிபாவம் சுவையெனப் பெற்று தலைமைச் சுவைக்குறுப்பாம். அவ்வாறு பேணப் பெறுத தாயிபாவம், வியபிசாரிபாவம் என்ற முறையில் உறுப்பாம்.

நெடுவழி நடையே கொலையே போரே
அரசு நாடழிவே முற்றுகை யிடலே
உணவே கலவி யின்ப நுகர்வே
உடையணி வதுவே யனுலே பனமே
யெனுமிவை யரங்கி லோவ்வா தனவே. 34-35

போ - ரை :—இவை போன்றவைகளைப் பிரவேசகம் முதலியவைகளால் குறிப்பாயுணர்த்த வேண்டுமேயன்றி நேரில்காணும் வகையில் அங்கங்களில் அமைத்தலாகாது.

தலைவர் கொலையைத் தெரித்தல் தவறும்.
அவசிய மாயின விடலும் தவறே.

போ - ரை :—தலைவர் கொலையுறுவதைக் குறிப்பாலுமுணர்த்தலாகாது. தேவர் மூதாதையர் சடங்கு முதலிய இன்றியமையாப் பகுதிகளைக் குறிப்பாலோ நேரிலோ காண்பித்தல் தகும்.

ஒருதலைப் பயனுடை யொருபகல் நிகழ்வும்
தலைவரின் தொடர்பும் தாங்கிய தங்கம்.
மூவரோ நால்வரோ பாத்திரம் ஆவர்.
யாவரும் இறுதியில் அரங்கின் அகல்வர். 36

போ - ரை :—ஒரு நாட்கண் நிகழ்ந்த நிகழ்ச்சி யுள்ளதாகவும் ஒரே தலைப்பயனுள்ளதாகவும், தலைவரின் தோற்றமுள்ளதாகவும், அளவற்ற நாடக பாத்திரங்கள் இல்லாததாகவும் அங்கம் அமைக்

கப் பெறுதல் வேண்டும். அங்கத்தினிறுதியில் அப்பாத்திரங்கள் அரங்கினின்றகலுதல் வேண்டும்.

மற்று மதன்கண் பதாகைத் தானமும்
பிந்துவும் முடிவில் பீசமும் ஆகும். 37
பிரவேச காதியுள் ஒன்று மமையும்.
ஐந்து முதலாப் பத்தீ ருக
அங்கம் நாடக நூலுள் அமையும். 38

பிரகரணம்.

உலகிய லோட்டிய கற்பனைக் கதையும்,
அறம்பொரு ளின்ப மவாவு மனத்தோ(டு)
அபாயம் மலிந்த தீர சாந்தனும்
அமைச்ச னந்தணன் வணிகன் தலைவனும்,
பொருந்தி யமைந்து, சுவையும் சந்தியும்
பிறிதுள வுறுப்பும் நாடக நூல்போல்
செறிந்து விளங்கும் பிரகர ணமெனல். 39—40

பொ - ரை :—*ஆசிரியன் அறிவினால் ஆக்கப் பெற்றதும் உலகியலக்கு முரண்படாததுமாகிய செயற்கைக்கதை, அமைச்சன் முதலிய மூவருள் ஒருவனும் இடையில் நேரும் ஊறுகளை விலக்கிப் பயன் பெறுபவனும் தீரசாந்தனுமாகிய தலைவன், எனுமிவ்விரண்டும் பிரகரணத்திற்குள்ள விசேடம். சுவை முதலியவைகள் நாடக நூல்போல் அமையும். மந்திரி யென்பான் அமைச்சரிலும் சார்த்த வாகன் என்பான் வணிகரிலும் அடங்குவர்.*

நற்குல மடந்தை நலனுறு கணிகை
என்றிரு தலைவி தலைவற் காவர்.
நற்குல மடந்தை, கணிகை, யிருவர்,
என்றித் முப்பாற் பட்டு விளங்கும். 41
முன்னவ ளில்லாள், பின்னவள் வெளியாள்.
தம்முள் சதியில ரிருவரு மாவர்.
முன்னதி ரண்டும் தூவிய லாகும்.
பின்னது சொல்லின் கலப்பிய லாகும்.
பின்னும் கொடியர் நிறைந்துள தாகும். 42

பொ - ரை :—*கணிகை யென்பாள் விலைமாதரில் ஓர்வகுப்பு. "உருவம் நடத்தை சீர்மை முதலிய சீரிய பண்பு பெற்ற வேசிக்*

கன்னி கணிகை யென்ற பெயர் பெறுவதுடன் நன்மக்கள் திரளினும் இடம் பெறுவாள்,'' என்று கூறப்பெற்றுளது. ஆகப், பிரகரணத்தில், குலமடந்தை, வேசி, இவ்விருவர், என மூவகைத் தலைவிகள் உண்டு. தரங்கதத்தத்தில் வேசியே தலைவி. புட்பதூதிகத்தில் குலமடந்தையே தலைவி. மிருச்சகடிகத்தில் இருவரும் தலைவிகள். வஞ்சகர் சூதர் முதலிய கொடியவர்கள் நிறைந்துள்ள மூன்றும் வகுப்பு சங்கீர்ண ப்ரகரணம் எனல் மரபு.

நாடிகை.

வேறுள கலப்பினம் விலக்குவான் வேண்டி
நாடிகை யிலக்கணம் நவின்ற தியாண்டு.

பொ - ரை :—'வழக்கிலுள்ள நாடிகை யென்ற காட்சிநூலும், வழக்கற்ற பிரகரணிகை யென்ற காட்சி நூலுமாக இருவகை நூல்கள் நாடிகை யென்ற பெயரால் கூறப்பெறுகின்றன.' என்று பரத முனிவரின்[1] சுலோகத்திற்குப் பொருள் கூறிச் சிலர் பிரகரணிகை யென்றதோர் பிரிவுளதாக நினைக்கின்றனர். அது தவறு. ஏனெனின் பெயரும் இலக்கணமும் குறிப்பிடப் பெறவில்லை. நாடிகையின் இலக்கணமே பிரகரணிகைக்கும் பொருந்து மெனின் வேறென்று கூறவியலாது போம். பிரகரண மென்று முன் கூறப் பெற்ற காட்சி நூலில் உள்ளன போன்ற பொருள் சுவை தலைவன் முதலியவைகளே பிரகரணிகையிலும் என்று கூறின் பிரகரணத்தினின்றும் வேறுபாடில்லாது போம். முன்பு தொகையில் பெயர் கூறாவிடினும் பின்னால் நாடிகை யெனும் வகைக்கு இலக்கணம் கூறிய பரதமுனிவரின் கருத்தென்ன வெனின் கூறுதும். தூய (கலப்பற்ற) காட்சி நூல்களின் இலக்கணக் கலப்பினால் கலப்பினங்கள் அமையு மாதலின், கலப்பினமாகிய நாடிகைக்குத் தனித்து இலக்கணம் கூறியது நாடிகை தவிர வேறு கலப்பினக் காட்சி நூல்கள் தகாவென அறிவுறுத்தல் வேண்டும் என்பதே.

புகழ்மலி தீர லலித நாயகனும்
உறுப்பமை யுவகை யங்கிச் சுவையும்
பெறுதலாம் நாடக நூலத னின்றும்
பிரகர ணம்நின் றுறுவது பொருளே. 43

---

1. अनयोश्च बन्धयोगात् एको भेदः प्रयोक्तृभिर्ज्ञेयः ।
प्रख्यातस्त्वितरो वा नाटीसंज्ञाश्रिते काव्ये ॥

போ-ரை:—பிரகரண நூல்போல் கற்பனைக் கதையைப் பொருளாகவும் நாடக நூல்போல் புகழ் பெற்ற அரசனைத் தலைவனாகவும் பெற்று விளங்கும் நாடிகை யென்ற கலப்பினக் காட்சிநூலைத் தவிர்த்துப் பிரகரணிகை யென்ற பகுப்பு வேறொன்றில்லை யென்றறிக. அங்கங்களும் பாத்திரங்களும் வேறுபடுதலின் பிரகரணிகை யென்ற பிரிவு பெறப் பெறுமெனின்

நாற்பா லங்கமும் நனியுறு மகளிரும்
வேற்றுமை யாக்குமேல் ஒன்றிரு மூன்றென
வேறுறு மங்கம் பாத்திரம் முதலிய
வேற்றுமை யெண்ணில நாடிகை பெறுமே. 44

போ - ரை :—நாடிகை யென்பது பெண்பாற் சொல்லாதலின் மகளிர் பலருளர் என்பதூஉம், கைசிகி விருத்தி பெற்றுளதாதலின் அவ்விருத்திக்குள்ள நான்குறுப்புக்களின் எண்ணை யொட்டி அவமரிசம் தவிர்ந்த நான்கு சந்திகள் கொண்ட நான்கு அங்கங்கள் உள வென்பதூஉம் தகுதி முறையில் கூறப்பெற்றது.

தலைவிய ரிருவர். முதலவள் மானம்
பெருமை வன்மை பெருங்குடிப் பிறப்பு
பெற்றவள். இளையாள் அற்றவள் இனியாள்.
முன்னவள் அன்பால் பின்னவள் சேர்க்கை. 45—46

போ - ரை :—அற்றவள்—முன்னவள் போல் குடிப்பிறப்பு முதலிய பெற்றவள்.

அந்தப் புரத்திலும் அல்லா விடத்திலும்
கண்டும் கேட்டும் காத லவள்பால்
புதிது புதிதாக் கிளர்ந்து வளர
முதலவ ளஞ்சி முயலுவன் தலைவன். 47

போ - ரை :—அந்தப் புரத்தில் ஆடல் பாடலாதிய நிமித்தமாய் அணுகிக்காண நேர்ந்த ஓர் இளநங்கையிடம் காதல் கொண்ட தலைவன் தன் முதல் மனைவியாலாம் இடையூறுகளுக் கிடையில் தன் காதல் வளர்ச்சியைக் காண்பிப்பதாக அமைத்தல் வேண்டும்.

நாடிகை யங்கம் நான்காம். அவையும்
கைசிகி யங்கம் நான்கும் பெறுமே. 48

போ - ரை :—கைசிகி விருத்தியின் உறுப்புக்களுக்கு இலக்கணம் உரைக்கப் பெற்றுளது. ஒவ்வோருறுப்பும் முறையே நாடிகையின் ஒவ்வோரங்கத்தில் அமைந்து நிற்கும்.

பாணம்.

நலனில் தலைவன் நடத்தை பற்றிய
நல்லதோர் செயற்கைக் கதையை அங்கம்
ஒன்றில் விடனும் புலவன் ஒருவன்
தானே அமைத்து நடித்தல், அதுபோல்
பிறராக் கியதை நடித்தல் பாணம். 49

விளித்தல் உரைத்தல் மறுமொழி கொள்ளல்
முதற்ற வானுரை வழியால் ஆகும்.
புகழ்ந்து கூறி விளக்கப் பெற்ற
பெருமிதம் இன்பம் இரண்டே சுவையாம். 50

தன்னுறுப் பார்ந்த முகநிரு வகண
சந்தி யிரண்டும் பாரதி நடையும்
இலாசிய வுறுப்புப் பத்தும் அமையும். 51

போ - ரை :—நலனில்லா நாயகர்—திருடர் சூதாடுபவர் முதலியோர். அவர்களின் நடத்தைபற்றித் தானியற்றிய அல்லது பிறரியற்றிய கதையை ஓர் விடகவி அரங்கில் அபினயித்துக் காட்டல் பாணம். இது பெரும்பான்மை பாரதி விருத்தியுளதாம். ஆகாய பாடிதம் வாயிலாக உரையாடல் முதலியவை நடைபெறும். தெளிவுறக் காண்பிக்க வியலாமைபற்றி வீரச்சுவையையும் இன்பச் சுவையையும் முறையே சௌரியம் சௌபாக்கியம் இவற்றைப் புகழும் வாயிலாகக் காண்பித்தல் வேண்டும்.

இலாசியவுறுப்புக்கள்.

கேயப தத்தோடு திதபாட் டியமும்
ஆசீ னத்தோடு பூக்கண் டிகையும்
திரிகூ டத்தோடு பிரச்சே தகமும்
திவிகூ டத்தோடு சைந்தவ மொன்றும்
உத்தமோத் தமமும் உரைபதி லுரையும்
இலாசிய வகையின் உறுப்பா கும்மே, 52—53

பிரகசனம்.

சுத்தம் விகிர்தம் சங்கரம் எனவே
முப்பிரி வுள்ளது பிரகச னமெனல்.
பாணம் போன்று பல்லுறுப் புக்களும்
நகைச்சுவை ஆறும் பெற்று விளங்கும் 54

போ - ரை :—*பொருள், இணைவு, இணைவுறுப்புக்கள், இலாசியம் முதலியவைகள் பாண மெனும் நூல் வகையில் கூறியது போல் அமையும்.*

சுத்தப் பிரகசனம்

கோலமும் நடையும் கோமாளிப் பேச்சும்
சால நகைச்சுவை பயப்பன வாகும்.
பாகண்டி மறையோர் சேடர் சேடியர்
ஆகிய நடிகர் பலர்பெறும் சுத்தம்.

போ - ரை :—*பாகண்டிகள்—சாக்கியர் நிர்க்கிரந்தர் முதலியோர்- மறையோர்—மிகவும் நேரிய பண்புடையோர், அல்லது பிறவிப் பெருமை யொன்றே வாய்ந்தவர். பிரகரணத்தில் பிரதானச் சுவையாய நகைச் சுவைக்கு இவர் விபாவகர் ஆவர். அவர்களின் இயற்கை நடத்தைகளையும் சேடர் சேடியர் முதலியோரின் இயற்செய்கைகளையும் சுத்தப்பிரகசனம் சித்திரித்துக் காண்பிக்கும்.*

விகிர்தப் பிரகசனம்.

காமுகர் கோலமும் பேச்சும் பொருந்தித்
தாபதர் கஞ்சுகி முதியோர் அலிகள்
வாமமா நடித்துக் காட்டல் விகிர்தம். 55

போ - ரை :— *காமுகர்—நேர்மையற்றவன், கள்ளநட்பன். பணியாள் முதலானோர். தாபதர் முதலானோர், சாரன் பணியாள் முதலியவர்போல் கோலமணிந்து பேசி நடிப்பதாக அமைக்கும் பிரகசனம் விகிர்தப் பிரகசனமாம். இயல்நிலை மாறி நடிப்பதால் இப்பெயர்.*

சங்கீரணப் பிரகசனம்.

மேய்ங்நெறி யற்ற பாத்திரம் மேலிந்து
வீதியி னுறுபபும் கலந்தது சங்கரம். 56

போ - ரை .—*வீதியென்னும் காட்சி நூலில் கூறப்பெற்ற உறுப்புக்கள் பல கலந்துளது சங்கீரணப் பிரகசனமாம்.*

டிமம்.

கைசிகி யொழிந்த விருத்தி மூன்றுடனே
காசினி யறிந்த உயர்கதைப் பொருளும்,
தேவ ரியக்க ரிராக்கதர் முதலாம்
பத்துட னறு மதமிகு தலைவரும்,
உவகை நகையிவை யொழிந்த சுவையும்,
மாயையும் மயக்கும் மகேந்திர சாலமும்,
ஞாயிறு திங்கட் கோள்களும் பொருந்தி
விமரிசம் விடுத்த இணைவுகள் நான்கும்
முக்கிய மாயதோர் வெகுளிச் சுவையும்
பகுப்புகள் நான்கும் படைத்திலங் கும்டிமம். 57-58 59

பொ - ரை :—'டிம' என்னும் (திரளைக்குறிக்கும்) வினையடி இங்கு தலைவர் திரளினுடைய செயலைக் குறிக்கும் நூலைக்கூறும். கதை, இதிகாசம் முதலியவைகளில் உள்ளதாய் இருத்தல் வேண்டும். பாரதி சாத்துவதி ஆரபடி யென்ற மூன்று விருத்திகள். வீரம் வெகுளி பீபற்சம் (இளிவரல்) வியப்பு கருணம் அச்சம் ஆகிய அறுவகைச் சுவைகள். அறுநோக்குளதாய சினமே தலைச்சுவையாம். முகம் பிரதிமுகம் கருப்பம் நிருவகணம் எனும் நான்கிணைவுகளும் அவைதம் உறுப்புக்களும் மாயை மகேந்திரசாலம் முதலியவைகளும் அமைந்திருக்கும். பிரத்தாவனை முதலிய மற்றவை நாடகத்திற் போல் கண்டு கொள்ளவும். திரிபுரதாகம் எனும் காட்சி நூல் டிமமெனும் பகுப்பிற்படும் என்று பரதர் கூறியுள்ளார்.

வியாயோகம்.

மதம்புகழ் மிகுந்த மக்கட் டலைவரும்
உவகை நகையலா உயர்அறு சுவையும்
கருப்பம வமரிசம் கழிந்தமூன் றிணைவும்
ஒண்டொடி நிமித்த மல்லாப் போரும்
ஒருநாள் நிகழ்ச்சி யுரையோ ரங்கமும்
உலகறி கதையும் வியாயோ கத்துள. 60—61

பொ - ரை :—மக்கள் பலர் பொருதலால் வியாயோகம் என்று பெயர். டிமத்தில் உள்ளன போல் அறுசுவைகள். விருத்தியின்றிச் சுவையில்லை. சுவைகளைக் கூறியிருப்பதால் விருத்திகளைக் கூறியதாயிற்று. ஆதலின் கைசிகி யொழிந்த மூன்று விருத்திகள் வியா

யோகத்தில் அமைந்திருத்தல் வேண்டு மென்பது பெறலாகும். தந்தையைக் கொன்றதால் முனிவெய்திய பரசுராமன் ஆயிரம்கை யருச்சுனனைப் போரில் கொன்றது போன்ற மகளிர் நிமித்தமல்லாப் போர் வருணிக்கப் பெறுதல் வேண்டும்.

சமவகாரம்.

புகழும் பெருமையும் பொலிந்து விளங்கும்
புத்தேளிர் அவுணர் பன்னிரு தலைவரும்,
தனித்தனி அவர்பெறும் பல்வகைப் பயனும்,
தேவா சுரமாம் திப்பியக் கதையும்,
அவம ரிசமல் நால்வகை யிணைவும்,
வேறுள நூல்போல் விரிஆ முகமும்,
கைசிகி மங்கிய விருத்தி நான்கும்,
பல்சுவை யுறுப்பாம் பெருமிதச் சுவையும்,
இயலும் விதியும் பகையும் விளைத்த
கபட மூன்றும் அறம்பொரு ளின்பம்
அவற்றால் ஆகும் உவகை மூன்றும்
முற்றுகை போர்காற் றங்கி யவற்றால்
மூண்ட வித்திரவ மூன்றும் முறையே
பெறுமூ வங்கமும் சமவகா ரத்துள.
முதலில் இரண்டில் மூன்றில் முறையே
பன்னிரு நான்கிரு நாழிகைக் கதையும்,
இரண்டோ டொன்றே டொன்று மிணைவும்,
ஏற்ற பேற்றி விதியி னுறுப்பும்
ஏற்று விளங்குமிக் காட்சி நூலில்
பிந்துவும் நுழைவும் பொருந்தா வென்பர். 62—67

போ - ரை:—பயன்கள் பல தலைவர்களிடம் தனித் தனியாப் பிரிந்து பொருந்துவதால் இந்நூல் சமவகாரமெனப் பெயர் பெறும். 'வேறுள நூல் போல், என்றுளதால் எல்லா உருவகங்களினும் ஆமுகம் அமைந்திலங்குவது புலனும். முகம் பிரதிமுகம் கருப்பம் நிருவகணம் என்ற நான்கங்கள். தேவரும் அசுருமாம் பன்னிரு தலைவர். கடற்கடைவில் திருமால் முதலியோர் திருமகள் முதலிய பல்வேறு பயன்களைப் பெறுவது போல் இப்பன்னிரு தலைவரும் பல்வேறு பயன்களைத் தனித்தனியாய்ப் பெறுவர். பெருமிதம்

தலைச்சுவையாம்: மற்றவை யதனுறுப்பாம். மூன்றே அங்கங்கள். அவற்றுள் முதலது பன்னிரு நாழிகையில் நிகழ்ந்த கதைப்பகுதியைக் கூறுமளவுள்ளது. முறையே இரண்டாவது நான்கு நாழிகைக் கதையையும் மூன்றுவது இரண்டு நாழிகைக் கதையையும் கூறும். நாழிகை யென்பது இரண்டு கடிகைகள் கொண்டது. ஒவ்வோரங்கத்திலும் மூன்று கபடங்களும் மூன்று வித்திரவங்களும் மூன்று சிருங்காரங்களும் முறையே அமைதல் வேண்டும். வீதியின் உறுப்புக்களையும் அமைந்தவரை அமைத்தல் வேண்டும். நாடகத்தில் கூறப்பெற்றுள்ள பிந்துவும் பிரவேசகமும் இதில் தகா.

வீதி.

கைசிகி விருத்தியும் குறிப்புண ருவகையும்
ஏனைச் சுவையுள் சிற்சில பகுதியும்
உத்தாத் தியகம் முதலிய உறுப்பும்
ஒன்றல திரண்டா மோண்பாத் திரமும்
பாணம் போன்ற இணைவுறுப் பங்கமும்
சாலப் பெற்று விளங்கும் வீதி. 68—69

போ - ரை:—வீதி—தெரு அல்லது உறுப்புக்களின் வரிசை. அவை போன்றுளதால் வீதியெனப் பெற்றது. பாணமெனும் வகையிலுள்ளது போல் உறுப்புக்கள் அமையும். நிறைவின்மையின் உவகைச்சுவை குறிப்பாயுணர்த்தப்பெறும். ஏனைச்சுவைகளும் சிறிது காண்பிக்கப்பெறும். உவகைச் சுவையாதலின் கைசிகி யமைந்தது.

அங்கம்.

நூலா சிரியன் நுண்ணிய வழிவால்
சால விரிந்த புராணக் கதையும்,
மகளிர் வருந்தி யழுகூக்குரலும்,
அவலச் சுவையும் பலராய் நின்ற
பகுத்தறி வில்லா நரநா யகரும்,
பாணம் போன்ற இணைவுறுப் பங்கமும்,
சொற்கோண் டுணர்த்தும் போர்வெற்றி தோல்வியும்,
பெற்று விளங்கு மித்தனி யங்கம். 70—71

போ - ரை:—தனியங்கம் (உத்ஸ்ருஷ்டிகாங்கம்) என்றதால் நாடகம் முதலிய காட்சி நூல்களின் உட்பகுப்பாம் அங்கத்தினும் இது வேறென்பது புலனும்.

ஈகாமிருகம்.

ஈரியற் கதையும் எதிரேதிர் நின்ற
வானவன் மண்ணவ னுமிரு தலைவரும்,
இணைவு மூன்றும் அங்கம் நான்கும்,
ஏய்ந்து விளங்கும் ஈகா மிருகம்.
தீரோத் ததரா மிவ்விரு தலைவருள்
பண்பொழி பின்னவன் பாசபந் தமிலா
விண்ணுறை மங்கையை வலிய வேண்டி
இழிதகைக் காதல் எள்தகு செய்கை
வழியுற நிற்பன். இருவருள் பகையை
மிகையுற வளர்த்திப் போரும் கொலையும்
நிபத்தால் விலக்கல் வேண்டும்இந் நூலுள். 72—75

பொ - ரை :—*மான் போல் பெறலரிய தலைவியைத் தலைவன் பெற விரும்புதலால் இந்நூல் ஈகாமிருகம் எனப் பெயர் பெறும். இது புராணக்கதை முதலியவைகளில் கவி கற்பனையும் கலந்த ஈரியற் கதை. எதிர்த்தலைவன் அறிவின்மையின் நெறி முறை தவறி நடப்பவன் ஆவான்.*

உரை முற்றிற்று.

இல்வகை பத்துள நாடக நூல்க
ளிலக்கண வழியதனைச்
செவ்விதி னுய்ந்துக தைப்பொருள் முன்னுள
நூல்களை யும்துருவிச்
செவ்விய சொற்றொடர் இனிய விருத்த
மியல்புறு மணிகளுடன்
நவ்விய நாடக நூல்களி யற்றுத
லேநவை யறுபணியாம். 76

மூன்றுமொழி முற்றிற்று.

நான்காமொளி.

தோ - ய் :—இனிச் சுவைகள் விளக்கப் பெறுகின்றன.

விபாவங் களுட னனுபா வங்களும்
சாத்துவி கங்களும் சஞ்சா ரிகளும்
சேர்ந்து சுவைத்தற் குரித்தாய்ச் செய்த
தாயி பாவமே னும்நிலைக் கருத்தே
சுவையென் றுராய்ந் துரைத்தன ரூரவோர். 1

பொ - ரை :—விபாவம் அனுபாவம் சாத்துவிகம் வியபிசாரி என்ற நால்வகைப் பாவங்களுக்கும், உவகை பெருமிதம் முதலிய எண்வகைநிலைக் கருத்துக்(தாயிபாவங்)களுக்கும் மேலேஉரிய இடங்களில் இலக்கணம் கூறப்பெறும். நூல் வாயிலாகவும் அபினய வாயிலாகவும் விபாவம்முதலிய நால்வகைப் பாவங்களையும் முறையே கேட்டும் கண்டும் உணரும் பொழுது அவையினரின் உள்ளத்தில் உறைந்துள்ள உவகை முதலிய நிலைக் கருத்துக்கள் கிளர்ந்து நிறைந்த ஆனந்தமாக மாறிச் சுவையெனும்பெயர் பெறுகின்றன. ஆதலின் அவையினரே சுவையினர் (ரசிகர்) ஆவர். நூலோவெனின் அத்தகைய ஆனந்தமயச் சுவையை அவையினரின் அகத்தில் ஆக்கக் காரணமாயிருக்கின்றது. ஆதலின் ஆயுள்வளர்ச்சிக்குக் காரணமாயுள்ள நெய்யை ஆயுள் என்பது போல் சுவைக்குக் காரணமாயுள்ள நூலைச் சுவையுடைத்து (ரசவத்) என்பர்.

விபாவம்.

அவற்றுள் அணிமிக் கறியப் பெறுதலான்
முதற்ற தாய விபாவம் தாயியைப்
பேணி வளர்க்கும் பணியுடைத் தாகும்.
ஆலம் பனமென வுத்தீ பனமென
அவ்வி பாவ மிருவகைத் தாகும். 2

பொ - ரை —நூல்களில் உவமை உயர்வுநவிற்சி முதலிய அணிகள் கொண்டு இது இத்தகையது என்று சிறப்பித்துக் கூறப்பெறுகின்றனவாக நாமறியும் தலைவன் முதலிய பாத்திரங்களும் இடம் பொழுது முதலிய முதற்பொருள்களும் விபாவம் ஆகும். இவ்

விபாவம் முறையே ஆலம்பனவிபாவ மென்றும் உத்தீபனவிபாவ மென்றும் கூறப்பெறும். "விபாவம் என்று அறியப்படும் பொருள் ...." என்று பிறவிடத்தும் இது கூறப் பெற்றுளது. அவற்றை உரிய இடங்களில் ஒவ்வொன்றாகச் சுவைகளில் இயைத்துக் காண்பிப்போம். இவ்விபாவங்கள் அரங்கில் உண்மையாகவே இருக்க வேண்டு மென்பதில்லை. சொற்களால் அறிவித்தலே போதும். நேரில் கண்டது போலாகும். இவ்விபாவங்கள் பொதுத்தன்மை யுள்ளனவாயினும் அவையினர் உள்ளத்தில் சிறப்பாக அவரவரைச் சேர்ந்தவையாகத் தோன்றி ஆலம்பன விபாவங்களாகவும் உத்தீபன விபாவங்களாகவும் ஆகின்றன. ஆதலின் உண்மைப் பொருள் இல்லை என்ற குறையில்லை.

"சொல்லுணர் உருவோ டறிவிற் றேன்றும்
கஞ்சன் முதலிய விபாவந் தன்னை
எதிருள தேபோல் அவையினர் அறிவர்."

என்று பருத்திருகரியும் கூறினர். "இவை நின்று பொதுத் தன்மை வாயிலாகச் சுவைகள் உண்டாகின்றன." என்று சட்ச கச்ரீகாரரும் உறைத்தார்.

ஆலம்பன விபாவம்.

எ - டு :—

விக்கிரமோருவசீயம். மு - அ.

ஒளிதரும் திங்களோ உவகைச் சுவைக்கு ஒருறைவிடமாய காமவேளோ அல்லது மலர்மலி வசந்தனோதான் இவளைப் படைத்த பிரமன் ஆக இருந்திருக்க வேண்டும். மறைகளைப் பயின்று உணர்ச்சியற்றுவிட்டவனும் புலன் நுகர்வில் விருப்பற்றவனுமாய அக்கிழமுனி (நான்முகன்) உளங்கவரிவ்வுருவை எவ்வாறியற்றக்கடவன்?

உத்தீபன விபாவம்.

எ - டு :—காப்பியப் பிரதீபம்.

இதோ கருப்பூரம்போன்ற தூயவெண் திங்கள் தன் நிலவால் உலகனைத்தையும் வெண்மையாக்கிக் கொண்டு களங்கமற்ற வானில் தோன்றுகின்றது. வெள்ளிக் கம்பிகளினும் மிக்க விளங்கு

கின்ற இவனுடைய நேர்மையான கதிர்களால், இந்நிலவுலகு அழுக்கற்ற தாமரைநூல்களாலாகிய கூண்டில் வைக்கப் பெற்றுளது போல் விளங்குகின்றது.

அனுபாவம்.

கருத்தைத் தெளிவுறக் காட்டும் விகாரம்
அனுபா வமென வறைந்தன ரறிஞர்.

பொ-ரை:—அவையோர்களின் உள்ளத்துறைந்துள்ள உவகை முதலிய நிலைக்கருத்துக்களை நன்கு நுகரச் செய்கின்றவையும், அந்நிலைக் கருத்துக்களைப் பேணி வளர்த்துச் சுவைகளாக்குகின்றவையுமான 'புருவநெறித்தல் கடைக்கணித்தல்' முதலியவைகளே அனுபாவங்களாம். அவையோரால் துய்க்கப் பெறுதலானும் (அநுபூயந்தே) உவகை முதலிய நிலைக் கருத்துக்களுக்குப் பிறகு தோன்றுதலானும் (அநுபவந்தி) இவை அனுபாவங்கள் என்று கூறப் பெறுகின்றன. நூல் அபிநயம் இரண்டிலும் இது பொது. 'கருத்தைக்..........காட்டும் விகாரம் அனுபாவம்......................' என்று மூலத்தில் கூறியது உலகியல் சுவையைப்பற்றியது. நாடகவியலிலோ வெனின் புருவநெறித்தல் முதலிய இவ்வனுபாவங்கள் (கருத்தைப் பேணுவனவாதலின்) காரணங்களே யாம்.

எ - டு :—தனிகன்.

இள நங்காய்! கொடி போன்ற உன் புருவங்கள் பிறழ்ந்து நெளிய, மார்பகம் எடுப்பொடு பொலிய, கொம்பன்ன உன்னுடல் வியர்த்து நனைய, நீ, மயிர்க் கூச்செறிந்து வெட்கத்தை விட்டுத் தலை நிமிர்த்திப் பாற்கடல்நுரைநிரையன்ன உன் கடைக்கண் பார்வைகளைச் செலுத்திப் பார்க்கும் முகத்தையுடைய அவ்விளையவன் சொல்லத்தரமற்ற பாக்கிய முள்ளவன்.

என்பன போன்ற பல உதாரணங்கள் மேலே ஒவ்வொரு சுவைக்கும் காண்பிக்கப்பெறும்.

காரணம் காரிய மெனுமிம் முறையில்
கூறிய விரண்டும் தேர்தல் வழக்கு. 3

பொ - ரை :—உலகியல் சுவைக்கு முறையே காரணமாகவும் காரியமாகவும் உள்ள விபாவம் அனுபாவமெனும் இவ்விரண்டும் உலகவழக்கின் வாயிலாக அறியப் பெறுதல் எளிதாதலின் விசே

டித்து இலக்கணம் கூறல் மிகையாம். 'விபாவானுபாவங்கள் இரண்டும் உலகியற்கையால் அறியப் பெறுகின்றன. உலக நடையைப் பின்பற்றுகின்றன. உலக வழக்கால் அறியப்பெறும் இலக்கண முடையன. ஆதலின் விசேடித்து இலக்கணம் கூறப் பெறவில்லை' என்று பிறரும் கூறியுள்ளனர்.

பாவம்.

இன்பம் துன்ப மிவை முதலாய
பண்பால் பண்புறச் செய்தல் பாவம்.

போ - ரை:—நடிக்கப் பெறுபவர் (இராமன் முதலியோர்)களிடத்தில் உள்ளவைகளாகப் புலப்படுத்தப் பெறும் இன்ப துன்பங்களை நேரிலறிகின்ற அவையினர் உள்ளத்தில் உண்டாகும் இன்பம் துன்பம் முதலிய உணர்ச்சியே பாவம். 'சுவையும் மணமும் (பிற பொருளில் கலப்பது) போல் இது எல்லோருள்ளத்தும் கலந்தொன்றித் தன்மய மாக்குகின்றது பெரும் வியப்பு.' என்று பிறரும் கூறியுள்ளனர்.

'சுவைகளைத் தோற்றுவிப்பது பாவம்' என்று சிலரும் 'கவியின் உள்ளத்துறையும் கருத்தை வெளியுறுத்துவது பாவம்' என்று சிலரும் கூறுகின்றனர் ஆயினும் அங்குள்ள 'பாவம்' என்ற சொற்கள் முறையே அபினயத்தையும் காப்பியத்தையும் குறிக்கும் என்றும் அவ்வாறு குறித்தற்குரிய காரணங்களை அச்சொற்றொடர்களே விளக்கு மென்றுமறிக.

தாயிபாவம் (நிலைக்கருத்து) என்றும் வியபிசாரிபாவம் என்றும் பாவம் இருவகையாம். இதை மேலே கூறுதும்.

சாத்துவிக பாவங்கள்.

சாத்திய முறையில் அனுபாவ மாயினும்
சத்துவம் நின்று சமைதலின் சிலவாம்
சாத்துவி கங்கள். சத்துவம் பண்புறல். 4

போ - ரை:—பிறருடைய இன்ப துன்பங்களை உணர்வதற்குரிய பண்பு மிகுந்த உளம் படைத்திருத்தல் சத்துவம் ஆம். "சத்துவம் என்பது உள்ளத்துள்ளதாய ஓர் பண்பு. உள்ளம் பலவற்றில் சிதறுமல் சமாதான நிலையை யெய்திய பொழுது அது தோன்

றும். களிப்புற்றவனும் வருத்தமுற்றவனும், கண்ணீர் மயிர்க்கூச்சல் முதலிய விகாரங்களை அடைவதற்குக் காரணமான அவர் மனநிலை சத்துவமாம்.

அத்தகைய மன நிலையிலிருந்து தோன்றும் மனோவிகாரங்கள் சாத்துவிக பாவங்கள். அவை நின்று தோன்றும் கண்ணீர் மயிர்க்கூச்சல் முதலிய வெளித் தோற்றங்களும் சாத்துவிக பாவங்களாகின்றன.-

இவ் வெளிவிகாரங்கள் உள் நிலையை உணர்த்தும் அனுபாவங்களாகவும் ஆகின்றன. ஆதலின் இவை இருவகைகளாகவும் ஆகின்றன." என்று பிறரும் கூறியுள்ளனர்.

சாத்துவிக பாவங்களின்

தொகை.

தம்பம் பிரலய முரோமம் பொடித்தல்
வியர்வை நிறனழி நடுக்கம் கண்ணீர்
குரலழி வென்பன சாத்து விகங்கள். 5

தம்பம் என்ப துடல்செய லறுதல்.
பிரலய மென்ப துணர்வழி வாகும்.
மற்றவை யுலக வழக்கா லறிக. 6

எ - டு :—ஏமசந்திரன்.

நடுங்குகிறள். முகம் வியர்க்கின்றது. உடலும் உரோமம் பொடிக்கின்றது. கொடி போன்ற கையில் ஆடும் வளையல்கள் மெதுவாக ஒலிக்கின்றன. மயங்குகிறள். உன் அன்பிருந்தும் உள் கலக்கம் நீங்கினளில்லை.

வியபிசாரி பாவங்களின்

பொது விலக்கணம்.

தாயி பாவ மெனும்நிலைக் கருத்தில்
வாரி யலைபோல் தோன்றி மறைந்து
சீர்மை பெற்று விளங்கும் பாவம்
வியபிசா ரியெனச் சொன்னர் சான்றேர். 7

போ - ரை :—கடல் உள்ள பொழுது அலைகள் தோன்றி மறைவது போல், உவகை முதலிய தாயிபாவம் உள்ள பொழுது

தோன்றி மறையும் தன்னிகழ்வு முதலிய பாவங்கள் வியபிசாரி பாவங்களாம்.

தொகை.

தன்னிகழ்வு வலியழிதல் ஐயம் சோர்தல்
உள்ளுவகை யுணர்வின்மை மகிழ்தல் தீனம்
உக்கிரத்தோ டுளக்கவலை பயம் பொருமை
தன்னிகழ்வு தாளாமை யிறுமாப் போடு
முன்னினைவு மரணமதம் முதிர்ந்த தூக்கம்
நித்திரையோ டுணர்தல்நாண் அபசு மாரம்
உள்ளழிக்கு மோகமுடன் அறிவு சோம்பல்
ஆவேக மாராய்ச்சி யவகித் தானம்
சன்னிமுதல் நோயுடனே மதிவே றித்தல்
உள்வருத்த முற்சாகம் சபலத் தன்மை
என்னுமிம் முப்பத்து மூன்று பண்பும்
சஞ்சாரி பாவமெனச் சாற்றி னரே. 8

தன்னிகழ்வு.

உணர்வு கேடு பொறை யின்மை முதற்றால்
எய்தும் வெறுப்பே தன்னிகழ் வாகும்.
கவலை கண்ணீர் நெட்டுயிர்ப் பெளிமை
நிறனழி வாதி யதனுள் தோற்றும். 9

மெய்யுணர்வால் வரும் வெறுப்பு.

எ - டு :—பருத்திருகரி. வைராக்கிய சதகம்.

விரும்பிய கறக்கும் செல்வம்
　　பெற்றனம். பயனென் கொல்லாம்?
அரும்பகை முடியில் அடிகள்
　　வைத்தனம். பயனென் கொல்லாம்?
விரும்பினர் செல்வந் தன்னால்
　　பேணினம். பயனென் கொல்லாம்?
அரும்பெற லுடலோ டூழி
　　வாழ்ந்தனம். பயனென் கொல்லாம்?

கேட்டி (விபத்தி)னால் வரும் வெறுப்பு.

எ - டு :—

அரசனழிவு. உறவினர் பிரிவு. நாடு நீங்கல், கடுவழி நடை. முதலிய எல்லாம் நான்........................அனுபவிக்க வேண்டி யிருக்கிறது.

பொறையின்மையால் வரும் வெறுப்பு.

எ - டு :—

பகைவருளரென்பதே இழுக்கு. அதிலும் ஒரு தாபதன் பகைவன் என்பது பெருமிழுக்கு. அவனும் நம் நாடு புகுந்து நம்மவரைக் கொல்கின்றான். நானும் (ராவணனும்) உயிர் வாழ்ந்துளேன். இந்திரனை வென்ற என்பிள்ளை யிருந்தென்ன? கும்பகருணனை யெழுப்பி யென்ன? துறக்கக் கணிகையரைக் கட்டிப்புரண்ட என்னுடைய இப்பெரும் புயங்களால்தான் என்னபயன்?

உவகை பெருமிதம் இரண்டினும் கலந்து நிற்கும் தன்னிகழ்வு பின்வருமாறு.

எ - டு :—

போரில் பகைவரின் வலியமிடற்றினின்றெழும் குருதி வெள்ளம் தோய்ந்து விளங்கவுமில்லை. காதலிகளின் பருத்த முலைத்தடங்களிலுள்ள குங்குமக்குழம்பு படிந்து விளங்கவுமில்லை. இத்தகைய என் கைகள் பயனற்றவைகளே!

தக்க பகைவனையோ காதலியையோ அடையா ஒருவன் கூறும் வெறுப்பு மொழியிது. இவ்வாறே பிறசுவைகளினும் இவ்வெறுப்பின் வகையைக் காண்க.

ஒரு சுவைக்கு முறுப்பாகாது தனித்து நிற்கும் தன்னிகழ்வு பின்வருமாறு.

எ - டு :—

மரமே! நீ யார்? நான் நல்வினையில்லா இலவமரம். வெறுப்புடையவன் போல் பேசுகின்றாயே! நன்கறிந்தாய். ஏன் இவ் வெறுப்பு? சொல்லுகிறேன் கேள். இதற்கிடது புறத்தில் ஆலமரமொன்றுளது. வழிப்போக்கர் எவ்வகையினும் அதையே அடைகின்றனர். நான் பாதையிலிருந்தும் என்னிழலும் பிறருக்கு உதவவில்லை.

தன்னிகழ்வெனும் இவ்வியபிசாரி பாவம், விபாவங்களுக்கும் அனுபாவங்களுக்கும் சுவைகளுக்கும் உறுப்பாகவும் தனித்தும் வருவது அறிக.

வலியழிதல்.

கலவி பசிநீர் நசைமுத லதனுல்
புலன்வலி குன்றல் வலியழி வாகும்.
நிறனழி நடுக்க மூக்க மின்மை
உரைசெயல் வாட்ட மதன்கண் ணுகும். 10

எ - டு :—சிசுபாலவதம். பதினொன்ரும் சருக்கம்.

விண்மீன் போன்ற கண் விழிகள் சுழல, திங்கள் போன்ற முகம்வாட கருநெய்தல் போன்ற கண்கள் உறக்கத்தினுல் ஓய, அவிழ்ந்து தொங்கும் இருள் போன்ற கூந்தலையுடைய இவ்விலை மாதர்கள் (இரவு நீங்குவது போன்று) அரசன் மாளிகையினின்று நீங்குகின்றனர்.

தன்னிகழ்வில் கூறியது போன்று இங்கும் உட்பகுதிகளைக் காண்க.

ஐயம்.

பிறர்செய் கொடுமை தன்னுடைத் தவற்ருல்
தனக்கொரு தீமை தோன்றுமென் றெண்ணல்
ஐயமென் றுரைப்ப ரான்றோர். இதனுள்
நடுக்கம் வறட்சி யஞ்சிய நோக்கம்
குரல்நிற மாற்ற முதலிய வாகும். 11

பிறர் செய் கொடுமையால்வரும் ஐயம்.

எ - டு :—இரத்தினுவளி. மூ - அ.

எல்லோரும் தன் (செய்கைத)னை யறிந்தனர் என்று நாணி முகத்தை மறைக்கின்ருள். இருவர் கூடிப் பேசுவதைக் கண்டால் தன்னைப்பற்றிப் பேசுவதாய் நினைக்கிருள். தோழிகள் களிமுறுவல் கண்டு மிக்க நாணமடைகிருள். ஆதலின் அன்பினள் அகத்தில் ஐயம் கொண்டுளாள் என்று நினைக்கிறேன்.

தன்னுடைத் தவற்ருல்வரும் ஐயம்.

எ - டு :—வீ - ச. இ - அ.

மலைபோன்ற மாரீசனைத் தொலைவிலிருந்தே புல்லெனத் தள்ளினான். சுபாகுவையும் தாடகையையும் அழித்தான். அவ்வரசகுமாரன் என் உள்ளத்தை வருத்துகின்றான்.

இம்முறையில் பிறவும் காண்க.

சோர்தல்.

நெடுநடை கலவி முதலிய வற்றால்
நேர்படு மிளைப்பே சோர்த லாகும்.
வருடல் வியர்த்தல் முதற்ற வதன்கண்.

நெடுநடையால் வரும் சோர்வு.

எ - டு :—உத்தர ராம சரிதம். மு - அ.

வழிநடை வருத்தத்தினால் நொந்து வதங்கிய உன் மெல்லிய உறுப்புக்களை வலியவணைந்து வலி நீங்கச் செய்தேன். கசங்கிய முளரி நூல் போல் நொய்ய உன் உறுப்புக்களை என் மார்பகத்து வைத்துக்கொண்டே நீ உறங்கிவிட்டாய். இதெல்லாம் எங்கு நடந்ததோ.................... .

கலவியால் வரும் சோர்வு.

எ - டு :—சிசுபால வதம். பத்தாம் சருக்கம்.

காதற் பெருக்கால் கலவியின் கடைநிலையை யெய்தீய பருமுலை மாதர்கள் கருத்து நீண்ட தம் கூந்தல் வியர்வைபடிந்த நெற்றியில் படியுமாறு கலவிநோவு பெற்றனர்.

உவகை.

அறிவு வன்மை யாதிகா ரணத்தால்
உறுமன மகிழ்ச்சி யுவகை யென்பர்.
விழுமிய வின்ப மதன்கண் ணாகும். 12

அறிவினால் வரும் உவகை.

எ - டு :—பருத்திருகரி.

மரவுரியால் யாம் மகிழ்கின்றோம். துகிலால் நீ மகிழ்கின்றாய். நம்மிருவர் மகிழ்ச்சியும் ஒருவகைத்தே. வேற்றுமையில் விசேட மொன்றுமில்லை. பேராசை பிடித்தவனே பெரும்வறியன். மனம் மகிழ்வுறு மேல் செல்வமென் வறுமையென் ?

வன்மையால் வரும் உவகை.

எ - டு :—இரத்தினவளி. மு - அ,

பகையற்றவரசு. பொறுப்பு வாய்ந்த தக்கவமைச்சன். நல்லாட்சி பெற்றுத் துயரற்றின்புற்றுவாழும் குடிகள். பிரத்தியோதனன் (அவந்தி நாட்டரசன்) மகள். இளவேனில். நீ. காமன் (இச்சேர்க்கையால்) களிப்புறட்டும். எனக்கோ இஃதொரு பெருவிழா.

உணர்வின்மை.

விரும்பிய வேனும் வெறுப்பன வேனும்
கண்டோ கேட்டோ வதன்பய னாகச்
செயலறி வழித லாம்உணர் வின்மை.
இமைப்பில் நோக்கம் வெறித்த நோக்கம்
உரையில் தன்மை யாதி யதன்கண். 13

விரும்பிய நோக்கலால் வரும் உணர்வின்மை.

எ - டு :—குமார சம்பவம். எட்டாம் சருக்கம்.

'தோழி! தனிமையில் அச்சமின்றிக் காதலனுக்குக் காதற் பணிவிடைசெய்.' என்று தோழிகள் கூறியதனைத்தையும் தன் அன்பன் எதிரில் வந்து நின்றபொழுது மலைமகள் மறந்து போனாள்.

வெறுத்தன நோக்கலால் வரும் உணர்வின்மை.

எ - டு :—உதாத்த ராகவம்.

இராக்கதன் :—திரிசிரனையும் கரனையும் தூடணனையும் நாயகராய்ப் பெற்றுத் தாமும் பெரியரான அத்துணை இராக்கதர்களையும் கொன்றவன் எவன்?

இரண்டாமவன் :—வில்லேந்தி வந்த அவ்விராமனெனும் தீயனே.

முதலவன் :—அவன் ஒருவனாகவேயா?

இரண்டாமவன் :—பாராமலா நம்பிக் கூறுகிறேன். பார். போர்க்களம் முழுதும் அப்பொழுதுதான் தலையறுபட்ட பனைபோல் உயர்ந்து நின்ற உடற் குறைகளில் கழுகுகள் பாய்கின்றன.

முதலவன் :—தோழ! அவ்வாறாயின் யான் என் செய்வேன்.

மகிழ்ச்சி.

விரும்பிய விழாபோன் றவைமிக நுகர்ந்து
மனம்தெளி வெய்தல் மகிழ்ச்சி யாகும்.
விழிநீர் வார்தல் தழுதழுத் தகுரல்
வியர்வை முதற்ற வதன்கண் ணாகும்.

போ - ரை :—காதலியின்வரவு பிள்ளைப்பேறு விழா முதலிய விபாவங்களினின்று எழும் மனத்தெளிவே மகிழ்ச்சி யெனல். கண்ணீர்வார்தல் உடல்வியர்த்தல் குரல்தழுதழுத்தல் முதலியவை அதன் அனுபாவங்களாம்.

எ - டு :—கடத்தற்கரிய பாலை நிலத்தின் கொடுமையை நினைத்தாள். கடந்துவந்த காதலனைக் கண்டாள். கண் கலங்கினாள். கணவன் ஏறிவந்த கோவேறு குதிரையின் பிடரி பயிர்களில் படிந்த தூளிகளைத் தன் முன்தானையால் துடைத்தாள். புற்கவளங்களைக் கொடுத்தாள்.

பிறவும் இவ்வகையில் காண்க.

தீனம்.

வறுமை முதலாம் வருத்தும் பண்பால்
ஒளியொழிந் திருத்தல் தீனமென் றுரைப்பர்.
இளைத்தல் கறுத்தல் உடல்தூய் தின்மை
இனைய தோன்றல் இதன்கண் ணாகும். 14

போ - ரை :—வறுமை அவமானம் முதலிய விபாவங்களால் மனம் வலியழிதல் தீனமெனல். கறுத்தல், உடை பல் உடல் முதலிய மாசடைதல் இதன் அனுபாவங்களாம்.

எ - டு :—

வயது முதிர்ந்து கண்ணு மழிந்தவென் கணவன் படுக்கையில் படுத்துவிட்டார். தூண்கள் மாத்திரமே குடிசையில் மிகுந்துள்ளன. கார்காலம் நெருங்கிவிட்டது. மகனிடமிருந்து நல்ல வார்த்தை யொன்றும் வரவில்லை. முயன்று பெற்ற எண்ணெய்க் குடுவையும் உடைந்து விட்டது. என்று மனங்கலங்கிய மாமி மருமகள் கருமுதிர்ந்து களைத்திருத்தலைக்கண்டு நெடுநேரமழுதாள்.

உக்கிரம்.

குற்ற மிழைத்தல் குன்றக் கூறல்
கொடுமை யிழைத்தல் முதலிய செய்யும்
கொடிய னிடத்துக் கடுமனங் கொள்ளல்
உக்கிர மாகும். மிரட்ட லுருட்டல்
செறுத்தல் அடித்தல் சென்னி குலுக்கல்
இற்றைய தோன்று மிதன்கண் ணென்பர். 15

எ - டு :—வீ - ச. இ - அ.

பரசுராமன் :—அரசர்குலத்தின் மேலுள்ள கோபத்தால் கருவிலுள்ள சிறுபிண்டங்களையும் அறுத்துத் துணிக்கின்றவனும், இருபத்தொரு தலைமுறையாய் அரசர்கள் அனைவரையும் கொன்றுவருபவனும், அக்குருதியால் குளமாக்கி முன்னோர்களுக்குத் தருப்பணம் செய்து மகிழ்ந்து தணிந்த கோபத்தை யுடையவனுமாகிய வென்னியற்கையை எவர் அறியார்?

கவலை.

விரும்பிய பெறாது வேற்றுணர் வின்றி
ஒருதலை நினைவாய் ஒழிதல் கவலை.
பெருமூச் சுலது பாழ்த்துத் தோன்றல்
மருட்டும் வெப்ப மதனது பாவம்.

எ - டு :—

மடந்தாய்! முத்தையொத்த கண்ணீர்த் திவலைகள் இமைமுனையிலிருந்து நழுவி மார்பகத்தில் விழுந்து, முக்கண்ணன் முறுவலை யொத்த ஆரமாய் விளங்க, நீ, இளம் தாமரை நூலாலாய வளையல்கள் அணியப்பெற்று அழகாய உன்கையில் முகத்தை வைத்துக்கொண்டு நினைத்து வருந்தும் பாக்கியமுள்ளவன் எவன்?

பயம்.

உருமு முதலால் உள்ளம் கலங்கல்
பயமாம் அவ்வயின் நடுக்கம் முதலாம். 16

எ - டு :—சிசுபால வதம். எட்டாம் சருக்கம்.

மீன் துடையில் உராய்ந்து கொண்டு சென்றது. நடுங்கினாள். லீலா விலாச சேட்டைகளின் எல்லையை யடைந்தாள். யாரணை

மின்றியே கலங்கிக் களியாட்டம் புரியும் இளமடந்தையர்க்குக் காரணமும் நேரின் கேட்பானேன்?

பொறாமை.

செருக்கும் கயமையும் சினமும் கொண்டு
பிறருடைப் பெருமை பொறுத்த லின்மை
பொறாமை யென்பர். இதன்கண் ணிகழ்வு
குற்றங் கூறல் புருவ நெறித்தல்
சீற்றக் குறிகள் முதற்றன வாகும். 17

செருக்கினால் வரும் பொறாமை.

எ - டு :—வீரசரிதம். இ - அ.

அவ்விள நங்கை (சூர்ப்பணகை) சென்றிரந்தாள். பயனில்லை. கொடுமையு மிழைத்தான். பிறர் மேன்மையையும் தன்னுடைய புகழ்பெருமைகளின் அழிவையும் பெண்மணி (சானகி) யையும் இராவணன் எவ்வாறு பொறுத்திருக்கக்கூடும்.

கயமையினால் வரும் பொறாமை.

எ - டு :—சுபாடி(ஷி)தாவளி.

பிறர் குணங்களைப் பொறுக்கிலாயாகின் நீயும் (அத்தகைய சீரிய) குணங்களைப்பெற முயல். பிறர் புகழைக் குற்றங்கூறி யழிக்க முயலற்க. விருப்பு வெறுப்பு காரணமாகக் குறைகூறுவதி னின்றும் ஒழிகிலாயாகின் கதிரவனொளியை யுள்ளங்கையால் மறைக்க முயன்றவனாய் வருந்துவாய்.

சினத்தினால் வரும் பொறாமை.

எ - டு :—அமரு சதகம்.

மெல்லியலாளின்முன் மறந்து வேறொருத்தியின் பெயரைக் கூறிவிட்டேன். நாணித் தலை குனிந்தேன். வினைக்கேடனாய நான் ஏதோ கீழே (கால் விரலால்) கீறத் தொடங்கினேன். முடிவில் அக் கோடு மற்றவள் உருவத்தையே பளிங்கென விளக்கியது.

மெல்லியலாள் உண்மை அறிந்தாள். உதடு துடித்தது. கன்னம் சிவந்தது. குரல் தழுதழுத்தது. சித்திரம் சித்திரம் என்றாள். கண்ணீர் மல்கினாள். (தன்) இடது காலாகிய நான்முகன்படையை என் தலைமேல் கோபத்துடன் பிரயோகித்தாள்.

தன்னிகழ்வு தாளாமை.

பிறர்செய் குறைவு தீமொழி முதலால்
அவர்பாற் சினத்தல் தாளாத லின்மை.
வியர்த்தல் சென்னி குலுக்க லடித்தல்
மிரட்டல் முதற்ற வதன்கண் ணாகும். 18

எ - டு :—

பூசனைக்குரிய தங்களை மீறுவதற்காகப் பிராயச்சித்தம் செய்து கொள்வே னல்லாது படை யேந்துதல் என்னும் விரதத்தி லிருந்து பிறழேன்.

இறுமாப்பு.

உயர்குடிப் பிறப்பும் ஓவிய வழகும்
தலைமைப் பண்பும் தக்கதோர் பலமும்
முதலிய வற்றால் மிக்கதோர் பெருமை
யுறுத லிறுமாப் பென்பர் இதன்கண்
பெருமிதப் பார்வை பிறர்பா லிகழ்வு
சிறுமை செய்த லாதிய வாகும். 19

எ - டு :—*வீ - ச. இ - அ.*

இவர் முனிவரும் மறவருமாவர். ஆதலின் யான் பெரு மகிழ்ச்சி கொள்கிறேன். நீ அரச கன்னியல்லவா? நடுங்காதே. இரகு குலமன்னனாகிய யான் புகழ்வாய்ந்த முனிவரும் தினவுறு தோளருமாகிய இப்பரசுராமருக்குத் தக்க பணிவிடை செய்யவல்லவன் அல்லவா?

நினைவு.

ஓத்தன வறிதல் உள்ளுறு சிந்தை
இத்தகை யேது கிளரக் கிளர்ந்த
உள்ளுறு பாவம் ஊக்கு முணர்வே
நினைவா மென்பர். இவ்வயின் புருவம்
மேலுற வெழுதல் முதற்றன வாகும். 20

எ - டு :—*மகாநாடகம். மு - அ.*

தடையேது மில்லாவென்வழியைத் தடுக்குமிது மைநாக மலையா? மகேந்திரனுடைய வச்சிரப்படைக்குப் பயந்த வதற்கு இத் தன்கைய வலிவு எது? கருடனு மிருக்குமா? அவனும் அவன் தலைவ

னும் என்னை யிராவணனென்றறிவர்! ஆம். அறிந்தேன். இது அக் கிழக்கழுகு சடாயுவே. மரிக்க விரும்புகிறது.

மரணம்.

அறியா ரின்மையின் உறுபய னின்மையின்
மரணங் கூறல் விடுத்துச் செல்வாம்.

எ - டு :—

குறித்தநாள் வந்தது. அடிக்கடி சாளரத்தை யடைந்து உன் வழியைப் பார்த்தாள். வேறொன்றும் செய்வதறியாது வெகு நேரம் ஏதோ யோசித்தாள். இப்பொழுதுதான் அழுதுகொண்டே அன்றில் பறவையைத் தோழிகளிடம் ஒப்படைத்தாள். குழந்தை போன்ற மாதவிலதையை இளமாமரத்துடன் இணைத்துவைத்தாள்.

உவகைச் சுவையில் இறத்தலைப்பற்றி எண்ணித்துணிவதாக மாத்திரம் கூறலாம். பிறசுவைகளில் விரும்பியவாறு ஆம்.

எ - டு :—வீ - ச. மு - அ.

:—தாடகையைப் பாருங்கள். கூரிய வெஞ்சரம் மார்பகத்தில் பாய்ந்த உடனே அவயவங்கள் முறிந்து துடிக்க, மூக்கின் இரு துவாரங்களின் வழியாகவும் நுரை யொலிகளுடன் குருதி வெள்ளம் பெருக, இறந்து கிடக்கிறாள்.

மதம்.

நறைமிக வுண்டு நனிகளிப் பெய்தல்
மதமாம். அதன்கண் நடையுரை யுறுப்புத்
தடைமிக வாகும். மேலிடை கடையர்
முறையே உறங்கல் சிரித்த லழுதல்
பெறுவ ரென்பர் பெரிய ரிதன்கண். 21

எ - டு :—சிசுபால வதம். பத்தாம் சருக்கம்.

யவ்வன மதம், காமுகன் (செய்விப்பது) போன்று, நேர்மையுள்ள இளமங்கையைக்கூட உளங்கவர்முறுவலும் வன்மையுறு பேச்சும் காதற்பார்வையும் செய்யுமாறு தூண்டியது.

முதிர்ந்த தூக்கம்.

உலகிய லுணரா ஒருதலை யுறக்கம்
முதிர்ந்த தூக்கம். அதன்கண் மூச்சு
விடுதல் இழுத்தல் முக்கியப் பணியாம். 22

எ - டு :—*சுபாஷி(டி)தாவளி.*

நெல்வயலில் ஓர் மூலேயில் சிறு புற் குடிசையில் தலேயணே யோடு கூடிய வைக்கோற்பரப்பின் மேல் ஆழ்ந்துறங்கும் உழவர் காதலர்களே யணுகாது, குளிர்பனி விலகுகின்றது.

நித்திரை.

சிந்தை சோர்வு சோம்ப லிவற்ருல்
உள்ளம் செயலற் றிருத்த லுறக்கம்.
கண்கள் மூடல் களுக்கண் டுளறல்
அங்க முறித்தல் ஆவி கொட்டல்
என்பன போன்ற விதன்கண் ணுதும். 23

எ - டு :—*சுபாடிதாவளி.*

அம் மானமருமென்னேக்கி பாதி மூடிய கண்களுடன் உறங் கிளுள். சில சொற்கள் மெதுவாக வெளிவந்தன. அவை பொரு ளுள்ளவையு மல்ல. முழுதும் பொருளற்றவையு மல்ல. இன் னும் அவை என் உள்ளத்தில் ஒலிக்கின்றன.

உணர்ச்சி.

முடிவுறல் எழுப்பல் முதலிய வற்ருல்
உறக்க மொழிதல் உணர்ச்சி யாகும்.
கண்ணிமை கசக்கல் கொட்டாவி வீடல்
முன்னேய விதன்கண் முறையே தோன்றும்.

எ - டு :—*சிசுபால வதம். பதினென்ரும் சருக்கம்.*

பின்படுத்து முன்விழித்த இளமங்கையர் நீண்ட கலவியால் அயர்ந்துறங்கும் அன்பர்களே எழுப்பவஞ்சி உடலசையாது அணேந்த தோள் பிறழாது படுக்கையிலே படுத்திருந்தனர்.

நாணம்.

தீய வொழுக்க மாதிய வற்ருல்
தீர மழிதல் நாணென் றுரைப்பர்.
நிறம்வே ருதல் தலேகுனி வொளிதல்
பிறவு மிவ்வழித் தோன்றல் அறிக. 24

எ - டு :—*அமரு சதகம்.*

காதலன் மேலாடையைப் பற்றினல் வணக்கத்துடன் தலை குனிகிருள். வலித்தணைய விரும்பினல் மெதுவாய் அவயவங்களை விலக்கிக் கொள்கிருள். கண்டு நகைக்கும் தோழிகளைக் காண்கிருள். உரையாட கில்லாள். இவ்வாறு புதுமடந்தை முதல்நகை விளையாட்டில் நாணி வருந்துகிருள்.

அபசு மாரம்.

கோளியல் தீமை துன்ப மச்சம்
ஆதிய தாளாக் கோளா றுகளால்
ஆவே சமுறல் அபசுமா ரமேனல்.
வாய்நுரை யெழுதல் வியர்த்தல் நடுக்கல்
வீழல் முதலிய விதனுள் தோன்றும். 25

எ - டு :—சிசுபால வதம். மூன்றும் சருக்கம்.

தரையில் கிடக்கின்றதும் உரத்தொலிப்பதும் (தோள்கள் போன்ற) அலைகள் புரளுவதும் நுரைக்கின்றதுமாய கடலை அவன் அபசுமார நோய்பிடித்துளதாகக் கருதினன்.

மோகம்.

வெறித்தல் அச்சம் வெஃகாத் துன்பம்
கருத்தில் சிந்தை யாதிய வற்றல்
உள்ளம் உணர்வற் றேய்ந்துவீழல்
உள்ள மழிக்கும் மோக மேன்பர்.
திரிபறி யாமை சுழற்சி மோதல்
கண்தெரி யாமை முதற்றன வாகும். 26

எ - டு :—குமார சம்பவம். மூனறும் சருக்கம்.

கடுமதிர்ச்சியால் நேர்ந்த உணர்ச்சி யழிவால் பொறிகள் செயலற்றன. இரதிதேவி சற்று நேரம் காதலன் அழிவை அறியாதாள் ஆயினள். இங்ஙனம் அவ்வுணர்வழிவு அவளுக்குதவியது போலும்.

அறிவு.

அறவோர் உரையும் அறநூ லோத்தும்
இனைய பிறவும் ஏலப் பெற்று
ஐயம் நீங்கி யுண்மை யுணர்தல்
அறிவா மேன்பர். மதியு மஃதே.

எ - டு :—கிராதார்ச்சுநீயம். இரண்டாம் சருக்கம்.

ஆராய்வின்றி எப்பணியையும் விரைந்து செய்துவிடலாகாது. ஆராய்வின்மை ஆபத்துக்களுக்குக் காரணமாம். செல்வங்கள் பண்பை விரும்பும் இயல்புள்ளவை. ஆதலின் ஆராய்ந்து பணியாற்றுபவனையே அவை ஆய்ந்தெடுக்கும்.

சோம்பல்.

கருப்ப மாதி காரண வகையால்
செயலற் றிருத்தல் சோம்ப லென்பர்.
ஆவி கொட்டல் அயர்ந்தமர்ந் திருத்தல்
ஆதிய செய்கை யவ்வழித் தோன்றும். 27

எ - டு :—

கருநிறைவுற்றுச் சோம்பியிருக்கும் இம்மங்கை வருந்தி நடக்கிறாள். வலியக் கேட்பின் வருந்தி மெல்லிய குரலில் பதிலிறுக்கிறாள். அமர்ந்திருக்கவே ஆசைப்படுகிறாள்.

ஆவேகம்.

ஆவேக மென்ப துளங்கிளர்ச் சியுறல்
காரணப் பிரிவால் காரியப் பிரிவாம்.
அரசர் படையெடுத் தெதிர்வரின் ஆங்கு
ஆயுதம் சேனை யாதிய திரட்டும்,
சூறைக் காற்று வுற்ற கிளர்ச்சியில்
தூள்படி யுடலும் துரித நடையும்,
புயல்பொழி மழையால் உறும்பர பரப்பில்
உறுப்புகள் உடலோ டொடுங்கிச் சுருங்கலும்,
இடிநில னதிர்ச்சி சம்பிர மத்தில்
உள்ளும் புறமும் உறுப்புகள் தளர்வும்,
தீமை நன்மை பயந்த விரைவில்
வருத்தம் மகிழ்ச்சி முறையே பெறலும்,
தீயால் புகைசூழ் முகமும், களிற்றால்
பயம்செய லின்மை நடுக்கம் முதலும்,
முறையே நிகழு மென்பர் முதியோர். 28

படையெடுப்பால் வரும் ஆவேகம்.

எ - டு :—

உன்பகைஞர், மலைகளிலும் காடுகளிலும் படுத்துறங்குநராகிக் கனவில் உன்னைக்கண்டு பரபரப்புடன் எழுந்து அஞ்சிக் கலங்கிய கண்களுடன் "வா! வா! குதிரையைச் சித்தமாக்கு. விரைவில் கொண்டுவா. கத்தி யெங்கே. கத்தியுடன் வில்லையும் கொண்டுவா. வந்துவிட்டானோ?" என்று ஒருவர்க்கொருவர் கூறி யலறுகின்றனர்.

சூறைக்காற்றினால் வரும் ஆவேகம்.

எ - டு :—'அரையாடை யலைகின்றது, மேலாடை பறக்கின்றது...............'[1]

புயல் மழையால் வரும் ஆவேகம்.

எ - டு :—

மழை கடுமையாகப் பொழிகின்றது. சமையலாகி யுண்ண வேண்டும். தெருக்களில் நீர் வெள்ளம். சேறு. தலைமேல் சுளகைப் பற்றிக்கொண்டு குறுக்கே யடைக்கப்பட்ட மரப்பலகைகள் மேல் நடந்து நீரைக் கைகளால் அளைந்துகொண்டு பெண்கள் நெருப்பிற்காக வீடு வீடா யலைகின்றனர்.

அதிர்ச்சியி (உற்பாதத்தி)னால் வரும் ஆவேகம்.

எ - டு :—

கைலையங்கிரியைத் தன் பருத்த கரங்களால் இராவணன் பெயர்த் தசைத்துவிட்டான். உமை அஞ்சினாள். கண்கள் மருண்டலைந்தன. சினத்தை விட்டாள். அருகில் அமர்ந்திருந்த அன்பனை அணைந்து கொண்டாள். அரன் ஆனந்தமுற்றார். அவர் திருமேனி சிலிர்த்தது. அத்தகைய அவரமர்வு நம்மைக் காத்தருளுக.

தீமையால் (வெறுக்கற்பாலன நேர்தலால்) வரும் ஆவேகம்.

எ - டு :—உதாத்த ராகவம்.

சித்திரமாயன் :—(பரபரப்புடன்) பெரியோனே! குலத்தலைவனே! இராமா! காத்தருள். காத்தருள்.

மானுருவைவிட்டுப் பெருமரக்க உருவம் கொண்டு அவ்விராக்கதன் இலக்குவனை இழுத்துச் செல்கின்றான்.....................

---

1. இது வட மொழியிலும் இவ்வளவே காணப்படுகிறது.

இராமன் :—பிறருக் கபயமளிக்கவல்ல இலக்குவனும் இராக்கதனிடம் அல்லல்படுகிருனு? எவ்வாறு நம்புவது? இம்முனிவரோ அஞ்சி அலறுகிருர். உள்ளமுளைகின்றது, சானகியைவிட்டு நீங்காதே என்று ஆசிரியன் வேண்டுகின்ருர்? போவதா நிற்பதா செய்வதறியாது திகைக்கின்றேன்.

நன்மையால் (விரும்பிய பெறுவதால்) வரும் ஆவேகம்.

எ - டு :—வீ - ச. மு - அ.

குழந்தாய்! ரகுநந்தன! நிறைநிலவே! அருகில்வா. அணைந்துச்சி முகருகிறேன். மார்பகத்தில் வைத்து இரவும் பகலும் இன்புறச் சுமக்கிறேன். அல்லது உன் கமலத்திருவடிகளை வணங்குகிறேன்.

நெருப்பால் வரும் ஆவேகம்.

எ - டு :—இ - ளி. நா - அ.

அனலே! அணைந்தொழி. அணைந்தொழி. புகைக்கலக்கத்தை விடு. என் எரிபிழம்புகளைப் பரப்புகின்ருய். அன்பினள்பிரிவு எனும் அனலே என்னை எரிக்கவில்லாதிருக்க உன் ஊழிகாலக்கனல் என்னை என் செய்துவிடக் கூடும்.

களிற்ருல் வரும் ஆவேகம்.

எ - டு :—இரகுவம்சம். ஐந்தாம் சருக்கம்.

அக்களிறு தோன்றியது. குதிரைகள் கட்டையறுத்துக் கொண்டு ஓடின. தேர்கள் அச்சுமுறிந்து தலைகீழாய்க் கவிழ்ந்தன. போர் வீரர் அஞ்சி நடுங்கும் அந்தப்புர மாதர்களைக் காக்க விரைந்தனர். இவ்வாறு தானை தங்குமிடம் முழுதும் கலக்கமுற்றது.

ஆராய்ச்சி.

ஐயப் பாடுற் ருழ வறிதல்
ஆராய் வென்பர் அதன்கண் தோன்றும்
புருவ நெறித்தல் விரலை யசைத்தல்
சென்னி சலித்தல் முதலன வெல்லாம்.

எ - டு :—

இலக்குவன் :—

பாராசையுற்று பரதன் பிறழ்ந்து சதியாவிழைத்த பிழையோ
நாரீகுலத்து சிறுமை மிகுத்து நடுவள்நலிந்த நலிவோ
ஆராயினன்ற தருளாழி யண்ணல் மகிழ் தம்பி யாவன் பரதன்
தாரோம்புதந்தை மனையா வளன்னை விதியால் விளைந்த திருவே.

ஆம் !

திருமுடி விழவினின்றும் தூயநற் பண்பினானை
ஒருவரும் நழுவச்செய்யார். உற்ற நல் வினையேநானும்
மறுவரும் பணிகளாற்றி மனமுற மகிழ்தற்காக
விரவிய செயலிதாகும் வேறிலை நினைக்கின்றேனே.

அவகித்தானம்.

நாண்முத லவற்றால் நண்ணும் மாறு
பாட்டை மறைக்கு மங்கவி காரம்
சான்றோர் கூறு மவகித் தானம்.

எ - டு :— குமார சம்பவம். ஆறும் சருக்கம்.

தேவமுனி இவ்வாறுரைத்துக் கொண்டிருக்கையில் மலைமகள் தந்தை பக்கத்தில் முகத்தைக் கவிழ்ந்தவளாய் கையிலிருந்த தாமரை யிதழ்களை எண்ணினாள்.

நோய்.

சன்னி முதலிய பிணிகள் நோயாம்.
அன்னவை விரிவு வேறிடத் தறிக. 29

எ - டு :— அமரு சதகம்.

இடையருக் கண்ணீரை உறவினரிடம் வைத்தாள். கவலையைப் பெரியோரிடம் அளித்தாள். எளிமையை முழுதும் பணிப் பெண்களிடம் கொடுத்தாள். தோழிகளிடம் வருத்தத்தை ஈந்தாள். இன்றோ நாளையோ முடிவான இன்பத்தை யடைவாள். மூச்சுக் காற்றுகள் மாத்திரமே வருத்திக் கொண்டிருக்கின்றன. கவலையுறுதே. பிரிவாற்றாமையாலுற்ற துயரை அவள் பகிர்ந்துவிட்டாள்.

மதிவெறித்தல்.

உடலுறு கோளா றற்றகோட் கோளா
றிவைமுத லவற்றா லாராய் வின்மை

அறிவு வெறித்த லென்று ரான்றோர்.
அழுகை யிளித்தல் ஆடல் பாடல்
ஆதிய தோன்று மதன்கண் ணென்பார். 30

எ - டு :—விக்கிர மோருவசீயம். நா - அ

புரூரவன் :—அடே யற்ப வரக்கனே! நில். நில். என் காதலியை எடுத்துக்கொண்டு எங்கே ஏகுகின்றாய்?

(முடிவில்) இதென்ன அறியாமை!

நீருண்ட முகிலன்றோவிது! செருக்குற்ற விராக்கதனல்லவே! இதுவும் நீண்ட வானவில். அவனுடைய அம்பெறியும் வில்லன்று. (மேலே விழும்) இதுவும் கடுமையான நீர்த்தாரையே! அம்புகளின் வரிசையன்று. உறைப்பொன் போன்றவிதுவும் மின்னொளி. என் காதலியாம் ஊருவசியன்று.

வருத்தம்.

எடுத்த கருமம் முடிவுற லின்மை
இற்றைய வற்றால் உறுதுணி வழிவே
சோற்ற வருத்த மென்பார் சான்றோர்.
உள்ளத் தாபம் உயிர்ப்பு வெதும்பல்
உதவி தேடல் முதலன வாகும். 31

எ - டு :—வீ - ச. மு - அ.

இராக்கதன் :—பெரியாய்! தாடகையே! என்னவிது? நீரில் சுரை ஆழ்கின்றன. அம்மி மிதக்கின்றன. அரக்கர் தலைவனின் ஆண்மையழிந்தது. சிறு மனிசனிடம் பெருமிழிவடைந்தோம். செயலறியாது நின்றவண்ணம் நம்மவரழிவைப் பார்க்கலாயிற்று. எளிமையும் முதுமையும் தடுக்கின்றது. என் செய்வேன்?

உற்சாகம்.

விழுமம் விரும்பல் வேறு வேறுத்தல்
விரைவு முதலாம் காரண வகையால்
உற்ற காலத் தாழ்வு பெறுமை
உற்சாக மெென வுரைத்தன ரான்றோர்.
உயிர்ப்புப் பெருகல் உளத்து வெம்மை
உடலம் வியர்த்தல் முதலன வாகும். 32

எ - டு :—குமார சம்பவம். ஏழாம் சருக்கம்.

பொன்னியற் கண்ணடி தன்னழ குன்னினுள்
அன்புடன் கணவனை யணுக வெண்ணினுள்
மின்னெளி மாதரார் பூணும் கோலங்கட்(கு)
அன்பினர் காணலே பயனென் றூர்களே.

சாபலம்.

விருப்பு வெறுப்புப் பொறுமை யாதி
குணத்தால் கருத்து நிலைபெ றுமை
சபலத் தன்மை யென்றூர் சான்றோர்.
விரும்பிய செய்தல் முரட்டுத் தன்மை
மிரட்டல் முதலன வர்கு மதன்கண். 33

எ - டு :—சுபாடிதாவளி.

தும்பீ ! நீ இறுகத்தழுவிப் புரண்டு விளையாடுவதைப் பொறுக்க வல்ல பல மலர்க் கொடிகள் உள்ளன. அங்கேசென்று மனத்தை மகிழ்வி. இப்புது மல்லிகைக் கொடியினுடைய மகரந்தப் பொடியுண்டாகாத இளமொட்டைப் பருவமின்றி ஏன் வருத்துகின்றுய் ?

பிற உளக்கருத்துக்களும் இவ் விபாவானுபாவங்களிலேயே அடங்குவதால் தனியே கூறுதல் விடுத்தாம்.

தாயிபாவம்.

முரணுடை முரணில் லிருவகைக் கருத்தால்
அருகல் சிறிதும் பெறு(து)அவை யிற்றைக்
கடல்போல் தன்னே டொக்கப் பொருத்தும்
கருத்தே நிலைக்கருத் தாய்விடு மென்பர். 34

போ - ரை :—ஒத்தனவும் ஒவ்வாதனவுமாமிருவகை கருத்துக் (பாவங்)களாலும் மறைவுறுவண்ணம் அமைக்கப்பெறும் உவகை முதலிய பாவங்களே நிலைக்கருத்துக்களாம். பெருங்கதையில்—நரவாகன தத்தன் மதனமஞ்சுகையின்பால் கொண்ட காதல், அவன் வேறு தலைவிகள்பாற் கொண்ட காதலால் மங்கிற்றில்லை. மாலதீ மாதவத்தில் சுடலையங்கத்தில் இளிவரலெனும் (பீபற்சம்) கருத்தால் மாலதியிடத்து மாதவனுக்குள்ள காதற்கருத்து மங்கிற்றில்லை. ஆகலின் ஒத்தனவும் ஒவ்வாதனவுமாய கருத்துக்களைத் தலைமையாம் நிலைக்கருத்துடன் சேர்த்தமைப்பதில், முரண்பாடில்லை.

முரண்பாடு என்பது சேர்ந்திருத்தலின்மையல்லது ஒன்றுலொன்றிற்கழிவு என இருவகைத்தாம். அவற்றில் சேர்ந்திருத்தலின்மை யெனும் முதல்வகை முரண்பாடு இங்கில்லை. எங்ஙனெனில் கூறுதும். ஒருபகுப்பின் பாற்படும் ஒத்த கருத்துக்கள் (பல தலைவிகள் பால் உண்டாம் காதல் கருத்துக்கள் முதலியன) ஒரு திறத்தனவாதலின் சேர்ந்திருத்தல் கூடும். உவகை யெனும் நிலைக்கருத்தொடு அதற்கொத்த சஞ்சாரிபாவங்கள் நாரில் மலர் போல் சேர்ந்திருத்தலில் தவறில்லை. சஞ்சாரிபாவம் முதலியவைகள் உறுப்புக்கள் ஆனமையின் உறுப்புக்களால் உறுப்புக் கழிவின்மையின் ஒன்றுலொன்றிற்கழிவெனும் இரண்டாவதுவகை முரணுமில்லை. இங்ஙனம் பிறவும் காண்க.

ஒரு பகுப்பின் பாற்படாத ஒவ்வாக் கருத்துக்கள் (உவகை இளிவரல் போன்றவை) உறுப்பு உறுப்பி என்ற முறையில் அமையுமாயின் இருவகை முரண்பாடுமில்லை என்று காண்க. ஆயினும்,

ஒருபாற் காதலி யழலுற் றாள்.
ஒருபாற் போர்முழ வொலிகேட் டான்.
பிரிவாற் றுமை போருவ கை
இருபா லீர்க்க வருந்தின னல்.

என்றது போன்றவைகளில் உவகையும் உற்சாகமும்,

தாழ்வரைப் பகுதியில் தவவாழ்வு நல்லதோ
ஆழ்தகு மல்குலா ரணுகுதல் நல்லதோ
வாழ்வுடை மனிதர்காள்! வரம்புற ழாவகைச்
சூழ்வுடன் விவரமாச் செய்வது சொல்லுதிர்.

என்றது போன்றவைகளில் உவகையும் தணிவும்,

மூவுலகு போற்றுமழ குற்றவிள நங்கையிவ னுற்றாள்
கோவெனது தங்கைபழி செய்தசிறு மானிடனு முற்றான்
தீவிரவி ராகமொடு சேணுறு சினம்பெருக லுற்றேன்
காவியணி கோலமிது செய்வதறி யாதுதிகை யுற்றேன்.

என்றது போன்றவைகளில் உவகையும் வெகுளியும்,

ஒன்றிடை யருநினைவி லொன்றிமுகிழ் வெய்தும்முகி ழர்வே
ருன்றுமை முலைத்தட முகத்தழகு நோக்கியினி தாகும்,
ஒன்றுறு சரம்விடும னங்கனழி யும்வகையில் சீறும்,
கொன்றையணி தேவனய னங்களிவை மூன்றுமெமை யாள்க.

என்றது போன்றவைகளில் தணிவும் உவகையும் வெகுளியும்,

ஒன்றுக்கொன்று முரண்பாடில்லா தெங்ஙனமமையு மெனில் கூறுதும். கூறிய இத்தலங்களிலும் நிலைக்கருத் தொன்றுதான். 'ஒருபாற் காதலி...........' என்ற செய்யுளில் போருக்குரிய கால மாதலின் உற்சாகமே நிலைக்கருத்து. மற்றொன்று அதைப் பேணி வளர்க்கின்றதல்லாது தானும் தலையாய நிலைக்கருத்தாக நிற்ப தில்லை. இவ்வாறே 'தாழ்வரைப் பகுதியில்....................' என்ற செய்யுளில் 'வாழ்வுடை மனிதர்காள்' என்றும், 'வறம்புறழாவகை' என்றும் கூறுதலின் தணிவே தலையாய நிலைக்கருத்து. இதுபோல் 'மூவுலகு போற்று மழகுற்ற...........................' என்ற செய்யுளில் எதிர்த்தலைவன் முறை தவறிய இராவணனாதலின் வெகுளியே முதற்கருத்து. 'ஒன்றிடையரு நினைவில்...........' என்ற செய் யுளில் தணிவே நிலைக்கருத்து. ஆதலின் முரண்பாடில்லை யென் றறிக.

பொருள் பலவுள்ள சிலேடைத் தலங்களிலும் அவ்வப் பொருள் கூறும் பொழுது அதற்குரிய நிலைக்கருத்து ஒன்றே நிற் றலின், பொதுவில் பலநிலைக்கருத்துக்கள் தலைக்கருத்துக்களா யிருப்பினும் முரண்பாடில்லை.[1]

நிலைக்கருத்து

உவகை ஊக்கம் வெறுப்பு வெகுளி
நகைவியப் பச்சம் அவலமென் றெட்டாம்.
சமம்சில ருரைப்பர். நாடக நூலுள்
பரவி வளர்தல் இன்மையின் இன்றும். 35

போ - ரை :—பரதமுனிவர் சமநிலைச் சுவைக்கு இலக்கண மும் அதற்குரிய விபாவம் முதலியவைகளும் கூறாது விடுத்துளார். ஆனமையால் சமநிலைச்சுவை யென்றொன்றில்லை யெனச் சிலர் கூறு

1. விளங்காமை விலக்கக்கருதி, வடமொழி முதல்நூலிலுள்ள விரி வைச் சிறிது சுருக்கிக் கூறினோம். வேண்டுபவர் அங்கு காண்க.

கின்றனர்: தொன்று தொட்டுவரும் விருப்புவெறுப்புக்களை விலக்க வியலாமையின் சமமென்ற பொருளே இருத்தற்கில்லையெனச் சிலர் கூறுகின்றனர். மற்றுஞ் சிலர் பெருமிதம் இளிவரல் முதலிய சுவைகளில் சமநிலைச் சுவை அடங்கியுள்ளது என்று கூறு கின்றனர்.

செயல்கள் அனைத்தும் ஓய்தலே சமம் (தணிவு) ஆதலின், அபி னயித்து விளக்க வியலாத அச்சமம் அபினயமே தலையாய்ச் சிறந்து விளங்கும் நாடகம் முதலியவைகளில் நிலைக்கருத்தாகாது என்று நாம் கூறுகின்றோம். நாகானந்தம் முதலிய நாடக நூல்களுள் சமம் நிலைக்கருத்து என்று சிலர் கூறினும், நூல் முடிவுவரை மலயவதி யின் காதலும் முடிவில் அரசு பெறுவதும் முரணுமாதலின், அது சரியன்று. பற்று பற்றின்மை யிரண்டும் ஒரு தலைவனிடத்துக் கூறுதல் முரணும். ஆதலின் நாகானந்த நாடகத் தலைவன் தயாவீரன் எனும் பகுப்பில் சேருவன். உற்சாகமே அந்நூலில் நிலைக்கருத்து• உவகையும் அரசு பேறும் முறையே உறுப்பாகவும் பயனாகவும் அமைகின்றன. ஆதலின் நிலைக் கருத்துக்கள் எட்டே யாகின்றன.

தோ - ய் :—'இனிமை முதலியவைகள் போல் உவகை முத லியவைகள் சுவைக்கப் பெறுதலின் சுவைகள் ஆகின்றன. ஆதலின் நிருவேதம் (தன்னிகழ்வு) முதலியவைகளும் சுவைக்கப் பெறுதலின் சுவைகளாம்.' என்று சிலர் கூறியிருத்தலின் நிலைக்கருத்துக்களும் பலவாகும். அங்ஙனிருக்க நிலைக்கருத்துக்கள் எட்டே யென்று வரை யறுத்தல் எங்ஙன மெனின் கூறுதும்.

இவ்வியல் பின்மையின் தன்னிகழ் வாதி
சேவ்விய சுவையாம் நிலைக்கருத் தன்று.
பேணி வளர்ப்பின் சுவைக்கே டாகும்.
ஆதலின் நிலைக்கருத் தெட்டே யாகும். 36

போ - ரை :—முரண்பாடுடையனவும் இல்லனவுமாம் கருத் துக்களால் இடையறுமை தன்னிகழ்வாதிகளுக்கு இன்மையின் அவை நிலைக்கருத்துக்களாகா. கவலை முதலிய சஞ்சாரி பாவங்கள் தன்னிகழ்வாதி பாவங்களுக்கு இடையுறுதலின் பேணிவளர்க் கினும் அவை சுவைகளாவதில்லை.

தன்னிகழ்வு (நிருவேதம்) முதலியவை நிலைக்கருத்தாகாமைக் குக் காரணம் அவை பயனின்றி முடிதலே என்று சிலர் கூறுவது

தவறு. அங்ஙனமாயின் நகை முதலியவைகளும் பயனின்றி முடிதலின் நிலைக்கருத்துக்களாகாமற் போம்: பரம்பரையாகப் பயனுளதெனின் நிருவேதாதிகளுக்கும் அஃதுண்மையால் அவையும் நிலைக் கருத்துக்களாய்விடும். ஆதலின் நிலைக்கருத்தாகாமைக்குக் காரணம் பயனின்றி முடிதலன்று. முரணுள்ளனவும் இல்லனவுமாம் கருத்துக்களால் இடையறுமையே காரணமாம். அத்தகைய காரணம் தன்னிகழ்வாதிகளுக் கின்மையின் அவை நிலைக்கருத்துக்களல்ல என்று கூறுவதே முறை. நிலைக்கருத்துக்களாவ தின்மையின் தன்னிகழ்வாதிகள் சுவைகளுமாவதில்லை.

கூறிய சுவைகளுக்கு நூலுடன் தொடர்பு எத்தகையது? என்று நோக்கின் சொற்களால் உரைக்கப் பெறுமையின் வாச்சிய வாசகபாவம் என்னும் தொடர்பு இருப்பதற்கில்லை. உவகைச் சுவையுள்ள நூல்களில் உவகை இன்பம் முதலிய சொற்கள் வெகுவாக இல்லை. இருப்பினும் அச்சொற்கள் அப்பொருளைக் கூறுவதினால் உவகை சுவையாகின்றது என்பதில்லை. மற்றெங்ஙனமெனின் அச்சுவைக்குரிய விபாவம் அனுபாவம் முதலியவைகளால் முற்றுறப் பேணி வளர்க்கப் பெறுவதினாலேயே உவகை சுவையாகின்றது. (பிறசுவைகளிலும் இம்முறை காண்க.)

லட்சிய லட்சகபாவம் எனும் (ஆகுபெயர் முறை) தொடர்பும் இருப்பதற்கில்லை. ஏனெனில், ஒருசொல் வாச்சியவாசக முறையில் ஒருபொருளைக் கூறின் அப்பொருள் பொருந்தாவிடின் அப்பொருளுடன் தொடர்புள்ள பொருத்தமுள்ள மற்றொரு பொருளை லட்சிய லட்சகமுறையில் அச்சொல் கூறவேண்டும். 'கங்கையில் இடைச்சேரி' என்னுமிடத்துக் கங்கையெனும் சொல்லுக்கு முதற்பொருள் நீர்ப்பெருக்கு. அதன் கண் இடைச்சேரி இராமையின் 'நீர்ப்பெருக்கு' என்ற பொருளுடன் தொடர்புள்ள 'கரை' என்ற பொருள் இரண்டாம் பொருளாகக் கூறப்படுகிறது. சுவை நூல்களில் 'தலைவன்' முதலிய சொற்கள் வாச்சிய வாசக முறையில் கூறும் முதற் பொருளனைத்தும் பொருத்தமுள்ளனவாயிருத்தலின் லட்சிய லட்சக முறையில் இரண்டாம் பொருளைக் கூறுவதற்கே காரணமில்லை. முதற் பொருள் பொருந்துமாயின் காரணமும் பயனுமின்றி எவனும் எச்சொல்லையும் இரண்டாம் பொருளில் வழங்கான்.

கீழ்க் கூறிய இக்காரணம் பற்றியே.............................. 'சிங்கமிச் சிறுவன்' என்பது போல் பண்பின் வாயிலாகவும் நூல்களில் சுவைகளை அறிவித்தற்கில்லை. வாச்சிய (இம்மூவகை?) முறையிலேயே சுவை விளங்குமாயின் சுவைகளை நுகர்ந்தறியும் வன்மையின்றிச் சொற்பொருள்களை மாத்திரம் அறிந்தவரும் சுவையை நுகர்ந்தவர் ஆவர். 'சுவைகள் கற்பிதங்களே. உண்மையில் இல்லை.' என்பதற்கில்லை. ஏனெனில் கருத்து வேற்றுமையின்றி அனைவரும் சுவைகளை நுகர்கின்றனர். ஆதலின் கீழ்க் கூறிய மூவகை முறையினும் வேறாய வியஞ்சன முறையால் சுவையும் அணியும் கதைப் பொருளும் (பொழிப்புரை) அறியப்படுகின்றன என்று சிலர் கூறுகின்றனர்.

"இளங்கொடிபோல் நடுங்கும் உறுப்புக்களால் தன் உட்கருத்தை வெளியாக்கிக் கொண்டு மலைமகள் தலை வணங்கிக் கடைக் கண்களால் பார்த்துக் கொண்டு நின்றாள்." என்றவிடத்தில் காதலால் தோன்றிய நிலையாம் அனுபாவமும், மலைமகள் என்ற விபாவமும் கூறப் பெறுதலின் உவகைச் சுவை உணரப் பெறுகின்றது. இது (முற்கூறிய மூவகையாலும் தெரியவரும்) சொற்பொருளல்ல. வியஞ்சனவிருத்தியால் தான் தோற்ற வேண்டும்.

"அறவோனே! கோதாவரி யாற்றங்கரைப் புதரிலிருக்கும் சிங்கம் அந்நாயைக் கொன்றுவிட்டது. நீ அச்சமின்றி அங்கே திரியவமையும்." என்றவிடத்துத் தோன்றும் 'போக வேண்டாம் சிங்கமிருக்கின்றது' என்ற பொழிப்புரை வியஞ்சன முறையால் தான் தோற்ற வேண்டும்.

'நெடுங்கண்ணி! உன் முகத்தழகின் ஒளி திசைமுனைகளிலும் சென்று விளங்குகின்றது. ஆயினும் இக்கடல் பொங்கியெழவில்லை. ஆதலின் இது உண்மையில் (சலமே) சடமே' என்றவிடத்துத் தோன்றும் "உன் முகம் திங்கள் போன்றது," என்ற உவமையணி வியஞ்சன முறையால்தான் தோற்றவேண்டும். அருத்தாபத்திப் பிரமாணத்தால் இவை விளங்கா. ஏனெனின் பிரமாணங்கள் வாயிலாகச் சித்தித்துள்ள ஒரு பொருள் பொருந்தாமை (ஒவ்வாமை) காரணமாய் அது பொருந்துதற்காக மற்றொரு பொருள் சித்திப்பதே அருத்தாபத்தி. அத்தகைய பொருந்தாப் பொருள் இங்கில்லை. சொற்றொடரிலிருந்து சொற்றொடர்ப்பொருள் (வாக்கி

யார்த்தம்) தோன்றுவதுபோல் கீழ்க் கூறிய சுவையும் அணியும் பொழிப்புரையும் தோன்றுவதற்கில்லை. ஏனெனின் கூறுதும்.

'அறவோனே !...............திரியவமையும்,' என்றவிடத்து ஒவ்வொரு சொல்லிலிருந்தும் ஒவ்வொரு பொருள் அறியப்பெறுகிறது. இது முதற்படி. பிறகு வினைச்சொல் பெயர்ச்சொல் முதலியவை ஒன்றோடொன்று கலந்துருவாம் சொற்றொட (வாக்கியம்) ரிலிருந்து சொற்றொடர்ப் பொருள் (வாக்கியார்த்தம்) அறியப் பெறுகிறது. இது இரண்டாம்படி. பிறகே 'சிங்கமிருக்கின்றது போக வேண்டாம்.' என்ற பொருள் தோன்றுகின்றது. இது சொற்பொருளுமல்ல. சொற்றொடர்ப்பொருளுமல்ல. ஆதலின் மூன்றாம் படியான இப்பொருள் வியஞ்சனையால்தான் தோற்ற வேண்டும். 'நஞ்சையுண்.' என்ற சொற்றொடரில் தோன்றும் 'பிறரகத்துணவையுண்ணுதே' என்ற சொற்றொடர்ப் பொருள் மூன்றாவது பொருளாகவே தோன்றுகின்றது. தொனியினும் வேறான கருத்தின் வாயிலாகத் தோன்றும் இப்பொருள் சொற்றொடர்ப் பொருள் என்றே வியஞ்சனவாதியும் ஒப்பவேண்டும். ஆதலின் சொற்றொடர்ப் பொருளும் மூன்றாம்படியாயிருத்தல் தகும்.' எனலாகாது. 'நஞ்சையுண்' என்றது தகப்பன் தனயனைப் பார்த்துக் கூறும் சொற்றொடர். வினைச்சொல்லும் செயப்படு பொருளும் பொருந்தாமை கருத்தால் அறியப் பெறும். ஆதலின் 'பிறருணவையுண்ணுதே' என்பதே இரண்டாம்படியில் பொருந்திய சொற்றொடர்ப் பொருளா யமைகிறது. எனவே அங்கு மூன்றாம்படியாக அப்பொருள் தோன்றியதென்பது தவறு.

தோ - ய் :— சுவைச் சொற்றொடர்களில் இரண்டாம் படியில் விப்பாவம் முதலியவை சொற்றொடர்ப் பொருள்களாய்த் தோன்றுகின்றனவே தவிர சுவை யப்பொழுது தோன்றுவதில்லை. பிறரும் இவ்வாறு கூறியுள்ளனர். ஆதலின் எங்கும் சுவை வியஞ்சன விருத்தியினல் மூன்றாம் பொருளாகவே தோன்ற வேண்டும். அணியும் பொழிப்புரையும் ஏற்ற பெற்றி இரண்டாம் படியாகவும் மூன்றாம் படியாகவும் தோன்றுதல் தகும். மூன்றாம் படியில் தோன்றும் பொருளும் தலைமைப் பொருளாயின் தொனி என்றும், உறுப்பாயின் குணீபூத வியங்கியம் என்றும் கூறுவர். தொனியிலும் சிலவற்றில் இரண்டாம் பொருள் சொல்லியறிவிக்க விரும்பியதாயும் சிலவற்றில் சொல்ல விரும்பாததாயும் இருப்பதுண்டு. விரும்பாத்

தலத்தில் அவ்விரண்டாம்பொருள் சிலவிடத்து முற்றும் மறைந்தும், சிலவிடத்து வேறொரு பொருளை யுணர்த்துவதில் கருத்துள்ளதாயு மிருப்பதுண்டு. விரும்பியதலத்து அவ்விரண்டாம் பொருள் காண்டற்கரிய நிறை யுடைத்தென்றும் காண்டற்கெளிய நிறை யுடைத்தென்றும் இருவகைப்படும். அவ்விருவகையில் சுவை முதலியவை முதற் பகுதியில் தலைமையாய்த் தோன்றின் தொனி யென்றும் உறுப்பாய்த் தோன்றின் 'சுவையணி' என்றும் கூறுவர். ஆதலின் சுவைகள் எங்கும் வியஞ்சன விருத்தியால் மூன்றும் படியிலேயே தோன்றும். எனின் கூறுதும்.[1]

உரியதோர் சொல்லா லுரைக்கப் பெற்றே
பிரகர ணாதியா லறியப் பெற்றே
வினைகள் வேற்றுமைக் காரகம் கலந்து
வனைந்த(து)ஓர் வாக்கியப் பொருளா வதுபோல்
தாயி பாவ மெனும்நிலைக் கருத்தும்
வாய்ந்ததோர் பிறபா வத்துடன் கூடி
வாக்கியப் பொருளா மென்றனர் சான்றோர். 37

போ - ரை :—'மாட்டை ஓட்டிவா, என்பன போன்ற உலக வழக்கிலுள்ள சில சொற்றொடர்களில் வினைச்சொல் காணப்படுகின்றது. 'கதவு கதவு' என்பன போன்ற சொற்றொடர்களில் வினைச்சொல் காணப்படவில்லை. முதற் காட்டில் சொல்லால் அறியப் பெற்ற வினை செயப்படு பொருளுடன் சேர்ந்து ஒரு சொற்றொடர்ப் பொருள் (வாக்கியார்த்தம்) ஆவது போல் இரண்டா முதாரணத்திலும் பிரகரணம் (சூழ் நிலை) முதலிய பிரமாணங்களால் தோன்றி வருவிக்கப் பெற்ற மூடுதல் என்ற வினை செயப்படு பொருளுடன் சேர்ந்து ஒரு சொற்றொடர்ப் பொருள் ஆகின்றது. அவ்வாறே சுவை நூல்களிலும் உவகை முதலிய நிலைக் கருத்துக்கள், சொற்களால் அறிவிக்கப் பெற்றே சூழ்நிலை முதலிய பிரமாணங்களால் உணர்த்தப் பெற்றே அல்லது ஒருக்காலும் பிரிந்திராத விபாவம் முதலிய பாவங்கள் வாயிலாக ஊக்கப் பெற்றே சுவையாளர் மனத்துப் பளிங்கென ஒளிரக்கூடும். அவ்வவற்றிற்குரிய விபாவமும் அநுபாவமும் சஞ்சாரி பாவமும் சொற்களால் உரைக்கப் பெற்று மனத்துப் பதிகின்றன. அப்பொழுது அந்நிலைக் கருத்துக்கள் விபாவம் முதலியவைகளுடன் சேர்ந்து உயர்ந்த பரி

1. இதுவரை பூருவபக்ஷம். இனி சித்தாந்தம் என்றறிக.

பாகத்தை (பண்பை)ப் பெற்று சொற்ருெடர்ப் பொருள் ஆவது தகும். சொல்லாலறிவிக்கப் பெருத பொருள் சொற்ருெடர்ப் பொருளில் சேருவதற்கில்லை யெனின் கூறுதும்.

ஆக்கியவையோ அல்லது ஆக்காது தாமாய்த் திகழ்வனவோ இருவகைச் சொற்ருெடர்களும் செயற்குரிய செயலை யறிவிப்பனவாகவே இருத்தல் வேண்டும். அவ்வாறின்றேல் வெறியர் பிதற்றிய சொற்ருெடர் முதலியவைகள் போன்று விலக்கத்தக்கவையாம்.

பொருளை யறிவிக்கும் சொற்ருெடர், சொற்ருெடரால் அறியப் பெறும் பொருள், (பிரதிபாதகம் பிரதிபாத்தியம்) இவ்விரண்டிற்கும் உண்மை யின்மைகளால் [1] ஒப்புயர்வற்ற இன்ப நுகர்ச்சியைத் தவிர வேறு பயன் அறியப் பெருமையின் சுவைநூற்சொற்ருெடர்களுக்குக் காரியம் (பயன்) இன்ப உணர்வேயாம். அப்பயன் கருதியே சொற்ருெடர் சொற்ருெடர்ப் பொருள் இவைகளில் முயற்சி (பிரவிருத்தி) உண்டாகிறது. விபாவம் முதலியவைகளுடன் கூடிய நிலைக்கருத்தே இன்ப உணர்ச்சி யுண்டாவதற்குக் காரணமாம். சொற்ருெடர்களுக்குள்ள பொருளுணர்த்தும் திறமை, அவை சுவையை யறிவுறுத்தும்வரை நீள்கின்றது. ஆதலின் சுவை நூல்களில் உள்ள சொற்ருெடர் முதலில் விபாவம் முதலியவை (சொற்பொருள்)களை யுணர்த்திய பிறகு, அவ் விபாவாதிகளுடன் கலந்த உவகை முதலிய நிலைக்கருத்துக்கள் சுவைகளாகின்றன. விபாவம் முதலியவைகள் சொற் பொருள்கள். அவைகளுடன் சேர்ந்த உவகை முதலிய நிலைக்கருத்துக்கள் சொற்ருெடர்ப் பொருள்கள் என்றுணர வேண்டும். இவ்வாருயின் பாட்டைக் கேட்டின்புறுதல்போல் சுவையும் உண்டாகலா மாதலின் சொற்களுக்குள்ள பொருளுணர்த்தும் திறன் பயனற்றதாம் எனின் அங்ஙனன்று. ஏனெனின், சொற்களிலிருந்து சொற்பொருள்களை அறிந்தவர்க்கே சுவை யுண்டாகின்றதாதலின் சொற்றிறன் பயனுடைத்தே. இதைக் காப்பிய நிரணயம் என்ற நூலில் நாமும் விரிவாகக் கூறியுள்ளோம். ஆதலின் காப்பியச் சொற்ருெடர்கள் வியஞ்சனு விருத்தியால் சுவைகளை உணர்த்துகின்றன என்பதில்லை. மற்றெங்ஙனெனின் அச்சொற்ருெடர்கள் சுவைகளைத் தோற்றுவிப்பிக்

1. உண்மையின்மை அந்வயம் வ்யதிரேகம். ஒன்று உண்டேல் மற்றொன்று உண்டு—இன்றேல் இல்லை.

கின்றன. ஆதலின் சொல்லுக்கும் சுவைக்கும் உள்ள தொடர்பு பாவிய பாவகத் தொடர்பு[1] எனக் காண்க.

காப்பியங்கள் தவிர வேறு நூல்களில் இத்தகைய தொடர்பு காணப்பெறுமையின் இது தகாது என்று கூறற்க. பாவனேயே செயல் என்று சிலர் கூறியுள்ளார். பிறர் பிறவிடத்துக் கூறுவிடினும் உண்மை யின்மைகளால் நாம் காப்பிய நூல்களில் அத்தகைய [2]சொற்பொருட்டொடரை இசைகின்றேம். இத்தகைய தொடர்பைப் பிறவிடத்தறியக் கூடாமையின் இங்கும் அஃதறிய வியலாது போமாதலின் சொற்களிலிருந்து பொருள்களை யுணர்வதெங்ஙனமெனின் கூறுதும். அவரவர் முகக்குறி பேச்சு செயல் இவை முதலியவைகளால் அவரவர் உள்ளத் துறைந்துள்ள உவகை முதலிய கருத்துக்களை நாம் எளிதில் அறிகின்றேம். சுவை நூல்களிலும் அத்தகைய முகக்குறி பேச்சு செயல் முதலியவைகளை அபிதை முதலிய சொற்றிறமைகளால் அறிவித்தால் அவைகளிலிருந்து இலக்கணவாயிலாக உவகை முதலியவைகளை அறிதல்கூடும். காப்பியப்பொருள் சுவையை யுணர்த்தும் வகையை மேலே உரியவிடத்துக்கூறுதும்.

சுவையு மதுவே சுவைக்கப் பெறுதலின்.
சுவையு முண்மையின் காணுநர்க் கேயாம்.
இன்மையின் தலைவர்க் கிச்சுவை யின்றும்.
நாடக நூலு மதுகுறித் தன்றும். 38

காணுநர்க் கறிவே அவ்வயி னாகும்.
காதலி கலந்த காதலன் கண்டாங் (கு)
ஆசை பொருமை நாண்வேறுப் பாகும். 39

பொ - ரை :—காப்பியப் பொருள் (அறிவு)களால் ஊக்குவிக்கப் பெற்றவையும் சுவையாள ரிதயத்துள்ளவையுமாய உவகை முதலிய நிலைக்கருத்துக்கள் ‘அது’ என்ற சொல்லால் குறிக்கப் பெறுகின்றன. அவைகளே சுவைக்கப் பெறுவனவாகிச் சுவைகளாகின்றன. அவைகள் அவையினராம் சுவையாளர் உள்ளத்தேதான் இருக்கும். நடித்துக் காட்டப்பெறும் இராமன் முதலிய தலைவரிடத்து இரா. ஏனெனில் அவர் இப்பொழுது இலர்.

---

1. தோற்றுவது தோற்றுவிப்பது என்ற தொடர்பு.
2. சொல்லுக்கும் பொருளுக்கு முள்ள தொடர்பு.

சொற்களால் அறிவிக்கப் பெறுதலானும் ஆலம்பன விபாவமாக இன்றியமையாது அரங்கில் தோன்றவேண்டி யிருத்தலானும் இராமன் முதலிய தலைவர்கள் இப்பொழுது இலரேனும் இருப்பவர் போல் தோன்றுவது உண்மையாயினும் சுவை நுகர்ச்சி அத்தோற்றக் காட்சிபால் இருத்தற்கில்லை. மேலும் சுவைநூல்கள் இப்பொழுதுள்ள உள்ளப்பண்பு பெற்ற அவையினர்க்குச் சுவையை உண்டாக்குவான் இயற்றப் பெறுகின்றனவே யன்றி இராமன் முதலிய தலைவர்களுக்குச் சுவை யுண்டாக்குவதற்காக வன்று.

அபிநயிக்கப்பெறும் இராமன் முதலிய தலைவர்க்கே சுவை யெனின், காதலியுடன் கலந்தின்புறும் ஒரு காதலனைக் கண்டக்கால் "இவன் இன்பம் நுகருகின்றான்." என்ற அறிவுமாத்திரம் உண்டாவது போல், நாடக வரங்கிலுள்ளோர்க்கும் அறிவுமாத்திரம் உண்டாமே யல்லாது சுவை யுண்டாகாது. நல்லவராயின் பார்த்து நாணுவர். பிறர், பொறாமை காதல் பறிக்கவிருப்பம் முதலிய வெய்துவர்.

விளக்கொளியால் குடம் (இருப்பது) விளங்குவதுபோல் சுவை விளங்குகின்றது என்று வியங்கிய வியஞ்சகத் தொடர்பும் இங்கு சொல்வதற்கில்லை. ஒளிக்குமுன்பே குடம் இருப்பதால் அங்கு அம்முறை தகும். ஒளியால் குடம் உண்டாக்கப் பெறுவதில்லை. விபாவம் முதலியவைகளால் சுவைகள் உண்டாக்கப் பெறுகின்றன வென்று முன்பே கூறினோம்.

தோ-ய்:—அவையினர் உள்ளத்துண்டாகும் சுவைக்கு விபாவம் எது? சானகி முதலியோர் விபாவமாவது எங்ஙனம்? எனின் கூறுதும்.

தீரோ தாத்த நாயக னாதியர்
சீரிய நிலையைத் தொகுத்துக் காட்டும்
ஆசான் முதலோர் உவகையா திகளைக்
காணுந ருளத்தில் தோன்றச் செய்வார்.
காணுந ராலவை துய்க்கப் பெறுமே. 40

பொ-ரை:—உயோகிகள் உயோகக்கண்ணால் இராமன் முதலிய தலைவர்களுடைய அவ்வவ் வுண்மை நிலையை உள்ளவாறு கண்டறிந்து இராமாயணம் முதலிய இதிகாசங்களை இயற்றியது போல் நூலாசிரியர்கள் இயற்றவில்லை. உலக வழக்கிலுள்ளவை

யும் தாங்கள் ஊகித்தறிந்தவைகளுமான தீரோதாத்தத்தன்மை முத லியவைகளை நூல்களில் கூறுகின்றனர்.

நடிக்கப் பெறுமந் நிலைகள் தந்தம்
சிறப்புப் பெற்றி விடுத்துத் தோன்றிச்
சுவையை முறையே தோற்று விக்கும்.

போ - ரை :—சீதை முதலிய சொற்களெல்லாம் 'சனகன் மகள்' என்பனபோன்ற சிறப்பியலைவிடுத்துப் 'பெண்' என்பன போன்ற பொதுவியலைமாத்திரம் குறிக்கும். ஆதலின் விரும்பத் தகாக் குற்றமிருக்கக் காரணமில்லை. ஆயின் அப்பெயர்கள் எதற் காகக் கையாளப் பெறுகின்றனவெனின் கூறுதும்.

மண்ணியல் மாதேர் முதலிய வற்றுல்
நுண்மையில் சுவையைப் பெறும்சிறு வர்போல்
அண்ண லிராம னுதியர் நடிப்பால்
எண்ணிய சுவையைக் காணுநர் துய்ப்பர். 41

போ - ரை :—அவையினரின் சுவைநுகர்ச்சி உலக வழக்கில் உள்ள நுகர்ச்சிபோன்றதன்று. ஆதலின் உலக வழக்கில் மகளிர் முதலியோர் பயன்படும் வகை நாடகவழக்கில் இல்லை.

நாடக நூற்சுவை நடிகனுக் குமுள. 42

போ - ரை :—அரங்கில் நடிக்கும் நடிகனல் அங்கு அப்பொ ழுது நுகரப்பெறும் சுவை உலகவழக்குச் சுவையன்று. அவை யினர் சுவைபோன்ற அலெளகிகச் சுவையே என்றறிக.

தோ - ய் :—காப்பியங்களிலிருந்து சுவை யுண்டாவது எங்ஙன மென்றும் அதன் சொரூபம் எத்தகையது என்றும் கூறுகிருர்.

நூற்போருள் விளங்க உள்களிப் பெழுதல்
சாற்றினர் சுவைத்த லெனப்பே ரறிஞர்.
உவகை பெருமிதம் இளிவரல் வெகுளிச்
சுவையுள் முறையே இச்சுவைத் தல்தான்
மலர்தல் பரவல் கலங்கல் தாக்கல்
எனநாற் பாலுள் படுமேன் றுரைப்ப. 43
ஆசியம் வியத்தல் அச்சம் அவலம்
என்பவற் றுள்ளும் முறையே யிவையாம். 44
முன்னவை நின்று பின்னவை தோன்றலும்
பிரிநிலை ஏயும் ஆதலின் ஆகும்.

போ - ரை :—நூற்பொருள்—விபாவம் முதலியவைகளோடு கூடிய நிலைக்கருத்து. இதனால் அவையினராம் சுவையாளருள்ளத்தில், தான் பிறன் என்ற வேற்றுமை விலகி ஒற்றுமைதோன்றச் சுவைநுகர்ச்சி யுண்டாகிறது. நுகர்ச்சி யென்பது பொதுவாயினும் விபாவம் முதலியவைகள் வேறுபடுவதால் அவைகளால் வரும் சுவைத்தோற்றம் நான்குவகைத்தாகின்றது. உவகையில் உள்ளமலர்ச்சியும் பெருமிதத்தில் உள்ளவிரிவும் இளிவரலில் உள்ளக்கலக்கமும் வெகுளியில் உள்ளத்தாக்கலும் உண்டாகின்றன. தம்தம் உறுப்புக்களால் பேணி வளர்க்கப்பெற்ற நகை, வியப்பு அச்சம் அவலம் ஆம் நான்கு சுவைகளிலும் மலர்ச்சி விரிவு, கலக்கம் தாக்கல் என்னும் இந்நான்கும் முறையே உள்ளத்தில் தோன்றுகின்றன.

'உவகையிலிருந்து நகையும் வெகுளியிலிருந்து அவலமும் பெருமிதத்திலிருந்து வியப்பும் இளிவரலி லிருந்து அச்சமும் உண்டாகின்றன.' என்று பிறர் கூறியதும் மலர்ச்சி விரிவு முதலிய மனவிகாரங்கள் ஒத்திருப்பதால் என்றும் நேரான காரியகாரணத் தொடர்பு இல்லையென்றும் அறிக. ஏனெனில் கூறுதும். நகை முதலிய சுவைகள் அவற்றிற்குரிய விபாவம் முதலியவைகளால் உண்டாகுமேயன்றி உவகை முதலியவை நின்று உண்டாகா. மேலும் மலர்ச்சி முதலிய மனவிகாரங்கள் இரு வகுப்பிற்கும் ஒத்தன வெனவே பிறரும் கூறினர். சுவைகள் எட்டே எனப்பிறர் கூறியதும் காண்க.

நூற்பொருளை யறியும்பொழுது மகிழ்வுக்குக் காரணமாய உவகை வீரம் முதலியவைகளால் உள்ளமகிழ்ச்சியெனும் ஆனந்தம் உண்டாவது தகும். அவலம் முதலிய சுவைகள் துன்பத்திற்கு ஏதுவாதலின் அங்கு ஆனந்தம் எங்ஙனம் உள்ளத்துண்டாகக் கூடும்? அவலச்சுவையை யறிவுறுத்தும் நூல்களை யறியும்பொழுது உள்ளம் துன்புறுகிறது. கண்ணீர் மல்குகின்றது. ரசிகர்களுக்கும் இது பொதுவே. அச்சுவைகள் மகிழ்வுக்குக் காரணமாயின் இது பொருந்தாது எனின் கூறுதும்.

அங்கு மனம் துன்புற்றுக் கண்கள் நீர் மல்குவதே ஆனந்தம். கலவியில் காதலர்களிடம் குட்டமித முறையில் வெளிச்சினத்துடன் பழகும் காதலிகள் உறும் சில துன்பம் உண்மையில் ஆனந்த

மாவது காண்கிறோம். மேலும் உலகவழக்கிலுள்ள அவலம் முத லிய சுவைகளினும் நூற்சுவைகள் வேறுபடுகின்றன. அரங்கில் தோன்றும் அவலம் உண்மையில் துன்பமாயின் சுவையாளர் வருந்தி முயற்சித்துக் காணச்செல்லார். செல்வது காண்கின் றோம். இராமாயணம் முதலிய அவலச்சுவை நூல்களும் அழிந் திருக்கும். உலகில் பிறர் துன்பம் கண்டு கண்ணீர் மல்குவது போல் சரிதங்களைக் கேட்டுக் கண்ணீர்மல்குவது தகாததன்று. சுவையன் றென்பதற்குச் சான்றுமன்று. ஆதலின் பிறசுவை போல் அவலம் முதலியவைகளும் சுவைகளே.

தோ - ய் :—சமநிலைச் சுவையை அபிநயித்துக்காட்ட இய லாமையின் அது நாடகநூலில் (தலைச்சுவையாய் இருப்பதற்குத்) தகுதியற்றதென்பர். ஆயினும் நுண்ணியவைகளும் கடந்தவைக ளும் இவைபோன்றவைகளுமான பொருள்கள் சொற்களால் அறி விக்கப்பெறுகின்றன வாதலின் சம நிலையும் நூற்பொருளா யிருப் பதற்குத் தகுதிபெற்றதே. என்கிறார்.

சமநிலை மேன்மை யுரைத்தற் கரிதாம்.
முதிதை முதலன அவ்வியல் பிற்றும். 45

போ - ரை :—'சமநிலை யென்பது இன்பம் துன்பம் கவலை விருப்பு வெறுப்பு முதலிய நிலைகழிந்ததும் உள்ளத்தணிவைத் தலை யாய்க்கொண்டதும் பாவங்கள் எல்லாவற்றிலும் தலையாயதுமாய ஓர் சுவை' என்று பிறர் கூறியுள்ளதுபோல் சமநிலைச் சுவைக்கு இலக்கணமாயின், அந்நிலை 'தந்நிலை யெய்தல்' எனும் வீடுபேறு பெறும் பொழுதேயாம். சமநிலைச் சொரூபத்தை உள்ளதுள்ள வாறு அறிவித்தல் அருமை யென்பதுபற்றியே மறையும் 'அது அல்ல. அது அல்ல.' என்ற—பிறிதின் வேறாய்க்கூறல்—முறை யில் வெளியிடுகின்றது. அத்தகைய சமநிலைச் சுவையை நுகரத் தக்க நன்மனத்தர் இல்லை. ஆயினும் முதிதை மைத்திரீ கருணம் உபேட்சை என்பன சமநிலையின் ஏதுவாம். முறையே மலர்ச்சி, விரிவு, கலக்கம், தாக்கல் ஏற்படுகின்றன வாதலின் சமநிலை நுகர்ச்சி நன்கு விளக்கப்பெற்றதாம்.

தோ - ய் :—விபாவம் முதலியவைகளைக் காப்பியம் அறிவிக்கு மிடைச் செயலைக் (அவாந்தர வியாபாரம்) காண்பிப்பதோடு சுவை விளக்கத்தின் முடிவையும் கூறுகிறார்.

மதிநிரு வேதம் மயிர்ச்கூச் சாதி
விபாவ சஞ்சாரி யனுபா வத்தோ
டியைந்த தாயி துய்க்கப் பெறுமால். 46
அதுவே சுவையா மென்ப ரறிஞர்.

போ - ரை :—*திங்கள் தென்றல் முதலிய உத்தீபன விபாவங்களும் ஆடவன் மடந்தைமுதலிய ஆலம்பனவிபாவங்களும் நிருவேதம் முதலிய சஞ்சாரிபாவங்களும் மயிர்க்கூச்சல் கண்ணீர் புருவநெறித்தல் முதலிய அனுபாவங்களும் காப்பியங்களில் புனைந்து கூறப் பெறுதலால் தனி உயர்வைப் பெறுகின்றன. அவைகள் முதலில் அறியப்பெறுதலால் சொற்பொருளின் தானத்தைப் பெறுகின்றன. அவைகளோடு கூடிய நிலைக்கருத்து சொற்றொடர்ப்பொருளின் தானத்தைப் பெறுகின்றது. அச்சேர்க்கையால் அது சுவையாகின்றது.*

தோ - ய் :—*சுவைக்குப் பொது விலக்கணம் கூறியபின் ஒவ்வொரு சுவைக்கும் சிறப்பிலக்கணம் கூறப்பெறு கின்றது. பரதர் உவகை முதலிய நிலைக் கருத்துக்களுக்கும் அவ்வச் சுவைகளுக்கும் தனித்தனியே இலக்கணம் கூறியுள்ளாராயினும் இங்கு ஒரே இலக்கணம்கூறப்பெறுகிறது.*

சுவையும் கருத்தும் இலக்கண மொன்றே
பெறுமே தம்முள் வேற்றுமை யின்றால்.
வேற்றுமை யின்மை விபாவ வொருமை. 47

உவகைச் சுவை.

உளங்கவ ரிடமும் பொழுதும் கோலமும்
கலையும் சுகமும் முதற்ற நுகர்தலின்
உளமுறும் உவகை. அதுவே இளைய
காதலர் மனத்துள் காமசேட் டைகளால்
வளமுற் றுவகைச் சுவையா மென்பர். 48

போ - ரை :—*இவ்வண்ண மியற்றப் பெறும் காப்பியம் உவகைச்சுவை நுகர்ச்சிக்குரியதாமென்று நூலாசிரியர்கள் காண்க.*

இடம்.

எ - டு :—*உத்தர ராம சரிதம். மு - அ.*

செவ்வியநல் லின்முறையில் இலக்குவனும் பணிசெய்ய
அவ்வரையில் நாமிருவ ரினிதிருந்த வந்நாளும்,
திவ்வியநன் னீர்பெருகு மணிகோதா வரிக்கரையும்,
எவ்வமறு மேனியளே ! யங்கிருப்பும் நினைத்தனையோ.

காலம்.

எ - டு :—குமார சம்பவம்- மூன்றும்சருக்கம்

அழகிய மங்கையர்களின் சிலம்பொலிமலிந்த தளிர் அடியின் சேர்க்கையின்றியே அசோகமரம் அப்பொழுதே அடிநின்று முடி வரை தளிர்த்து மலர்ந்தது.

தன் காதலியுடன்கலந்து மதுகரம் ஒரே மலர்க்கலத்தில் மது நுகர்ந்தது. மான் தன்பேடையைக் கொம்பால் சொறிந்தது. ஊற்றுணர்வால் கண்கள் மூடப் பேடையும் மகிழ்ந்தது.

கோலம்.

எ - டு :—குமார சம்பவம். மூன்றும் சருக்கம்.

மலைமகள் இளவேனிற்பருவமலர்களாலாய அணிகளையணிந்து வந்தாள். அவ்வணிகளிலிருந்த அசோக மலர்கள் பதுமராகக் கற்களை மருளச்செய்தன. கர்ணிகாரப்பூக்கள் பொன்னொளியைப் பின்னிடச் செய்தன. சிந்துவார மலர்களே முத்து(மாலை)கள் ஆயின.

இன்ப நுகர்ச்சி.

மதிப்புடனிருப்பவளே ! இளநங்காய் ! கண்களில் மையழிந்துளது. இதழில் வெற்றிலைக்கறை கரைந்துளது. பின்னல் கன்னங்களில் படிந்துளது. உடல் ஒளியிழந்துளது. ஆதலின் உன் காதலன் உன்மனத்தில் வளர்ந்திருந்த மானமெனும் மரத்தைப் பல்வகை யுபாயங்களால் வீழ்த்திவிட்டான் என்று எண்ணுகின்றேன்.

உவகை (நிலைக்கருத்து.)

எ - டு :—மாலதீ மாதவம். மு - அ.

இந்துவின் இளம்பிறை முதலிய பல பொருள்கள் உலகில் உயர்ந்து விளங்குகின்றன. மனத்தை மயக்கத்தக்கவைகளும் இயற்கையிலேயே யினியவைகளுமாய பிற பொருள்களுமுள.

ஆயினும் கண்களுக்கு வெண்ணிலவுபோன்ற இவளை யான் கண்டது என் பிறவியில் ஓர் பெரும் விழா.

மடந்தை (ஆலம்பன விபாவம்)

எ - டு :—மாலவிகாக்கினி மித்திரம். இ - அ.

நெடிய கண்களும் கூதிர்த்திங்களொளியும் கொண்ட அழகிய முகம். படிந்த தோள்கள். நெருங்கி யுயர்ந்த மார்பகம். பற்றி யமைத்ததுபோன்ற பக்கங்கள். (விலாப்புறம்.) பிடியிலடங்கும் இடை. பருத்த நிதம்பம். நெருங்கிய விரல்கள் நன்கமைந்த அடிகள். நாட்டியக் குருவாம் என் மன விருப்பத்திற்குத் தக்கமுறையில் இவள் உடலமைந்துள்ளது.

யுவன் (ஆலம்பன விபாவம்)

எ - டு :—மாலதீ மாதவம்.

அடிக்கடி, அண்மையிலுள்ள தெருவின் வழியாகத் திரிந்து கொண்டிருக்கும் மாதவனைப் பார்த்தாள். மாதவன் காமனே உருவெடுத்து வந்தவன் போன்றிருந்தான். மாலதியும் இரதிபோன்றிருந்தாள். காமவேட்கை யுற்றாள். அவயவங்கள் மெலிந்து தளர்ந்தன.

அன்பு (காதலர்களுக்குள்)

எ - டு :—மாலதீ மாதவம்.[1]

இனிய சேட்டை.

எ - டு :—மாலதீ மாதவம்.

இளங்கொடிபோன்ற புருவங்கள் நெறிந்திலங்கப், புடைபரந்து, சிறிது மலர்ந்து, குவிந்து, எதிர்ப்பார்வை (தன்மேல்) விழும்பொழுது சிறிதே வணங்கி விளங்கும் இவள் கடைக்கண் பார்வைகளுக்குப் பலவகையில் யான் இலக்கானேன்.

சத்துவ மெட்டும் தாயிக ளெட்டும்
முப்பதின் மூன்று சஞ்சா ரிகளும்
என்ற வொன்றில் ஐம்பா னிவற்றை
நன்கு நிறுவச் சுவையும் வளரும்.

---

1. 17 - ம் பக்கம் பார்க்க.

சோம்பல் கொடுமை சாவு வெறுத்தல்
ஓம்பா தென்பர் உவகைச் சுவையை. 49

போ - ரை :—சஞ்சாரி பாவங்கள் முப்பதின் மூன்று. சாத்துவிக பாவங்கள் எட்டு. நிலைக்கருத்துக்கள் எட்டு. என்று நாற்பத்தொன்பது பாவங்களாம். இவைகள் உறுப்புக்களாய் அமைக்கப்பெறுமாயின் உவகைச் சுவையைப் பேணிவளர்க்கும். சோம்பலும் கொடுமையும் சாவும் வெறுப்பும் ஒற்றையாலம்பன விபாவத்திடமோ நேருறுப்பாகவோ அமைக்கப் பெறுமாயின் சுவை (வளர்ச்சி)க்கு முரணும். வேறு வகையில் அமைக்கப்பெறுமாயின் முரணின்மை முன்பே கூறினேம்.

தோ - ய் :—உவகைச் சுவையின் உட்பிரிவுகளைக் கூறுகின்றார்.

உடனுறு வுவகைப் பிரிந்துறை யுவகை
உடனுறை யுவகை யெனவது மூன்றும்.

போ - ரை :—விப்பிரலம்பம் என்னும் சொல் முதலிருவகைகளுக்கும் பொதுவாம். 'ஏமாற்றுதல்' என்பது அச்சொல்லின் பொருளாதலின் அவ்விரு உவகைகளிலும் ஏமாற்றம் உண்டாதலின் அச்சொல் பொதுவாயிற்று. ஆதலின் பிரிந்துறை யுவகையை மாத்திரம் விப்பிரலம்பம் என்பது தகாது.

உடனுறா உவகை.

ஒத்த கருத்தார் புத்திளங் காதலர்
சத்திய விதியினும் அடிமை யினும்
அணுக வியலா தறப்பிரிந் திருத்தல்
உடனுறா வுவகை யென்றன ருரவோர். 50

போ - ரை :—உடனுறுதல்—ஒருவர்க்கொருவர் பற்றுடன் சேர்ந்திருத்தல். அஃதின்மை உடனுறாமை. இரத்தினவளி அடிமையாய் இருந்தனளாதலின் வச்சராசனைக்கூடவியலாதிருந்தாள். மாலதியென்பவள் விதி முதலிய காரணங்களால் மாதவனை யடையக் கூடவில்லை. மலைமகள் விதியின் காரணமாகச் சிவனை யடையாதிருந்தனள். என்றறிக.

அதனுட் பிரிவு பத்து வகைத்தாம். 51
அவைதாம் விருப்பம் சிந்தை நினைவு
அருங்குணங் கூறல் உணர்ச்சி மிகுதல்

பிதற்றல் வெறித்தல் பெருஞ்சூடுகோளல்
உணர்ச்சி யழிதல் சாவென் பனவாம்.
அவற்றுள் முன்னதின் பின்னது கோடிது. 52

காதலன் அழகு கண்டோ கேட்டோ
காம முறுதல் விருப்பென் றுரைப்பர்.
அதன்கண் வியத்தல் களிப்பஞ் சுதலாம். 53

அவற்றுள் காணல் கண்ணேர் காணல்
படிமங் காணல் கனவிற் காணல்
ஓவியங் காணல் மாயையிற் காணல்.
கேட்டல் தோழி பாணர் பார்ப்பார்
டாட்டு முதலாம் வழியா லாகும். 54

விருப்பம்.

எ - டு :—*சாகுந்தலம். மு - அ.*

மெய்ந்நெறி பிறழாவென் மனம் இவள்பால் செல்லுகின்றது. ஆதலின் இவள் அரசர்தோன்றலாகும் யான் மணக்கத்தக்கவளே. பொருள்களில் ஐயமெழும்பொழுது மெய்ந்நெறியர் மனப்போக்கே பிரமாணம் அல்லவா?

வியத்தல்.

எ - டு :—*மெல்லியலின் முலைத்தடங்களைக் கண்ட இளங்காதலன் பருத்த முலைத்தடங்களின் இடையில் சிக்கிய தன்பார்வையை வெளிப்படுத்த முயலுபவன்போல் தலையை ஆட்டுகிறான்.*

களித்தல்.

எ - டு :—*வித்தசால பஞ்சிகை.*

மதிலின் மேற்புறத்தருகில் உற்றுப்பார். சற்றே ஆய்ந்துபார். அமிழ்தையே உணவாகக்கொள்ளும் இப் பூங்காவிலுள்ள நிலா முகிற்புட்கள் இன்பமாக அருந்தும், லவலிப்பழம் போன்ற இத் தூயவெண்ணிலா அங்கிருந்தல்லவோ புறப்படுகின்றது. வானல்லா வத்தலத்தில் மானெனும் மாசற்ற ஒப்பற்ற இம் மதிமண்டலம் புதிதாகவல்லவோ தோன்றுகின்றது.

அஞ்சுதல்.

எ - டு :—*குமார சம்பவம் ஐந்தாம் சருக்கம்,*

பூங்கொடியன்ன மலைமகள் அவரை (காதலனை)க் கண்டாள். உடல் நடுங்கினள். (அகன்று விடுவதற்காகக்) காலெடுத்தாள். எடுத்தகால் எடுத்தவண்ணமே யிருந்தது. குன்றிடை தடுத்த ஆறு போல் செல்லவுமில்லை. நிற்கவுமில்லை. கலங்கினள்.

சிந்தை முதற்ற வெல்லாம் முன்பே
தந்தம் காரிய காரணங் களுடன்
வந்துழி கூறப் பெற்றன காண்க.

போ - ரை :—*குணங் கூறல் என்பது அறிய வெளிதாதலின் விரிவு கூறப்பெறவில்லை.*

பெரும்பான் மையினல் பத்தெனப் பெற்ற.
அருங்கவி நூலு ளனந்தம் காணும். 55

தோ - ய் :—*தெளிய விளக்குவான் சில கூறுகின்றார்.*

கண்செவி யுற்றார் காதல் கொள்ளின்
உள்ளுற வூக்கங் கொள்ள லியல்பே.
பெறுத லின்றேல் பெரிதோர் கவலை
யுறுதல், அவ்வுழி யிகழ்வும் சோர்வும். 56

போ - ரை :—*'மறைந்த காதல்' முதலியவைகளைக் காம சூத்திரம் முதலிய நூல்களில் காண்க.*

பிரிந்துறை யுவகை

இருதய மொன்றிக் கலந்தார் பிரிதல்
பிரிந்துறை யுவகை. அஃதிரு வகையாம்
மானம் பிரவா சமென. அவற்றுள்
பிரணயம் கொண்டும் பொறாமை கொண்டும்
முந்திய மான மிருவகைத் தாகும். 57

போ - ரை :—*கலந்தவர் பிரிதல் பிரிந்துறையுவகை. மானமென்றும் பிரவாசமென்றும் அஃதிருவகைத்தாம். மானப்பிரிந்துறையுவகை பிரணயமானமென்றும் பொறாமைமானமென்றும் இருவகைத்தாம்.*

பிரணயமானம்.

கலவிச் சினங்கொள் காதல ரிடையே
பிரணய மானம் தோன்றுமென் றுரைப்பர். 58

போ - ரை :—அன்புடன் வசீகரித்தல் பிரணயம். அது சிதைவுறலால் வரும் மானம் பிரணயமானம். (கலவிப்பிணக்கம் அல்லது ஊடல்.) அது காதலர்களிருவரிடத்தும் தோன்றும்.

தலைவனிடம் தோன்றும்

பிரணயமானம்.

எ - டு :—உத்தர ராம சரிதம். மூ - அ.

நீ அவள் வரும் வழியை நோக்கியவண்ணம் இதே கொடிக் குடிசையில் இருந்தாய். அவள் ஆவலுடன் அன்னப்பறவைகளோடு கோதாவரியின் மணற்பரப்பில் வெகு நேரம் இருந்துவிட்டாள். திரும்பிவருமவள், மிகவும் மனம் வருந்தியவன் போலிருந்த உன்னைக் கண்டு அஞ்சிக் கமலம் குவிந்ததுபோல் கைகுவித்தாள்.

தலைவியிடம் தோன்றும்

பிரணயமானம்.

எ - டு :—ச்ரீவாக்பதி ராஜதேவன்.

இன்பச்சினம் (பிரணய கோபம்) எய்தியிருந்த பார்வதியைக் கண்டு வியந்து அஞ்சிப் பரபரப்புடன் பரமசிவன் தலைகுனிந்து வணங்க முயன்றார். அத்தலையில் கங்கையைக்கண்ட அவள் தன் திருவடியால் உதைத்தாள். அப்பொழுது வெட்கிநின்ற முக்கண்ணனுடைய அந்நிலை உங்களைக் காப்பாற்றுக.

இருவரிடத்தும் தோன்றும்

பிரணயமானம்.

காதலரே. ஆயினும் கலவியில் பிணங்கினர். பொய்யுறக்கம் உறங்கினர். அசையவுமில்லை. மூச்சொலியையும் அடக்கிக்கொண்டனர். காது கொண்டுமட்டும் கூர்ந்து கவனித்தனர்.

தரியாமானம்.

காதலன் மற்றோர் மாத ரிடத்துக்
காதல் கொள்ளல் தாதிவாய்க் கேட்டும்,
கனவிற் பிதற்றல் கலவிக் குறிகள்
பெயரில் மாற்ற மெனுமு வகையால்
ஐயங் கொண்டும், நேரிற் கண்டும்
தையல் வெகுளல் தரியா மானம். 59-60

பொ - ரை :—தரியாமானம் தையலார்க்கேயாம். காதலன் வேறிடத்துக் காதல் கொண்டமை காணின் இஃதுண்டாகும்.

தாதிவாய்க் கேட்டல்.

எ - டு :—தனிகன்.

புருவமழகியவளே! வெண்ணெய் போன்று இளகிய உள்ளம் படைத்த உன்னை எவனோ ஒருவன் விரும்பியது செய்பவன் போல் தேனொழுகப் பரிந்துபேசிக் கெடுத்து என்பால் சினங் கொள்ளச் செய்துவிட்டான். சற்று ஆராய்ந்துபார். மான்போல் மருண்ட நோக்குடையவளே! உன்பால் அன்புள்ளவர்களில் எவர் நன்மை செய்பவர்? செவிலித்தாயின் மகளா? நானா? தோழியா? அல்லது என் தோழனா?

கனவிற் பிதற்றல்.

எ - டு :—உருத்திர கவி.

'தண்ணீரில் முழுகியவண்ணம் நான் காதல் முதிர்ந்து உன் தோழியை அணைந்துகொண்டேனா? யார் உனக்கு இப்பொய் கூறியது. ராதா! ஏன் வீணாக வருந்துகிறாய்?' என்றிவ்வாறு படுக்கையில் கனவில் கண்ணன் பிதற்றியதைக் கேட்டுக் கமலை (ராதை!) தன் இறுகிய தழுவலைத் தளர்த்தினாள். அத்தழுவல் உங்களைக் காப்பாற்றுக.

கலவிக்குறி.

எ - டு :—சிசுபாலவதம். பதினொன்றாம் சருக்கம்.

உடலிலுள்ள நகக்குறிகளை உடையால் மறைக்கிறாய். பற்குறி பதிந்த உதடுகளைக் கையால் மறைக்கிறாய். பிறமடந்தையைப் புணர்ந்து வந்தமையைத் திசையெங்கும் பரவிப் பறையறிவிக்கும் இப்புது மணத்தை மறைப்ப தெங்ஙனம்?

பெயர் மாற்றம்.

எ - டு :—

கொடியனே! நீ விளையாட்டாக வேறு பேரைக்கூறியழைத்துவிட்டாய். உன் தந்திரமறியாது சினங்கொண்டாள். இதென்ன விளையாட்டு. உண்மையென்றே நினைத்து உன் காதலியழுதுவிட்டாளே!

நேரிற்காணல்.

எ - டு :—முஞ்ச கவி (வாக்பதி ராஜன் ?)[1]

இன்பச்சின (கலவிப்பிணக்க) மெய்தியிருந்த பார்வதியைக் கண்டு வியந்து அஞ்சிப் பரபரப்புடன் பரமசிவன் தலைகுனிந்து வணங்க முயன்றார். அத்தலையில் கங்கையைக் கண்ணுற்ற அவள் தன் திருவடியால் உதைத்தாள். அப்பொழுது வெட்கி நின்ற முக்கண்ணனுடைய அங்கிலை உங்களைக் காப்பாற்றுக.

முன்னதிற் பின்னது முறுக்குடைத் தாகும். 61
நற்சொல், பிரித்தல், நன்கொடை, பணிவு,
லட்சிய மின்மை, யச்சுவை மாற்றம்
என்ற சூழ்ச்சி யேற்ற பெற்றி
கொண்டம் மானம் தணித்தல் வேண்டும். 62

நற்சொல் இவற்றுள் இன்சொல் கூறல்.
தாதியைத் தன்வய மாக்கல் பிரித்தல்.
கொடை—அணி யாடை முகாந்தரத் தீதல்.
பணி(வு)அடி வீழ்தல். பயின்ற விவற்றால்
பயனிலை யாயின், லட்சிய மின்மை
யென்றவு பேட்சை செய்து விடுதல்.
திடுமென வச்சம் களியுய வாதி
படுத்தி விடுத்தல் சுவையின் மாற்றம் 63

நற்சொல்.

எ - டு :—தனிகன்.

அழகிய மேனியளே ! உன் முகமெனும் திங்கள் புன்முறுவலெனும் வெண்ணிலவால் உலகை வெண்மை யாக்குகின்றது. உன் பார்வைகள் நாற்புறமும் அமிழ்தை அள்ளி இறைக்கின்றன. உன் உடலழகால் உலகமே அழகுறுகின்றது. உள்ளத்தில் மாத்திரம் இத்தகைய கொடுமை எங்ஙனம் இப்பொழுது வந்தது ?

பிரித்தல்.

எ - டு :—தனிகன்.

---

1. 162-ம் பக்கம் பார்க்க. முஞ்சன் வாக்பதி ராஜன் என்பன ஒரே கவியின் பெயர்கள் எனத் தோன்றுகின்றது.

புருவமழகியவளே! சிற்சில பொழுது நான் உன் ஆணையை மீறியிருப்பினும் வணங்கியுள்ளேன். நீயும் தெளிந்து சினந்தவிர்ந்து புன்முறுவல் பூத்துளாய். உன் தோழியர்களின் நேய மொழிகளும் வீணுகும் வண்ணம் இவ்வெல்லையில்லாக் கோபம் புதிய முறையிலல்லவா இப்பொழுது வளர்கின்றது!

கொடை.

எ - டு :—சிசுபாலவதம் ஏழாம் சருக்கம்.

மறைவில் பிழையிழைப்பவனே! வண்டொலிகளால் நகைப்பது போன்றிருக்கும் இக்கலிகை (மொட்டு—கலக்கம்)யை எதற்காக என்னிடம் கொடுக்கின்ருய்? அவளில்லத்தில் இரவைக் கழித்த நீ யெனக்குப் பெருங் கலிகையைக் கொடுத்தாய் விட்டதே.

பணிவு.

எ - டு :—

உன் அடிகளில் வீழ்ந்த உன் அன்பன் மயிர்முடி உன்சிலம்பில் சிக்கியது, மானமுடைய (அவன்) மனது மாறியதைக் கூறுகின்றது.

லட்சியமின்மை.

எ - டு :—கிராதார்ச்சுநீயம். ஒன்பதாம் சருக்கம்.

[1] தோழி! தலைவனிடத்திவ்வாறு கடுமை நல்லதன்று. தேற்றி அழைத்துவா. சென்று பயன்? போவது தகுதியன்று. வெறுக்கத்தகும் செய்கைகளைச் செய்யுமவனைத் தேற்றுவது எங்ஙனம்?

சுவைமாற்றம்.

எ - டு :—தனிகன்.

தவறு தெற்றென விளங்கியது. பெருமுயற்சிக ளனைத்தும் பயனிலவாயின. நெடுநேரம் உன்னி நோக்கினன். செயற்கைப் பரபரப்புடன் முதுகில் என்ன? முதுகில் என்ன? வென்ருன். அஞ்சி அன்பனை அணைந்தாள். அவனும் புன்முறுவலுடன் அணைந்தான்.

பிரவாசம்.

தொழில்முறை யானும் குழப்பத் தானும்
வசைமொழி யானும் காதற் கிழவர்
பிறநா டுறைதல் பிரவா சமெனல் 64

1. இச்செய்யுள் இம்முறையில் கிராதார்ச்சுநீயத்தில் காணப்படவில்லை.

குழலணி யாமை உயிர்த்தல் இளைத்தல்
விழிநீர் விடுதல் முதற்ற வதன்கண்.
தலைவி யறிந்தே தலைவன் பிரியும்
தொழிற்பிரி விவற்றுள் எதிர்நிகழ் கழிவு
வழியால் மூன்று வகைத்தா மென்ப. 65

பொ - ரை :—முதலாவதாம் தொழிற்பிரிவு, கடல் கடத்தல் தொண்டுபுரிதல் முதலிய வகையில் தோன்றுமாதலின் அறிந்து நடப்பதாகும். ஆதலின் மூன்றுவகைத்தாம்.

எதிர்காலப் பிரவாசம்.

எ - டு :—

அன்பன் அயல்நாடு செல்லப் போவதை யறிந்தாள். பிரிவைப் பொறுக்ககில்லாளானள். வீடுவீடாய்ச் சென்றுள். ஒவ்வொரு நொடியும் உயிர்வாழும் இரகசிய முறை யாது என்று கேட்டாள்.

நிகழ்காலப் பிரவாசம்.

எ - டு :—அமரு சதகம்.

தன் காதலன் பலநாள் நடந்து சென்று சேரக் கூடிய தேயத்திற்குப் போகப் புறப்படுவதை யறிந்த இளமங்கை "சங்கூதிய பிறகோ நடுப்பகலிலோ அதற்குப் பிறகோ அல்லது பொழுது சென்ற பிறகோ தாங்கள் திரும்பிவரப் போகின்றீர்கள் !' என்று கண்கள் நீர்மல்கக் கூறிக் கொண்டே தடுக்கின்றுள்.

இறந்தகாலப் பிரவாசம்.

எ - டு :—மேக தூதம்.

சுமுகனே ! மடியில் அழுக்காடையின் மேல் வீணையை வைத்துக் கொண்டு, தானியற்றியதும் என் பெயர் பொருந்தியதுமாய பாட்டைப் பாட விரும்பியவளாய், கண்ணீர்களால் நனைந்த வீணைக் கம்பிகளை ஒருவாறு துடைத்துத், தான் செய்த மூர்ச்சனையையும் அடிக்கடி மறந்தவளாய்....................

பிறநாடு சென்றவன் வரும் பொழுதும் வந்த பிறகும் பிரவாசமென்பதில்லை. வரப் புறப்படுகிறுன் என்பதையும் இறந்தகாலப்பிரவாசத்தில் சேர்த்துவிடலா மாதலின் பிரவாசம் காலமுறையில் மூன்றே யாமென்றறிக:

குழப்பத்தால் வரும்

பிரவாசம்.

விண்வழி மண்வழி வெய்ய நிகழ்வால்
துண்ணெனத் தோன்றும் குழப்பப் பிரிவு.

போ - ரை :—*உற்பாதம் இடி சூறை முதலியவைகளால் நேரும் குழப்பத்தாலுண்டாகும் பிரிவும், பகைஞர்படை முதலிவைகளால் நேரும் குழப்பத்தால் உண்டாகும் பிரிவும், அறிந்து ஏற்படுகின்றவைகளே யாதலின் அவ்வகையில் அவைஒன்றேயாம். விக்கிரமோரு வசீயத்தில் ஊருவசியும் புரூரவனும்பிரிதல் முதலுக்கும், மாலதீ மாதவத்தில் மாலதியும் மாதவனும்பிரிதல் இரண்டாவதற்கும் எடுத்துக் காட்டுக்கள்.*

வசைமொழியால் வரும்

பிரவாசம்.

உருவம் மாறின் வசைமொழிப் பிரிவு.
அருகிலு மாகும் பிறவு முளதாம். 66

போ - ரை :—*காதம்பரியில் காதம்பரியும் வைசம்பாயனனும் பிரிதல் இதற்கெடுத்துக்காட்டாம்,*

ஒருவ ரிறப்ப மற்றவர் வருந்தல்
இருவ ரின்மையின் பிரவா சமிலே.
அவலச் சுவையே. மேலு முயிர்ப்பின்
பிரி(வு)உவ கைச்சுவை யென்றே கொள்க. 67

போ - ரை :—*இரகுவம்சத்தில் இந்துமதி யிறந்த பொழுது அசன் வருந்தியது அவலச்சுவையேயாம். காதம்பரியில் முன்பு அவலமும் ஆகாயவாணியைக் கேட்டபிறகு பிரவாச உவகையுமென்றறிக.*

தோ - ய் :—*தலைவியைப் பற்றிய சில நியமங்கள் கூறுகின்றார்.*

பிரணய மானப் பிரிவில் தலைவி [1]
விரகோத் கண்டிதை யாவா ளென்பர்.
பிரவா சமெனும் பிரிவில் பிறநா

---

1. *தகுதிபற்றிச் சிறிது மாற்றி யெழுதப் பெற்றுளது.*

டுறையும் காதல னுற்ற ளென்பர்.
தரியா மானப் பிரிவில் கலகாந்
தரிதை விப்பிர லத்தை கண்டிதை. 68

உடனுறை யுவகை.

உடனுறை யுவகைச் சுவையில் தலைவர்
ஒத்த கருத்தும் உள்ளக் களிப்பும்
உடையவ ராகி யொருவர்க் கொருவர்
பரிசம் பார்வை முதற்ற நுகர்வர். 69

எ - டு :—*உத்தர ராம சரிதம்.* *மு - அ.*

நெருங்கி யிடையறக் கலந்தனர். ஒருவர்க்கொருவர் ஒவ்வொரு கரத்தால் அணைந்து கொண்டு முறைவரம்பின்றி யேதேதோ செய்தியை மெதுவாகப் பேசிக் கொண்டிருந்தனர். இரவின் ஒவ்வொரு விநாடியும் சென்றுவிட்டது. அதைக் காதலர் அறியவில்லை. இரவு மாத்திரமே சென்றது.

அன்பர் திறத்துத் தமக்குள வாகும்
அன்பு மேன்மை யிசைவுக் குரிய
இன்ப லீலை முதலிய சேட்டை
பத்து மிதன்கண் பாவையர் செய்வர். 70

போ - ரை :—*அவை உதாரணங்களுடன் இரண்டாமொளியில் கூறப்பெற்றன.*

களிசெயல் பலவும் கலையும் இலீலையும்
இளையவர் திறத்தி லியற்றுவா னாகிக்
களிக்கச் செய்வான் காதல னவரை.
களிகெடும் செயலும் இழிய செயலும்
துளியும் அவர்பால் தவிர்த்தல் வேண்டும். 71

போ - ரை :—*அரங்கில் இழியமுறை யுவகையைக் காண்பித்த லாகாது என்று முன்பே கூறினராயினும் நூல்களிலும் கூறலாகா தென்பான் மறித்தும் தடுத்தார்.*

எ - டு :—*இரத்தினுவளி.* *மு - அ.*

அன்பே! காமபூசனைக்குரிய காரியங்களைச் செய்யும் உன் கையால் நீ இவ்வசோக மரத்தைத் தொட்ட பொழுது அதன் கண்

மிகவும் மென்மை வாய்ந்த வேறொரு புதியதளிர் தோன்றியது போல் விளங்குகின்றது.

தலைவன் தலைவி நாடகம் நாடிகை கைசிகிவிருத்தி முதலிய விடயங்களில், நூல்களில் நுவலப்பெற்றதும் ஆசிரியர்வழியாவறிந்ததும் தகுதி நோக்கித் தான் உன்னியதுமாம் எல்லாவற்றையு மாய்ந்து உவகைச் சுவையை அமைத்தல் வேண்டும்.

பெருமிதம்.

உறுதியும் ஒளியும் உள்ளக் களிப்பும்
திறலும் தெளிவும் நீதியும் வியப்பும்
விறலு ம் வினயமும் ஆமிவ் விபாவம்
குறைபற வூக்கக் கிளர்ந்த வுற்சாகம்
பெருமித மென்னும் வீரச் சுவையாம்.
கருணை வீரம் நற்கொடை வீரம்
இரண வீரம் எனமூ வகைத்தாம்.
கருவமும் அறிவும் களியும் நிலையும்
பெருமிதச் சுவையின் பிற்படு பாவம். 72

போ - ரை :—இச்சுவையில் உற்சாகம் நிலைக் கருத்து. உறுதி ஒளி........திறல் விறல் முதலியவை உத்தீபன விபாவங்கள். கருவம் அறிவு முதலியவை சஞ்சாரிபாவங்கள். கருணை கொடை முதலியவை அநுபாவங்கள். அவையினர் உள்ளம் விரிந்து களித்தல் இச்சுவையின் தலைப்பயன். நாகானந்தத்தில் சீமூதவாகனன் கருணை வீரன். வீரசரிதத்தில் இராமன் இரணவீரன். பரசுராமன் பலி முதலியோர் கொடைவீரர் என்றறிக.

தானவீரன்.

எ - டு :—தனிகன்.

திருமகள்முலைத்தடக்குங்குமத்தால் சிவந்த திருமாலின் கரத்தைப் பிச்சையெடுக்கும் பாத்திர மாக்கிவிட்ட இவன் மகாபலியாவான்.

மற்றவைகளெல்லாவற்றிற்கும் இலக்கணமும் எடுத்துக் காட்டும் இரண்டாமொளியில் காண்க. பிரதாப வீரன் குணவீரன் முதலிய வகைகளும் இருக்கின்றனவாதலின் ‘மூவகைத்தாம்’ எனக் கூறியது மற்றவைகட்கும் உபலட்சணமாம். இரணவீரன்,

வியர்வை குருதி முதலிய குறிகள் அற்றவனு யிருக்தல் வேண்டும். அன்றேல் ரௌத்திரச் சுவையாம்.

இழிப்புச் சுவை.

அழுகல் புழுக்கள் அருவரும் சத்தி[1]
[2]விழுக்கு விரையென் றிவையா திகளால்
எழுப்ப வெழுந்த வெறுப்பின் மிகுதி
உத்துவே கியெனு மிழிப்புச் சுவையாம்.
எலும்பு நரம்பு குருதி வசைநீர்
தசையா திகளா லெழுமவ் வெறுப்பே
உளங்கிள ரிழிப்புச் சுவையா மென்பர்.
முலைத்தட மல்குல் முதலிய வற்றில்
பற்றரு நிலையர்க் கெழுமவ் வெறுப்பே
கருணை யிழிப்புச் சுவையாம் என்பர்.
மூக்கை மூடல் முகத்தைச் சுளித்தல்
முதலிய விச்சுவை பிற்படு பாவம்.
ஐயம் துயரம் உள்ளக் கிளர்ச்சி
ஆதிய சஞ்சா ரியென வுரைப்பர். 73

தோ - ய் :—*மனது மிகவும் வெறுக்கத்தக்க புழு அழுகல் முதலிய உத்தீபன விபாவங்களால் ஊக்கப் பெற்ற வெறுப்பு என்னும் நிலைக்கருத்தே உத்துவேகி யெனும் இழிப்புச் சுவையாகின்றது.*

எ - டு:—*மாலதீ மாதவம். ஐ - அ,*

இப் பிணப் பிசாசு கண்களைப் புரட்டி விழித்துப் பல்லையிளித்துக் கொண்டு பிணத்தின் தோலை யுரித்துத் துடை தோள் முதலிய விடங்களிலுள்ளதும் எளிதில் கிடைக்கக் கூடியதுமாய மணங் கெட்ட நிணத்தை முதலில் தின்ற பிறகு, எலும்பு கபாலம் முதலிய சுரடு முரடான இடங்களிலுள்ள நிணத்தையும் பரபரப்பின்றித் தின்னுகின்றது.

தோ - ய் :—*குருதி நரம்பு ஊன் எலும்பு சதை முதலிய உத்தீபன விபாவங்களால் ஊக்கப்பெற்ற வெறுப்பென்னும் நிலைக் கருத்தே உளங்கிளரிழிப்புச் சுவையாகின்றது.*

எ - டு :—*வீர சரிதம். மு - அ.*

---

1. வமனம். 2. நிணம்.

யாரிவள்? நரம்புகளில் பெரிய மண்டையோடுகளையும் எலும்பு களையும் கோர்த்துச் செய்யப்பட்ட பயங்கரமாய் ஒலிக்கின்ற கங்க ணங்கள் போன்ற பல அணிகளின் ஒலியால் வான் முழுவதையும் ஒலிக்கச் செய்து கொண்டு, குடித்து வாயிலெடுத்த குருதிக் குழம்பு தோய்ந்து மேலும் கீழும் பக்கங்களிலும் அசைந்தாடும் முலைக ளோடு கூடிய பயங்கர உருவுடன் மதித்தோடுகிறுள்.

தோ - ய் :—அழகிய வாயினும், முலைத்தடம் அல்குல் முதலிய வற்றில் பற்றின்மையால் பேணி வளர்க்கப் பெறும் வெறுப்பே கருணையிழிப்புச் சுவையாகின்றது.

எ - டு:—

வாயிலூறும் நீரை முகமது வென்றும் மாமிசப் பிண்டங்களை முலைத்தடங்களென்றும் நிணமும் எலும்பும் கூடிய தொகுப்பை அல்குலென்றும் காமக்கிழவர் கருதுகின்றனர்.

இது சமநிலைச் சுவையன்று. வெறுப்பினுல் உண்டாவதால் இழிப்புச் சுவையே யென்றறிக.

வெகுளிச் சுவை.

தாளுத லின்மை செறுநர் செய்கை
ஆதிய பேணும் சினமே வெகுளி.
உதடு கடித்தல் புருவ நெறித்தல்
உதறல் வியர்வை கண்முகம் சேத்தல்
படைசு ழற்றல் பற்று விடாமை
தரைதோள் தட்டல் தனது புகழ்ச்சிச்
சூளுற வாடல் முதலிய வோடு
கூடிய கிளர்ச்சி பிற்படு பாவம்.
நினைவு பொருமை நிலையிற் றன்மை
முதலிய நிலையிற் கருத்தேன் ரேர்க. 74

தாளுதலின்மையால் வரும்

வெகுளிச் சுவை.

எ - டு :—மகாவீர சரிதம். மூ - அ.

நீவிர் வேதவொளி (ப்ரஹ்ம தேஜஸ்) பெற்றவரோ அல்லது சாதிக்குரிய முறையில் வில்லேந்தியவரோ எவ்வாறிருப்பினும் உம்

தவவன்மையை என்னுடைய கடுந்தவவன்மையால் எரிக்கின்றேன். மற்றொரு வகைக்குரியதை என் கோடாரி செய்யும்.

செறுநர் செய்கையால் வரும்

வெகுளிச் சுவை.

எ - டு :---வேணீ சங்காரம். மூ - அ.

அரக்கு மாளிகையனல், நச்சுணவு, முதலியவைகளால் எம்மைக் கொல்ல முயன்றவரும், மன்னவையில் பொருளைப்பறித்தும் திரௌபதியின் கூந்தலைப்பற்றித் துகிலுரிந்தும் இழிவுபடுத்தியவருமாய குருமன்னவன்புதல்வர் இன்புறவா?

வெகுளிச்சுவையில் தாளுதலின்மை செறுநர்செய்கை முதலியவைகள் உத்தீபனவிபாவங்கள். வியர்வை முகம்சிவத்தல் முதலியவைகள் அநுபாவங்கள். நினைவு பொறாமை நிலையிற்றன்மை முதலியவைகள் சஞ்சாரிபாவங்கள். சினம் நிலைக்கருத்து. என்றறிக.

நகைச்சுவை.

தற்பா லுளவோ பிறர்பா லுளவோ
ஒன்றாக் கோண லுரைநடை யாடை
யென்றவை யீன்ற நகுதல் நகையாம்.
முப்பால் மூல மென்றன ரான்றோர். 75

பொ - ரை :—தன்வயின் அல்லது பிறர்வயின் தோன்றும் உரை நடை ஆடை முதலியவைகளின் ஒவ்வாத் தன்மையால் பேணப் பெறும் நகையே நகைச் சுவையாம். கூறியவகையில் இருவகைத்தாம் இச்சுவை, உயர்ந்தோர் நடுவோர் இழிந்தோர் என்ற வேற்றுமை கொண்டு அறுவகைத்தாம்.

தன்பாலுள்ளனவால் வரும்

நகைச்சுவை.

எ - டு :—

இராவணன் :—மென்மையற்ற திருநீறு சந்தனப் பூச்சாகி விட்டது. பொருந்தியிருந்த பூணூல் முத்துமாலையாகிவிட்டது. சிக்கிச் சிதைந்திருந்த சடைகள் மென் கூந்தலாய் விட்டன. உருத்திராக்கங்கள் மணிவளையல்களாகி விட்டன. மரவுரி பன்னிறத் துகிலாய் விட்டது. காமப் பேய் பற்றிய யான் என் உடலழகு சானகியின் கண்களைக் கவர்ந்து விடுவதாகவே கருதுகிறேன்.

பிறர்பாலுள்ளனவால் வரும்
நகைச்சுவை.

எ - டு :—

ஆண்டியே! யிறைச்சியூணோ? நறவிலை நலனுமில்லை.
வேண்டுதி நறவும்நீயும்? விலைமக ளோடும்கொள்வேன்.
ஈண்டுதி பொருளையெங்ஙன்? சூதொடு களவும்செய்வேன்.
ஈண்டுனக் கிதுவுமுண்டோ? இழிஞனேன் வேறென்செய்தும்?

கண்மலர் முறுவல் சிமித[1] மென்பார்.
பல்லில குநகை யசித மென்பார்.
இன்குரல் முறுவல் விகசித மாகும்.
சென்னி யசையி னஃதுப கசிதம். 76

கண்ணீர் கலுழின் அஃதப கசிதம்.
தன்னுடல் குலுங்கின் அஃததி கசிதம்.
இம்மூ விரண்டும் முறையே மேன்மை
இடைகடை யென்று மூவகைத் தாகும். 77

போ - ரை :—*உயர்ந்தோனுக்குத் தன்வயின் அல்லது பிறர் வயின் தோன்றும் விகாரங்களால் முதலிரண்டுவகையும் நடுவோனுக்கு நடுவிரண்டுவகையும் கடையனுக்குக் கடையிரண்டுவகையும் உண்டாகுமென்று காண்க.*

உறக்கம் சோம்பல் வருத்தம் வாட்டம்
மயக்கம் முதற்ற விதன்சஞ் சாரி.

வியப்புச் சுவை.

உலகியல் மீறிய செயல்பொருள் முதற்றால்
உறுமுரு வியப்பே வியப்புச் சுவையாம். 78

நன்றேன் றுரைத்தல் நடுக்கம் கண்ணீர்
குன்றிய குரலொடு வியர்வை முதற்ற
பிற்படு பாவம். உவகை யூக்கம்
உறுதி முதற்ற விதன்சஞ் சாரி. 79

போ - ரை :—*இச்சுவையில் உலகில் காணகில்லாப் பொருள் முதலியவைகளைப் புனைந்து கூறல் காட்டல் முதலியவை உத்தீபன*

---

1. *சிமிதம். (ஸ்மிதம்.)—முறுவல்.*

விபாவங்கள். நன்று நன்றெனல் தலையசைத்தல் முதலியவை அநுபாவங்கள். வியப்பு நிலைக்கருத்து. மகிழ்வு ஊக்கம் முதலியவை சஞ்சாரிபாவங்கள்.

எ - டு :—மகாவீர சரிதம். மு - அ.

பிறையணி பெருமான் வில்லைத் தோளிலிருத்தி வலித்து இச் சிறுவன் நாணை இழுத்த போழ்து உண்டான வில்முறிவொலியும் நாணொலியும், மேலுறும் செய்கைகளுக்கு ஓர் பிரத்தாவனை முரசொலியாய் விளங்குகின்றதோடு, குடம்போலக் குவிந்தமைந்த இந் நான்முக னண்டத்திடை முழுதும் இன்னும் இடையறாது மிக்க கடுமையாய்க் கேட்கின்றது.

அச்சச்சுவை.

விகாரக் குரலே வெய்ய விலங்கே
வெருவுறு முருவே யாதி யவற்றால்
உளனுறு பயமே அச்சச் சுவையாம்.
உறுப்புத றலுறல் வியர்வை வறட்சி
உடல்நிற மழிதல் முதலிய நிகழும்.
உள்ளுணர் வொழிதல் உணர்வில் வேகம்
[1] ஒன்றிட மின்மை யிதன்சஞ் சாரி. 80

போ - ரை :—இச்சுவையில் அச்சுறுத்துமொலி கேட்டல் அத்தகைய விலங்கைக்காணல் முதலியவை உத்தீபனவிபாவங்கள். உறுப்புக்கள் உதறுதல் வியர்த்தல் வறட்சி முதலியவை அநுபாவங்கள். உள்ளுணர்வழிதல் முதலியவை சஞ்சாரிபாவங்கள். அச்சம் நிலைக்கருத்து. என்றறிக.

எ - டு :—

நீ வெற்றியாத்திரை புறப்பட்டுவிட்டாய் என்று அறிந்து அஞ்சிய உன் பகைஞர்கள் முதலில் வீடுகளை விட்டு வழிகளிலும், பிறகு காடுகளிலும், அதற்குப் பிறகு மலைகளிலும், பின்பு அடர்ந்த மலைக் காடுகளிலும், அதற்குப் பின்பு மலைமுழைஞ்சுகளிலும், முடிவில் அஞ்சி ஒடுங்கிய உடல்களிலும் ஒளிந்துகொள்கின்றனர். ஆயினும் மறைந்துகொள்ளவில்லையென்றே கருதுகின்றனர்.

---

1. தீனத்தன்மை.

அவலச்சுவை.

விரும்பிய வழிதல் வெறுத்தன வாதல்
முதலிய வற்றால் வருமுள் ளுயவே
அவலச் சுவையாம். அதன்பின் னழுகை
பிதற்றல் பெருமூச் சாதிய வாகும். 81

உறக்கம் வருத்தம் உணர்ச்சி யின்மை
வெறித்தல் கவலை வாட்டம் சோம்பல்
உளநோய் முதற்ற விதன்சஞ் சாரி. 82

போ - ரை :—இச்சுவையில் உறவினர்முதலியோரழிதல் சிறை விலங்குமுதலியபெறுதல் உத்தீபனவிபாவங்கள். அழுகை பிதற்றல் முதலியவை அனுபாவங்கள். உறக்கம் வருத்தம் முதலியவை சஞ்சாரிபாவங்கள். துயரம் நிலைக்கருத்து என்றறிக.

விரும்பியவை யழிதலால் வரும்

அவலச்சுவை.

எ - டு :—குமார சம்பவம். நான்காம் சருக்கம்.

இன்னுயிர்த் துணைவனே! உயிருடனிருக்கின்றாயா? என் றுரைத்துக்கொண்டே யெழுந்தாள். மனிதவடிவில் மண்மேலிருந்த முக்கண்ணன் சினக்கனல்நீற்றை மாத்திரம் எதிரில் கண்டாள்.

வெறுத்தனவாதலுக்கு இரத்தினவளி சிறைப்படுதல் எடுத்துக் காட்டாம். பிற உதாரணங்கள் பிறவிடத்துக் காண்க.

அன்பு பத்தி ஆதிய கருத்தும்
வேட்டை சூது முதலிய சுவையும்
உவகை ஊக்கம் முதலிய வற்றில்
உள்ளடங் கினவென் றோதுப பெரியோர். 83

அணிமுத லோதிய முப்பதி னாறும்
கணிநன் மொழிமுத லிருபதி னொன்றும்
உவமை யுருவக முதலிய வணியில்
உவகை ஊக்க முதலிய வற்றில்
உள்ளடங் கினவென் றோதுப பெரியோர். 84

போ - ரை :—பரதர் கூறிய எழுத்திசைவு முதலிய முப்பத்தாறு அணிகளும் வேறு சந்திகளாம் நன்மொழி முதலிய இருபத்தொன்

றும் முறையே உவமை முதலிய அணிகளிலும் உவமைஊக்கம் முதலியவைகளிலும் அடங்குகின்றனவாதலின் தனித்துக் கூறப்பெறவில்லை யென்றறிக.

தனிகரியற்றிய தசரூபக விளக்கவுரை

முற்றிற்று.

விரும்பியவோ வெறுத்தனவோ விழுமியவோ விழிந்தவையோ
வருத்துமொரு கொடியனவோ வடித்ததேனத் தெளிந்தவையோ
கருவனவோ வெளியனவோ பொருளாமோ பொருளன்றே
அருட்கவியால் சுவையுறாத துலகின்க ணொன்றில்லை. 85

கட்டுடைய முஞ்சபதி கோட்டியினில் கணிப்புற்ற,
விட்டுணுவெ னும்பெரியோன் தவப்புதல்வன் தனஞ்சயனூர்
மட்டிலறி வாளிகளின் மனத்துவகைக் காரணமாய்
இட்டமுட னியற்றியதா மித்தசரு பகமெனும்நூல். 86

தனஞ்சயரியற்றிய தசரூபகம் முற்றிற்று.

பொருளகராதி.

அ

அங்கம் - अङ्कः 118
அங்காசியம் - अङ्कास्यम् 50
அங்காவதாரம் - अङ्कावतारः 50
அசத்பிரலாபம் - असत्प्रलापः 105
அச்சச்சுவை - भयानकः 174
அடக்குமுறைத் துணைவர்கள் - दण्डे नायकसखाः 84
அணிகள் - (स्त्रीणां) अलङ्काराः 77
அதிகாரம் - अधिकारः 7
அதிகாரி - अधिकारी 7
அதிபலம் - अधिबलम् 32
அதிபலம் - अधिबलम् 103
அதீரப்பிரகல்பை - अधीरप्रगल्भा 69
அதீரமத்தியை - अधीरमध्या 67
அபசுமாரம் - अपस्मारः 136
அபவாதம் - अपवादः 35
அபவாரிதம் - अपवारितम् 52
அபிசாரிகை - अभिसारिका 75
அபூதாகரணம் - अभूताहरणम् 28
அவகித்தானம் - अवहित्था 140
அவசியந்திதம் - अवस्यन्दितम् 104
அவபாதம் - अवपातनम् 91
அவமரிசசந்தி - अवमर्शसन्धिः 35
அவலகிதம் - अवलगितम् 101
அவலச்சுவை - करुणः 175
அழகு - शोभा 62
அறத்துணைவர்கள் - धर्मे नायकसखाः 84
அறிந்தகதை - प्रख्यातम् (इतिवृत्तम्) 8
அறிவு - मतिः 136
அனுகூலன் - अनुकूलः 60
அனுபாவம் - अनुभावः 122
அனுமானம் - अनुमानम् 32

ஆ

ஆகாசபாடிதம் - आकाशभाषितम् 52
ஆக்கியகதை - उत्पाद्यम् - (इतिवृत्तम्) 8
ஆக்கேபம் - आक्षेपः 34
ஆதானம் - आदानम् 41
ஆதிகாரிகம் - आधिकारिकम् 7
ஆதிகாரிகக்கதை-आधिकारिकम् 107
ஆரபடி - आरभटी 90
ஆராய்ச்சி - वितर्कः 130
ஆலம்பனவிபாவம் - आलंबनविभावः 121
ஆவம் - हावः 78
ஆவேகம் - आवेगः 137
ஆனந்தம் - आनन्दः 45

இ

இணைவு - सन्धिः 13
இலலிதம் - ललितम् 83
இலாசியம் - लास्यम् 6
இலீலை -लीला 80
இழிப்புச்சுவை - बीभत्सः 170
இளையாள் - कनिष्ठा 70
இறுமாப்பு - गर्वः 133
இனிமை - माधुर्यम् 53

இனிமை - माधुर्यम् 63
இனிமை - माधुर्यम् 79
இன்சொல் - प्रियंवदत्वम् 54

ஈ

ஈகாமிருகம் - ईहामृगः 119

உ

உக்கிரம் - औग्र्यम् 131
உடனுறுஉவகை-अयोगशृङ्गारः 159
உடனுறையுவகை-संभोगशृङ्गारः 168
உணர்ச்சி - विबोधः 135
உணர்வின்மை - जडता 129
உதாரம் - औदार्यम् 80
உதாரணம் - उदाहरणम् 30
உத்தாத்தியகம் - उद्घात्यकम् 100
உத்தாபகம் - उत्थापकः 89
உத்தீபனவிபாவம் - उद्दीपनवि-
भावः 121
உத்துவேகம் - उद्वेगः 33
உபகூகனம் - उपगूहनम् 47
உபக்கேபம் - उपक्षेपः 14
உபசங்காரம் - उपसंहारः 47
உபனியாசம் - उपन्यासः 25
உயுத்தி - युक्तिः 16
உருவம் - रूपम् 3
உருவம் - रूपम् 29
உருவகம் - रूपकम् 4
உரோமம்பொடித்தல் -
रोमाञ्चः 124
உவகை - धृतिः 128
உவகைச்சுவை - शृङ्गाररसः 156
உவளகத் துணைவர்கள் -
अन्तःपुरे नायकसखाः 84
உறுதி - नियताप्तिः 12
உறுதி - स्थैर्यम् 64
உற்சாகம் - औत्सुक्यम् 141
உற்பேதம் - उद्भेदः 18

எ

எதிர்த்தலைவன் - रिपुः 62

ஏ

ஏலை - हेला 78

ஐ

ஐயம் -शङ्का 127

ஒ

ஒழுக்கம் - शीलम् 66
ஒளி - तेजः 64
ஒளி - शोभा 79

க

கண்டம் - गण्डम् 104
கண்டிதை - खण्डिता 74
கண்ணீர் - अश्रु 124
கதோற்காதம் - कथोद्घातः 98
கரணம் - करणम् 19
கருப்பசந்தி - गर्भसन्धिः 27
கலகாந்தரிதை - कलहान्तरिता 74
கலப்பியல்கதை - मिश्रम्-
(इतिवृत्तम्) 8
கலப்பியல் விட்கம்பம் -
मिश्रविष्कंभः 49
கலவிக்குறி - भोगाङ्कः 163
கலவியில் இசைவின்மை -
वामरतित्वम् 67
கவலை - चिन्ता 131
கனவிற்பிதற்றல் - उत्स्वप्रा-
यितम् 163
கன்னி - कन्यका 71

கா

காந்தி - कान्तिः 79
காணல் - दर्शनम् 48

கி

கிரதனம் - ग्रथनम् 43

கிரமம் - क्रमः 30

கிருதி - कृतिः 45

கிலிகிஞ்சிதம் - किलिकिञ्चितम् 82

கு

குடிகள் அன்பு - रक्तलोकत्वम् 54

குடிமை - रूढवंशत्वम् 55

குட்டமிதம் - कुट्टमितम् 82

குரலழிவு - वैस्वर्यम् 124

குறிப்பு - सूच्यम् 48

கூ

கூத்தன் - नटः 95

கே

கேட்டல் - श्रव्यम् 48

கை

கைசிகி - कैशिकी 85

கொ

கொடை - औदार्यम् 65

கொடை - दानम् 165

ச

சங்கிரகம் - सङ्ग्रहः 31

சங்கீரணப் பிரகசனம் - सङ्कीर्णप्रहसनम् 115

சஞ்சிப்தி - संक्षिप्तिका 91

சத்தி - शक्तिः 37

சந்தி - सन्धिः 43

சமம் - शमः 22

சமயம் - समयः 45

சமவகாரம் - समवकारः 117

சமாதானம் - समाधानम् 17

சம்பிரமம் - संभ्रमः 34

சம்பேடம் - संफेटः 36

சம்பேடம் - संफेटः 91

சலனம் - छलनम् 38

சலனம் - छलम् 102

சல்லாபகம் - संलापकः 89

சனாந்திகம் - जनान्तिकम् 51

சா

சாங்காத்தியம் - सांघात्यः 90

சாத்துவதி - सात्वती 88

சாத்துவிகபாவம் - सात्त्विकभावः 123

சாபலம் - चापलम् 142

சு

சுத்தப்பிரகசனம் - शुद्धप्रहसनम् 115

சுவாதீனபதிகை - स्वाधीनभर्तृका 73

சுவை - रसः 120

சுவைமாற்றம் - रसान्तरम् 164

சுவைவிளக்கம் - रसविचारः 145-156

சூ

சூத்திரதாரன் - सूत्रधारः 95

சூலிகை - चूलिका 49

சோ

சோம்பல் - आलस्यम् 137

சோர்தல் - श्रमः 128

சௌ

சௌரசேனி - शौरसेनी 93

டி

டிமம் - डिमः 116

த

தட்சிணன் - दक्षिणः 59

தம்பம் - स्तंभः 124

தரியாமானம் - ईर्ष्यामानः 162

தலைவர் துணைவர்கள் - नायकसखाः 83

தலைவன்செயல் - नायकवृत्तिः 85

தலைவி - नायिका 65

தன்னவள் - स्वीया 65

தன்னிகழ்வு - निर्वेदः 125
தன்னிகழ்வுதாளாமை -
अमर्षः 133

தா

தாண்டவம் - ताण्डवम् 6
தாதிவாய்க்கேட்டல் -
सखीमुखश्रवणम् 163
தாயிபாவம் அல்லது நிலைக்
கருத்து - स्थायी (भावः) 142

தி

திண்மை - स्थैर्यम् 55
திப்பியக்கதை - दिव्यमितिवृत्तम् 9
திப்பியமானுடக்கதை -
दिव्यमानुषमितिवृत्तम् 9
தியுதி - द्युतिः 38
திரவம் - द्रवः 37
திரிகதம் - त्रिगतम् 102
திருட்டன் - धृष्टः 60
திறமை - प्रगल्भता 80

தீ

தீரசாந்தன் - धीरशान्तः 56
தீரப்பிரகல்பை - धीरप्रगल्भा 69
தீரமத்தியை - धीरमध्या 67
தீரம் - धैर्यम् 80
தீரலலிதன் - धीरललितः 56
தீராதீரப்பிரகல்பை -
धीराधीरप्रगल्भा 69
தீராதீரமத்தியை - धीराधीरमध्या 67
தீரோதாத்தன் - धीरोदात्तः 57
தீரோத்ததன் - धीरोद्धतः 58
தீனம் दैन्यम् 130

தூ

தூதி - दूती 76
தூயவிட்கம்பம் - शुद्धविष्कम्भः 49
தூய்மை - शौचम् 55
தேசி - देशी தே 6
தேசு - दीप्तिः 79

தொ

தொடக்கம் - आरम्भः 11
தொழில்நிலை - कार्यावस्था 11

தோ

தோடகம் - तोटकम् 32

ந

நகைச்சுவை - हास्यः 172
நடுக்கம் - वेपथुः 124
நருமகருப்பம் - नर्मगर्भः 88
நருமத்தியுதி - नर्मद्युतिः 23
நருமப்பிஞ்சம் - नर्मस्फिञ्जः 87
நருமப்போடம் - नर्मस्फोटः 88
நருமம் - नर्म 22
நருமம் - नर्म 85
நற்சொல் - साम 164

நா

நாடகம் - नाटकम् 95
நாடிகை - नाटिका 112
நாட்டியம் - नाट्यम् 3
நாட்டியதருமம் - नाट्यधर्मः 51
நாணம் - व्रीडा 135
நாளிகை - नालिका 104

நி

நித்திரை - निद्रा 135
நிரணயம் - निर्णयः 44
நிருத்தம் - नृत्तम् 5
நிருத்தியம் - नृत्यम् 5
நிருவகணசந்தி - निर्वहणसन्धिः 42
நிரோதம் - निरोधः 24
நிலைக்கருத்தின் வகைகளும்
பெயர்களும் - स्थायिभावभेदाः 144

நிறனழி - वैवर्ण्यम् 124
நினைவு - स्मृतिः 133

நே

நேரிற்காணல் - साक्षादिन्द्रिय-गोचरम् 164
நேர்மை - आर्जवम् 66

நோ

நோய் - व्याधिः 140

ப

பணிவு - नतिः 164
பதாகை - पताका 7
பதாகைக்கதை - पताकावृत्तम् 108
பதாகைத்தானம் - पताकास्थानम् 8
பயம் - त्रासः 131
பரிகரம் - परिकरः 14
பரிசருப்பம் - परिसर्पः 21
பரிபாடை - परिभाषणम् 44
பரிபாவனை - परिभावना 18
பரியுபாசனம் - पर्युपासनम् 24
பரிவருத்தகம் - परिवर्तकः 90
பரினியாசம் - परिन्यासः 15

பா

பாகதம் - प्राकृतम् 93
பாடணம் - भाषणम् 46
பாணம் - बाणः 114
பாரதி - भारती 97
பாவம் - भावः 78
பாவம் - भावः 123

பி

பிந்து - बिन्दुः 10
பிப்போகம் - बिब्बोकः 82
பிரகசனம் - प्रहसनम् 115
பிரகமனம் - प्रगमनम् 23
பிரகரணம் - प्रकरणम् 111
பிரகரி - प्रकरी 7
பிரகல்பை - प्र कल्भा 68
பிரகாசம் - प्रकाशः 51
பிரசங்கம் - प्रसङ्गः 38
பிரசம்சை - प्रशस्तिः 47
பிரசாதம் - प्रसादः 45
பிரணயமானம் - प्रणयमानः 161
பிரதிமுகசந்தி - प्रतिमुखसन्धिः 20
பிரத்தாவனை - प्रस्तावना 107
பிரபஞ்சம் - प्रपञ्चः 101
பிரயோகாதிசயம் - प्रयोगातिशयः 99
பிரரோசனை - प्ररोचना 9
பிரரோசனை - प्ररोचना 40
பிரலயம் - प्रलयः 124
பிரவாசம் - प्रवासः 165
பிரவிருத்தம் - प्रवृत्तकम् 99
பிரவேசகம் - प्रवेशकम् 49
பிராசாங்கிகம் - प्रासङ्गिकम् 7
பிராத்தி - प्राप्तिः 16
பிரித்தல் - भेदः 164
பிறிந்துறையுவகை - विप्रयोगश्रृङ्गारः 161

பீ

பீசம் - बीजम् 9
பீடமருத்தன் - पीठमर्दः 61

பு

புட்பம் - पुष्पम् 25
புதியகாதல் - काममुग्धता 67
புதியபிராயம் - वयोमुग्धता 66
புரோடிதப்பிரியை - प्रोषितप्रिया 74

பூ

பூருவபாவம் - पूर्वभत्वः 46
பூருவரங்கம் - पूर्वरङ्गः 95

பெ

பெயர்மாற்றம் - गोत्रस्खलनम् 163
பெருமிதம் - वीरः 169

பே

பேச்சுத்திறமை - वाग्मित्वम् 55
பேதம் - भेदः 18
பேய்மொழி - पैशाचम् 93
பேறு - फलागमः 13

பொ

பொதுமகள் - साधारणस्त्री 71
பொருள்மூலம் - अर्थप्रकृतिः 10
பொறாமை - असूया 132

ம

மகிழ்ச்சி - हर्षः 130
மதம் - मदः 134
மதிவெறித்தல் - उन्मादः 140
மத்திமை - मध्या 67
மரணம் - मरणम् 134
மற்றவன்பன்னி - अन्योढा 71

மா

மாகதமொழி - मागधम् 93
மாண்பு - गांभीर्यम् 64
மார்க்கம் - मार्गः 5
மார்க்கம் - मार्गः 29
மானுடக்கதை - मानुषमितिवृत्तम् 9

மி

மிருதவம் - मृदवम् 106

மு

முகசந்தி - मुखसन्धिः 13
முக்திதை - मुग्धा 66
முதியாள் - ज्येष्ठा 70
முதிர்ந்ததூக்கம் - सुप्तम् 134
முயற்சி - यत्नः 11

மெ

மென்மை - लालित्यम् 64

மே

மேதை - प्रज्ञा 55

மோ

மோகம் - मोहः 136
மோட்டாயிதம் - मोट्टायितम् 82

ல

லட்சியமின்மை - उपेक्षा 164

வ

வச்சிரம் - वज्रम् 26
வஞ்சகன் - शठः 60
வடமொழி - संस्कृतम् 92
வணக்கம் - विनयः 53
வண்மை - त्यागः 54
வத்துத்தானம் - वस्तूत्थापनम् 91
வருத்தம் - विषादः 141
வருணசங்காரம் - वर्णसंहारः 26
வலியழிதல் - ग्लानिः 127
வன்மை - दाक्ष्यम् 54

வா

வாக்கேளி - वाक्केलिः 102
வாசகசச்சை - वासकसज्जा 73

வி

விகிருதம் - विहृतम् 83
விகிர்தப்பிரகசனம் - विकृतप्रहसनम् 115
விசலனம் - विचलनम् 41
விச்சித்தி विच्छित्तिः 81
விடன் - विटः 62
விட்கம்பம் - विष्कंभः 48
விதானம் - विधानम् 17
விதூடகன் - विदूषकः 62
விதூதம் - विधूतम्: 22

வித்திரவம் - विद्रवः 36
விபாவம் - विभावः 120
விபோதம் - विबोधः 43
விப்பிரமம் - विभ्रमः 81
விப்பிரலத்தை - विप्रलब्धा 74
வியபிசாரிபாவம் - व्यभिचारिभावः 124
வியப்புச்சுவை - अद्भुतः 173
வியர்வை - स्वेदः 124
வியாகாரம் - व्याहारः 106
வியாயோகம் - व्यायोगः 116
விரகோற்கண்டிதை - विरहोत्कण्ठिता 73
விருப்பம் - प्राप्त्याशा 12
விரோதனம் - विरोधनम् 39
விலாசம் - विलासः 20
விலாசம் - विलासः 63
விலாசம் - विलासः 81
விலோபனம் - विलोभनम् 15
விவசாயம் - व्यवसाय 39

வீ

வீதி - वीथी 118
வெகுளிச்சுவை - रौद्रः 172